ஐந்திணைப்
பதிப்பகம்

# பேஸிஸ்ட் ஜடாமுனி

புதுமைப்பித்தன்



G4174
007B05
ப.ஜ
4174

# பேஸிஸ்ட் ஜடாமுனி

புதுமைப்பித்தன்
(சொ. விருத்தாசலம், பி.ஏ.)

ஐந்திணைப் பதிப்பகம்
தொலைபேசி : 849410
279, பாரதி (பைகிராப்ட்ஸ்) சாலை
திருவல்லிக்கேணி
சென்னை—600 005

முதல் பதிப்பு : டிசம்பர் 1993

ஐந்திணை—102

உரிமை பதிவு

விலை ரூ. 40-00

Published by :
Kuzha. KATHIRESAN

Phone : 84 94 10
AINTHINAI PATHIPPAGAM
279, Bharathi (Pycrofts) Road,
Triplicane, Madras-600 005.

Printed at : Kokila Sree Printers, Madras-94.

# பதிப்புரை

''ஒருவனை அளந்து நிறுப்பதற்கு, அவனை வேறு யாருடனும் ஒப்பிட்டுப் பார்ப்பது தவறு. அவனுடைய வேலைகள், ஆசைகள், சாதனைகள், யாவுமே அளவு கோல்கள்,— அவற்றின் பலன்கள், விளைவுகள் அல்ல.''

என்று கூறும் புதுமைப்பித்தன், வரலாற்று நாயகன் முஸொலீனியை நன்கு எடை போட்டு நமக்குப் படம் பிடித்துக் காட்டுகிறார்.

இந்நூலில் முஸொலீனியின் அரசியல் வாழ்க்கை சித்திரிக்கப்படுகிறது.

இதை ஒரு வரலாற்று நாவல் என்று சொல்லும் அளவிற்கு மிக அழகாக, படிக்கப் படிக்க ஆர்வத்தைத் தூண்டுகிற வகையில், சுவை குறையாமல், தனக்கே உரிய நகைச்சுவை உணர்வுடன் புதுமைப்பித்தன் எழுதியுள்ளார்.

ஒரு வரலாறு எப்படி எழுதவேண்டும் என்பதற்கு இந்நூல் ஓர் எடுத்துக்காட்டு.

சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பு வெளிவந்த புதுமைப் பித்தனுடைய எழுத்தோவியங்களை மீண்டும் வாசகப் பெரு மக்களுக்கு வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

அன்புள்ள

குழ. கதிரேசன்

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | பெனிட்டோ அமில்கேர் முஸொலீனி | 1 |
| 2. | கர்த்தர் ஓய்வெடுத்த அறை | 6 |
| 3. | ஒரு ஷில்லிங் ஆறு பென்ஸ் | 19 |
| 4. | போன மச்சான்... | 35 |
| 5. | 'அமைதிக்குப் பங்கம் விளைத்ததாக' | 44 |
| 6. | அவாந்தி | 68 |
| 7. | 1914 | 75 |
| 8. | மாஜி அபேதவாதி | 82 |
| 9. | கார்ப்பொரல் பெனிட்டோ | 88 |
| 10. | விஸிட்டர் நாற்காலி; வெடிகுண்டு | 97 |
| 11. | ''பேஸிஸ் டி கம்பாட்டிமென்டோ | 103 |
| 12. | இத்தாலிய டெபுடி பெனிட்டோ | 116 |
| 13. | கட்சி நாடு பிடிக்கிறது | 122 |
| 14. | தடிக்கம்பு ஆட்சி | 132 |
| 15. | இல்தூஸே ஆகிறான் | 137 |
| 16. | 'சிம்மாசனத்தை ஒதுக்கிப் போடு!' | 142 |
| 17. | சர்வாதிகாரி பேசுகிறான் | 150 |
| 18. | மிஷின் துப்பாக்கி விவாதிக்கிறது | 160 |
| 19. | அரசியல் மாந்தமும் விளக்கெண்ணெய் சிகிச்சையும் | 163 |
| 20. | மாட்டியோட்டி அதிர்ச்சி | 170 |
| 21. | பன்னிரண்டு வருடக் கொடுமை | 182 |
| 22. | மாட்டியோட்டிகளும், கிரமேஷிகளும் | 193 |
| 23. | பேஸிஸ்ட் ரதம் புறப்படுகிறது | 204 |
| 24. | ரோம்—பெர்லின் தட்டாமாலை | 209 |
| 25. | ஆசை செல்லும் பாதை | 216 |
| 26. | உள்ளூர அரிக்கும் வியாதி | 224 |
| 27. | தூஸே—பூஹ்ரர் உறவு | 230 |
| 28. | அல்பேனியா | 238 |
| 29. | 1939 செப்டம்பர் முதல் தேதி | 244 |
| 30. | வில்லும் விசையும் | 246 |

# பேஸிஸ்ட் ஜடாமுனி

## 1. பெனிட்டோ அமில்கேர் முஸோலீனி

கிறிஸ்து முனி பிறந்த பின் 1936 வருஷங்கள் கழித்து மே மாதம் 5-ஆம் தேதி மாலை 7-30 மணிக்கு...

அதாவது, அந்த மகானின் உபதேசங்கள் யாவும் வேரூன்றி, பரந்து, தழைத்து—ஆனால், மனித நினைவை விட்டு அகன்றுபோகப் போதிய காலம் கடந்து...

அந்த மகானின் சீடன் பேதுரு—'காலதேவனின் பார்வையால் சலியாத குன்று' என்று பரிவுடன் அழைக்கப் பட்ட பேதுரு—நம்பிக்கையின் அஸ்திவாரத்தையிட்ட அந்த நகரத்திலேயே...அதே ரோமாபுரியிலே...

மனித வம்சத்தின் அதிகார உன்மத்தத்தையும், தியாகத்தின் வரம்பையும், குறுகிய நோக்கத்தின் குரூரத்தை யும், பூசாரித்துவத்தின் சேவையையும், கொலை வெறியை யும், சிறப்பையும் சிறுமையையும் கண்டு சகித்துச் சகித்து, ஆயிரக்கணக்கான வருஷ அளவுள்ள மனித நாடகத்தின் படுதாவாக விளங்கும் அந்த நகரத்திலே...

சர்வாதிகாரியின் 'பலாஜா வெனிஜியா' என்ற அரசாங்க மாளிகையில்...

மேடையில் பேஸிஸ்ட் துவஜம்—கண்ணைப் பறிக்கும் மின்சார விளக்குகள்...

கீழே சதுக்கத்திலும், வீதியிலும் ஜன சமுத்திரம்—உற்சாக வெறியில் தலைதெறிக்கக் கோஷமிடும் மனிதக் கும்பல். தூரத்திலே தெரியும் கொலீஸியம் வரை இப்படித் தான்.

கூட்டத்தில் குழந்தைகள் நசுங்குகின்றன. போலீஸார் பாய்ந்து மீட்கின்றனர், கூட்டத்தைச் சமாளிக்க முயலு கின்றனர். மக்கள் அரசாங்கத்துடன் ஆனந்தத்தில் லயிக்கும் பொழுது 'அதிகார'த்திற்கு அதிகாரமேது?

கீழ்க்கோடியிலே, தேன் துளும்பும் கிண்ணம் போல் சந்திரன் உதயமாகிறது.

மாடியில் அமைந்துள்ள முகப்பு மேடையில் பெனிட்டோ தோன்றுகிறான்!

''இல் தூஸே! இல் தூஸே!'' என்ற கோஷம் வானைப் பிளக்கிறது.

பேஸிஸ்ட் வணக்க முறைப்படி அவன் கையமர்த்து கிறான்.

உடனே நிசப்தம்.

''இன்று மாலை நான்கு மணிக்கு வெற்றி வாகை சூடிய நம் படைகள் அடிஸ் அபாபாவில் பிரவேசித்தன. யுத்தம் முடிந்து விட்டது என்பதை இத்தாலிய மக்களுக்கும் உலகிற்கும் அறிவிக்கிறேன். எதியோப்பியா இத்தாலிய தேசமாகி விட்டது!''

சர்வாதிகாரி உள்ளே சென்று விட்டான்.

உள்ளே...

பேஸிஸ்ட் அதிகாரிகளும், பேஸிஸ்ட் உலகப் பிரபலஸ் தர்களும் கைதட்டி, ''தூஸே! தூஸே!'' என்று வரவேற் கின்றனர்.

''போதுமே!''... என்கின்றான் முஸொலீனி சடக் கென்று.

இவன்தான் சர்வாதிகாரி பெனிட்டோ முஸொலீனி—நெப்போலியனைப் போல ஐந்தடி ஆறு அங்குல உயரம். ஆனால் முரட்டு ஆசாமி. பரந்து விரிந்த மார்பு, ஊடுருவிப் பாயும் கண்கள், கத்தி வெட்டு வடுப்போல இறுக மூடப்பட்ட உதடு, முன்னே தள்ளிய முகவாய்க்கட்டை, ஐந்து குழந்தைகள் பெற்றவன். வயது ஐம்பதுக்கு மேலாகியும் மார்க்கண்ட வாலிபம்— சிறிது அசுர மோஸ்தரில்!

'பலாஜா வெனிஜியா' அவனுடைய பிரத்தியேகக் காரியாலயம்; 'வில்லா டொரோலினியா' அவன் வாசஸ் தலம். இந்த மாளிகையை இளவரசன் அவனுக்குப் பரிசளித்தான். ஏனென்றால், அவனுக்கு அதை வைத்து நடத்த முடியவில்லை. இப்போது திரும்பப் பெற்றுக் கொள்ள ஆசை தான். ஆனால் முஸொலீனிதான் அதன் மீது காதல் கொண்டு விட்டானே! மேலும் அது காரியாலயத் திற்கு வெகு சமீபத்தில் இருக்கிறது.

முஸொலீனி உணவிலே சுத்த சைவம். அதுவும் ஒரு சமயம் வயிற்றுக் கோளாறு வந்த பின் ரொம்ப ஜாக்கிரதை. ஒரு அமெரிக்க நிருபருக்குப் பேட்டியளித்த பொழுது சொல்லுகிறான்.

''எப்போதும் நான் ஆரோக்கியமாக இருப்பதன் ரகசியம் இது தான்: பழங்கள், பழங்கள், பழங்கள்!''

மேஜையின் மேலிருந்த பழக்கூடையைக் காட்டிவிட்டு, ''அதுதான் என் உணவு. காலையில் ஒரு கப் காப்பி, பழம்; மத்தியானம் கொஞ்சம் கஞ்சி, பழம்; இராத்திரியிலும் பழந்தான். நான் மாமிசத்தைத் தொடவே மாட்டேன்; சமயா சமயத்தில் கொஞ்சம் மீன்,'' என்று சொல்லி முடிக் கிறான்.

அவனுக்குத் தேகப் பயிற்சியில் அபார மோகம். குதிரை சவாரி, கத்திச் சண்டை, நீச்சல், நடத்தல், தலை தெறிக் கும் வேகத்தில் நீண்ட மோட்டார் பிரயாணம், விமான

யாத்திரை—ஏதாவது ஒன்று செய்து கொண்டேயிருப்பான். அரசாங்கக் காரியாலயத்திலும் மூளை வேலை அதிகரித்து விட்டால் இடையில் கத்திச் சண்டை பழக ஆரம்பித்து விடுவான்.

வாலிபத்திலேயே பெண்கள் என்றால் அர்ஜுன-ரசனை இப்பொழுது ரொம்ப ஜாக்கிரதையாக வாழ்கிறான்.

சாதாரணமாக முஸொலீனி ஆறு மணி நேரம் சர்க்கார் காரியங்களைக் கவனிப்பான். அப்புறம் ஓய்வு. அதாவது வாசித்தல், சிந்தனை அல்லது தேகப்பயிற்சி ஏதாவது ஒன்று இருந்து கொண்டே யிருக்கும்.

''உமக்கு என்ன சம்பளம் கொடுக்கிறார்கள்? மேல் வரும்படி உண்டா?'' என்ற கேள்வியை முஸொலீனியிடம் கேட்டால், அதற்கு அவன் பதில் சொன்னால் இப்படி யிருக்கும்.

''மாசம் 3000 லையர் (135 பவுன்) சம்பளம். அப்போதைக்கப்போது தேவையானதை எடுத்துக் கொள்ள சர்க்கார் கஜானாவில் வசதி செய்து கொண்டிருக்கிறேன்.''

இவன்தான் முஸொலீனி. இவன் ஆளும் நாடு? பூகோளப் படத்தைப் பார்க்கச் சாவகாசப்பட்டால், ஐரோப்பா கண்டத்தில் மத்யதரைக் கடல் என்று குறிப்பிடப் பட்ட பகுதியில், ஏறக்குறைய பூட்ஸ் கால் மாதிரி ஒரு தீபகற்பம் கடலுக்குள் நீண்டு கிடப்பதைப் பார்க்கலாம். அதுவும் அதைச் சுற்றிய இரண்டொரு தீவுகளும் சேர்ந்தது இத்தாலி. இத்தீபகற்பத்தின் வட எல்லை ஆல்ப்ஸ் மலை யுடன் முடிகிறது. அதற்கப்புறம் ஸ்விட்ஸர்லாந்து. சர்வ தேச சங்கம் என்ற நைந்து தேய்ந்த சோனியின் பீடம் அங்கேதான் இருக்கிறது. இத்தாலியில் போ, அடிஜ், டைபர் என்ற நதிகள் பாய்கின்றன. டைபர் நதிக்கரையில் தான்ரோமாபுரி. முன்னால் இத்தாலி திராட்சை ரசத்திற்கும்,

கலைக்கும், பூசாரித்துவத்துக்கும் பெயர் பெற்றது. இப்பொழுது சர்வாதிகாரத்திற்கும்.

பலாஜா வெனிஜியா முன்னால் வானைப் பிளக்க எழும் கோஷம், இத்தாலிய மக்களுக்கு பேஸிஸத்தின் மீதிருக்கும் அபாரபற்றுதலைக் காட்டுவது போலிருக்கும். அங்குதான் விவசாயிகள், தொழிலாளர் கலகங்கள் யாவும் அப்படியே அமுக்கப்பட்டு, அரசாங்க ரகசியமாகக் காப்பாற்றப்படுகின்றன.

தொழிற்சாலையில் வேலை செய்கிறவர்கள் நிலைமைக்கு ஒரு காட்சி காட்டுகிறேன்:

ஸ்ரீ. ஸ்பிவட் என்ற ஒரு அமெரிக்கர், சர்வாதிகாரத்துவத்தின் 'குட்டுகளை' உடைத்து ஒரு புஸ்தகம் எழுதியிருக்கிறார். அதில் முதல் பகுதி இத்தாலியைப்பற்றி. தொழிற்சாலையில் பதிநான்கு வயதிற்குக் கீழ்ப்பட்ட குழந்தைகள் வேலை செய்வதை வர்ணிக்கிறார். கண்ணாடித் தொழிற்சாலையில் வேலை செய்கிறவர்களுக்கு, 'குளோவ்ஸ்' என்ற கை உறைகள் கூடக் கொடுக்கமாட்டார்களாம். சிறுவனுக்குக் கையில் கண்ணாடித் தூள்கள் குத்திவிடுகின்றன. தினசரி அவற்றை எடுப்பதுதான் அவனுக்கு வேலை. அவனும் அவன் பெற்றோரும் வாழும் பொந்திற்குச் சென்று பார்க்கிறார். அங்கு அவன் தகப்பனார், கண்ணாடித் தொழிற்சாலையில் வேலை செய்ததற்குப் பலியாக, உழைக்கச் சக்தியற்றுக் கிடக்கிறார். அவர்கள் மனது இடிந்து கிடக்கின்றது—அவர்கள் குடியிருக்கும் இடத்தைப் போல.

பட்டினி கிடப்பவர்களுக்குத் தலைவன் தோன்றுவான் என்ற நம்பிக்கை ஒன்றுதான் ஒட்டிக்கொண்டிருக்கிறது.

அப்படியானால் முஸோலீனியைத் தலைவன் என்று யார் ஒப்புக்கொள்ளுகிறார்கள்? அந்தச் சிறுவனின் இளவயதைப் பற்றிக்கூடச் சிரத்தை கொள்ளாத *'உடையவர்' கள்தான்.

---

*உடையவர்கள்—செல்வமுடையவர்கள்.

## 2. கர்த்தர் ஓய்வெடுத்த அன்று

**சர்வாதிகாரி**, நவீன இத்தாலியின் சிருஷ்டிகர்த்தன், நாவலாசிரியன், கவிஞன், பத்திரிகாசிரியன், நாடகாசிரியன் அபேதவாதி, நாள் வேலைக் கூலிக்காரன், இத்யாதி, இத்யாதி நாமவிகற்பாதிகளுக்குள் அடங்கும் பெனிட்டோ முஸோலினி என்ற நபர், இத்தாலி தேசத்திலுள்ள **வரானோடி காஸ்டா** என்ற கிராமத்தில், 1883-ம் வருஷம், ஜூலை 29-ந்தேதி பிறந்தான்.

அன்று ஞாயிற்றுக்கிழமை. அதாவது, கிறிஸ்தவ மதத்தைப் பின்பற்றுகிற அநந்த கோடி மக்களுக்கும் ஓய்வு நாள். தெய்வம், தன் சிருஷ்டித் தொழிலை முடித்துவிட்டு, சிரமபரிகாரம் செய்து கொண்டதாக விவிலியம் கூறுகிறது. தெய்வங்களே ஓய்வெடுத்துக் கொண்ட அப்புனித தினத்தில் என்றும் அமைதியாயிருக்கும் இச் சிறு கிராமத்தில் சிறிது பரபரப்பு;—ஒரு ஆண் குழந்தை பிறந்துவிட்டதற்காக அல்ல!—காமினேட் மடாலய பக்தர் ஒருவரின் குருபூஜை தினம் அன்று. அந்த ஊர், குன்றின் சரிவில், ராஜாளிக் கூடுபோல அமைந்த சிறு கிராமம். வீடுகளும் அவைகளின் ஓடுகளுங்கூடக் கருங்கல்லால் அமைந்தவை. மலைச் சிகரத்திலே, காலத்தின் முத்திரை தாங்கிய காமினேட் மடாலயம், இடிந்தும் தகர்ந்துமுள்ள நிலையில், ஆசியளித்து வருகிறது.

ஒரு காட்டாறு. அதற்குச் சிறிது தூரம் தள்ளி ஒரு சிற்றோடை. அதன் அருகில் ஒரு கொல்லன் பட்டறையும் அதனுடன் சேர்ந்த வீடும்.

அன்று உலைக்கூடத்தில் தணல் இல்லை. தன் எண்ணப்படி இரும்பை வளைத்துக் கொடுக்கும்படி செய்வதற் கேற்ற முறுக்கேறிய தசைக் கைகளால் கன்னத்தை ஏந்திய வண்ணம் உட்கார்ந்திருக்கிறான் அலிஸான்ட்ரோ முஸொலீனி. கறுத்த தலைமயிர், கண்ணிலே நல்ல குணம், கையிலே நல்லபலம், உதட்டின் கோணத்திலே எப்பொழுதும் மறைந்து கிடக்கும் புன்சிரிப்பு. அன்று அவன் கண்களில் நினைவு தேங்குகிறது. உள்ளே டாக்டர் போகிறார்; ஸ்திரீகள் போகிறார்கள்; அலிஸாண்ட்ரோவின் நினைவும் அவர்களைத் தொடர்கிறது.

பிற்பகல் இரண்டு மணி. வீட்டினுள், ''குவா! குவா!'' என்று, ஒரு மனிதன் தான் இவ்வுலகில் வந்துவிட்டதை முதன் முதலாகப் பறை சாற்றுகிறான்......பராக்! பேஸிஸம் பிறந்து விட்டது!

அலிஸான்ட்ரோவின் முகம் புன்சிரிப்பால் மலர்கிறது. அவன் அபேதவாதி; மெக்ஸிகோ புரட்சியில் விழுந்த பெனிட்டோ ஜாரஸின் ஞாபகச்சின்னமாகத் தன் மகனை ஆக்கிவிட வேண்டுமென்று உறுதி கொண்டு விடுகிறான். பெனிட்டோ ஜாரஸ்—பெனிட்டோ முஸொலீனி—என்ன வித்தியாசம்!

அலிஸான்ட்ரோ கொல்லன் மட்டுமல்லன். அவன் கைகள்தான் இரும்புடன் மல்லுக்கட்டிக் கொண்டிருந்தன. அவன் மனம் இவ்வுலகத்தையே மோட்ச சாம்ராஜ்யமாக்க வேண்டும் என்று கனவு கண்ட சகாக்களுடன் உறவாடிக் கொண்டிருந்தது.

ருஷிய 'முதல் இன்டர்நாஷன'லில் அவனுக்குச் சம்பந்த முண்டு. ஆன்ட்ரியா காஸ்டா, பால்டுச்சி, அமில்கேர், கிப்ரியானி என்ற இத்தாலியப் பொதுவுடைமைச் சுடர்கள் யாவரும் இவனது நெருங்கிய நண்பர்கள். கவிதையுள்ளம்

படைத்த கியாவோனி பாஸ்கோலியும் இவர்களுடைய கோஷ்டிக்கு விதிவிலக்கல்லர். அவர்களுக்கு ஒவ்வொரு மகாநாடும் உலகத்தின் விதியையே எட்டிப்பிடிக்கும்; ஒவ்வொரு கொள்கையும் நித்தியத்துவத்தையே அளிப்பதாகப் புலப்படும்.

இப்படி இவர்கள் கனவு கண்டதன் காரணம் என்ன இத்தாலியின் சரித்திரம் அதற்குப் பதிலளிக்கும்.

ஃ ஃ ஃ

நம்மவருக்கு காசித்தலம் எப்படியோ அப்படி வெள்ளைக்காரருக்கு ரோமாபுரி. காரணம் கிறிஸ்தவ மதத்தினரில் ஒரு பகுதியாருக்கு அது ஒரு க்ஷேத்திரம். அங்கு ஆலயம் ஒன்றும் இல்லை; மாடாலயம் இருக்கிறது. அந்த மடாலயம் ஐரோப்பியச் சிந்தனைகளில் குடியேறி, கட்டுப்பாடான ஆட்சி புரிந்தது. அதன் விளைவாக இத்தாலியின் சரித்திரம் சென்ற கதை ஒரு தனிப் பெரும் பாரதம்.

கிறிஸ்து பிறப்பதற்கு முன், ரோம சாம்ராஜ்யம் கிரீஸ் தேசத்தின் வாரீசாக வந்து மனிதனின் சுதந்திரத்தை நிர்த்துளியாக்கியது. அதன் சக்தி க்ஷீணித்த சமயத்தில், நாகரிகத்தின் தாழ்ந்த படிக்கட்டில் இருந்தவர்களாகக் கருதப்பட்ட வான்டல்கள், காத், விஸிகாத் என்ற ஜாதியினர் அதைத் தாக்கிச் சிம்மாசனத்தில் ஏறி உட்கார்ந்து கொண்டனர். யூதர்கள் கிறிஸ்து முனியின் கற்பனையைக் கசக்கி முகர்ந்தனர்; புரட்சிக்காரனுக்கும், 'அமைதிக்குப் பங்கம் விளைவிப்பவ'னுக்கும் அக்காலத்தவர்கள் விதித்த தண்டனையை அவருக்கும் அளித்துவிட்டனர். திசைக்கொருவராக ஓடிய சிஷ்யர்களுள், 'காலதேவனால் அசைக்க முடியாத குன்று' என்று உபசாரமாகக் கூறப்பட்ட பேதுரு (Peter) என்ற அப்போஸ்தலர் (சீடர்) ரோமாபுரியில் கிறிஸ்துவின் பெயரால் மடாலயத்தை ஸ்தாபித்தார்.

உலகத்தவர் நன்மையைக் கருதி அமைக்கப்படும் ஸ்தாபனங்களும், வகுக்கப்படும் சித்தாந்தக் கோவில்களும் அசுரத் தன்மை பெறும்படி வரமளிப்பது காலதேவன் இதுவரை செய்துவரும் கைங்கரியம். பேதுரு அமைத்த மடாலயமும் இதற்கு விதிவிலக்கன்று. ரோமாபுரியிலிருந்தே மத சாம்ராஜ்யம் ஒன்றை எழுப்பி, அதனுள் ஐரோப்பா முழுவதையுமே அடைத்துவைக்க விரும்பினார்கள்; அடைத்து வைக்கவும் செய்தார்கள். பக்கபலமாக 'புனித ரோம் சாம்ராஜ்யம்' என்ற அரசியல் கட்டுக்கோப்பு ஒன்றையும் வகுக்க முயன்றார்கள். பழைய ரோம சிங்காதனத்தைக் கைப்பற்றியவர்களுடைய பூர்வீக ஸ்தலம் மத்ய ஐரோப்பா. மற்றும் அக்காலத்தில் ஜெர்மனி, ஆஸ்திரியா, பிரான்ஸ் என்று மூன்று கூறாகப் பிரிக்கப்பட்டிருக்கும் நிலப் பரப்புக்கு 'பிராங்க் ராஜ்யம்' என்று பெயர். பின்னர் பிராங்க் மன்னர்களின் இரு வாரிசுகளுள் பங்கிட்டுக்கொள்ளப்பட்ட நாடுகள் பிரான்ஸும் ஜெர்மனியும். பூர்பன், ஹாப்ஸ்பர்க் ராஜ குடும்பங்களின் வளர்ச்சியுடன் இவை ஒன்றுபட்டன.

இக்காரணத்தால், புனித ரோம் சாம்ராஜ்யத்தின் கேந்திர ஸ்தானம் ரோமாபுரியை விட்டு மத்ய ஐரோப்பாவில் மாறிவிட, இத்தாலியின் சரித்திரமும் ஜெர்மன் பிரெஞ்சு சரித்திரங்களின் அனுபந்தக் குறிப்புக்களாக மாறியது. பாரமார்த்திக விவகாரங்களின் மூலம் ஐரோப்பாவை ஆட்சி புரிய முயன்ற ரோமாபுரி, மற்றப் பகுதிகளிடம் நெருங்கிய அரசியல் பிணிப்பை விட்டு, ஒற்றைக் காலில் நிற்க வேண்டியதாயிற்று.

அரசியல் பிணிப்பு ஒழிந்துவிட்டால் குழப்பத்தைக் காசு கொடுத்தா விலைக்கு வாங்கவேண்டும்? ஆமாம். இத்தாலியில் வாழ்ந்தவர்களும் மனிதர்கள் தான்; 'நாம் உண்டு நம் ஊர் உண்டு' என்று தங்கள் தங்கள் நகரத்தைப்

பார்த்துக் கொள்ள முற்பட்டனர். இதனால்தான் இத்தாலி யில் 13, 14-ம் நூற்றாண்டுகளில் நகரத்தையே தம் இலட்சியப் பூர்த்தியின் எல்லையாகக் கொண்ட அரசியல மைப்புகள் பிறந்தன. கடற்கரையையடுத்த, வர்த்தகப் பாதைகளில் அமைந்த வெனிஸ், ஜெனோவா போன்ற நகர ராஜ்யங்கள் செழித்தோங்கி, பக்கத்து நகரங்களுடன் நிரந்தரமாகச் சண்டையிடுவதையும், வர்த்தகம் செய் வதையும் தங்கள் தர்மமாகக் கொண்டன.

இப்படியாக, ஒரு காலத்தில் நீல நதியின் வளம் கொழிக்கும் எகிப்தில் கண் வைத்து, கிளியோபாத்ராவின் ஆசை முகத்திற்காக உயிரையும் பதவியையும் இழந்தஅகஸ் தஸ்களும், அந்தோனிகளும் திகழ்ந்த சாம்ராஜ்யத்தின் நிலைக்களனான இத்தாலி தேசம், பூர்பன், ஹாப்ஸ்பர்க் ராஜ குடும்பங்கள், மடாலயம் என்ற முக்காலியில் கட்டப் பட்டு, பல நூற்றாண்டுகள் சரித்திரத்தின் சவுக்கடிகளைப் பெற்று வந்தது.

'இத்தாலியக் கம்பன்' என்று சொல்ல வேண்டிய தாந்தே பிறந்தான்; தேச ஐக்கியத்தைப்பற்றிப் பாடிவிட்டுச் சென்றான். அவன் கவிஞன்தானே! பின்னர் மாஜினி களும், கவூர்களும், கரிபால்டிகளும் படிப்படியாக வளர்த்த ஐக்கியக் கோயில் இப்பொழுது முஸொலீனியால் முற்றும் அமைக்கப்பட்டு, கும்பாபிஷேகம் நடத்தப்பட்டிருக்கிறது. ஆனால், அவன், அதனுள்ளிருந்த 'தேசமாதா' என்ற தெய்வத்தைப் பிடுங்கி எறிந்துவிட்டு, 'ஏகாதிபத்தியம்' என்ற பேயைக் குடியேற்றி வழிபட்டு வருகிறான்...

பெனிட்டோ முஸொலீனி பிறப்பதற்குச் சரியாக இரு பத்திரண்டு வருஷங்களுக்கு முன், பீட்மான்ட் சிற்றரசன் விக்டர் இமானுவல் தலையில் கிரீடம் ஏறியது. இத்தாலியில் மூன்றில் இரண்டு பங்கு அதன் எல்லைக்குட்பட்டது.

இந்நிலைமை ஏற்படுவதற்குக் காரணம் வருமாறு: பிரெஞ்சுப் புரட்சியின் பின்னணியில் ஏற்பட்ட நெப்போலிய னுடைய ஏகாதிபத்தியம் இத்தாலிக்குச் சாதகமாக இருந்தது. நெப்போலியன் இத்தாலிய கீரீடத்தை ஏற்றான், அவனுடைய 'இத்தாலிய நட்பு' 1811-ம் வருஷத்தில் அதன் வடக்கெல்லையை மெரானோ வரையில் விஸ்தரித்தது. பின், நெப்போலியன் சிறைப்பட்டு ஹெலினா தீவில் குடிபுகுந்தான்; இத்தாலியும் பழையபடி முக்காலியில் கட்டப்பட்டது.

பின்னர் மாஜினியும் கரிபால்டியும் அரங்கத்தில் தோன்றிவிட்டனர். சுதந்திர இயக்கம் பிரிட்டிஷ் அனுதாபத் துடன் கனிந்தது. இத்தாலியத் தலைவர்கள் இத்தாலியின் மோட்ச சாம்ராஜ்யம் குடியாட்சியே என்று கண்டனர். மறு மலர்ச்சி இயக்கம் நாடெங்கும் பரந்தது. புரட்சிகள், கலகங்கள், எழுச்சிகள் யாவும் தினசரிச் சம்பவங்களாயின. பிரிட்டிஷ் லிபரல் கட்சியினர் தங்கள் நாட்டிலிருந்து செய்தி கள் விடுத்து ஊக்கமூட்டினர். வெற்றிப் பாதையிலே சென்ற மறுமலர்ச்சி கட்சித் தலைவர்களிடையே தோன்றிய வேறுபாடுகளால், தேசத்தை அந்நிய சந்தர்ப்பவாதிகளின் கையில் சிக்க வைத்துவிடும் போலிருந்தது.

விடுதலை வீரன் கரிபால்டி எழுப்பிய முடியாட்சியின் ஆவேசம் விக்டர் இமானுவல் பக்கம் சார்ந்தது; 1861-ம் வருஷம் மன்னர் ஆட்சியை ஏற்படுத்தியது. டூரின் தலை நகராயிற்று. வெனிஸ் போன்ற நகரங்களும், ரோம் மடாதிபதியான போப்பின் சமஸ்தானங்களும் கைப்பற்றப் படாமல் இருந்தன.

இந்த அரைகுறையான வெற்றிக்கப்புறம் நாடு விஸ்தரிப்பு என்ற சதுரங்கத்தில் புதிய இத்தாலி மட்டுமின்றி பிரான்ஸ், ஆஸ்திரியா, பிரஷ்யா தேசங்களும், போப்பும் காயை உருட்டி விளையாடவே, மண்ணில் தலைகள்

உருண்டன. முடிவில் 1870-ம் வருஷம், செப்டம்பர் 20-ந் தேதி விக்டர் இமானுவலின் படைகள் இத்தாலியின் தலைநகரான ரோமாபுரிக்குள் புகுந்தன. 1872-ல் ஆல்ப்ஸ் மலை எல்லை தவிர மற்றப் பகுதிகளின் மீது இமானுவல் ஆட்சி புரியலானான்.

புதிதாக ஐக்கியப்படுத்தப்பட்ட இத்தாலியின் அரசியலமைப்பு, சவாய் வம்சத்தைச் சார்ந்த சார்லஸ் ஆல்பர்ட் என்ற மன்னன் பீட்மான்ட் வாசிகளுக்கு அளித்த தானம். அது பிரதிநிதித்துவம் வாய்ந்த அரசியல் நிர்ணய சபை விவாதித்து வகுத்த அரசியலமைப்பு அன்று. ஆஸ்திரியாவை இத்தாலியை விட்டுத் தொலைப்பதற்காக அவன் பீட்மான்ட் வாசிகளுக்கு அளித்த லஞ்சம் என்றே கருத வேண்டும். படிப்படியாக இத்தாலி முழுவதும், மறுமலர்ச்சியின் பயனாக, அதன் ஆட்சிக்கு உட்படுத்தப்பட்டது. அந்த அரசியல் முறை இங்கிலீஷ் அமைப்பைப் போன்றது. பிரதிநிதிகளின் சபைக்கு மன்னன் சட்ட பூர்வமாகவும், யதார்த்தமாகவும் கட்டுப்பட்டவன். பிரதிநிதிகள் சபைக்கு சட்டம் அமைக்கவும், நிர்வாக இயந்திரத்தைக் கட்டுப்படுத்தவும் அதிகாரம் உண்டு.

இங்கிலீஷ் பிரபுக்கள் சபையைப் போல் 'செனட்' என்ற மேல் சபை ஒன்றும் உண்டு. பண விஷயங்கள் தவிர மற்றவற்றில் பிரதிநிதிகள் சபைக்குச் சமானமான அதிகாரம் உண்டு. இப்படிப்பட்ட முறை சரியாக வேலை செய்வது கட்சிகளின் திறமையையும் தன்மையையுமே பொறுத்தது.

□ □ □

அப்பொழுதுதான் மழை பெய்து ஓய்ந்தது. கொல்லன் அலிஸான்ட்ரோ வீட்டுக்கருகில் உள்ள சிற்றோடையில் வெள்ளம் துள்ளித் ததும்பிக் கொந்தளித்து ஓடுகிறது.

கிழிந்துபோன, ஆனால் தையலுக்கு மேல் தையல் போடப் பட்ட உடைகளை அணிந்த இரு சிறுவர்கள் ஓடி வருகிறார்கள். கட்டை குட்டையான மூத்த பையன் முதலில் ஓடிச்சென்று முழங்காலளவு தண்ணீரில் இறங்கிவிடுகிறான். பக்கத்திலிருந்த கல்லையும் கட்டியையும் ஓடையில் போட்டு அணை கட்டுகிறான். அவன் கையருகிலிருந்த கற்கள் யாவும் காலியாகிவிட்டன. தம்பிக்கு உத்தரவு போடு கிறான். அவன் தூரத்தில் கிடப்பவைகளை எல்லாம் தூக்க முடியாமல் தூக்கி முக்கி முனகிக்கொண்டு வருகிறான். சுமை தாங்க முடியவில்லை. வழியில் பொத்தென்று போட்டுவிடுகிறான்.

''முட்டாள்!'' என்று கத்திக்கொண்டு, மூத்தவன் கரையில் குதித்தேறி, அவனை நோக்கி ஓடி வருகிறான். கல்லைத் தூக்கி வீசுகிறான். ஏற்கெனவே கட்டப்பட்ட கற்குவியல் அணைக்கட்டுச் சிதைந்து உருண்டு விடுகிறது. மறுபடியும் தண்ணீரில் குதிக்கிறான்......

அச்சமயம் அலிஸான்ட்ரோவின் வீட்டினுள்ளிருந்து நடையில் வந்து நின்றஸ்திரீ, ''பெனிட்டோ! ஆர்னால்டோ!'' என்று உரத்த குரலில் கூப்பிடுகிறாள். அவள்தான் அவர்களுடைய தாயார் **ரோஸா மல்டோனி**. குழந்தைகள் இரண்டும் கொச்சையான பாஷையில், ''இதோ வருகிறோம்!'' என்று சொல்லிக் கொண்டு அவளிடம் ஓடுகின்றன.

''சுத்தமான இத்தாலீய பாஷையில் பேச வேண்டும்'' என்று இதமாகப் புத்திமதி சொல்லுகிறாள் அன்னை. அவள் ஆரம்பப் பாடசாலை உபாத்தியாயினி.

அலிஸான்ட்ரோ உலையில் எதையோ காய வைத்து உருக்கிக் கொண்டிருக்கிறான். பற்றுக்கோலைத் திருப்பிக் கொடுத்துக்கொண்டே, ''பெனிட்டோ, அந்தச் சுத்தி யலை எடு!'' என்கிறான்.

வேலை முடிந்தது. குடும்பம் சாப்பிட உட்கார்ந்து விட்டது. உணவு பசியின் கூர்மையை அதிகப்படுத்து வதற்கு மட்டுமே காணும். உழைப்பின் மிகுதியால் தட்டில் கவனத்தைச் செலுத்தினான் அலிஸான்ட்ரோ. ரோஸா தனது தேவையைக் காட்டாது, அவனுடைய தட்டிலும், குழந்தைகள் தட்டிலும் உணவைப் பரிமாறி விடுகிறாள்.

அவர்கள் பணப்பை நிரந்தரமாகக் காலியாகவே கிடக் கும். எண்ணி வைத்ததற்கு மேல் சாப்பிடப்படும் ஒவ்வொரு உருளைக்கிழங்குத் துண்டும் பெருத்த பொருளாதார நெருக்கடியை உண்டுபண்ணும் என்பது, வறுமையில் சுருண்டு துடிப்பவர்களுக்குத்தான் தெரியும். இவர் களுக்குச் சமூக ஏற்றத்தாழ்வின் காரணஸ்தர்கள் மீது சீற்றமும், பொதுவுடைமைக் கனவும் ஏற்படுவது அதிசய மன்று. 1874-ம் வருஷம் போர்லியில் ஆன்ட்ரியா காஸ்டா ஆரம்பித்த முதல் இன்டர்நாஷனலின் கிளையில் அலிஸான்ட்ரோ சேர்ந்ததும் அதிசயமன்று.

சாப்பாடானதும் குழந்தைகள் படுக்கச் சென்று விடுகின்றன. படுக்கை என்று விசேஷமாக ஒன்றுமில்லை. மூலையில் விரிக்கப்பட்ட வைக்கோல் மீது ஒரு துணி. அது தான் குழந்தைகளின் படுக்கை.

குழந்தைகள் தூங்கி விடுகின்றன.

''பையனைப் படிக்க அனுப்ப வேண்டாமா?'' என் கிறாள் ரோஸா.

அவன் தாடியை மெதுவாக நெருடிவிட்டுக் கொண்டு, மற்றொருகையால் பல்லைக்குத்திக்கொண்டே, ''மரானி யிடந்தான் போய்ப் படித்துவிட்டு வருகிறானே!'' என் கிறான். அவன் மனது ஸ்தல நிர்வாக ஊழலில் குமைந்து கொண்டு கிடக்கிறது-

''அது போதுமா? பாஸாகிவிட்டானே!'' என்கிறாள் ரோஸா.

''பீயன்ஸாவுக்கு வேண்டுமானால் அனுப்புகிறது!'' என்று விஷயத்தை முடிவு கட்டுகிறான் அலிஸான்ட்ரோ.

மறுநாள் காலை, பக்கத்து வீட்டுக்காரன் கழுதையை இரவல் வாங்கி வண்டியில் பூட்டுகிறான் அலிஸான்ட்ரோ. சின்னமூட்டை, பழைய பாடப்புத்தகம், புதிதாக துவைத்து ஒட்டுப் போட்டுத் தைத்த சாயம் போன பட்டுச்சட்டை முதலிய அலங்காரங்களுடன் வண்டியில் வந்து ஏறிக் கொள்ளுகிறான் பெனிட்டோ. வாசல்படியில் நின்று அம்மாவும் தம்பி ஆர்னால்டோவும் இவனை வழியனுப்பு கின்றனர்.

பீயன்ஸாவுக்கு வண்டியை ஓட்டிக்கொண்டு போகிறான் அலிஸான்ட்ரோ. கழுதையும் ரொம்பச் சுறுசுறுப்பாகப் புறப்படுகிறது, 20 கஜம்கூடப் போகவில்லை—அடடா! என்ன? கழுதையாருக்குத் திடீரென்று படுத்துக்கொள்ள வேண்டும் என்ற ஆசை வந்துவிட்டது. ஓடும் வழியில் சடக்கென்று படுத்துக்கொள்ளுகிறார். இந்த அதிர்ச்சியில் வண்டி, அப்பா, மகன்—எல்லாம் அபேதமாகக் குழம்ப வேண்டியதாயிற்று.

பிறகு, வெகு சிரமப்பட்டதற்கப்புறம், கழுதை யாருக்கு என்ன தோன்றியதோ, எழுந்து சாதுவாக நடக்க ஆரம்பிக்கிறார்.

பையனை பீயன்ஸாவிலுள்ள சாமியார் பள்ளிக்கூடத் தில் சேர்த்துவிட்டுத் திரும்புகிறான் அலிஸான்ட்ரோ.

பெனிட்டோவின் பள்ளிக்கூட வாசம் நெடுநாள் நீடிக்கவில்லை. தன் வயதுக்கு மிஞ்சிய ஒரு பையனை ஒரு மொண்ணைக் கத்தி கொண்டு குத்தி விடுகிறான். சாமியார் கள் இவனுடையபடிப்புக்குச் சீட்டுக்கொடுத்துவிடுகிறார்கள். திடீரென்று மகன் புஸ்தக மூட்டை வகையறாக்களுடன் வருவதைக் கண்ட அலிஸான்ட்ரோ விசாரிக்கிறான், சமாசாரம் தெரிகிறது.

''அன்றைக்குக் கழுதை படுத்துக்கொண்டபோதே எனக்குத் தெரியுமே!'' என்கிறான் தகப்பன்.

தனிக்காட்டு ராஜாவாகக் குருவிக் கூடுகளைப் பிய்த்தெறிந்துகொண்டிருந்த பெனிட்டோவுக்குப் பள்ளிக்கூட வாசம் ஒத்து வரவில்லை. ஆனால் படிப்பில் ஆசை இல்லாமல் இல்லை.

பீயன்ஸா சம்பவத்துக்கப்புறம் வீட்டில் கொஞ்ச நாள் இருந்து ஒரு காட்டு வாத்தை பழக்க ஆர்னால்டோவுடன் சிரமப்பட்டுக்கொண்டிருக்கிறான் பெனிட்டோ.

அப்போதுதான் நூதன தினுசான கதிரடிக்கும் யந்திரம் பழக்கத்திற்கு வந்துகொண்டிருந்தது. அலிஸான்ட்ரோ அதன் நுணுக்கத்தைக் கற்றுக்கொள்ள முயன்றான். கொல்லுலையில் தகப்பனாருக்கு உதவியாக நின்றுகொண்டிருந்த பெனிட்டோவுக்கும் அதில் நாட்டம் சென்றது. எத்தனை காலந்தான் இரும்புடன் மல்லுக் கட்டிக் கொண்டிருப்பது?

பிரக்யாதி பெறவேண்டிய மனிதர்களின் தாயார் போன்றவள் ரோஸா. பிள்ளையிடம் பெரிய திறமைகள் மறைந்து கிடப்பதைக் கண்டாள். திறமைகள் என்ன? வாத்தியாராவதற்குத்தான்! பார்லிம்போப்போலி என்ற ஊரில் உள்ள டிரெய்னிங் ஸ்கூலுக்கு பெனிட்டோ அனுப்பப்பட்டான், அந்தப் பாடசாலையை நடத்தியவர் கார்டூச்சி என்பவர். அவருடைய சகோதரர் ஒரு கவிஞர்.

உபாத்தியாயராகப் பரிணமிக்குமுன் ஆறு வருஷங்கள் புஸ்தகங்கள், பென்ஸில், இங்கி, காகிதம்—இவற்றுடன் இடைவிடாது மல்லாட வேண்டியிருந்தது.

கடைசியாக யோக்கியதா பத்திரமும் கிடைத்தது. ஊருக்கு அருகிலுள்ள முனிஸிபாலிடியில் குமாஸ்தா வேலைக்கு மனுப் போட்டு முயற்சி செய்தான் பெனிட்டோ.

அப்பா அபேதவாதியாயிருந்தது வேலைக்குக் குறுக்கே வந்து நின்றது.

ஆனால், வேறொரு மாகாணத்தில் குவால்டீரி என்ற ஊரில் வேலை கிடைத்தது. வாத்தியாரானான் பெனிட்டோ. ஒரு நாள் மத்தியானம், ''நீங்கள் முயற்சி செய்தால்......'' என்ற தலைப்பில் ஒரு வியாசத்தை அவன் மாணவர்களுக்கு எழுதிக் கொடுக்கும்வரை அந்த உத்தியோகம் நிலைத்தது. பெனிட்டோ மாணவர்களுக்கு உப்புச்சப்பில்லாமல் இருக்கும் வியாசத்தை எழுதிப்போட்டுப் பொழுதைக் கழிக்கவில்லை. அதற்கு மாறாக அவனுடைய வியாசம் மேலதிகாரிகளுக்கு அஜீரணத்தை உண்டு பண்ணியது. பள்ளிக்கூடத்தையே மூடிவிட்டார்கள்.

அப்பொழுது முஸொலீனிக்கு வயது பத்தொன்பது.

வேலையோ போய்விட்டது. வீட்டிலோ அடுப்பில் பூனை படுத்திருக்கிறது. வெளியிலோ, பொது மக்களில் பெரும்பாலோர் பொது உடைமைவாதிகளாயில்லா விட்டாலும், அலிஸான் ட்ரோவின் மனநிலை கொண்டிருந்தனர். நாட்டிலே மத்ய சர்க்கார், பிரான்ஸிஸ்கோ கிரிஸ்பி என்ற பிரதம மந்திரியின் கீழ், அடக்குமுறைப் பாணத்தைத் தொடுத்து வந்தது.

பெனிட்டோவின் உத்தியோகப் பருவத்தில் நடந்த 'ரொட்டிப் புரட்சி' இதற்குச் சரியான உதாரணம். நிலச் சுவான்தார், பணக்காரர்கள் கொடுமை தாங்க மாட்டாமல், அபேதவாதிகள், அராஜகர்கள் தலைமையில் தொழிலாளர்கள் திரண்டனர். கலகங்கள், சூறை, சிறைகளைத் திறந்து கைதிகளை வெளிவிடல் முதலிய திருவிளையாடல்கள் எங்கும் எழலாயின. இவற்றிடையே உள்நாட்டுக் கலகங்கள் என்று சொல்லக்கூடிய தன்மையில் தேர்தல்களும் நடைபெறும். வெற்றி பெற்றவர்கள் — ஜனநாயகம் விவரிக்கும் மக்களின் பிரதிநிதிகளோ என்னவோ—ஆட்சி

நடத்தலாயின. மந்திரி சபை அடக்குமுறைப் பாணத்தைத் தொடுத்தது. 1894 ஜனவரியில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் சிறை சென்றனர். தலைவர்கள் பலர் இரவோடு இரவாக சர்க்காரால் கைது செய்யப்பட்டுக்கடத்தப்பட்டனர். இத்தாலியே கொந்தளித்துவிட்டது. இது அபேதவாத இயக்கத்திற்குப் புதிய உத்வேகம் அளித்தது. 1895-ம் வருஷப் பொதுத் தேர்தலில் 12 அபேதவாதிகள் வெற்றி பெற்றனர்.

சர்வசந்தேகமும், குருட்டுப் பிடிவாதமும் கொண்ட கிரிஸ்பி, முந்திய வருஷம் அக்டோபரில்தான் அபேதவாத ஸ்தாபனங்கள் மீது தடை விதித்துவிட்டான். இதனுடன் கலகம் அமுங்கிவிடவில்லை. 'உணவுப் புரட்சி' என்று பொதுவாகக் கூறப்படும் பெருங்கலகம் 1898-ம் வருஷம் தோன்றியது. மிலான் நகரில் மட்டும் 400 பேர் மாண்டனர். 828 பேர் கைது செய்யப்பட்டனர். 688 பேருக்கு ஈவிரக்கமற்ற தண்டனை. அபேதவாதத் தலைவனான துராட்டிக்கு 12 வருஷம் கடுங்காவல். புரட்சி—சமாதானம், புரட்சி-ராணுவச் சட்டம்—இதுதான் 1914-ம் வருஷத்திய ஜெர்மன் சண்டை வரை இத்தாலி சென்ற பாதை. கிரிஸ்பியின் வளர்ச்சி, வீழ்ச்சி. அவனுடைய முயற்சி, எல்லாவற்றையும் கண்டான் முஸொலீனி. அப்பொழுது அவன் அபேதவாதி. என்ன அபிப்பிராயம் கொண்டிருந்தானோ? ஆனால் இன்று முஸொலீனியின் ஆட்சியில் கிரிஸ்பிக்கு ஓர் உன்னத ஸ்தானம் அளிக்கப்பட்டிருக்கிறது.

நாட்டிலே அராஜகர்களும் அபேதவாதிகளும் ஒருபுறம்; விவஸ்தையில்லாத கட்சி வகுப்புகள் பல மற்றொரு புறம். இத்தாலியப் பார்லிமெண்டைச் சந்தி சிரித்தது. கட்சிப் போராட்டத்தை மறந்து சட்ட சபையில் இலட்சியம் வைத்தனர் அரசியல் சந்தர்ப்பவாதிகள். புது வருஷக் காலண்டர் மாதிரி, சராசரி வருஷத்திற்கு ஒரு மந்திரி சபை உற்பத்தி

செய்யப்பட்டது. 1848-ல் புது அரசியல் அமுலுக்கு வந்ததிலிருந்து 1922-ல் முஸோலீனி பதவிக்கு வந்ததுவரை 74 வருஷத்தில் 67 மந்திரி சபைகள்! முழங்கால் சகதி நிறைந்த பாதை வழியாகத் திருடனைத் துரத்திக் கொண்டு ஓடும் போலீஸ்காரன் போல, தட்டுத் தடுமாறி ஆட்சி நடந்தது. மறுமலர்ச்சியில் பிறந்த பார்லிமென்ட் சந்தர்ப்பவாதிகள் வசம் சிக்கியது; வெற்றி தோல்விகள், இலட்சியங்கள் யாவும் அவர்களுடைய தந்திரவாதங்களுள் ஒடுங்கின. சட்டத்திற்குக் கட்டுப்பட்ட மன்னன், பேசாமல் சட்டத்திற்குக் கட்டுப்பட்டே இருந்தான். மதகுரு போப், பாரமார்த்திக வழிகளில் சிந்தையைச் செலுத்திவிட்டு, வாட்டிக்கன் அரண்மனையில் அடங்கியிருந்தார்.

இந்த நிலையில் முஸோலீனி ஊருக்குப் போய் என்ன செய்ய? நாட்டில் இருக்கவே அவனுக்குப் பிடிக்கவில்லை. அமெரிக்காவுக்குப் போக வேண்டியதுதான் பாக்கி—உடனே லட்சாதிபதியாக ஆகிவிடலாம் என்று இத்தாலியர்களுக்கு ஒரு நம்பிக்கை உண்டு. வயிறு பட்டினியா யிருக்கையில் தர்க்கவாதத்தை மீறும் எந்த நம்பிக்கையும் உண்டாவது சகஜந்தானே! ''அமெரிக்காவுக்குப் போகப் போகிறேன்; பணம் அனுப்ப முடியுமா?'' என்று வீட்டுக்குக் கடிதம் எழுதினான் பெனிட்டோ.

## 3. ஒரு ஷில்லிங் ஆறு பென்ஸ்

ஊரில் தாயாரிடமிருந்து கடிதம் வந்தது: ''உன்னை அமெரிக்காவுக்கு அனுப்ப எனக்கும் ஆசைதான். அதற்குக் கையில்தான் பணமில்லை. இருக்கிறதை அனுப்பி வைத்திருக்கிறேன்.''

இருக்கிற பணம், வயிற்றைக் கட்டிக்கொண்டு நடந்தால், ஸ்விட்ஸர்லாந்து வரைசெல்லுவதற்குப் போதும். அதற்கப்புறம்? இப்பொழுது இருக்கிறதைவிட அப்பொழுது என்ன மோசமாகிவிடப் போகிறது? கையில் சின்ன மூட்டை, மனத்தில் கசப்பு, வயிற்றில் பசி—இந்த மூலதனத்தை வைத்துக் கொண்டு, புரட்சிக்காரர், தேசப் பிரஷ்டர்கள் முதலியோர் தலைமறைவாக வசிக்கும் ஸ்விட்ஸர்லாந்தை நோக்கி நடந்தான் பெனிட்டோ.

ஃ ஃ ஃ ஃ

இந்த இடத்தில் இத்தாலியின் அயல் நாட்டுத் தொடர்பையும் சற்று கவனித்துக் கொள்வோம். இத்தாலிய மறுமலர்ச்சிப் போராட்டத்தில் பிரெஞ்சுச் சதி **வெனிஷி யாவை** இழக்க வைத்தது. அதாவது, 1858-ல் **வெனிஷியா, கியூலியா, லொம்பார்டி** என்ற மூன்று பிரதேசங்களிலிருந்தும் ஆஸ்திரியாவை விரட்ட, இரண்டாவது விக்டர் இமானுவல் மூன்றாவது நெப்போலியனுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு போர் தொடுத்தான். லொம்பார்டி கைவசமாயிற்று. ஆனால் திடீரென்று நெப்போலியன் ஆஸ்திரியாவுடன் சேர்ந்து கொண்டான். 1859-ல் **வில்லா பிராங்காவில்** நிறைவேற்றப் பட்ட ஒப்பந்தம் இத்தாலியர்களுக்குப் பெருத்த ஏமாற்றம். இந்த ராஜதந்திரச் சூழ்ச்சிகளைப் பின்னணிப்படுதாவாக வைத்து பெனிட்டோ முஸொலீனி எழுதியிருக்கும் நாடகம் இத்தாலியர்களுக்குப் பிரெஞ்சுக்காரர்கள் மீதிருந்த கசப்பைத் தெளிவாகக் காட்டுகிறது.

இத்தாலி **கவூர்** தலைமையில் ஐக்கியப்பட்டு வந்தது போல, ஜெர்மனியும் **பிஸ்மார்க்** தலைமையில் ஒன்றுபட்டு வந்தது. தெற்கே ஆஸ்திரியாவுக்குப் போட்டியாக ஒரு ராஜ்யம் தலையெடுப்பதின் நன்மையை உணர்ந்த பிஸ்மார்க், இத்தாலிக்கு ஒத்தாசை செய்தான். ஆஸ்திரியர்

வெனிஷியாவிலிருந்து விரட்டப்பட்டனர். ஆல்ப்ஸ் மலைத் தொடரின் அருகில் உள்ள பிரதேசங்களான டிரன்டினோ, டிரிஸ்டி, டல்மாஷியா இன்னும் இத்தாலியர் வசமாக வில்லை. இம்மூன்று நாடுகளும் பாஷை, பழக்க வழக்கங்கள் யாவற்றிலும் இத்தாலியின் ஒரு பகுதிதான். ஆனால் அவை ஆஸ்திரியாவின் ஆதிக்கத்திற்கு உட்பட்டுக் கிடந்தன.

1870-ல் பிரஷ்யா பிரான்ஸின் மீது படையெடுத்தது; அதைத் தடுப்பதற்காக ரோமாபுரியில் நிறுத்தப்பட்டிருந்த பிரெஞ்சுப் படைகள் திரும்ப அழைக்கப்பட்டன. இந்தச் சமயம் பார்த்துத்தான் விக்டர் இமானுவல் ரோமாபுரியுள் பிரவேசித்து அதைக் கைப்பற்றிக்கொண்டான். விக்டர் இமானுவல் ஐக்கிய இத்தாலியின் மன்னன் ஆனான். ஹோஹன் ஜல்லார்ன் வம்சத்தார் (கெய்ஸரின் முன்னோர்கள்) இம்பீரியல் ஜெர்மன் கிரீடத்தை வகித்தனர்.

இத்தாலியர் மத்யதரைக் கடல் கொள்கை, மறுபடியும் இத்தாலி-பிரெஞ்சு-ஜெர்மனி முக்கோணச் சண்டையைக் கிளப்புகிறது.

இத்தாலியர் ஏற்கனவே டூனிஸில் குடியேறியிருக்கின்றனர். பிரெஞ்சுத் துருப்புகள் திடீரென்று பிரவேசித்து 1881-ல் டூனிஸைத் தங்கள் பாதுகாப்புக்குள்ளடக்கிய நாடாக்கிக் கொண்டன. இத்தாலி, பழைய நண்பன் பிரஷ்யாவின் (அதாவது ஜெர்மனியின்) உதவியை எதிர் பார்த்தது. ஆனால் பிரஷ்யாவின் நிலைமை வேறு மாதிரி யாய்விட்டது. அது ஆஸ்திரியாவுடன் புதிய உடன்படிக்கை வைத்துக் கொண்டிருந்தது. ஆஸ்திரியா இத்தாலியின் பழைய விரோதி. ரோம்-பெர்லின் உறவு ஏற்படுவது என்றால், அது ரோம்-வியன்னா சம்பந்தத்தின் ஒரு அம்சமாகவே இருக்கும் என்பதைத் தெளிவாக்கிவிட்டான் ஜெர்மன் பிரதம மந்திரி பிஸ்மார்க். வேறு விதியில்லாமல்

இத்தாலி கையைக் கட்டிக்கொண்டிருந்தது. 1882-ம் வருஷம் இத்தாலி, ஜெர்மனி, ஆஸ்திரியா மூன்றும் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டன. இந்தச் சம்பந்தம் 1914-ம் வருஷம் ஜெர்மன் யுத்தம் ஆரம்பித்த பொழுது தான் முறிந்தது. அதை மீறியதும் இத்தாலிதான்; மீறியதற்குக் காரணமானவன் முஸோலீனி.

பெரிய மனிதனுடைய வாலைப் பிடிப்பவனுடைய அந்தஸ்தைப் போல, ஐரோப்பிய அரசியல் அரங்கத்தில் இத்தாலியின் செல்வாக்கும் உயர்ந்தது. ஆனால் டூனிஸ் விஷயம் அப்படி அப்படித்தான். ஸிவில் கோர்ட் வியாஜ்யம் மாதிரி முடிவில்லாமல் நீண்டு கொண்டே கிடந்தது. ஆனால் இத்தாலி சும்மா இருந்துவிடவில்லை. டிரிப்போலி. ஸிரானியாக்கா, சோமாலிலாந்து முதலிய பிரதேசங்களில், பல முயற்சிகளுக்கப்புறம், காலனிகளை அமைத்தது.

வில்லா பிராங்கா, டூனிஸ் இரண்டு சம்பவத்திலும் பிரெஞ்சு ராஜதந்திரம் இத்தாலிக்குப் பட்டை நாமம் சாத்தியது. ஆஸ்திரியாவும் ஜெர்மனியும் வேறு ஒரு தினுசாக இத்தாலியின் கண்ணில் மண்ணைப் போட்டு வந்தன. பிரெஞ்சுச் சூழ்ச்சி ஆளைத் திடீரென்று கவிழ்க்கும் 'கேப் மாறி' வேலை. ஆனால் ஆஸ்திரிய ஜெர்மன் ரகம் 'உறவு உறவு' என்று சொல்லியே கழுத்தில் கயிற்றை மாட்டும் தந்திரம். இதனால் தான் மெதுவாகப் படிப்படியாக ஏமாற்றியவன் மீது பொங்கிய சீற்றம் வெஸூவியஸ் எரிமலையின் அக்னிப் பிழம்பு போல் அடிவயிற்றிலிருந்து புறப்பட்டது. ஜெர்மனி, மெதுவாக, அமைதியாக, வடக்கு இத்தாலிக்குச் செழிப்பை ஏற்படுத்துவது போல் அதன் மீது உட்கார்ந்து, அதன் வளங்களை உறிஞ்ச ஆரம்பித்தது. 1890-ம் வருஷம் 'பாங்கா கமர்ஸியேல்' என்ற வர்த்தக பாங்கி ஒன்று அமைக்கப்பட்டது. ஜெர்மன் மூலதனம்

கேட்கவா வேண்டும்? இத்தாலியின் கழுத்து ஜெர்மனியின் கையில்; ஆஸ்திரியாவின் காலும் அதன் மேல் ஏறிக் கொண்டது. 1914-ம் வருஷம் ஜெர்மன் சண்டை ஆரம்பிக்கும் பொழுது இத்தாலியின் நிலை இதுதான்.

* * *

ஸ்விட்ஸர்லாந்துப் பயணம் தடைப்படச் சாதாரணக் காரணங்கள் எத்தனையோ இருக்கின்றன. உதாரணமாக, கால் வலித்தால் உட்கார்ந்து கொள்ளலாம். இதோடு, ஊரிலிருந்து ஒரு கடிதம் வேறு வந்திருந்தது.

போர்லியிலே தேர்தல் நடைபெற்றதாம். ஊரிலுள்ள நிலச்சுவான்தார்கள் தேர்தல் ரிஜீஸ்தரைத் தங்கள் சௌகரியப்படி அமைத்துக் கொண்டார்கள். அலிஸான்ட்ரோ, எலக்ஷன் நடைபெற்ற இடத்திற்குள் நுழைந்து, பாலட் பெட்டியை உடைத்தெறிந்துவிட்டான். போலீஸார் அவனைக் கைது செய்து விட்டார்கள். இதுதான் தகவல்.

''நான் அங்கு வரவேண்டுமா?—பெனிட்டோ'' என்று தந்தியடித்துக் கேட்டான். அவனுக்கும் பொதுக் கூட்டத்தில் பேசுவதில் கொஞ்சம் பேருண்டு. தகப்பனார் சார்பில் கிளர்ச்சி நடத்தவேண்டும் என்று அவனுக்கு உத்தேசம்.

''அவசியமில்லை. நேரே ஸ்விட்ஸர்லாந்திற்குப் போகவும்'' என்று பதில் தந்தி வந்தது.

அவசியமில்லையாமே! பின் அங்கென்ன வேலை? யாத்திரை மறுபடியும் தொடங்கியது.

அவன் ஸ்விட்ஸர்லாந்து எல்லைக்குள் பிரவேசிக்கும் பொழுது ஒரு ஷில்லிங்கும் ஒன்பது பென்ஸும்தான் மிச்சம்.

நடந்தே லாஸேனுக்குச் செல்லுகிறான். வயிற்றுப் பசி சகிக்க முடியவில்லை. காலும் தள்ளாடுகிறது. சோர்ந்து

உட்கார்ந்து விடுகிறான். பக்கத்தில் ஒரு மைதான வெளி. அதில் இரண்டு ஸ்திரீகள் உட்கார்ந்து 'வன போஜனம்' சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். பார்வைக்கு ஆங்கிலேயர் மாதிரி இருக்கிறது. யாராயிருந்தால் என்ன? எழுந்திருக்கிறான். திடுதிடு வென்று அவர்கள் முன் செல்லு கிறான். பரப்பி வைத்திருந்த சாப்பாட்டு வகைகளைப் பேசாமல் எடுத்துக்கொள்ளுகிறான்.

''ஏ! யார்? கொள்ளை! தீ! கொலை!'' என்று ஸ்திரீகள் கூச்சலிடுகின்றனர்.

அவன் பிடிபடுவதற்காக அதுவரை மூலையில் காத்து நிற்பானா?

கூப்பிடு தூரத்திற்கப்பால், ஒரு வாய்க்காலுக் கருகில். ஒருவன் உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருக்கிறான். *''பூர்ஷுவா, பிசாசு!'' என்ற சாபத்தை வாய் முணு முணுத்துக் கொண்டிருக்கிறது. *கார்ல் மார்க்ஸின் பொருளாதாரக் கொள்கைகளை வயிற்றுக்குள் செல்லும் ஒவ்வொரு உருண்டையும் தெளிவாக்குகிறது. வாயைத் துடைத்துக்கொண்டு அந்த மனிதன்-பெனிட்டோ—எழுந்து நடக்கிறான். லாஸேன் வந்து சேரும் சமயம் பொழுது இருட்டிவிட்டது. மறுபடியும் உணவுப் பிரச்னைதான். இந்தத் தடவை யாரும் 'வன போஜனம்' நடத்திக் கொண்டிருக்கவில்லை. ஒரு குதிரை லாயத்தில் கிடந்த காய்ந்து உலர்ந்த புல்லுக் கட்டின் மேல் படுத்துக் கொள்ளு கிறான் பெனிட்டோ.

மறுநாள் காலை. குளிர் தாங்காமல் கால் சட்டைப் பைக்குள் கைகளை நுழைத்துக்கொண்டு, ஏதாவது வேலை கிடைக்குமா வென்று பார்க்கப் புறப்படுகிறான்.

---

* பூர்ஷுவா —பிறர் உழைப்பால் வாழ்பவர்; செல்வர்.

* கார்ல் மார்க்ஸ்— பொது உடைமைக் கொள்கையின் பிதா; அபேதவாதிகளின் ஆசாரியன்.

ஒரு தெருவில் கட்டட வேலை நடந்து கொண்டிருக்கிறது. ''நானும் வேலை செய்யட்டுமா?'' என்று கேட்டான் மேஸ்திரியிடம்.

மேஸ்திரி அவனை உச்சி முதல் உள்ளங்கால் வரை ஒரு தடவை முறைத்துப் பார்த்தான். ''இந்தச் செங்கல்களை எடுத்துக் கொடுக்கவேண்டும். ஒரு நாளைக்குப் பதினெட்டுப் பென்ஸ் சம்பளம்'' என்றான் மேஸ்திரி.

பெனிட்டோ பதில் பேசவில்லை. பேசாமல் மேல் சட்டையைக் கழற்றினான்.

அன்று மாலை நெற்றியிலிருந்த வியர்வையைப் புறங்கையால் துடைத்துக் கொண்டு, கூலியை வாங்கிப் பையில் போட்டுக் கொண்டு நடந்தான். ஊரைச் சுற்றிப் பார்த்தான்.

வழியிலே, ஒரு கட்டடத்தில் ஒரு பலகை தொங்கிக் கொண்டிருந்தது. அதில், லாஸேன் சர்வகலாசாலை புரொபஸர் **வில்பிரடோ பேரட்டோ** சமூக சாஸ்திரத்தைப் பற்றி மாலை நேரங்களில் வகுப்புக்கள் நடத்துகிறார் என்று கண்டிருந்தது. சுற்றுமுற்றும் திரும்பிப் பார்க்கையில், கட்டடத்தினுள்ளிருந்து ஒருவர் வந்தார். பார்வைக்கு இத்தாலி தேசத்தார் மாதிரி இருந்தது.

''புரொபஸர் எங்கே யிருக்கிறார்?'' என்று அவரிடம் இத்தாலிய பாஷையில் கேட்டான் பெனிட்டோ.

''யார்? புரொபஸர் பேரட்டோவா? நீ யார்? இத்தாலியில் எந்த மாகாணம்?'' என்றார் அந்த மனிதர்.

''என் பேர் பெனிட்டோ முஸொலீனி. என்னமோ ஸ்பெஷல் வகுப்பு நடத்துவதாகப் போட்டிருக்கிறதே—சம்பளம் என்னவிருக்கும் என்று கேட்க நினைத்தேன்—என் ஊர் பிரடாப்பியோ. ரோமாக்னாவைச் சேர்ந்தது.''

அந்த மனிதரின் முகம் மலருகிறது. ''என் பேர் பானிஸெக்னி; நானும் லாஸேனில் புரொபஸராகத்தான் இருக்-

கிறேன்; உன் தகப்பனார் யார்?'' என்றார் ரோமாக்னா பாஷையில்.

அதுவும் நல்ல காலந்தான் என்று பெனிட்டோ எண்ணினான். புரொபஸர் பேரட்டோவுக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டான். மாலை நேரங்களில் சமூக சாஸ்திரப் பயிற்சி; பகல் முழுதும் செங்கல் சுமக்கும் வேலை. இது ஒத்து வரவில்லை. சாயங்காலம் ஆறு ஏழு மணி வரை சக்கை பிழிந்து விடுவான் மேஸ்திரி. வேறு வேலை பார்த்தால் தேவலை என்று நினைத்தான் முஸொலீனி.

முஸொலீனியே தனது ஆசிரியர்கள் என்று ஒப்புக் கொள்ளும் வெகு சிலரில் வில்பிரெடோ பேரட்டோவும் ஒருவர். பெனிட்டோவின் மனத்தில் ஒரு நிரந்தரமான, ஆழ்ந்த பக்தி சிரத்தையுள்ள ஸ்தானத்தை வகிப்பவர் அவர்களில் பொருந்தும்.

இந்நிலையில், பேரட்டோ யார், அவருடைய கொள்கைகள் என்ன என்று தெரிந்து கொள்வதால் கெடுதல் ஒன்றுமில்லை. அவர் ஒரு எஞ்சினீயர். பேஸிஸத்திற்கு அவர்தான் சங்கராசாரியர். பேஸிஸ்ட் கொள்கைமீது அவருக்கு விருப்பு வெறுப்பற்ற மரியாதை இருந்தது என்பதை 1923-ம் வருஷத்தில் அவர் எழுதிய கட்டுரைகளும், 1916-ம் வருஷம் கலகக்காரர்களைப் பற்றிய அவருடைய அபிப்பிராயங்களும் எடுத்துக் காட்டும்.

பேரட்டோவின் சித்தாந்தம் வருமாறு:

ஆட்சி வர்க்கம் என்பது தனித்தன்மை வாய்ந்த ஒரு சிலரின் கூட்டம். யாரும் நிர்வாகத்தை நடத்த முடியும் என்பது கவைக்கு உதவாத பேச்சு. மனித வர்க்கத்தின் நிரந்தரமான நலன்கள், தன்மைகள், மனப்பான்மைகள் நியாயமானவை யென்று நிரூபித்து வளர்க்கச் சித்தாந்தங்களும் வியாக்கியானங்களும் வேண்டியிருக்கின்றன.

முன்னவை இடம், பொருள் பேதங்களால் மாறுபடாமல் எப்பொழுதும் ஒரே மாதிரியிருப்பவை. பின்னவை கால இட பேதங்களுக்குட்பட்டு மாறுபவை. முன்னவை மூல சக்திகள். பின்னவை அவற்றின்மீதுள்ள போர்வைகள், அலங்காராதிகள்.

சமூக விஷயங்களில் ஏற்படும் சட்டதிட்டங்கள் இதயத்தைத் தொடக்கூடிய உணர்ச்சி பாவங்களை ஊட்டக் கூடியவையாக இருந்தால், மத பக்தியைப் போல் உயரக் கூடியவையாக இருந்தால், அவற்றை யாவரும் இலகுவில் ஏற்றுக்கொள்வார்கள். சட்டதிட்டங்கள், குறிப்பிட்ட நோக்கத்தைப் பூர்த்தி செய்யக்கூடிய சக்தி வாய்ந்தவையா என்பது கூட அவசியமில்லை. ஒரு குறிப்பிட்ட சமூக லட்சியத்தையடையவேண்டும் எனில், மக்களை அதற்கப் பாலும் முடுக்கிச் செல்லவேண்டியது அவசியம். அதற்குப் புராணங்களும், கற்பனைக் கதைகளும், பலாத்காரமும் அவசியம். புராணக் கதைகள் போன்ற உணர்ச்சி வெறி யூட்டக்கூடிய விஷயங்களுக்கு நடைமுறை வாழ்க்கை பெருத்த முட்டுக்கட்டையாக இருக்கும். நாம் கொண்ட நோக்கத்தின் அளவிலேயே செயலும் அடங்கும்படி அது தடை செய்யும். பொது மக்களைப் பண்படுத்தினால் மட்டும்—அதாவது நமது சித்தாந்தத்தின் தர்க்க அம்சங் களைப் புரிந்துகொள்ளும்படி செய்துவிட்டால் மட்டும்—அவர்கள் நாம் சொன்னபடி நடப்பார்கள் என்று நம்புவது தவறு. வெறும் தர்க்கத்தையே ஆதாரமாகக் கொண்டு விஷயங்களை முடிவுகட்டும் சித்தாந்திகளுக்குக் கூடக் கதை களும் கற்பனைகளும் அவசியமாக இருக்கின்றன.

சமயம், ஒழுக்கம், தேசீயம், தயாளம், கட்சி அல்லது வர்க்க நேர்மை போன்ற காரண சக்திகள் ஜனங்களுக்குத் தூண்டுதல் வண்டியிருக்கின்றன. நன்மை, தீமை இவற்றினிடையே ஏற்படும் நிரந்தரமான போராட்டம் மதச் சண்டைகள், துறவு, லௌகிகம், முன்னேற்றம்'

சமாதான நிலை, சத்தியம், நியாயம், இவற்றின் எதிர் மறைகள் ஆகிய இவை யாவும் மக்களுக்கு அவசியம். சில சித்தாந்தங்கள், உண்மையில் அநுபவத்திற்கு ஒத்தனவா யில்லாவிட்டாலும் அநுபவத்தின் விளைவு என்று மனிதன் நம்புவதால் பயனிருக்கிறது. ஒவ்வொருவனும் விஷயங் களின் உண்மைத் தன்மையை அறிந்துகொள்ளுவது அவனுக்கும் அவன் வாழும் சமூகத்திற்கும் நன்மை என்று கூறும் பொழுது, 'உண்மை' எது, 'உபயோகம்' எது என்ற வித்தியாசம் தெரியாமல், அர்த்தம் குழப்பப்படுகிறது. இப்படித் தன்னையேதான் ஏமாற்றிக் கொள்ளும் ஒரு வித்தையை அநுஷ்டிக்கிறதனால் ஒழுக்கத்தைக் கடைப் பிடிப்பதாக மனிதன் பாவித்துக் கொள்ளுகிறான்.

பேரட்டோவின் கொள்கைப்படி, ஆட்சி புரியக்கூடிய தனிச் சக்தி வாய்ந்தவர்கள் யாரெனில் புத்தி சாதுரியம், குணம், வாக்குச் சாதுரியம், திறமை இவற்றையுடையவர் களே. வாழ்க்கையின் இதர துறைகளில் இருப்பதுபோல், ஆட்சி நடத்தும் விஷயங்களிலும் தனித்தன்மை வாய்ந்தவர்கள் இருக்கின்றார்கள். அரசியல் விஷயங்களில் விசேஷத்திறமை படைத்தவர்கள். இதர துறைகளில் அம்மாதிரியே உயர்ந்த தன்மை வாய்ந்தவர்கள் என்ற இந்த இரண்டு ரகங்களுக்கும் அடுத்தபடியாகச் சாதாரண மக்கள் என்று சொல்லப்படுகிறவர்கள்,—அதாவது, ஸ்ரீமான் பொதுஜனம்—இருக்கின்றனராம். விசேஷத் தன்மை வாய்ந்த பெரியோர்களுள்ளும் நிர்வாகத்தை வகிக்கக்கூடியவர்கள் என்று வடிகட்ட முடியுமாம். எப்படியென்றால், அவர்களுக்குள்ளேயும் ஆட்சிபுரியும் பெரியர்களின் குண விசேஷம் படையாமல், செல்வம், உயர்குடிப் பிறப்பு என்ற பின்வாசல் கதவுகளைத் திறந்துகொண்டு நுழையும் பேர்வழிகளும் அதிகமாக இருக் கின்றனராம். விசேஷ சக்தி வாய்ந்தவர்கள் கீழ்ப்படிகளி லிருந்து மெல்ல மெல்ல இடைவிடாமல் உயரே வந்து கொண்டேயிருக்கின்றனர். இவர்களைச் சமூகத்தின் மேல்

வகுப்பார், மேல் ஜாதியார் என்று கூடச் சொல்லலாம். இவர்களுக்கும் மற்ற சாதாரணமான தாழ்ந்த வகுப்பாருக்கும் என்ன வித்தியாசம்? இரு வகுப்பாரின் அபிலாஷைகள், விருப்பு வெறுப்புகள், நம்பிக்கைகள் ஆகியவை மாறுபட்டிருக்கின்றன. இந்த மாறுபாடே அவர்களுக்குள் வேற்றுமைக்குக் காரணம். சக்தி பொருந்திய சில நம்பிக்கைகள் தாழ்ந்த வகுப்பாரிடத்தினின்றும் எழுகின்றன, பொது மக்கள் மேல் ஜாதியினரின் மீது தங்கள் பலத்தை உபயோகிக்கின்றனர்; உயர்ந்த வர்க்கத்தினரின் பிடிப்பற்ற மனப் போக்குகளை ஒரேயடியாகச் சிதற அடித்து விடுகின்றனர்.

மேல் ஜாதியினர், தங்கள் வீரத்தாலோ, அல்லது வர்த்தக ஆதிக்கத்தாலோ, அல்லது வெறும் குபேர சம்பத்தின் பலத்தாலோ சில காலம் ஆட்சி புரிகின்றனர். காலம் அவர்களுடைய சக்திகளை க்ஷீணிக்க வைக்கிறது. இதரர்கள் உயர்ந்து வந்து அந்த ஸ்தானத்தைப்பிடித்துக்கொள்ளுகின்றனர், நதியின் நீரோட்டம் போலப் படிப்படியான மாறுதல் இருந்தே தீரும், ஆனால், சில சமயங்களில், ஆற்றில் திடீரென்று வரும் வெள்ளம் போன்ற மாறுதல் ஆட்சி வர்க்கத்திலும் ஏற்படுகிறது. அதுதான் புரட்சி. தகுதியற்ற பலவீனர்கள் உயர்ந்த அந்தஸ்துடன் ஒட்டிக்கொண்டிருப்பதே புரட்சிக்குக் காரணம். ஆனால், தாழ்ந்த படிக்கட்டுகளில் அதிகார வெறி கொண்ட ஈவிரக்கமற்ற அபேட்சகர் பலர் இருக்கின்றனர்; அவர்கள் எண்ணிக்கை வளருகிறது; உயர்ந்த வகுப்பார் எதிரிகளை விலைக்கு வாங்கி அடக்கிவிட முயற்சிக்கின்றனர். ஒருபுறம் புகழ், அந்தஸ்து; மறுபுறம் மோதிவரும் அதிகார வெறி! திடீரென்று அணை உடைந்து போக நேருகிறது. அதுதான் புரட்சி.

ஆட்சி முறையில் பலாத்காரத்தின் அவசியத்தைப்பற்றி பேரட்டோ விரிவாக ஒரு கிரந்தம் எழுதியிருக்கிறார். அதன் தர்க்க வாதங்களையே பெனிட்டோ பிற்காலத்தில் உபயோகித்து ஒரு பிரபலமான கட்டுரை எழுதியிருக்கிறான்.

பேரட்டோ ஒரு பொருளாதார சாஸ்திரி. இவருடைய பொருளாதார சித்தாந்தம் முதலாளிகளுக்கு லட்டு மிட்டாய் போன்றது. இதற்கு அத்தாட்சி போன்று, எர்னஸ்ட் பென் என்ற ஆங்கில முதலாளி ஒருவர், தமது மனோ நிலையைத் தெரிவிக்கும் பாவனையில், ஒரு புஸ்தகம் எழுதியிருக்கிறார், அதிலே அவர் சொல்லுகிறதாவது:

''தெரிந்தோ தெரியாமலோ பேரட்டோவின் கொள்கைகளை அப்படியே அமுக்கி மறைத்துவிடச் சதி செய்யப்பட்டதுபோல் காணப்படுகிறது. உண்மையான கொள்கை ஒன்றின் அருகில் அவர் நெருங்கிவிட்டார் என்பதை நாம் ஒப்புக்கொண்டால், அபேதவாதத்தை அடிப்படையாகக் கொண்ட எந்த சமூக அமைப்பும் ஏற்பட முடியாதென்பது நமக்குத் தெளிவாகத் தெரியும். ஆனால் நாம் யாவரும், பழுத்து முதிர்ந்த கன்ஸர்வேடிவ் கட்சியினர் முதல் தீவிர வாதிகள் வரை, அபேதவாதத்தினிடம் அந்தரங்கத்திலாவது இளகிய மனம் படைத்திருக்கிறோம். அது நமது 'செல்லப் பிள்ளை' மாதிரி இருக்கிறது, அது ஒரு வழியில் நமக்குப் பெருமை தருகிறது என்பதில் சந்தேகமில்லை. அதனால் தான் பேரட்டோவைப்பற்றி ஒரு வார்த்தை சொல்லுவது கூட அவசியமில்லை என்று நினைத்துவிட்டார்கள். நமது தேசீயப் பொருளாதார சாஸ்திரத்திலே, பேரட்டோவின் நியதியை அனுதாபத்துடன் வியாக்கியானம் செய்தவர்கள் ஒருவருமேயில்லை. தற்செயலாகத்தான் நான் பேரட்டோவைக் கண்டு பிடித்தேன்.........''

இவ்வாறு அங்கலாய்த்துக்கொண்டு போகிறார் ஸர் பென். இதற்குக் காரணம், பேரட்டோவின் தத்துவம் முதலாளிகளுக்குத் தாங்கள் செய்வது பாவமில்லையென்ற மனச்சாந்தியை அளிக்கிறது!

பேரட்டோவின் நியதி உண்மையாயின், செல்வம் என்பது மாறுதலை அடிப்படையாகக் கொண்டது. ஆயிரம் பதினாயிரம் ரூபாய் ஆஸ்திக்காரன், லட்சாதிபதி, கோடீசுவரன் என்பதெல்லாம் செல்வத்தின் வளர்ச்சி, தேய்வைக் காட்டும் அளவுகள். செல்வம் படிப்படியாக உயர்ந்து கொண்டே போகும், அல்லது படிப்படியாகக் குறைந்து கொண்டே வரும். அதாவது, செல்வ வளர்ச்சியானது, பலரிடையில், அவரவர் முதலுக்கும் திறமைக்கும் ஏற்ப, பலவிதத்தில் மாறுதல் அடைந்து வந்தாலும், ஒன்று அது ஒருமித்து உயர்ந்துகொண்டே செல்லும்; அல்லது ஒருமித்துக் குறைந்துகொண்டே வரும். சாஸ்திர ரீதியாக ஆராய்ந்தால் பொருளாதார சமத்துவம் சாத்தியமாகாத காரியம். தாழ்ந்த வகுப்புக்களை உயர்த்தவேண்டுமெனில் உயர்ந்த வகுப்புக்களையும் உயர்த்தாமல் அது சாத்தியமாகாது. உயர்ந்த வகுப்புக்களை நாசம் செய்தால், தாழ்ந்த வகுப்புகளிலும் நாசம் ஏற்படாமல் தடுக்க முடியாது. பழைய அநுபவம் இதற்கு ஒத்து வருகிறது. முதலாளிகள் கட்சி இதுதான்.

இதுதான் முஸொலீனியின் குரு வகுத்த சித்தாந்தமும். வெவ்வேறு காலத்தில் வசித்தவர்களான நீஷே, ஷோப்பனார், ஜார்ஜ் ஸோரல், மாக்கியவில்லி, கார்ல் மார்க்ஸ் என்பவர்களின் எழுத்துக்களையும் கற்றுக் கற்று முஸொலீனி இப்படி ஒரு சித்தாந்தத்தை உருவாக்கிக் கொண்டான்.

நீஷே பத்தொன்தபாம் நூற்றாண்டின் நடுத்தர வகுப்பார்களின் இலட்சியங்களைக் கட்டோடு வெறுத்தவன். கிறிஸ்தவ மதம், சமத்துவம், சமாதான வாழ்க்கை,

அண்டை அயலாரிடம் நேசப்பான்மை ஜனநாயகம் என்பவையாவும்- பலவீனர்கள், கோழைகள், சுகவாசிகள் யாவரும் சேர்ந்து கட்டிவைத்த இலட்சியங்கள்; பலமும், புதியவற்றைச் சிருஷ்டி செய்யும் திறமையும் படைத்தவர்களை அமுக்கி வைக்க வேண்டுமென்றே கட்டி எழுப்பப்பட்ட கோட்டைச் சுவர்கள் இவை என்பது அவனுடைய சித்தாந்தம். மனித சுபாவம் சிறிதளவாவது அபிவிருத்தியடையும் என்ற நம்பிக்கை கொஞ்சம்கூடக் கிடையாது. மனுஷ்யத் தன்மைக்கு அதீத சக்தி படைத்த *'அதி-மானுஷ்யன் பிறப்பதாலேயே உலகம் அபிவிருத்தியடையவழி இருக்கிறது என்று அவன் நம்பினான், அவன் இப்படி. ஷோப்பனாரோ அவனை விடப் பெரிய அழுகுணிச் சித்தன்.

ஸோரல் என்பவனோ ஒழுக்க-வைராக்யம் படைத்தவன் பொருளாதார அமைப்பில் மாறுதல் ஏற்படுத்துவது அவனுடைய முக்கிய நோக்கமன்று. அதன் மூலமாக, அதற்கு மேற்பட்ட மனித சமுதாயத்தில் ஒழுக்க உயர்வைக் கொண்டுவருவதே அவன் லட்சியம். ''வருங் காலத்தை நோக்கிச் செல்லுவதே போதும்; அதைப்பற்றிக் கற்பனை பண்ணிக்கொண்டிருப்பது அவசியமில்லை. மேலும், வருங்காலத்தைப்பற்றித் தெரிந்து கொள்ளுவதே தப்பு!'' என்று வற்புறுத்துகிறான் ஸோரல். வளர்ச்சிப் பாதையில் செல்ல 'உள்-மனம்' (அதாவது காரண காரிய வாதங்களுக்குக் கட்டுப்படாத அந்தக்கரணம்) போகும் வழியைப் பின்பற்ற வேண்டும் என்று வேறொரு அறிஞன் கூறுகிறான்.

நான்கு நூற்றாண்டுகளுக்கு முன் பிளாரண்ஸ் நகரத்தில் மந்திரி வேலை பார்த்த மாக்கியவில்லியின் அரசியல் கொள்கை எப்படி முஸொலீனியின் மனத்தில் பதிந்திருக்கிறது என்பது பின்வரும் சிறு சம்பவத்தால் நன்கு புலனா

* அதி-மானுஷ்யன்—Super-man.

கும். அவன் சர்வாதிகாரியான பின் பொலோனா சர்வகலா சாலை அவனுக்கு ஒரு கௌரவப்பட்டம் வழங்க முன் வருகிறது. ஆனால் அவன் அதை மறுத்துவிட்டு, மாக்கிய வில்லியின் சித்தாந்தத்தைப் பற்றித் தனி ஆராய்ச்சிக் கட்டுரை எழுதிப் பட்டம் பெறுவதாகக் கூறி, நான்கு அத்தியாயங்கள் கூட எழுதிவிடுகிறான்.

மனிதன் மிகவும் கேவலமான ஜந்து, ஆளப்படு வதற்காகவே சிருஷ்டிக்கப்பட்ட ஒரு பிராணி என்ற அடிப்படையின் மேல், இளவரசன் ஒருவனுக்கு ஆட்சி ரகசியங்களைப் போதிக்கும் முறையில் ஒரு சித்தாந்தம் கட்டிவிட்டுப் போயிருக்கிறான் அந்த மாக்கியவில்லி.

இந்த ரகத்தைச் சேர்ந்த அழுகுணிச் சித்தர்கள் பலர் முஸொலீனியின் மனப்பீடத்தில் ஏறியிருக்கின்றனர். அவனுடைய வறுமையும் ஆசையும் இவர்களுடைய கொள்கைகள் நன்றாய்ப் பதியும்படி மனத்தைப் பண்படுத்தி யிருந்தன.

பேரட்டோபிரசங்கங்களை எத்தனை காலம் முஸொலீனி தொடர்ந்து கேட்டான் என்று கிடைக்கும் ஆதாரங்களி லிருந்து கூறுவது கடினம். ஆனால் அது வெகு காலமாக இருந்திருக்க முடியாது என்பது பலருடைய அபிப்பிராயம். மொத்தம் இரண்டு வருஷங்கள் தான் முஸொலீனியின் ஸ்விட்ஸர்லாந்து வாழ்க்கை. அதிலும் ஒரு குறிப்பிட்ட மாகாணத்தில் இரண்டு மூன்று மாதத்திற்கு மேல் இருக்க வில்லை.

லாஸேனில் நாட்கூலியாக இருந்து வேறு வேலை பார்த்துக்கொண்டிருக்கும் பொழுது, ஒரு நாள் மாலை, பெனிட்டோ ஒரு தெரு வழியாகப் போய்க்கொண்டிருக் கிறான். மூலையில் ஒரு பாதிரியார், அங்கு கூடியிருந்த சிறிய கும்பலுக்கு கிறிஸ்தவ சித்தாந்தத்தை உபதேசித்துக் கொண்டிருந்தார், ''தெய்வம் எங்கும் இருக்கிறது;

யாவற்றிலும் இருக்கிறது......'' என்று அடுக்கிக்கொண்டே போனார் பாதிரியார். ''அப்படியா?'' என்றான் பெனிட்டோ, கூட்டத்தின் ஓரிடத்தில் நின்று கொண்டு. பாதிரியார் புரோடெஸ்டாண்ட் வர்க்கத்தைச் சேர்ந்தவர். அதிலும் வீர வைராக்கியப் பற்றுதலுடைய 'ப்யூரிடன்' போலும். பாதிரியாருக்கு மூக்குக்கு மேல் கோபம் வந்து விட்டது. ''பின்னாலே போ சாத்தானே!'' என்ற விவிலிய வாக்கியத்தை அஸ்திரமாக உபயோகித்தார்.

கூட்டத்தை விலக்கிக் கொண்டு பெனிட்டோ பாதிரியாரிடம் சாவதானமாகப் போனான். பக்கத்தில் போய் நின்று கொண்டு பையில் கையைப் போட்டுக் கடிகாரம் ஒன்றை எடுத்து நீட்டிப் பிடித்துக்கொண்டு, கடிகார முட்களைப் பார்த்துக் கொண்டே, ''ஓய், பாதிரியாரே! உம்முடைய தெய்வம் சர்வ சக்தியுள்ளதானால், எங்கும் இருக்கிறதானால், நான் நிற்கும் இந்த இடத்திலேயே என்னைச் சாக அடிக்கட்டும் பார்க்கலாம்!'' என்றான்.

ஐந்து நிமிஷமாயிற்று. ஒன்றும் நடக்கவில்லை. கும்பல் சிரிக்க ஆரம்பித்தது. நாக்கைச் 'சூள்' தட்டிக் கொண்டு கடிகாரத்தைப் பையில் போட்டுக்கொண்டான் பெனிட்டோ. ''நீர் ஒரு பொய்யர்; கடவுளே கிடையாது!'' என்று சொல்லிவிட்டு வெளியேறினான்.

மறுநாள் காலை செங்கல் தூக்கப் போய் நிற்கிறான். ''அப்பா! உனக்கும் நமக்கும் ஒத்து வராது!'' என்றான் தலைமை மேஸ்திரி.

அதுவும் நல்ல காலத்துக்குத்தான் என்று வெளியேறினான் பெனிட்டோ.

அவனுடைய தீவிரவாத நண்பர்களின் உதவியால், டெடிச்சி என்ற ஓர் இத்தாலியன் வைத்திருந்த ஒயின் கடையில் வேலை கிடைக்கிறது. வாடிக்கைக்காரர்களுக் கெல்லாம் சரக்குப் போட்டு விட்டு வரவேண்டியது

பெனிட்டோவின் வேலை. இதில் பேரட்டோ பிரசங்கங்களைக் கேட்கப் போதிய அவகாசம் கிடைத்ததாம். இப்போது டெடிச்சி காலமாகிவிட்டான். அவனுடைய மகனும் மகளுந்தான் கடையை நடத்துகிறார்கள். அவர்களுக்கு அந்தக் காலத்தில் பெனிட்டோவைப் பார்த்தது இன்னும் நினைவிலிருக்கிறதாம். எப்போதும் தடபுட வென்று வந்து, சாமான்களை எடுத்துக் கொண்டு, வேலையை அவசர அவசரமாக முடித்துக்கொண்டு போய் விடுவானாம். 1922-ம் வருஷம் முஸொலீனி பிரதம மந்திரி என்ற ஹோதாவில் லாஸேனுக்கு வந்த பொழுது, தனது காரியதரிசிகளை அனுப்பி டெடிச்சி ஒயின் கடையைப் புகைப்படம் எடுக்கச் சொன்னானாம்.

அந்தக் காலத்தில் இவனுக்கு போல்ஷிவிக்கர்களுடன் நெருங்கிய பழக்கம். லெனினைக் கூடச் சந்தித்திருப்பதாகத் தெரிகிறது. தீவிரவாதிகள் ஏற்பாடு செய்யும் பொதுக்கூட்டங்களில் எல்லாம் வாய்த்துடுக்காகப் பிரசங்கம் செய்து அவன் அதிகாரிகளின் கவனத்தைத் தன் மீது வருவித்துக் கொண்டான். இந்தச் சமயத்தில்தான் கள்ளப் பிரயாணச்சீட்டு (பாஸ்போர்ட்) தயாரித்தான். ஸ்விட்ஸர்லாந்துப் போலீஸார் இவனை நாட்டை விட்டுக் கடத்தியதோடு கைவிரல் அடையாளத்தையும் பதிவு செய்து கொண்டு விட்டனர். பின்னர் தலைமறைவாக ஒவ்வொரு மாகாணமாகச் செல்லுவது, அங்கிருந்து துரத்தப்படுவது என்று இப்படியாக ஸ்விட்ஸர்லாந்தையும் கடந்து பாரிஸ் வரை கால்நடையாகவே அவன் சென்றதாகத் தெரிகிறது. பாரிஸில் பிச்சை எடுக்கும் நாடோடி என்று அவனைச் சிறையில் அடைத்து வைத்தார்கள். போகும் வழியெல்லாம் போல்ஷிவிக் சகாக்களின் உதவி. இப்படிப்பட்ட கால் நடை அநுபவத்தில் திடீரென்று ஊர் ஆசை வந்துவிட்டது! நேரே இத்தாலி வந்து சேர்ந்தான்.

## 4. போன மச்சான்...

ஸ்விட்ஸர்லாந்துக்கு அவனைக் கொண்டு சென்ற கால்கள், பிரடாப்பியோவுக்குத் திரும்ப அழைத்து வந்து விட்டன. ஆதியில் காய்ந்த வயிறு, கசந்த மனசு இவற்றுடன் வெளியே சென்றான். இப்போதும் அவற்றை இழந்துவிடாமல் பத்திரமாகத் திருப்பி வீட்டுக்குக் கொண்டு வந்து சேர்த்துவிட்டான். வார்னோ டி காஸ்டாவிலும் அதே நிலைமை தான்.

வீட்டுக்கு மூத்த பிள்ளை திரும்பி வந்து விட்டான். விருந்து பண்ண வேண்டும். அம்மாவுக்கும் அப்பாவுக்கும் ஆசையிருக்கத்தான் செய்கிறது. ஆசை மட்டும் இருந்து விட்டால் போதுமா? விடிய விடிய இரும்புடன் மோதிக் கொண்டாலும், அந்தக் குக்கிராமத்தில் என்ன செய்ய முடியும்? எப்போதாவது ஒருநாள் குதிரைக்கு லாடம் அடிக்கலாம்; சம்மட்டி, மண் வெட்டி திருத்திக் கொடுக்கலாம்; இதைத் தவிர வேறு என்ன இருக்கிறது! இந்தச் சம்பிரமத்தில் அலிஸான்ட்ரோவின் அரசியல் விவகாரங்கள் ஜீவனத் தொழிலுக்கு உலை வைத்துவிட்டன. இந்த நிலையில் அவனது மனைவி ரோஸா மல்டோனி உபாத்திமைத் தொழிலின் மூலம் மாதா மாதம் சம்பாதித்த இரண்டு பவுன் (சுமார் முப்பது ரூபாய்) தான், அடுப்பில் சமயா சமயங்களிலாவது பூனை படுக்காமல் பார்த்துக் கொண்டது. இதல்லாமல் வயது வந்த பிள்ளைகள் வேறு! பெனிட்டோவின் தம்பி ஆர்னால்டோவும் தங்கை எட்ரிஜூம் உடன் வசித்து வந்தனர்.

பெனிட்டோவும் வீடு திரும்பிவிட்டான். இன்னொரு வயிற்றை நிரப்பும் கடமையும் ரோஸாவுக்குச் சேர்ந்தது.

அலிஸான்ட்ரோ அபேதவாதி. அதாவது, வருங்காலத்தின் கற்பனை வாழ்க்கையில் மனத்தைச் செல்லவிட்டு, நாளாவிருத்தி அநுபவங்களைப் பொருட்படுத்தாதவன். 'லோகம் தெரியாதவன்' என்று குறிப்பிடுவார்களே, அந்த ரகத்தைச் சேர்ந்தவன் அவன். நடைமுறை அநுபவங்கள் மனத்தில் கசப்பேற்றியிருந்ததால் புத்தகத்தில் மனஓய்வு பெற முயற்ச்சிப்பவன். மகனின் வெளியூர் அநுபவங்களையும் அவனுடைய தீவிரவாதிகளின் தொடர்பையும் பற்றி ரஸித்து கேட்டுக் கொண்டிருப்பான். தன்னைப் போலவே மகனும் 'தற்புத்தி'யாவதில் அவனுக்குப் பெரு மகிழ்ச்சி.

மாலை நேரம். பொழுது மங்கிவிட்டது. விளக்குக்கூட ஏற்றவில்லை. உலையில் கனியும் தீ வெளிச்சத்தில் தகப்பனும் மகனும் பேசிக்கொண்டிருக்கிறார்கள். கையிலே ஒரு புஸ்தகம்; பெனிட்டோ கண்ணுக்கருகில் பிடித்துக் கொண்டு வாசிக்கிறான்............

''ஏன் கவசமும் ஆயுதமும் தாங்கிய தீர்க்கதரிசிகள் எப்பொழுதும் வெற்றி பெறுகிறார்கள்; ஆயுத பலத்தைத் துணை கொள்ளாத மகான்கள் தோல்வியடைகின்றனர்...?'' என்று பெனிட்டோ வாசித்துவிட்டு நிறுத்துகிறான்; தலையை திமிர்ந்து தகப்பனார் கண்களுக்குள் பார்க்கிறான்.

தகப்பன் தாடியைத் தடவிக்கொண்டே புன்சிரிப்புச் சிரிக்கிறான்.......

''மாக்கியவில்லிதான் என்ன சொல்லுகிறான் பார்ப்போம்! வாசி!...'' என்கிறான் அலிஸான்ட்ரோ.

பெனிட்டோ மேலும் வாசிக்கிறான்.......

''ஆகையால், ஜனங்கள் ஒரு குறிப்பிட்ட விஷயத்தில் நம்பிக்கையை இழந்து விட்டால், பலாத்காரத்தை

உபயோகித்து நம்பவைத்து விஷயங்களைக் கட்டுப் படுத்துவது சரிதான். மோசே, ஸைரஸ், தீஸியூஸ், ரோமுலஸ் முதலியோர் நெடுங்காலம் நிராயுதபாணிகளாக இருந்திருந்தால், தங்கள் தங்கள் அரசியலமைப்புகள்மீது பொது மக்கள் வைத்திருந்த மதிப்பு அகன்றுவிட்டதைப் பார்த்திருப்பார்கள்; தங்கள் அரசியலமைப்புகளுக்கு மரியாதை செய்யும்படிமக்களைத்தூண்டியிருக்க முடியாது.''

''அதெப்படிச் சொல்ல முடியும்?'' என்கிறான் அலிஸான்ட்ரோ.

''பொது மக்களின் குணம் அடிக்கடி மாறக்கூடியது. ஒரு விஷயத்தை நம்பும்படி இலகுவில் செய்துவிடலாம்; ஆனால் அத்தூண்டுதல் நிலைத்திருக்கும்படி செய்வதுதான் கஷ்டம்!'' என்று வியாக்கியானம் செய்கிறான் பெனிட்டோ.

''சபாஷ்!...'' என்று முதுகைத் தட்டிக் கொடுக்கிறான் அலிஸான்ட்ரோ. ''அப்பொழுது, பட்டாளத்தில் சேரப் போகிறாயாக்கும்!'' என்கிறான் கிண்டலாக. அபேத வாதிகள் என்ற ஹோதாவில் தகப்பனும் மகனும் ராணுவத்தை வெறுக்கிறார்கள்.

பெனிட்டோ மனத்தில் ஏதோ யோசனை தோன்று கிறது. ''ஏன்...ஏன்...ஏன்?'' என்ற கேள்விகள் அவன் மனத்தில் படிப்படியாக எழுகின்றன.

''நான் நாளைக்குப் போகப் போகிறேன்....... ராணுவப் பயிற்சி வேண்டும் என்று எனக்குப் படுகிறது...... நான் போகத்தான் போகிறேன்......''

வெரோனா நகரம். சரித்திரப் பிரகித்தி பெற்ற புராதன நகரம்.

ராணுவக் கொத்தளம். அதில்தான் இத்தாலியின் புகழ் பெற்ற பெர்ஸாக்ளீரி ரெஜிமென்ட் இருக்கிறது. தொப்பியில் பச்சை வர்ணம் தோய்த்த கோழி இறகுகள்தான் இந்த

ரெஜிமென்டின் தனிச்சின்னம். இத்தாலியிலேயே ஒழுக்கமும் கட்டுப்பாடும் மிகுந்த படை இதுதான்; மிகவும் வேகமாக இடம் பெயரக்கூடியது. ஓட்டம்-நடை, ஓட்டம்-நடை —இவ்வாறு சளைக்காமல் நெடுந்தூரம் செல்லப் பழக்கு கிறார்களாம். அதுதான் இப்படையின் தனிச்சிறப்பு.

கன்டோன்மென்ட் மைதானத்தில் டிரில் நடக்கிறது. ஸார்ஜன்ட், பிளாட்டூன் முன் நின்றுகொண்டு, நெற்றி வேர்வையைக் கைக்குட்டையால் துடைத்தவண்ணம், இத்தாலிய பாஷையில் 'லெப்ட்—ரைட்' (நடைப் பழக்கம்) உத்தரவு போட்டுக் கொண்டிருக்கிறான். தளம், லொங்கு லொங்கென்று மைதானத்தைச் சுற்றிச் சுற்றி இரு கூறாகவும் முக் கூறாகவும் பிரிந்தும், மறுபடியும் பழைய வரிசையில் சேர்ந்தும் ஓடிவருகிறது. படையின் கடைக் கோடியில் நிற்கும் குட்டையன் யார்? பெனிட்டோதான்!

மைதானத்தில் எதிரிலிருந்த கட்டடத்திலிருந்து படையின் காப்டன் சாவதானமாக நடந்து வருகிறான். மறுபடியும் நடை பழக ஆரம்பித்த படையை நிறுத்தி, ராணுவ 'ஸலூட்' கொடுக்கும்படி உத்தரவிடுகிறான் ஸார்ஜன்ட். மரியாதையை ஏற்று ராணுவ சம்பிரதாயத்தை முடித்துவிட்டு ஸார்ஜன்ட் முஸொலீனி காதருகில் ஏதோ சொல்லுகிறான்.

''பெனிட்டோ முஸொலீனி!''

பெனிட்டோ தளத்திலிருந்து இரண்டடி முன்னுக்கு எட்டிவைத்து ஸலூட் செய்கிறான்.

''காப்டன் உன்னையழைக்கிறார்!'' என்பது ஸார்ஜன்ட் உத்தரவு.

காப்டன் அருகில் ஓடிவந்து அவனுடன் சேர்ந்து நடக்கிறான்.

''உனக்கு ஊரிலிருந்து எப்பொழுது கடிதம் வந்தது?'' என்கிறான் காப்டன்.

தூரத்தில் டிரில் ஸார்ஜன்ட் உத்தரவும், லொங்கு லொங்கென்று ஓடும் படையின் பூட்ஸ் கால் சப்தமும் கேட்கின்றன.

''எதற்கு? நான்தான் சமீபத்தில் எழுதினேன்!'' என்கிறான் பெனிட்டோ.

அப்புறம் இருவரும் பேசவில்லை. கட்டடத்தினுள் நுழைகின்றனர். மௌனமாக மேஜையிலிருந்த கடுதாசியை எடுத்து அவனிடம் கொடுக்கிறான் காப்டன்.

அது ஒரு தந்தி :

''உன் அம்மாவுக்கு அபாயகரமாக இருக்கிறது. உடனே புறப்பட்டு வரவும்.

—அலிஸான்ட்ரோ''

அவசர அவசரமாக மூட்டையைக் கட்டிக்கொண்டு ரயிலுக்கு ஓடினான் பெனிட்டோ.

வரானோவுக்கு வருகையில் அவனது தாயார் பிரக்ஞை இழக்கும் தருணம். அவன் வந்துவிட்டான் என்று உணர்ந்துகொண்டாள். வரவேற்பது போல் தலை சிறிது அசைந்தது. சிரிக்க முயன்றாள். தலையும் மெதுவாகச் சாய்ந்தது.

அலிஸான்ட்ரோவின் குடும்ப பாரத்தைச் சுமந்த பொறுமை யுருவம், கடைசியாகப் பொதியை இறக்கி வைத்துவிட்டு, அகன்றுவிட்டது.

ரோஸா உயிரை இழந்தாள்; பெனிட்டோ மன நிதானத்தையே இழந்துவிட்டான். நண்பர்கள் தேற்றினார்கள்; சுற்றத்தார் தேற்றினார்கள். தேறுதல் என்ற பதந்தான் அவன் அகராதியிலேயே இல்லை.

எப்படியோ, மறுபடியும் ரெஜிமென்டுக்குத் திரும்பினான்; கட்டாய ராணுவ சேவையின் கடைசி மாதத்தையும் கழித்தான். பிறகு...........

மறுபடியும் அந்த வாத்தியார் வேலைதான். இப்பொழுது ஒபக்ளியாவில்; மிடில் ஸ்கூலில் பிரெஞ்சு பாஷை சொல்லிக் கொடுக்கும் வாத்தியார். ஆனால், மனம் அதில் லயிக்கவில்லை; மறுபடியும் பெனிட்டோ நாடோடியானான்.

மறுபடியும் ஸ்விட்ஸர்லாந்துக்குப் போக முடியாது. டிரன்டினோ நோக்கி நடக்கலானான். டிரன்டினோ, பேச்சிலும் பழக்க வழக்கங்களிலும், இத்தாலியப் பிராந்தியம். ஆனால் அது ஆஸ்திரியா-ஹங்கேரியின் ஆதிக்கத்திற்குட்பட்டுக் கிடந்தது.

1909-ம் வருஷம்.

பெனிட்டோவின் வாழ்க்கையிலேயே ஒரு முக்கிய' விசேஷத்தன்மை வாய்ந்த வருஷம். சர்வதேசக் கனவில் மிதந்துகொண்டிருந்த அவனுக்கு, அபேதவாதத்திலும் இரண்டு ரகம் இருக்கிறது என்பது தென்படலாயிற்று.

அவன் டிரன்டினோ தொழிலாளர் ஸ்தாபனத்தின் காரியதரிசியானான். அங்கு இரண்டு அபேதவாதப் பத்திரிகைகள்; ஒன்று ஆஸ்திரியாவின் நலன்களையே ஆதரிப்பது; மற்றொன்று இத்தாலிய அபேதவாதிகளால் நடத்தப் படுவது; அதன் பிரதம ஆசிரியன் ஸிஸேர் பாட்டிஸ்டி. அவன் (ஆஸ்திரிய) வியன்னா பார்லிமெண்டில் ஒரு அங்கத்தினன்.

பாட்டிஸ்டி ஒரு 'இரிடென்டிஸ்ட்'. அதாவது, இத்தாலிய நாகரிகப் போக்கில் அமைந்த, ஆனால், அந்நிய ஆட்சிகளுக்குட்பட்ட மாகாணங்கள் யாவும் இத்தாலிக்குச்சொந்தமானவையே; எவ்விதத்திலாவது அவை இத்தாலிய அதிகாரத்தின் கீழே கொண்டுவரப்படவேண்டும் என்பதைக் கொள்கையாகக் கொண்ட கட்சிக்காரருக்கு 'இரிடென்டிஸ்ட்'' என்று பெயர்.

'போப்போலோ' என்ற அவனது பத்திரிகையில் ஆசிரியனானான் பெனிட்டோ. பத்திரிகைத் தொழில்

அவனைப் பற்றிக்கொண்டது. பத்திரிகைத் தொழிலே ஒரு வெறி; அதிலும் அதிகார வெறி கொண்டவர்களுக்குப் பத்திரிகை அளிக்கும் வசதி கொஞ்ச நஞ்சமல்ல. எழுதி எழுதியே சர்வாதிகாரியானான் பெனிட்டோ என்பர். பத்திரிகை சமயா சமயங்களில் நல்லவர்களை முன்னணிக்குக் கொண்டு வருவதுபோல், அசுரரை வளர்ப்பதிலும் திறமை படைத்தது. பத்திரிகையின் சக்திக்கு பெனிட்டோ ஓர் உதாரணம். 'போப்போலோ' அவனுக்குக் கதவைத் திறந்து கொடுத்தது.

முஸொலீனி பிற்காலத்தில் சர்வாதிகாரியானதும் ஜன சங்கியை எடுக்கப்பட்ட பொழுது, நபர் விபர நமூனாவைத் தானே பூர்த்திசெய்தான். அதில் தொழில் என்ற பிரிவின் கீழ், ''ஜெர்னலிஸ்ட்'' (பத்திரிகை தொழில் பார்ப்பவன்) என்று எழுதியிருந்தான். நாம் அவனுக்காகப் பூர்த்தி செய்திருந்தால், 'சர்வாதிகாரியாயிருந்து மனித சுதந்திரத்தைப் பறிப்பது' என்று எழுதியிருப்போம். ஆனால் நம்மை யாரும் பூர்த்திசெய்யச் சொல்லவில்லையே!

பாட்டிஸ்டியின் அபேதவாதம், அவனது தேசீயம், சுற்றுப்புற வசதிகள் யாவும் அவனை முன்னணிக்குக் கொண்டு வந்துவிட்டன. இத்தாலிய அபேதவாதிகள் 'அவன் தேசீயம் பேசுகிறான்' என்றனர். வர்க்கப் போராட்டத்தை மூட்டப் புறப்பட்டு, 'சர்வ தேசீயம் பேசும்' ஆஸ்திரிய சகாக்கள் அவர்களைக் கைவிட்டனர். அவர்கள், ஆட்சி நடத்தும் தேசத்தைச் சேர்ந்த அபேதவாதிகள் அல்லவா? அடிமைப்பட்டுக் கிடக்கும் அபேதவாதிகளை மதிக்க அவர்களால் இயலுமா? வேண்டுமென்றால் இத்தாலிய அபேதவாத இலட்சியத்தில்அநுதாபம் காட்டலாம். அதற்கு மேல் அவர்களிடம் வேறு என்ன எதிர்பார்க்க இருக்கிறது! எல்லோரையும் சேர்த்துவைத்து ஒரு வாங்கு வாங்கினான்

முஸோலீனி. டிரன்டினோவில் உள்ள இத்தாலிய கன்ஸர்வேடிவ் கட்சி, அதாவது நிலபுலம் உள்ள பணக்கார வகுப்பு, 'ஆஸ்திரியாவுக்கு ஜே!' போட்டுக்கொண்டு, தன் பொருளாதார சமூக நலன்களுக்குப் பழுது வந்துவிடாமல், அந்நிய நுகத்தடியைக் களிப்புடன் சுமந்துகொண்டிருந்தது. ''தொழிலாளர்கள் கஷ்டமாபடுகிறார்கள்? அதற்கென்ன, நல்லதுதானே! இந்த உலகத்தில் கஷ்டப்படுகிறவர்களுக்குக் கட்டாயம் பரலோக ராஜ்யத்தில் இடம் போட்டு வைத்திருக்குமே!'' என்பது அக்கட்சியின் பிரசாரம்.

வந்து சில மாதங்கள் முடிவதற்குள் ஆஸ்திரிய சர்க்கார் கண் பார்வையில் சிக்கிவிட்டான் பெனிட்டோ. ஆனால் அவன் அதைக் கவனிக்கவில்லை.

''இத்தாலிய எல்லை ஆலாவுடன் முடிவடையவில்லை'' என்று தலையங்கத்தில் எழுதினான்.

ஆஸ்திரிய சர்க்கார் கை அவன் மீது விழுந்துவிட்டது. பிடித்துச் சிறையில் அடைக்கப்பட்டான். ஆனால் அவன் இத்தாலியப் பிரஜை அல்லவா? பழையபடி மூட்டை கட்டி அனுப்பிவிட்டார்கள்.

வரும்போது பாட்டிஸ்டிக்கும் முஸொலீனிக்கு மிடையில் கிறிது கசப்பு என்று சொல்லுவார்கள். முஸொலீனியின் அகம்பாவம், எதையும் எடுத்தெறிந்து பேசும் குணம் காரணமாக இருக்கலாம் என்று கூறப்படுகிறது.

டிரன்டினோ அநுபவம் முஸொலீனியின் மனத்தில் ஒரு விதையை ஊன்றிவிட்டது. மத்திய ஐரோப்பா முழுவதிலுமே படர்ந்து வளர்ந்து கவிய முயலும் பிரம்மாண்டமான மரத்திற்குவித்திடப்பட்டதுஎன்று அப்பொழுது யார் கண்டார்கள்! இத்தாலி என்றால் சந்தி சிரிக்கும் நிலைமை. மறுமலர்ச்சியின் விளைவுகளான ராணுவ எதிர்ப்பு மனப்பான்மையும், அன்பால் ஒற்றுமைப்படும் கொள்கையும் பின்வாங்கும்

காலம். எல்லோரும் இத்தாலியைக் கிழட்டுப் பிணம் என்று நினைத்தார்கள். அப்பொழுது அவர்கள் அப்படி நினைத்ததில் பிசகொன்றுமில்லை.

---

## 5. 'அமைதிக்குப் பங்கம் விளைத்ததாக'

ரோஸா இருந்தவரை, உலைக்கூடத்தில் தீ கனியா விட்டாலும், அடுப்பு மூட்டுவதற்கு அவளது உபாத்திமைத் தொழிலாவது பக்க பலமாக இருந்தது. அவளும் இறந்து விட்டாள் இனி நாலு காசு சம்பாதித்தால்தான் உண்டு. வரானோவில் கொல்லப்பட்டறை கிராக்கி அதிகமுள்ள தொழிலல்ல.

போர்லியில் குடியேறி புதிய தொழில் ஒன்று ஆரம்பிப்பது என்று முடிவு கட்டினான் அலிஸான்ட்ரோ.

'லா அக்னல்லேர' என்ற ஒயின் ஷாப் ஒன்று போர்லியில் புதிதாகத் திறக்கப்பட்டது. அதன் முதலாளி அலிஸான்ட்ரோ. கடையில் ஒயின் விற்பனையுடன் தொழில் முடிவடைந்து விடவில்லை, அங்கெல்லாம் ஒயின் கடை என்றால் சாப்பாட்டுக்கும் அதில் வழியுண்டு; சின்ன ஹோட்டல் மாதிரி. அங்கே 'மக்கரோனி' என்ற உணவு முறை தமிழ்நாட்டாருக்கு இட்டலி, தோசை மாதிரி. இத்தாலியர் பிரியமாய்ச் சாப்பிடும் உணவு அது. உதவிக்குக் கையாளாக, அன்னா அகாஸ்டினி அமர்த்தப் பட்டாள். அவள் தனியாக வரவில்லை—தன் மகள் ரஷேல் என்பவளுடன் வந்து குடியேறினாள். வரும்போது மகளுக்கு வயது பத்தொன்பது.

இந்த நிலையில்தான் பெனிட்டோவை ஆஸ்திரிய சர்க்கார் திரும்ப அனுப்பியது. போர்லிக்குத் திரும்பி வரும் பொழுது அவனுக்கு வயது இருபத்தாறு.

மனத்தின் கசப்பைப் பிரதிபலிக்கும் சிடுசிடுத்த முகம், எடுத்தெறிந்த பேச்சு, நாலு பேருடன் பழகாமல் தனியாக மிடுக்காக நடப்பது, ஆஸ்திரியாவில் போன இடத்திலெல்லாம் அதிகார சக்திகளுடன் தன் திறமையைச் சோதித்துப் பார்த்தது—எல்லாம் சேர்ந்து அவனுக்கு 'புரொபஸர்' என்ற பெயரை அளித்தன. ஊர்க்காரர்கள் அவனை, 'புரொபஸர் வந்தாரா?' 'புரொபஸரை அங்கே பார்த்தேனே!' என்றுதான் பேசிக் கொள்வார்கள். இது மட்டுமா? ஊர்க்காரரிடம் லேசில் புரிந்துகொள்ள முடியாத நுணுக்கங்கள் பேசுவான்; அதுவும் நாலைந்து அந்நிய பாஷைகளில்— கேட்கவா வேண்டும் பெருமைக்கு!

பெனிட்டோ வந்தபின் 'லா அக்னல்லோ' ஒரு ஸோஷலிஸ்ட் கிளப்பாக மாறிவிட்டது. வியாபாரம் இரண்டாம் பட்சம். 'அபேதவாத விருந்தினர்' வருவது போவது, கலந்து பேசுவது, திட்டம் வகுப்பது அதிகமாகிவிட்டது.

ரஷேல் அழகுப் போட்டியில் நின்று பரிசு பெறவேண்டியவளோ என்னவோ! வாலிபமும், வறுமையின் விளைவான உழைப்பினால் ஏற்பட்ட மினுக்கும், அவளுக்கு மிகுந்த கவர்ச்சியைக் கொடுத்தன. ரஷேல் 'புரொபஸர்' கண்ணில் பட்டது அதிசயமில்லை; இந்த ரதியை நினைத்து உருகும் போர்லி வாலிபர்கள் புரொபஸர் போட்டியில் இறங்கியதும் வழிவிட்டு விலகியதுதான் வியப்பு. காதலைப் போலவே கலியாணமும் வெகு சுருக்கமாக முடிவுற்றது. வேலைக்காரியாக வந்த அன்னாள் பெனிட்டோவுக்கு மாமியாரானாள்.

பெனிட்டோ, போர்லி அபேதவாதிகள் சங்கத்தின் காரியதரிசியானான். சம்பளம் ஐந்து பவுன். 'லாலோட்டா டி கிளாஸ்ஸே' என்ற பத்திரிகையை பெனிட்டோ ஆரம்பித்தான். தமிழில் அதன் பெயர் 'வர்க்கப் போராட்டம்' என்பது.

முஸொலினி அதன் முதல் இதழில் எழுதிய தலையங் கத்தில் பின் வருமாறு தன் அரசியல் அபிப்பிராயத்தை விளக்குகிறான் :

''அந்தரங்க சுத்தியோடு தாங்கப்படும் கொள்கை களுக்கும் எண்ணங்களுக்கும் மதிப்பு வைத்தே நமது தர்க்கங் களும் விமர்சனங்களும் இருக்கும் என்று நமது எதிரிகளுக்கு நாம் உறுதி கூறுகிறோம். தற்காலத்திய 'சிவப்பர்களின்" (அபேதவாதிகளின்) குறுகிய, சகிப்புத் தன்மையற்ற மனப் பான்மைக்குக் காரணமான வர்க்கத் தன்மை, முரட்டு வெறி முதலியவற்றை விலக்க நாம் முயற்சிப்போம்.

''பலரது புகழ்ச்சியையும், மான்யத்தையும், பரிசுகளை யும் விரும்பும் ஏமாற்றுக்காரர்கள் எந்தக் கட்சியினராயினும் சரி, அவர்களை லேசில் விட்டு வைக்கமாட்டோம்.

''அபேதவாதம் பிறரைப் பயமுறுத்திக் கொள்ளை யடிக்கும் திட்டமன்று; அரசியல் சதுரங்கமன்று; ஸ்வாரஸ்ய மான கனவுமன்று; கடைசியாக, அது வெறும் விளையாட்டும் அன்று—தனி நபர், சமூகம் இரண்டையும் ஒழுக்க விஷயங்களிலும் லௌகிக விஷயங்களிலும் ஒருங்கே உயர்த்துவதற்கு எடுத்துக் கொள்ளும் முயற்சியே அபேத வாதம்.''

சொந்தப் பொறுப்புள்ள ஸ்தானத்திலிருந்து கொண்டு முதல் முதலாக அவன் எழுதிய அரசியல் கட்டுரை இதுவே. இதற்கு முன் பாட்டிஸ்டியின் கையாளாகவே அங்கு பத்திரிகை நடத்தினான். அதாவது ஆசிரியர் ஸ்தானத்தை

உபயோகித்து அதிகாரத்தைப் பெருக்கிக்கொள்ளச் செய்த முயற்சியே அது. அப்போதைக்கப்போது பத்திரிகைகளுக்குக் கட்டுரைகள் எழுதிய பழக்கமும் அவனுக்குண்டு. பிளாரன்ஸ் நகரிலிருந்து வெளிவரும் பத்திரிகையான 'லாவோஸி' என்பதில் டிரன்டினோவைப்பற்றி 'ஓர் அபேதவாதியின் அநுபவம்' என்று முன்னால் எழுதியிருந்தான். அதில் அவன் இரண்டுங் கெட்டான் 'பூர்ஷுவாக்க'ளையும், இத்தாலிய மக்களின் சர்வ சாசுவதமான அதிகாரிகளாக இருக்க வேண்டும் என்ற ஜெர்மன் அகந்தையையும் திட்டுகிறான். அத்துடன் டிரன்டினோ அரசியல் விஷயங்களில் வர்க்கப் போராட்டத்தைவிடத் தேசீயப் போராட்டந்தான் முக்கியம் என்றும் அங்குள்ள இத்தாலியர்களுக்கு இத்தாலிய பாஷை பேசுவதே தர்மம் என்றும் வற்புறுத்துகிறான்.

முஸொலீனி இத்தாலீய அபேதவாத அரங்கத்திற்குப் புரியாத பாஷைகளில் பேசினான்; எழுதினான். சர்வதேச வர்க்கப் போராட்டம் என்ற அடிவானத்தையே இமை கொட்டாமல் பார்த்துக்கொண்டு, அத்திசையிலேயே இலட்சிய ரதத்தைச் செலுத்திவந்த அபேதவாதச் சிசுக்களுக்கு அவன் கூற்று விளங்காததில் வியப்பில்லை. இப்படிப்பட்ட கொள்கைகளை வைத்துக்கொண்டு அபேத வாதிகளின் கட்சிச் சிகரத்தைக் கைப்பற்றவேண்டு மென்ற அதிகார வெறிஜுரம் என்றும் சொல்லலாம்— இல்லாவிடில், ஆரம்பத்திலேயே அவனைப் பிறர்கிள்ளி எறிந்திருப்பார்கள். ஓங்கியடிக்கும் வழி, விவகார அறிவுக்குக் குமட்டலை ஏற்படுத்தினாலும், சமயா சமயங்களில் அதுவும் வேண்டித் தான் இருக்கிறது.

பெனிட்டோ இத்தாலீய அரசியல் அரங்கத்தில் குதித்து விட்டான். எனவே, தேசத்தின் அப்போதைய சமூகஅரசியல் நிலைகளைச் சிறுது கவனிப்போம்.

முதலாம் விக்டர் இமானுவல்ரோமாபுரியுள் பிரவேசித்து 'ஐக்கிய இத்தாலி பிறந்துவிட்டது!' என்று முரசறைந்த பொழுது ஓர் அரசியல் வகுக்கப்பட்டதல்லவா? அது ஒரு குடுகுடுப்பைக்காரன் சட்டை போன்ற அமைப்பேயாகும். அது மிகுந்த அவசரத்தில் ஒட்டுப் போட்டுத் தைக்கப் பட்டதுதான். ஆங்கிலலிபரல் கட்சியைப் பார்த்து இத்தாலிய சுதந்திர லிபரல்கள் சேர்ந்து தயாரித்த அரசியல் ஆதலால், அது 'இமிட்டேஷன்' சரக்காகவே இருந்தது. அதாவது, இங்கிலாந்தில் இருப்பது போல, 'சட்ட (அதிகார) வரம்புக் குட்பட்ட மன்னருடன் அமைந்த பிரதிநிதித்துவ ஆட்சி முறை'. பிரிட்டிஷ் அரசியலமைப்பில் ஒரு விசேஷமுண்டு. கட்சிகளின் போராட்டங்கள், தேர்தல் ஆவேசங்கள் முதலியவற்றிலிருந்து, பிரிட்டிஷ் மன்னர்களும், பிரிட்டிஷ் ஜனநாயகமும் அந்த அரசியலால் இன்றுவரை காப்பாற்றப் படுவதே அந்த விசேஷமாகும். எனினும் அந்த அரசியல் இத்தாலிக்கு விதேசிச் சரக்குத்தானே!

இத்தாலிய நாகரிகம், அதன் சரித்திர விசேஷத்திற்கு ஒத்தபடி நகரத்தின் குறுகிய எல்லைக் குட்பட்டதாகவே இருந்து வந்தது. புராதன ரோம சாம்ராஜ்யம் (கிறிஸ்து பிறப்பதற்கு முன்) எப்படி நகரக் கட்டுக்கோப்பை விட்டு வெளியேறி, அக்காலத்தில் ஐரோப்பாவுக்குத் தெரிந்த நாடுகள் முழுவதும் படர்ந்ததோ. அப்படியே பின்பு படிப்படியாக அந்தப் பழைய நகர எல்லைக்குள் வந்தடைந்தது. மறுமலர்ச்சிக்குப் பின்பு தேசீயம் நகரத்தின் மதில் சுவர்களுக்கு அப்பால் எட்டிப் படர்வது வெகு கடினமாக இருந்தது. இதற்கும் மேலாக, வடக்குத் தெற்குப் பகுதிகளுக்குள் சண்டைவேறு. இத்தாலியின் தென் பகுதி அதாவது நேப்பில்ஸ் நகரத் துக்குத் தென்புறம் மிகவும் பிற்போக்கானது; கத்தோலிக் பூசாரித்துவத்திற்கு நிரந்தர அடிமையாயுள்ளது.

வடக்குப்பகுதி அப்படியல்ல. இம்மாதிரியான ஒரு 'சமன் —குலைவு' ஏற்பட்டதற்குக் காரணம், ரோமாபுரியிலுள்ள கத்தோலிக் பீடம் நடத்திய ஆட்சி இவ்விரண்டையும் இடையில் நின்று பிரித்ததே, மறுமலர்ச்சியின் மூல காரண னான கவூரே, ஓரிடத்தில், 'வடக்கையும் தெற்கையும் ஒன்று படுத்துவதா! அப்பப்பா! ஆஸ்திரியாவுடனும் சர்ச்சுடனும் (கத்தோலிக் குரு பீடம்) போராடுவது போல் அவ்வளவு கஷ்டமான காரியமாயிற்றே!'' என்று ஓரிடத்தில் குறிப்பிட் டிருக்கிறான்.

இத்தாலியிலே, ஜனநாயகத்தின் திருகாணியான ஸ்ரீமான் பொதுஜனம் கிடையாது; 'தேடிச் சோறு நிதம் தின்று, சின்னஞ் சிறு கதைகள் பேசி, வாடித் துன்பமிக உழன்று, பிறர் வாடப் பல செயல்கள் செய்து' வாழும் இத்தாலியர் பலர் உண்டு. அவ்வளவுதான். வடக்கத்தியர் களிடம் பணம், சொத்து, சுகம் யாவும்; தெற்கே வரண்ட நிலத்தில், இன்னதென்று தம் விருப்பு வெறுப்புக்களைச் சொல்லக்கூடத் தெரியாத ஊமைகளாக, பசியால் துடிதுடிக் கும் ஜீவன்கள். இதர மேல்நாடுகளைவிட இந்தத் தென் பகுதியில் ஜனங்களுக்குக் குடும்பப்பற்று அதிகம். க்ஷீணித் துப் போன நாகரிகத்திலே சிறிது விசாலமான நோக்கம் என்ற சிறு துளி நீராவது புகவொட்டாமல், தம் வீடு, தம் குடும்பம் என்ற ஆசாபாசம் தடைசெய்து வந்தது. பொதுவாகக் கூறுமிடத்து, அந்நிய ஆட்சி என்ற சந்நிதியின் முன்பு பொட்டுக் கட்டிக்கொண்டு அடிமைத்தாஸர்களாக இத்தாலியர் வாழாவிட்டாலும், நெடுங்காலமாக அந்நியப் புல்லுருவி பாய்ந்து சோர்ந்து சக்கையாகப்போன ஒரு சமுதாயமாக இருந்தனர். ஸ்ரீமான் பொது ஜனத்திற்கு வோட்டு என்றால் கையில் சில்லறை ஏறுவது என்றே பொருள். இந்த நிலையில் பொதுஜன அபிலாஷையின்

பேரில் நிர்வாகம் நடத்தும் முறையான ஜனநாயகம் எப்படி ஏற்படும்? பார்லிமெண்ட் சபைகளில் சிண்டுகளைப் பிய்த்துக் கொண்டு வாய்ப்போர் செய்யச் செல்லும் சில கூட்டத்தாரின் நிரந்தரமான ஆட்சிக்குச் சாதகமாகவே விபரந் தெரியாத ஸ்ரீமான் பொதுஜனத்தின் கீறல்-வோட்டுகள் பிரயோஜனமாயின. பாக்கூனின் என்ற அபேதவாதி, ''இத்தாலி ஒரு தேசம் அல்ல; அது ஐந்து பிண்டங்கள் சேர்ந்தது; சர்ச்சு, பூசாரிக்கேற்ற பணக்காரர், நடுத்தர வகுப்பினர், தொழிலாளர், குடியானவர்கள் என்பவை அந்த ஐந்தும்,'' என்று சொல்லியிருக்கிறார்.

கட்சிகள் மூலம் பார்லிமெண்ட் நிர்வாகம் நடத்துவது அவசியம் என்பர் அரசியல் விஷயம் தெரிந்தவர்கள்? இரட்டைக் கட்சி முறைதான் சிலாக்கியமானது என்பர் பிரிட்டிஷ் அரசியல் சாஸ்திரிகள். இத்தாலியில் கட்சி என்று பெயர் சூட்டக்கூடிய ஒரு ஸ்தாபனமும் கிடையாது. தேசியவாதிகள், லிபரல்கள், அராஜகர்கள், அபேதவாதிகள் என்ற பெயர்களைக் கேட்கலாம். ஆனால் இவை எதிலும் நியதி என்பது கிடையாது. பார்லிமெண்ட் அங்கத்தினர்கள், எப்போழுதும் சர்க்கார் தரப்பிலேயே இருப்பதற்காக, கூடுவிட்டுக் கூடு பாயும் முறை ஒன்றைக் கண்டு பிடித்தார்கள். இந்த நிலையில் ஆட்சி என்பது, ஏறியவன் காலைப் பிடித்திழுக்கும் 'சறுக்குமர வியாபார'மாகவே முடிந்தது. ஐக்கிய இத்தாலியின் 'சட்ட வரம்புக்குட்பட்ட மன்னராட்சியுடன் கூடிய ஜனநாயக அரசியலமைப்பு' பிரகடனம் செய்யப்பட்டதிலிருந்து முஸொலீனி 1922-ம் வருஷம் ஆட்சியைத் தன்வசம் கொண்டு வரும்வரை, அதாவது 74-வருஷங்களில், 67 மந்திரி சபை மாறுதல் ஏற்பட்டன என்று முன்னரே சொல்லியிருக்கிறோம். அதாவது, 67 புதிய சர்க்கார்கள் ஏற்பட்டிருக்கின்றன! இம்மாதிரியான பார்லிமெண்டரி நெருக்கடிகளின் எண்ணிக்கைவிருத்தியில்இத்தாலி

தான் உலகத்தில் உச்ச ஸ்தானம் வகிக்குமென்று தோன்று கிறது. இந்தக் கூடுவிட்டுக் கூடுபாயும் வித்தை, விசேஷத் திறமை படைத்த சிலரை எப்பொழுதும் பதவியில் வைத்தி ருப்பதற்குச் சாதகமாக இருந்தது.

குடியாட்சி இலட்சியத்தைத் தாங்கிய லிபரல்கள், மன்னர் ஆட்சி ஏற்பட்ட பின்பு, தேசத்திற்குத் தேவையில் லாத பண்டங்களாகிவிட்டனர். ஆனால் அவர்கள், மட்டு மரியாதையுள்ள பார்லிமென்டின் கடிவாளத்திலேயே கண்ணும் கருத்தும் வைத்து, சாதுப்பிராணிகளாகத் தங்கள் இலட்சியத்தைச் சுருக்கிக்கொண்டு வாழ்ந்தார்கள்.

முதல் இமானுவலுக்கு அடுத்த மன்னன் ஹம்போல்ட் அவன் பகிரங்கமாகக் கொலை செய்யப்பட்டிறந்தான். அதன் பிறகு தேசத்திலிருந்த அராஜகர்கள் அபேதிவாதி களுக்கு வால் பிடிக்க ஆரம்பித்துவிட்டனர். அராஜகர்கள் செய்த சேவை இரண்டாவது விக்டர் இமானுவலின் ஆட்சி வருகையைத் துரிதப்படுத்தியதுதான் மிச்சம். இந்த விக்டர் இமானுவல் தான் இப்போது முஸொலீனியின் கைப்பதுமையாக இருப்பவர்.

அபேதவாதிகளைப் பற்றிச் சிறிது கவனிப்போம். இத்தாலிய அபேதவாதம் பக்கூனின் ஆரம்பித்து வைத்தது. அவன் வர்க்கப் போராட்டத்தையும் புரட்சிப் பாதையையும் பிரசாரம் செய்தான். ஐக்கிய இத்தாலி தோன்றுவதற்கு ஜீவநாடியாய் விளங்கிய மாஜினியின் தேசீயமும், புகழ் பெற்ற வீரனான கரிபால்டியின் படையெடுப்புப் படாடோப மும் அவனுடைய சர்வதேச அபேதவாத மாத்திரையில் கலந்திருந்ததால், அவன் பிரசாரம் ஸ்ரீமான் பொதுஜனத் தின் கற்பனையைத் தட்டி எழுப்பியது. இதற்கு மேல் பூச் சாக, வர்க்கப் போராட்டம் இல்லாத ஓர் அபேதவாதத் திட் டத்தைத் தயாரித்த 'பெரியார்கள்' தோன்றினர். கிளாடியோ

ட்வ்ரீஸ், பிலிப்பினோ தூராட்டி, இவானோ போனோமி, லியோனிடா பியோலிட்டி என்பவர்களும் 'தோழர்கள்' என்று பட்டம் பெற்றிருந்தாலும், தொழிலாளருக்கும் அவர்களுக்கும் சம்பந்தமே கிடையாது. இவர்களில் பலர் கொஞ்சம் பணம் படைத்த புத்திசாலிகளும் வக்கீல்களுமா யிருந்தனர். இவர்களுடைய ஆதரவில் வளர்ந்த வடிகட்டின அபேதவாதம், பார்லிமென்ட் சபையில் இரண்டொரு ஸ்தானத்தைக் கைப்பற்றுவதே வர்க்கமற்ற மோட்ச சாம்ராஜ்யத்தைப் பூலோகத்தில் ஸ்தாபிக்க இறுதியானமார்க்கம் என்று கடைப்பிடித்து வந்தது. இப்படியாகப் பிறந்த அபேதவாதக் கொள்கை ரொம்ப சாதுவாகி பார்லிமென்ட் சபைக்குள் வோட்டுக்காகத் தாளம் போட்டுக்கொண்டிருக்கும் நிலையில்தான் பெனிட்டோ அரசியல் அரங்கத்தில் குதித்தான்.

இத்தாலோ பால்போ அந்தக் காலத்தில் ஒரு மாணவனாக இருந்தான். அவன் அப்பொழுது சொன்னதாவது,—

''தற்போதைய அரசியலமைப்பு தகர்ந்து வருகிறது. கிழடு தட்டிப்போன ஓர் அரசியல் கும்பல் மட்டுமே இருந்து கொண்டு, தனது பக்கவாத இழுப்புக்களை, பார்லிமெண்டிலும், ராஜாங்கத்தின் இதர அம்சங்களிலும் புகுத்திக் கொண்டிருக்கின்றது. ஒரு காலத்தில் கட்சிகள் யாவுமே பார்லிமென்டின் நெருக்கடிகளில் கவலைகொண்டு கவனத்தைச் செலுத்தின; இப்போழுது பார்லிமென்டின் நெருக்கடிகளில் கவலை கொள்வது கூலிக்கு மாரடிக்கும் ஒரு சில அரசியல் கும்பல்களேயாகும்.

அபேதவாதிகள் கட்சிக் காரியதரிசியும், வர்க்கப் போராட்டத்தின் தலைமை ஆசிரியருமான பெனிட்டோ, பொதுஜனத் தொடர்பு ஏற்படுத்துவதன் சௌகரியத்தை உணர்ந்தான். இத்தாலிய நகர அமைப்பில் பையாஜா என்

யது நம் நாட்டு மந்தை வெளி மாதிரி. நமது பக்கங்களில் மந்தை வெளி ஊருக்குப் புறம்பாக இருக்கும். பையாஜா ஊருக்கு நடு மையத்தில் இருக்கும். சந்தைக் கூட்டம் முதல் திருநாள் வரை எல்லாக் கும்பலுக்கும் அதுதான் கொம்மாள மடிப்பதற்கு ஏற்ற இடம். எப்பொழுதும் அங்கு ஜன நட மாட்டம் இருந்து கொண்டேயிருக்கும். நெருப்புக் கக்கும் தீவிரவாதிகள் முதல் பரலோக சாம்ராஜ்யத்தின் சாவிக் கொத்துக்களைக் கையில் ஏந்தி வரும் சாமியார்கள் வரை. பொது மக்களுக்கு வெறியூட்டுவதற்குப் பையாஜா வெகு சாதகமாக இருந்தது. பெனிட்டோவும் அதை முழுதும் பயன் படுத்திக் கொண்டான்.

பெனிட்டோ உள்ளூர் விவகாரங்களில் தீவிரமாகத் தலைபிடலானான். நகரத்தில் பால் விலை ஒரேயடியாக உயர்ந்து விட்டது. விலையைக் குறைக்காமல் விடுவ தில்லை என்று முடிவு பண்ணிக் கொண்டான் பெனிட்டோ.

டவுன் ஹால் (முனிசிபல் சபை) முன் ஏராளமான ஜனக் கூட்டம். ஏக இரைச்சல்! ஒரே அமளி! ஸ்தல போலீஸ் படை ஓரத்தில் நின்று ஈ விரட்டுகிறது!

''பால் விலையைக் குறைக்க வேண்டும்!''

''குறைத்தால்தான் ஆச்சு!''

என்ற கோஷங்கள் வானத்தைப் பிளக்கின்றன. உள்ளே மேயர் முன்பு பெனிட்டோ நின்று கொண்டு அதட்டுகிறான். ''பால் விலையைக் குறைக்க ஏற்பாடு செய்யவேண்டும்?'' என்று அரற்றுகிறான்.

மேயர் தம் அந்தஸ்திற்குப் பங்கம் வராமல், புன் சிரிப்புச் சிரிக்கிறார். கும்பல் எங்கே உள்ளே புகுந்து விடுகிறதோ என்று அவருக்குப் பயந்தான்.

அவருடைய சிரிப்பு பெனிட்டோவுக்கு இன்னும் அதிகக் கோபத்தைக் கிளப்புகிறது. அவரை அப்படியே செந்

தூக்காகத் தூக்கி, ஜன்னல் அருகில் பிடித்துக் கொண்டு, வெளியே எறிந்து விடுவதாகப் பயமுறுத்துகிறான்.

ஸ்ரீமான் மேயர், அந்தஸ்தையெல்லாம் பின்னால் பார்த்துக் கொள்ளலாம் என்று கருதி, பால் விலை குறைக்கும் ஏற்பாட்டிற்கு ஒப்புக்கொண்டு, நடுங்கிய கையால் கையெழுத்துப் போடுகிறார்.

வெளியே, ''முஸொலீனிக்கு ஜே!'' ''பாலுக்கு ஜே!'' போட்டுக் கொண்டு கூட்டம் கலைந்து செல்லுகிறது. ஸ்ரீமான் அபேதவாதியைப் பலர் தோளில் தாங்கிச் செல்லு கிறார்கள்...

போர்லி பையாஜாவில் ஒரு தூண். அது இடத்தை அடைத்துக்கொண்டிருக்கிறது என்பதாலோ, அல்லது வேறு எந்தக் காரணத்தாலோ, அதை இடித்துத் தரை மட்டமாக்கி விடவேண்டும் என்று ஒரு கட்சி. இடிக்கக்கூடாது, இடித் தால் இத்தாலிய நாகரிகமே அழிந்துவிடும் என்று இன்னொரு கட்சி.

இடிக்கும் கட்சியில் சேர்ந்தான் முஸொலீனி. ''ஜே! ஜே!'' என்று கும்பல் கூடித் தூணைத் தரைமட்டமாக்கி விட்டது.

1910-ல் பொதுஜன அமைதிக்குப் பங்கம் விளைவித்த தாக இரண்டு முறை சிறை சென்று திரும்பி விட்டான் முஸொலீனி. 1911-ம் வருஷம் அவன் எழுதிய ராணுவ பகிஷ்காரக் கட்டுரைகள் மறுபடியும் அவன் சிறையை எட்டிப் பார்க்கும்படி செய்தன.

வர்க்கப் போராட்டத்தின் அனல் கக்கும் தலையங்கங் கள் நாலு பக்கத்திலும் தாக்கின. முனிஸிபல் சீர்திருத்தம் கூடச் செய்யாத சர்க்காரை முஸொலீனி சபித்தான்;

அத்துடன் அபேதவாதக் கட்சியையும் சபித்தான்; வாயை மூடிச் சகித்துக் கொண்டிருப்பதற்காகத் துன்பப் பிண்டங்களான பொது மக்களையும் சபித்தான். இது போதாது, வாசகசாலைகள் அமைக்கவேண்டும் என்றெண்ணினான். ஒரு புதிய சமுதாயத்திற்காக ஒரு புதிய நாகரிகத்தை ஏற்படுத்த இலட்சியங்களைத் தேடினான். ''மக்களுக்கும் மாக்களுக்கும் உள்ள வித்தியாசம் சரித்திரத்திற்கும் அதன் எல்லைக்கு அப்பாற்பட்ட பழங்கால சம்பவக் கோவைகளுக்குமுள்ள வித்தியாசம். வாழ்க்கைப் போராட்டத்திலிருந்து தப்ப, வாழ்க்கையின் சார்பாக ஒரு புதிய பாலம் அமைக்கப்படும்!'' என்று எழுதினான். கட்சியின் நிர்வாக அம்சம் நித்திய மோனத்தி லாழ்ந்திருக்கும் பொழுது; என்ன எழுதி, என்ன செய்ய!

''நாங்கள் களங்கமற்றிருப்பதனால் எங்கள் பலத்தை நாங்கள் உணருகிறோம். எங்கள் பலத்திற்குக் காரணம் எங்கள் நண்பர்கள் குறைவு; பரிச்சயமான நண்பர்களை நாங்கள் அதிகப்படுத்த விரும்பவில்லை. நாங்கள் பொது ஜன ஆதரவு கேட்கவில்லை; வாடிக்கைக்காரர்களை விரும்பவில்லை; வோட்டுக்களுக்குக் கெஞ்சவில்லை. எங்களைப் பின்பற்றுகிறவர்கள் முகத்திலும் முரட்டுத்தனமாக உண்மையை எடுத்தெறிய நாங்கள் தயாராக இருக்கிறோம்!

''நாங்கள் எண்ணிக்கையை விரும்பவில்லை, குணத்தை மதிக்கிறோம். மெல்ல மெல்ல ஒழுங்காக இடையன் பின் செல்லும்—ஆனால், ஓநாயின் முதல் உறுமலைக் கேட்டதுமே சிதறி ஓடும்—ஆட்டு மந்தை எங்களுக்கு வேண்டாம். தங்கள் லட்சியம் இன்னதென்பதை உணர்ந்து அதை நோக்கி நடக்கும் நெஞ்சழுத்தமுள்ள ஒரு

சிலர் எங்களுக்குப் போதும். இத்தாலி புனர் ஜன்மம் எடுக்க வேண்டும், அல்லது சாக வேண்டும்!''

இப்படியாகப் பெரிய வித்து முளை விட ஆரம்பித்தது.

அலிஸான்ட்ரோவின் மனப்போக்கை அபேதவாதத்தின் திசையில் செலுத்திய ஆன்ட்ரியா டெல்காஸ்டா காலமானார். 'வர்க்கப் போராட்டத்'தில் பின்வரும் தலையங்கம் பிரசுரமாயிற்று:

''இன்று ஆன்ட்ரியா டெல்காஸ்டா பிடி சாம்பலாகி விட்டான்: ஆனால் நினைவு, எண்ணம் நம்மிடை இருக்கிறது. ஒரு மனிதனின் மறைவோடு அவனது எண்ணங்களும் மடிந்து விடவில்லை. அவை தெய்விகமானவை. அவை சாகா வரம் பெற்றவை. ஆகையால் நாம் நம்மைப் பரிசுத்தப் படுத்திக் கொண்டு செயலில் இறங்கவேண்டும்.''

இத்தாலி தேசத்தின் பிரபல அபேதவாதிகள் பத்திரிகையான 'அவாந்தி' (முன்னேற்றம்) இக்கட்டுரையைப் பிரசுரித்தது. 1910-ம் வருஷம் அக்டோபரில் மிலான் நகரில் கூடிய அபேதவாதிகள் காங்கிரஸிற்கு பெனிட்டோ சென்றிருந்தான். அபேதவாதிகளும் தீவிர ஜனநாயகக் கட்சிகளும் கட்டிப் புரண்டு கொண்டிருப்பதைக் கண்டித்தான்.

ரோடாக்னா (முஸோலீனியின் சொந்த மாகாணம்) குடியாட்சிக் கட்சியின் அரண். அங்கு அபேதவாதக் கொள்கைகளுக்கும் அதன் கொள்கைகளுக்கும் உள்ள பேதத்தை விளக்கிப் பக்க பலம் தேடித் தீவிரமாகப் போராடி வந்தான் பெனிட்டோ.

1910-ம் வருஷம் நவம்பரில், முதல் இன்டர் நாஷனலில் கலந்துகொண்டவனும், பள்ளிக்கூடப் படிப்பில்லாத அபேதவாதியுமான அலிஸான்ட்ரோ காலமானான். பிரபல அபேதவாதியின் சடலம் ஏற்ற மரியாதையோடு அடக்கம்

செய்யப்பட்டது. கல்லறை வரை ஏராளமான கூட்டம் பெருத்த ஊர்வலம்.

அன்று 'வர்க்கப் போராட்ட'த்தில் பின்வரும் தலையங்கம் பிரசுரமாயிற்று:

''அவர் தம் நண்பர்களுக்கும் எதிரிகளுக்கும் நன்மையே செய்து வந்தார். அவரது வாழ்க்கை பல அம்சங்களிலும் துன்பம் நிறைந்தது. அவரது முடிவும் சீக்கிரம் வந்து விட்டது. அவர் சொத்து சுகம் வைத்துவிட்டுச் செல்ல வில்லை. அவர் ஓர் ஆத்மார்த்தமான பொக்கிஷத்தை வைத்துச் சென்றிருக்கிறார்—சிந்தனைப் பொக்கிஷம்! துக்கம் கொண்டாட வேண்டிய காலம் முடிவடைந்துவிட்டது. இனி மறுபடியும் வாழ்க்கை தன் கடமைகளை மேற்கொள்ள வேண்டும்.''

இத்தாலி தேசத்து அபேதவாதிகள் மற்றக் கட்சிகளுடன் சேர்ந்து குட்டையைக் கலக்கிவிட்டுக் கொண்டிருப்பதை வெறுத்தான் பெனிட்டோ. மிலான் காங்கிரஸில் தான் அவன் பிஸோரிட்டி பொனாமி முதலியோருடன் நேரடியாக மோதிக்கொண்டது. காங்கிரஸில் அந்தப் பழுத்த அபேதவாதிகள் பெனிட்டோவைக் கூப்பாடு போடும் ஏதோ ஒரு சில்லறைப்பதர் என்றே மதித்து வந்தனர்.

அப்பொழுதெல்லாம் 'இவன் கோஷ்டி' என்று பிரமாதமாக ஒன்றும் இல்லை. அதனால் காங்கிரஸில் போட்ட கூச்சல் ஏதும் பயன் விளைவிக்கவில்லை.

மறுபடியும் திரும்பிய முஸொலீனி, போர்லியில் தொழிலாளரிடையே விழிப்பை உண்டு பண்ண வெகு தீவிரமாக உழைத்தான்.

அப்பொழுது இத்தாலியில் விவசாயிகள் வர்க்கம் மூன்று கொலைகாரக் கும்பலாக இருந்தது. நாள் கூலிக்காரன், குடிவாரக் குத்தகைக்காரன், ஜமீன்தார் இந்த மூன்று கட்சிகள் தான் விவசாயிகளுக்குள்.

குடியாட்சிக் கட்சியை ஆதரிக்கும் லிபரல் பத்திரிகைகள் பெனிட்டோவின் முயற்சிகளைக் கண்டிக்க நன்றாகப் பொறுக்கி எடுத்த வசை மாரி பொழிந்தன. ''அற்பன்; மட்டு மரியாதை தெரியாதவன்; உணர்ச்சியற்ற ஜடம்; யூத சங்கங்களிடம் கூலி வாங்கித் திரியும் நாடோடி; வெறும் பகட்டு ஆசாமி; மனச்சாட்சியில்லாதவன்; மற்றவர்களைக் கோபமூட்டுவதிலேயே தன்னை மறந்தாடும் தறுதலை; போலீஸ் கையாள்; வடிகட்டின முட்டாள்; அபாயகரமான பைத்தியக்காரன்; அபேதவாதி என்று சொல்லிக்கொள்ளும் நெஞ்சழுத்தமுள்ள பொய்யன்; வெறுப்பையும் சச்சரவையும் சாகுபடி செய்பவன்; ஒரு கௌரவமான மனிதனின் அவமதிப்பைக்கூட ஏற்கத் தகுதியற்ற எழுத்துக்கூலி; வெறுப்பை யூட்டும் விரியன் பாம்புக்குட்டி!''—இவையெல்லாம் வசை புராணங்களில் அடிக்கடி விரவி வரும் பல்லவிகள்.

சண்டைகள் நடந்தன; கொலைகளும் நிகழ்ந்தன. இவற்றையெல்லாம் முஸொலீனி பிரமாதமாகக் கருதவில்லை. ''கிணற்றுக் தவளையின் படபடப்பு'' என்று விட்டுவிடுகிறான்.

போர்லி அபேதவாதக் கட்சி அவனுடைய சேவையைப் பாராட்டி, சம்பளத்தை ஐந்து பவுனிலிருந்து ஆறு பவுனாக உயர்த்துகிறது. பெனிட்டோ இந்தச் சம்பள உயர்வை ஏற்க மறுத்துவிடுகிறான்.

வடக்கே குடுமி அந்நியன் கையிலிருந்தாலும் இத்தாலி ஏகாதிபத்தியக் கனவு காண ஆரம்பித்தது.

இந்தச் சந்தர்ப்பத்தில் சர்வதேச நிலையைக் கொஞ்சம் கவனிப்போம்;

1908-ம் வருஷம் துருக்கியில் மறுமலர்ச்சி. அமெரிக்க மிஷனரியும், பிரெஞ்சு நாவலாசிரியர்களும், பாரிஸ், பெர்லின் சர்வகலாசாலைகளும் துருக்கியரிடையே புதிய

விழிப்பை உண்டுபண்ணிவிட்டனர், 'அநாகரிகத்திலும் அறியாமையிலும் மூழ்கிக் கிடக்கும் தேசம்' என்று மற்ற ஐரோப்பியரால் வருணிக்கப்பட்ட துருக்கியில், கொடுங் கோன்மை முடிவடைந்தது. துருக்கியர் வெற்றி பெற்றனர்.

திடுக்கிட்டுப் போன சுல்தானான ஹமீது அனுதாபம் காட்டுவது போல வேஷமிட்டு, அரசியலமைப்பை ஏற்று, பார்லிமென்ட் சபை கூட்டி, இரகசிய ஒற்றர் இலாகாவைக் கலைத்து, சுதந்திரத்தையும் சமத்துவத்தையும் பிரகடனம் செய்தான்.

ஆனால் அடுத்த வருஷம், அதாவது, 1909 ஏப்ரல் 27-ல் தன் முற்போக்குக் கொள்கைகளைக் கைவிட்டு, பின் புறமாக அந்தரடித்தான். அந்தரடித்த வேகத்தில் சிரசி லிருந்த கிரீடம் பறி போயிற்று.

சுல்தான் முகம்மது, ஐந்தாவது முகம்மது என்ற பெயரில் சிங்காதனத்தில் இருத்தப்பட்டான். துருக்கியின் நல்வாழ்வு நிரந்தரமாகவும், தொடர்ச்சியாகவும் சட்ட பூர்வமான ஆட்சி நிலவுவதைப் பொறுத்திருக்கிறது என்று அவனுக்கு வற்புறுத்தப்பட்டது.

'துருக்கியில் புது யுகம் பிறந்து விட்டது!' என்று, தம் கையிற் சுடாத வரை அனுதாபம் காட்டும் இங்கிலீஷ் லட்சிய வாதிகள் உற்சாகப்பட்டனர், துருக்கிக்குப் புது யுகம் பிறந்தது வாஸ்தவந்தான்; அதனால் அதன் காலடியில் கிடக்கும் கிறிஸ்தவ கிரீஸுக்கு விடிவு காலம் ஏற்பட்டு விட்டது என்பதில்லையே! முன்பு ஹமீது ஆட்சியில் பலவீன மான கொடுங்கோன்மை இருந்தால், இப்பொழுது நன்றாக அமைக்கப்பட்ட மத்ய சர்க்கார் பால்கன் பகுதியில் உள்ள பலவித ஜாதியினரையும் (பல்கேரியர், கிரேக்கர், செர்பியர், அல்பேனியர் ஆகியோர்) நன்றாக நசுக்க முடிந்தது. இரண்டு வருஷங்களுக்குள் துருக்கி சர்க்கார்

மாஸிடனில் ஆட்சியைக் கெடுபிடி பண்ணிவிட்டனர். இதனால் ஒரு நன்மை ஏற்பட்டது என்று சொல்லவேண்டும். பால்கன் தீபகற்பத்தில் உள்ள குட்டி ராஜ்யங்கள் யாவும் ஓர் ஐக்கிய ராணுவ சங்கம் ஏற்படுத்திக்கொண்டன.

இத்தாலி, தன் பிற்கால வளர்ச்சிக்கு டிரிபோலி தன் கைவசம் இருக்கவேண்டுமென்று வெகு நாளாகவே கருதி வந்தது. எவ்வளவு பலஹீனமாயிருந்தாலும் ஏகாதிபத்தியக் கனவையும் அது மறந்துவிடவில்லை. எனவே, டிரிபோலியைக் கைப்பற்ற ஜெர்மனி முயற்சி செய்வதற்கு முன், தான் முந்திக்கொள்ள வேண்டுமென்று அது கருதியதில் வியப்பில்லை.

அப்போது கியோலிட்டி சர்க்கார் பதவியிலிருந்தது. இடையே விட்டுவிட்டு சுமார் இருபத்திரண்டு வருஷம் இத்தாலியப் பிரதம மந்திரியாக இருந்தவன் கியோலிட்டி. இத்தாலியப் பார்லிமெண்டரி அரங்கத்தில், கியோலிட்டி தான், நிரந்தரமான கதாநாயகனாக, தமக்குத் தாமே பிரதிநிதிகளான கேலிக் கூத்தின் சரியான பிரதிநிதியாக இருந்தான். தன்மேல் அழுக்கு ஒட்டிக்கொள்ளாமல், தந்திரமாக அங்கு ஒரு கயிற்றை இழுத்து, இங்கொன்றை முடிச்சுப் போட்டு, எல்லோரையும் சமய சந்தர்ப்பங்களுக்கு ஏற்றபடி சமாதானம் செய்து, அப்படியும் இப்படியுமாகக் கிடைப்பதைத் தட்டிக் கொண்டு போகும் சந்தர்ப்பவாதி அவன். அவன் பார்லிமெண்டுக்கு வந்த காரணம் மகத்தான பிரச்னைகளைத் தீர்த்து வைப்பதற்காக அல்ல; பளிச்சென்று சுடர்விடும் கெட்டிக்காரத்தனம் அவனைப் பார்லிமெண்டில் கொண்டுவந்து இருத்திவிடவில்லை. அவன் சரியான பட்டணத்து வக்கீல்; கெட்டிக்காரத் தரகன்; பிறப்பிலேயே கிழடுதட்டிப் போனவன்; கிழட்டுத்தனமே உருவாக நிற்கும் இத்தாலியப் பார்லிமெண்டுக்கு அவன் தானே சரியான பிரதிநிதி!

அவனுக்கு இத்தாலிய மக்களில் பலவீனங்கள் நன்றாகத் தெரியும். எந்த வர்மத்தில் தட்டினால் எந்த மாதிரிக் கைவசப்படுத்தலாம் என்பது மனப்பாடம். சிரிப்பு கேலியாகவும், கேலி சச்சரவாகவும், சச்சரவு அடியாகவும், அடி கத்திக் குத்தாகவும் மடமடவென்று மாறும் குணம் பொருந்திய இத்தாலியருக்கு, பண்டைக்காலத்தில் மனிதன் மேல் சிங்கத்தையும் புலியையும் ஏவிவிட்டு, அந்த ரத்த போதைக் காட்சிகளில் களித்து வந்த இத்தாலியருக்கு, லிபியப் படையெடுப்பு சுவாரஸ்யமாக இருக்கும், உள்ளூர்த் தொந்தரவுகளை வேறு பக்கம் திருப்பலாம் என்று நினைத்தான் கியோலிட்டி. காரியத்தை ஆரம்பித்தால், பிரதம மந்திரித் தொழிலில் ஊறிப்போன ஒருவனுக்கு, காரணம் காட்டுவதா கடினம்? ''இத்தாலியில் ஜன நெருக்கம் அதிகமாகிவிட்டதே! அதற்குக் குடியேற்ற நாடு வேண்டாமா? ஏற்கனவே, வடக்கு ஆப்பிரிகாவில் துருக்கியின் ஆதிக்கத்திலுள்ள டியுனிஸ் முதலிய நாடுகளில் நம்மவர் அதிகமாகக் குடியேறி வசிக்கவில்லையா?''' என்றான்.

வர்க்கப் போராட்டம் ஏற்படாமல், முதலாளித்துவம் இல்லாத சமுதாய மொன்றை அமைக்க விரும்பும் அபேதவாதிகள், ''ஆம்! ஆம்!'' என்று தலையை அசைத்து ஆதரவு கொடுத்தனர். அபேதவாதக் கட்சியின் சிகரத்திலிருந்த பொனாமியும், பிஸோலிட்டியும் ஆதரவு காட்டுவதில் முன்னேறி நின்றனர்.

தூராட்டியும், அப்பொழுது 'அவாந்தி' பத்திரிகையின் ஆசிரியராக இருந்த ட்ரீவ்ஸூம் உள்ளுக்குள் ஆதரித்தனரா யினும், இத்தாலிய அபேதவாத அரங்கத்தின் பின்னணியில் கவர்ச்சிப் பீடமாக இருந்த ஸ்ரீமதி அன்னா கூலிஸியாப் என்ற ருஷிய அபேதவாதி அவர்களை வழிக்குக் கொண்டு வந்து விட்டாள்.

டிரிபோலி படையெடுப்பை எதிர்த்து 'அவாந்தி'ப் பத்திரிகையில் தலையங்கம் பிரசுரமாவதற்கு முந்திய நாள் இரவு, மிலானிலுள்ள ஸ்ரீமதி கூலிஸியாப் வீட்டில் பெருத்த விவாதம் நடந்தது.

''கியோலிட்டியை ஆதரித்துத்தான் ஆகவேணும்'' என்றான் ட்ரீவ்ஸ். எப்பொழுதும் தட்டுமறித்துத் தர்க்கித்துக் கொண்டிருப்பதில் அவனுக்கு சுவாரஸ்யம்; மேலும் அதில் நிபுணன். கியோலிட்டியை ஆதரிப்பதால் செல்வாக்குத்தான் உயருமே என்று நினைத்தான் அவன். மேலும் அபேதவாதிகள் ஆதரவு இல்லாவிட்டால் காலனிக் கனவு அந்தரடித்துவிடும்.

பிலிப்பினோ துராட்டியோ எனில் அப்படியல்ல. சிந்தனை என்பது லவலேசமும் கிடையாதவன் அவன். எப்பொழுதுமே அவன் வழவழா என்று பேசுவான். அவன் அரசியல் வாதியல்லன்; துடிதுடிக்கும் புரட்சியை நடத்தத் திறமை வாய்ந்தவனுமல்லன். ''ட்ரீவஸ் சொன்னால் அது எப்பொழுதும் சரி!'' என்று ஆமோதிப்பவன்.

''பிலிப்பினோ, உனக்கு ஒன்றுமே தெரியவில்லையே!' என்று ஒரு போடு போட்டு அவனை அடக்கிவிட்டாள் அன்னா.

போர்லியில் கதை வேறு. நீஷேயின் சிந்தனை யூற்றில் திளைத்த பெனிட்டோவுக்கு யுத்தமும் ஹிம்சைப் பாதையும் பிரமாதமல்ல. சந்தர்ப்பம் சரியில்லை என்பதே அவன் கட்சி.

1911 செப்டம்பர் 30-ந்தேதி 'வர்க்கப் போராட்ட'த்தின் தலையங்கத்தில் அவன் பின்வருமாறு எழுதினான்:—

''இத்தாலி இன்று ஒரு புதிய சகாப்தத்தை ஆரம்பிக்கிறது. அந்த சகாப்தத்தில் என்ன நடக்கும்

என்று யாருக்கும் தெரியாது; எதிர்பாராத அபாயங்கள் நிறைந்திருக்கின்றன. இந்த யுத்தம் ஒரு புரட்சிக்கே முகவுரை!''

அபேதவாதிகளும், குடியாட்சிக் கட்சியினரும் ஒன்று சேர்த்து கொண்டனர். வேலை நிறுத்தம் செய்யும்படி தூண்டப்பட்டது. தெருக்களில் முள் வேலியமைக்கப்பட்டது. இரண்டு நாட்கள் சர்க்காருக்கும் எதிரிகளுக்கும் போராட்டம்.

போர்லியில் பெனிட்டோ துடிக்கத் துடிக்கப் பேசினான்.

கேட்க வந்த மகா ஜனங்கள், ''வைவா ரெவலூஷன்!'' (புரட்சி நீடூழி வாழ்க!) என்று கத்தினார்கள். தூரத்திலே போலீஸ் குதிரைப்படை வருவது தெரிந்தது. மருந்திற் காவது ஒருவன் நிற்க வேண்டுமே! எல்லோரும் சிட்டாய்ப் பறந்து விட்டனர்!

''கோழைகளே!'' என்று கத்தினான். கத்தி என்ன பண்ண? கேட்பதற்கு ஆள் இருந்தால்தானே! பிரசங்கியார் கோட்டைத் தூக்கித் தோளில் போட்டுக் கொண்டு நடக்க வேண்டியதாயிற்று. நண்பர்கள் தலை மறைவாகத் திரியும்படி ஆலோசனை சொன்னார்கள். அவன் கேட்கவில்லை.

லா. அக்னல்லாவில் உட்கார்ந்திருக்கும் பொழுது போலீஸ் படை வந்து அவனைக் கைது செய்தது.

அதிகாரி பின்வரும் குற்றச்சாட்டை வாசித்தார்:

1. பொதுஜன அதிகாரிகளை எதிர்த்தது; பொதுஜன அதிகாரிகள் மீது பலாத்காரம் உபயோகித்தது.

2. ராணுவத்திற்காக அழைக்கப்பட்ட மனிதர்களின் சுதந்திரத்தில் பலாத்காரமாகத் தலையிட்டது; அதிகாரிகளை எதிர்த்தது; அதிகாரிகள்மீது பலாத்காரம் உபயோகித்தது.

3. பலாத்கார முறையை உபயோகித்துக் கைத் தொழில் ஸ்தாபனங்களையும் தொழிற்சாலைகளையும் மூடித் தொழில் நடைபெறுவதைத் தடுத்தது.

4. பலாத்கார முறைகளை உபயோகித்து ரோமாக்னாவில் உள்ள டிராம்வே பாதைகளைத் தடுத்தது; அவற்றில் சாமான்கள் ஏற்றிச் செல்லும் வண்டிகளைக் கவிழ்த்தது; பாதைகளை நாசப்படுத்தியது.

5. டெலிபோன் கம்பிகளை நாசப்படுத்தியது.

6. கம்பங்களைப் பெயர்த்தும் கம்பிகளை அறுத்தும் சர்க்கார் தந்திக் கம்பிகளைப் பழுதுபடுத்தியது.

7. பலாத்காரத்தை உபயோகித்து ரயில் வண்டிகளை நிறுத்தியது.

8. எக்ஸ்பிரஸ் வண்டிக்கு அபாயம் ஏற்படத்தக்க விதத்தில் தந்திக் கம்பத்தை ரயில் பாதையில் குறுக்கே போட்டு வைத்தது.

1911 செப்டம்பர் 25, 26, 27-ந் தேதிகளில் மேற்கண்ட அட்டூழியங்கள் நடைபெற்றனவாம்.

''ஜான் ஹால் என்பவனின் ஜீவிய சரித்திரத்தை எழுதிக்கொண்டிருக்கிறேன்; சிறையிலாவது அதை முடிக்கும்படி சந்தர்ப்பமளித்ததற்காக உங்களுக்கு வந்தனம். இது எனக்கு எவ்வளவு மகிழ்ச்சியளிக்கிறது என்று உங்களுக்குத் தெரியாது!'' என்று சொல்லிக்கொண்டு, பெனிட்டோ கையை நீட்டினான். அவனை விலங்கிட்டு அழைத்துச் சென்றார்கள்.

விசாரணை மூன்று மாதங்கள் கழித்து ஆரம்பமாயிற்று.

வழக்கு விவரிப்பு, பிராஸிக்யூஷன் வாதம், குறுக்கு விசாரணை. எதிரி தரப்பு வாதம் யாவும் நீள நீளமாக நடைபெற்றன. கடைசியில் பெனிட்டோ பதிலளித்தான். கடைசிக் குற்றச்சாட்டை மட்டிலும் நிராகரித்தான்.

இப்படிப்பட்ட குரூரம் மிகுந்த செய்கை போர் செய்ப வனின் தகுதிக்கே ஏற்றதல்ல என்று அதை அவன் நிராகரித் தான்.

குற்றச்சாட்டுகளுக்கு அவன் அளித்த பதில் வருமாறு:—

''பலாத்கார முறையை உபயோகித்து வற்புறுத்துவதை நான் ஆதரிக்கிறேன் என்றால், என் கொள்கைப்படி, பொருளாதார விஷயங்களில் தலையிட்டுத் தடுத்து வற்புறுத் துவதையே ஆதரிக்கிறேன்; அதை மிருகத்தனமான செய்கைகளுடன் குளறுபடி செய்துவிடலாகாது. ஒரு விஷயத்தை ஆட்சேபிப்பதற்காகத் தந்திக் கம்பிகளை அறுப் பதை நான் ஒரு வேளை ஆதரிக்கலாம்; ஆனால், ரயில் வண்டியைத் தண்டவாளத்தை விட்டு இறக்கும் நோக்கத் துடன் கம்பத்தைப் பாதையின் குறுக்கே போடுவதை நான் ஆட்சேபிக்கிறேன்; ஏனெனில், அந்தப் பாதையில் செல்லும் வண்டி எந்தக் கட்சியையும் சேர்ந்ததல்ல; இந்த வற்புறுத் தல் முறை பயத்தை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும் என்பது என் கொள்கை.

''ஸ்டேஷனில் ஜனக்கும்பல் தந்தியாபீஸ்னுள் புகுவ தைக் தடுக்க நான் முயற்சித்தேன்.

கத்தி வெட்டினால் நான் காயமடைந்து கீழே விழுந்து விட்டேன். போலீஸ் படையின் அதிக்ரமத்தினாலேயே ஜனக் கும்பல் பலாத்கார முறையில் இறங்கியது.

''நான் செப்டம்பர் 25-ந்தேதி செய்த பிரசங்கம் சரித்திர சம்பந்தமானது; பூகோள சாஸ்திரத்தைப் பற்றியது; உதாரண பூர்வமாக விஷயத்தை விளங்க வைக்க முயல்வது, அபேதவாதிகளுக்கும் தேசீயவாதிகளுக்கும் அபிப்பிராயத் தில் பின்வரும் வித்தியாசமிருந்து வருகிறது. அவர்கள் இத்தாலியை விஸ்தாரமான நாடாக்க முயலுகின்றனர்.

நான் இத்தாலியில் செழிப்பும், செல்வமும், சுதந்திரமும் பெருக வேண்டும் என்று விரும்புகிறேன். சீனா தேசத்தில் உரிமை ஒன்றுமற்ற மனிதனாக வாழ்வதைவிட, டென்மார்க்கில் ஒரு பிரஜையாக வாழ விரும்புகிறேன். தேசப் பற்றுதலின் மீதே நான் போராடினேன். பிரசங்கத்தில் குழப்பம் இருப்பது போல் தோன்றும். நான் தேசீயத்திற்கு அனுதாபம் காண்பித்ததாக (எனது சர்க்காரால்) குற்றம் சாட்டப்படுகிறேன். இவ்விஷயத்தில் நான் ஒரு புரட்சிகரமான சர்வதேசக் கொள்கையைக் கடைபிடிக்க எண்ணியிருந்தால், புராதன ரோம ஏகாதிபத்தியம் விழுந்தபொழுது கிறிஸ்தவர்கள் குதூகலமடைந்து, 'ஏகாதிபத்தியம் சிதைகிறதென்றால் எனக்கென்ன? அதன் சிதைவிலிருந்து கிறிஸ்துவின் சிலுவை உதிக்கப் போகிறது!' என்று கூறியதுபோல, லிபியப் படையெடுப்பைப் பற்றி நானும் மகிழ்ச்சியடைந்திருக்க வேண்டும். பணத்தையும் இரத்தத்தையும் வீணாக்குவது என்று இத்தாலிய சர்க்கார் முடிவுகட்டிவிட்டால், நமது எண்ணங்களைப் பரப்பவும், புரட்சியால் கொடுக்கப்படும் அடிகளைத் தடுக்கவும் இயலாதபடி அதன் பலம் குறையத்தான் போகிறது. அதனால் நல்லதுதானே!' என்று சந்தோஷப்பட்டிருக்கவேண்டும். ஆனால் நான் ஒரு இத்தாலியன்; நான் பிறந்த மண்ணைக் காதலிக்கிறேன். அதன் பாஷையைப் பேசுகிறேன். ஆகையால் நேர்மையான இத்தாலியப் பிரஜை என்ற ஹோதாவில், பொருளாதார, பூகோள விபரங்களை ஆதாரமாகக்கொண்டு, இப்படையெடுப்பு தேசத்தின் நலன்களுக்கும், அதனுடன் பிணிக்கப்பட்டிருக்கும் ஏழை மக்களின் நலன்களுக்கும் பெரிய கேட்டை விளைவிக்கும் என்ற என் அபிப்பிராயத்தைக் கூறினேன். இதுவரை நான் எழுதியும் பேசியும் வந்த விஷயங்களையே இப்பொழுதும் எழுதினேன், சொன்னேன்.

''ஏனெனில், நான் காதலிக்கும் இத்தாலி இப்போது கடைசியாக ஒப்புக்கொண்டிருக்கும் கடமையை நிறைவேற்ற முயற்சிக்கும்; அக்கடமை தன் மக்களின் மீது சுமத்தப்பட்டிருக்கும் பொருளாதாரத் துறையிலும் ஒழுக்கத் துறையிலும் இருந்துவரும் வறுமையை நீக்குவதேயாகும்.

''கும்பல் செய்த அட்டூழியங்களுக்கு நானும் ஜவாப்தாரி என்ற குற்றச்சாட்டை நிராகரிக்கிறேன்.

'''உள்ளே நுழைகிறவன் எனக்கு மகிழ்ச்சியளிக்கிறான்; நுழையாதவன் என்னைக் கௌரவிக்கிறான்' என்று தன் வீட்டு வாசல் தலைப்பில் எழுதிவைத்த சித்தாந்தியைப் போல், நானும் என் பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

''கௌரவம் வாய்ந்த நீதிபதிகளே! எனக்கு விடுதலையளித்தால் எனக்கு மகிழ்ச்சியளிக்கிறீர்கள்; ஏனெனில், என் வேலையைச் செய்ய என்னைச் சமூகத்தினிடம் அனுப்புகிறீர்கள். நீங்கள் என்னைத் தண்டித்தாலோ என்னைக் கௌரவித்தவர்களாவீர்கள். ஒரு குற்றவாளியின் முன்பு நீங்கள் அமர்ந்திருக்கவில்லை; தன் எண்ணங்களை வற்புறுத்தும் ஒரு மனிதன் முன்பு வீற்றிருக்கிறீர்கள்; மனச்சாட்சிக்காகக் கிளர்ச்சி செய்பவன் முன் இருக்கிறீர்கள்; ஒரு கொள்கையைத் தாங்கும் படைவீரன் முன் அமர்ந்திருக்கிறீர்கள். வருங்கால பலத்தையும் சத்தியத்தையும் தாங்கும் அக்கொள்கைக்கு மரியாதை செலுத்துங்கள்!''

நீதிபதிகள் நீண்ட தீர்ப்பெழுதினார்கள், ''ஐந்து வருஷம் கடுங்காவல் தண்டனை!'' என்றார்கள்.

ஆனால், ஐந்து மாதங்களுக்கப்புறம் விடுதலை செய்யப்பட்டு வெளியே வந்தான் பெனிட்டோ.

——

## 6. அவாந்தி

பெனிட்டோ சிறையிலிருந்து வெளிவரும் பொழுது தேசப் பிரபலம் ஏற்பட்டுவிட்டது. 'மகத்தான வீர'னாகி விட்டான்,

1912-ம் வருஷம் ரீஜியோ எமிலியாவில் அபேதவாதிகள் காங்கிரஸ் கூடிற்று. பெனிட்டோ அதற்குப் பிரதிநிதியாகச் சென்றான். புகழ் பெரிதாயிருந்தாலும் பலருக்கு அவனை நேரில் தெரியாது.

''லிபிய யுத்தத்தில் பூர்ஷுவாக்களுடன் ஒத்துழைத்த தற்காகவும், சமீபத்தில் இத்தாலிய மன்னனான விக்டர் இமானுவல். சதிகாரன் வெடிகுண்டிற்குத் தப்பித்துக் கொண்டதற்காக அவனை நேரில் சென்று பாராட்டிய தற்காகவும், லியோனிடோ பிஸோலிட்டியும் அவரது சகாக்களும் கட்சியிலிருந்து விலக்கப்படவேண்டும்', என்று ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டது. தீர்மானத்தைக் கொண்டு வந்தவன் பெனிட்டோதான்.

''மன்னர் தொழிலை ஏற்று வேலை பார்க்கிறவர்களுக்கு உயிருக்கு ஆபத்தை விளைக்கும் சங்கடங்கள் ஏற்படுவது சகஜந்தான்,'' என்று அந்தத் தீர்மானத்தை விளக்கிப் பேசுகையில் கூறினான்.

புது வெள்ளம் போல் பாய்ந்து, உலர்ந்த சருகுகளை ஒதுக்கித் தள்ளிவிட்டு, கட்சிச் சிகரத்தை முற்றுகையிட்டான் பெனிட்டோ.

பிஸோலிட்டியும் அவனுடைய சகாக்களும் தோல்வி யுற்று வெளியேற்றப்பட்டனர்.

அந்தக் காங்கிஸுக்கு வந்திருந்த இருவர் பெனிட்டோவை முதலில் சந்தித்துவிட்டுப் பின்வருமாறு தங்கள் அபிப்பிராயங்களை எழுதியிருக்கின்றனர்.

அவர்களில் ஒருவர் ஸினோர் செராட்டி—அவர் தமது மனைவிக்குப் பின்வருமாறு கடிதம் எழுதியிருந்தார். ''அற்புதமான வாலிபன்; ஒற்றை நாடியான தேகம்; கடுகடுப்பும் ஆவேசமும் பொருந்தியவன்; ரொம்பவும் திறமையாகப் புது மாதிரியில் விஷயங்களை விளக்கக் கூடியவன். வருங்காலத்தில் அவன் பிரபலத்திற்கு வருவது நிச்சயம். நீ வேண்டுமானாலும் பார்!—அவன் நமது கட்சியைக் கட்டி ஆளுவான்; சந்தேகமில்லை.''

மற்றொருவரான ஸ்ரீமதி அன்னாகூலிஸியாப், ஸ்ரீமதி செராட்டிக்கு எழுதியதாவது: ''அவன் மார்க்ஸ் கொள்கையைப் பின்பற்றுபவன் அல்லன்; அவன் உண்மையில் அபேதவாதியே அல்லன்; சாஸ்திரீக அபேதவாதியின் மனப்பான்மை அவனிடம் கிடையாது. அவன் அரசியல்வாதிகூட அல்லன். நீஷேயைப் படித்த அரைகுறைக் கவிராயன்.',

அந்தக் காங்கிரஸில் அடித்துக் கொண்டு போகப்பட்ட சருகுகளில் 'அவாந்தி'ப் பத்திராதிபன் கிளாடியோ ட்ரீவ்ஸும் ஒருவன். அவனுடைய ஸ்தானத்தில் கியவானி பாக்ஸி என்ற புரட்சிக்கார அபேதவாதி நியமிக்கப்பட்டான். அவன் நெருப்புக் கக்குவது போல வெளுத்து வாங்குவான்; ஆனால் அவ்வளவும் வார்த்தையோடு சரி.

1912-ம் வருஷம் டிஸம்பரில் பெனிட்டோ அந்த ஸ்தானத்தில் நியமிக்கப்பட்டான். அவன் குடும்பத்துடன் மிலானுக்கு வரவேண்டிதாயிற்று.

மிலான், தொழிற்சாலைகள் அதிகமாக உள்ள ஒரு நகரம். அங்கு தொழிலாளர் அதிகமாயிருந்ததால் அதை அபேதவாதிகளின் கொத்தளம் என்றே சொல்லவேண்டும். பூர்வீகத்திலிருந்தே புகழ் வாய்ந்த அந்நகரம் இத்தாலியின்

வடபாகத்திலிருக்கிறது. இத்தாலிய அபேதவாத முரசான 'அவாந்தி'ப் பத்திரிகை அங்கிருந்துதான் வெளிவருகிறது.

1895-ம் வருஷம் அப்பத்திரிகையை லியோனிடோ பிஸோலிட்டி சிறு துண்டுப் பிரசுரமாக ஆரம்பித்தான். 1898-ம் வருஷத்து விசேஷ அடக்குமுறைச் சட்டங்கள் அதற்குச் சக்தியும் புகழும் அளித்தன. என்ரிக்கோ பெரி, ராக்பாஸ், ட்ரீவ்ஸ் என்பவர்கள் அதன் ஆசிரியர் பீடத்தில் அமர்ந்து அதை வளர்ந்து வந்தனர்.

பத்திரிகை பெனிட்டோவின் பொறுப்பில் விடப்பட்டதி லிருந்து அதன் தோரணையே அடியோடு மாறியது. முன்பு ட்ரீவ்ஸ், 'ஒரு வேளை', 'அப்படியும் இருக்கலாம்' என்று வழவழப்பாக எழுதிய இடங்களிலெல்லாம், 'இது தான் சரி' 'இப்படித்தான் நடக்கவேண்டும்', என்ற உறுதியான வாசகங்கள் தொனித்தன. பத்திரிகையில் 'சர்வமும் தீவிர மயம்.' பிரசுரம் 40,000-த்திலிருந்து ஒரே குதியில் ஒரு லட்சத்திற்கு எட்டியதாம். சுருக்கமான, ஆனால், ஓங்கி யடிக்கும் தலையங்கங்களும், கண்ணைத் தாக்கும் தலைப்புக் களும், பையாஜா மைதானத்தில் ராஜீயக் கிளர்ச்சிக்காரர் களின் பிரசங்க இடி முழக்கம் போலிருந்தன.

'அவாந்தி'யில் பெனிட்டோவின் அதிகாரம் அசுர கதி யில் வளர்ந்து உயர்ந்தது. பத்திரிகையைத் தன் இஷ்டப் பிரகாரம் நடத்த ஆரம்பித்தான். சகாக்கள், கட்சி நிர்வாகஸ் தர்கள் தலையிடுவதை அவன் விரும்பவில்லை. அவர்களு டைய செல்வாக்கை மிகக் குறைந்த அளவுக்குக் கொண்டு வந்துவிட்டான். ஆனால் அஞ்சலா பால்பனாப் (ருஷிய அபேதவாதி) உதவி மட்டும் அவனுக்கு ஏராளமாகக் கிடைத்து வந்தது. இந்தச் சமயத்தில் அதாவது 1913-ம்

வருஷம், 'ஸின்டிகல்' அபேதவாதிகளுக்கும் அசல் அபேத வாதிகளுக்கு மிடையில் சண்டை மூட்டிவிட அவன் முயற்சித்தான்.

'பிரீமேஸன்' களுக்கும் பெனிட்டோவுக்கும் நெடுங் காலமாக ஒத்து வரவில்லை. நடுத்தரச் செல்வம் படைத்த வர்கள் பலர் 'பிரீமேஸன்'கள்; இவர்கள் இத்தாலியப் பார்லிமென்டைத் தங்களுக்குச் சாதகமாக உபயோகித்து வந்தார்கள் என்பதனால், பெனிட்டோவுக்கு இவர்கள் மீது கோபம் என்று பெனிட்டோ கட்சியைச் சேர்ந்த சரித்தி ராசிரியர்கள் கூறுவார்கள். வேறு சிலர், அதாவது முஸோலீனியை எதிர்ப்பவர்கள், 'பிரீமேஸன்' ஸ்தானத் தில் இவன் சேர முயன்ற பொழுது, இவனைக் கௌரவக் குறைவாக நடத்திச் சேர்த்துக்கொள்ள மறுத்தார்கள்; அதனால் அவர்களைக் கருவறுத்துவிட வேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டான் என்று சொல்வார்கள்.

அன்கோனாவில் 1913-ம் ஷு அபேதவாதிகள் காங்கிரஸ் கூடியது. முஸோலீனி அதில், ''அபேதவாதமும் ஸிண்டி கலிஸமும் பொருந்தாத விஷயங்கள்'' என்று ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, 'ஸின்டிகல்' அபேதவாதி களைக் கத்தரித்துவிட்டான்.

''காலமும் ஜனங்களும் தயாராக இருக்கும் பொழுது பையாஜா மைதானத்தில்—தான் வேறு இடத்தில் அல்ல— முடிவான போராட்டங்கள் நடக்கும் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம்.''

அவாந்தியின் தலையங்கம் இந்தத் தோரணையில் பொது மக்களைத் தட்டி எழுப்பியது.

ரோக்கோ கார்க்கா என்பது ஒரு சிறு நகரம். அங்கே மேய்ச்சல் தரைமீதுள்ள உரிமை ரத்துச் செய்யப்பட்டதற்

காகவும், நகரத்தில் சுகாதார வசதிகள் செய்ய வேண்டும் என்பதற்காகவும் அவ்வூர் வாசிகள் கிளர்ச்சி செய்தனர். சர்க்கார், ராணுவத்தை அனுப்பி, இரத்தம் சிந்தி, அவர்கள் வாயை அடைத்தது. வெறும் சீர்திருத்தங்களில் மட்டும் திருப்தி யடையும் அபேதவாதத்தில் பெனிட்டோவுக்குப் பற்றுதல் கிடையாது. எனினும் இரத்தத்தைக் கண்ணால் கண்டவுடன் அதில் குதித்துவிட்டான்.

1913-ம் வருஷம் ஜனவரி மீ' 'அவாந்தி'ப் பத்திரிகை யில் பெனிட்டோ பின்வருமாறு எழுதினான்:

''நாகரிகத்தின் சிகரமாகக் கருதுகிறோமே இந்த இத்தாலியில், ஆயுதம் வைத்திராத கிழவர்கள், கர்ப்பிணிகள், குழந்தைகள் யாவரும் துப்பாக்கி கொண்டு சுடப்படுகிறார்களே, அது சாத்தியமில்லை என்று நினைக்கிறீர்களா? ரோக்கோ கார்க்காவிலுள்ள ஏழை மக்கள், நகரத்தில் சாக்கடை அமைக்கவேண்டும், வைத்தியத்திற்கு டாக்டர்களை நியமிக்கவேண்டும், தண்ணீர், விளக்கு வசதிகள் வேண்டும் என்று மனுச் செய்துகொண்டனர். அதற்குச் செலவழிக்கப் பணமற்ற சர்க்கார் ராணுவத்தை அனுப்பி மக்களின் கிளர்ச்சியை இரத்தத்தில் அமுக்கி அடைத்தார்கள். பொது மக்களே இவற்றிற்கு முடிவுகட்டும் காலம் வந்து விடும். அவர்களுடைய விழிப்புக்கு சர்க்காரின் இந்தக் கொலை முயற்சிகளே போதும். அவர்களது வஞ்சம் சாதாரணமானதல்ல. கொன்று குவிக்கப்படும் தம்மவருக்காக இந்த வோட்டுக் கடுதாசிகள் மீதும், பித்தலாட்டமான சர்க்கார் மீதும், அதற்கேற்றபடி தாளம் போடும் நீதி மன்றத்தின் மீதும் அது வஞ்சம் தீர்த்துக்கொள்ளும்.''

'அவாந்தி' தீவிரமாகப் பிரசாரம் நடத்திக் கிளர்ச்சி செய்தது.

பத்திரிகையின் மீது அடக்குமுறைப் பாணம் விழுந்தது. பெனிட்டோவும், அவன் சகாக்களும் கைது செய்யப் பட்டனர்.

1914-ம் வருஷம் வசந்த ருதுவில் அவனும், அவனுடைய சகாக்களும் ரோக்கோ கார்க்கா கலகத்தைத் தூண்டியதாகக் குற்றம் சாட்டப்பட்டு விசாரிக்கப்பட்டனர்.

மிலான் நகரத்திற்கு 'இத்தாலியின் மூளை' என்று ஒரு சிறப்புப் பெயர் உண்டு. இருபது வருஷங்களுக்கு முன், ''மிருகத்தனமான அநாகரிகத்தில் ஆழ்ந்த இத்தாலி இன்னும் இருந்து வருகிறது'' என்று ஆல்பிரடோ நிஸீ போரோ என்பவன் சொன்னான்; அவ்வார்த்தைகளைப் பொய்ப்பிக்கவாவது விசாரணை அங்கு நடக்கவேண்டும் என்று விரும்பினான் பெனிட்டோ. விசாரணை அங்கேயே நடைபெற்றது.

கோர்ட்டில் பெனிட்டோவே தன் கட்சியை வாதித்துக் கொண்டான்:

''தந்தி மூலம் இச்செய்திகள் தெரிந்தபின் இக்கட்டுரைகள் எழுதினேன்; எழுதியதற்காக இப்பொழுதும் வருந்தவில்லை. இனியும் வருந்தப்போவதில்லை. ரோக்கோ கார்க்காவின் மக்களும் அவர்களைப் போல் அதே நிலையில் உள்ள இதர இத்தாலியப் பொது மக்களும் தங்கள் கஷ்டங்களை உணர வேண்டும் என்பதே என் ஆசை. ஆட்சி செய்கிறவர்களும் ஆட்சி செய்யப்படுகிறவர்களும் இந்தப் பிரச்னையின் சமூக சம்பந்தமான அம்சத்தை நன்றாக உணர்ந்து கொள்ள வேண்டும் என்பது என் ஆசை.

''அவாந்தி'ப் பத்திரிகை மானேஜரைப் விடுதலை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சட்டத்தின் பேரிடிகள் என் தலையில் விழவேண்டும்; நான் குற்றம் செய்யாதவன் அல்ல; விடுதலை செய்யப்பட்டால் மறுபடியும் முன் போலவே செய்வேன்; மேலும், எனது கௌரவம் என்னை அப்படிச் செய்யும்படி தூண்டும்; மேலும், எனக்குச் சிறை வாழ்க்கை அவ்வளவு கஷ்டமாகத் தோன்றவில்லை. 'நாலு வருஷம் பள்ளிக்கூடத்திலும், ஒரு வருஷம் சர்வகலா சாலையிலும், இரண்டு வருஷம் சிறையிலும் கழித்தால், ஒருவன் சரியான மனிதனாகத் தேறிவிடுவான்' என்று ஒரு ருஷியப்பழமொழி சொல்லுகிறது

''நான் உங்களுக்கு (ஜூரர்களுக்கு) ஓர் ஆலோசனை சொல்ல விரும்புகிறேன். நீதிபதிகளின் ஆடை அலங்காராதிகளுடன் விளங்கும் மாஜிஸ்திரேட்டுகளிடம் நான் இதைக் கூறமாட்டேன். ஒரு புதிர் போலக் காணப்படும் இந்த விஷயத்தின் அமைப்பைப் பூரணமாக உணர்ந்துகொள்ளப் போதுமான புத்திசாலித்தனமோ அல்லது பாரபட்சமற்ற தன்மையோ அவர்களுக்குக் கிடையாது. நீங்கள் எங்களை விடுதலை செய்யவேண்டும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். நாங்கள் இக்குற்றத்தைச் செய்யாததற்காக அல்ல. நாங்கள் இதை செய்ததற்காக, இனியும் செய்வோம் என்று உங்களுக்கு வாக்குறுதி கொடுப்பதற்காக! மூன்று கோடி அறுபது லக்ஷம் ஜனங்கள் ஒரே மாதிரியாகச் சிந்திக்கின்றனர்—அவர்களுடைய மூளையெல்லாம் ஒரே வார்ப்பிலிட்டு எடுத்தது போன்றது—என்று வைத்துக் கொண்டு அப்படிப்பட்ட ஓர் இத்தாலி தேசத்தைச் சிறிது கற்பனை செய்து பாருங்கள். அங்கே என்ன இருக்கும்—அசட்டுத்தனத்தைத் தவிர? மன்னர் கட்சியைச் சேர்ந்த இந்த மூன்று கோடி அறுபது லட்சம் ஜனங்களைப் பார்த்துப் பார்த்துச் சலித்துப்போன அரசனே, குடியாட்சிக் கட்சியைச்

சேர்ந்த ஒருவன் இருக்கவேண்டும் என்பதை வற்புறுத்து வான்.

''ஆகையால்நாம் வேண்டுவது சர்ச்சைகள், மாறுபட்ட அபிப்பிராய மோதல்கள், போர்! ஏகோபித்த மனப்போக் கும், ஒரே தன்மையும் மௌட்டியத்தைக் கொண்டுவரும். மரணத்தைக் கொண்டு தரும். ஆகையால் ஜூரர்களே, போரில் தான் யாவும் பிறக்கின்றன என்று கூறும் புராதன தத்துவவாதியான ஹெராக்ளிடஸை வணங்குங்கள் போரை நடத்த எங்களுக்கு விடுதலை அளியுங்கள்! அப்பொழுது நீங்கள் சுதந்திரத்தைக் கௌரவிப்பவராவீர்கள்.''

——

## 7. 1914

இருபதாம் நூற்றாண்டு ஆரம்பமானதிலிருந்து, 1914-ம் வருஷத்தில் தான் ஒரு புதிய சகாப்தத்தில் காலடி வைத்தது! வெள்ளைக்காரர்கள் பொதுவாக உலகம் என்று குறிப்பிடும் பிரதேசங்கள் யாவும், தமது பழைய உளுத்துப்போன அளவு கோல்களை வைத்துக்கொண்டு பூகோளப் படத்தில் வர்ணத் தையும் வரம்புகளையும் மாற்ற உத்தேசித்தன. அளவுகோல் கள் உளுத்துப்போனவையென்று அவைகளுக்குத் தெரியாது. தேசங்களின் எல்லைகளை மாற்றியமைக்கத் தோன்றிய இந்த முயற்சிக்குத்தான் யுத்தத்தைக் கொல்ல வந்தயுத்தம், ஜெர்மன் சண்டை, உலக மகாயுத்தம் என்ற பல பெயர்கள் இடப்பட்டன. இந்த யுத்தம் மூலகாரணங்களைக் கண்டு பிடிக்கும் சரித்திர ஆசிரியர்களுக்கு வற்றாத சுரங்கமாக இருந்து வருகிறது.

மற்ற உலகம் சென்ற வழியில்தான் இத்தாலியும் சென் றது. ஆனால் பிறவிடங்களில் ஏற்பட்ட குழப்பத்தின் மூலம்

தன் வீட்டைச் சரிப்படுத்தி வைக்கக் கற்றுக் கொண்டது. படிப்படியாக, மற்றவர்கள் வீட்டில் விளக்கேற்றியிருப்பதையும் அணைத்து வைத்துப் பார்க்க முயன்றது. ஐக்கிய இத்தாலி என்ற குடுகுடுப்பைக்காரனின் சட்டை இன்று ரோம ஏகாதிபத்திய அங்கியாகக் காட்சியளிக்கிறது. ஆஸ்திரியாவின் பட்டத்திளவரசன் கொலையுண்டதே இதற்குப் பாதை திருத்திக் கொடுத்தது.

இந்தப் பெரிய சண்டையைக் கவனிக்கும் முன் இத்தாலியின் சிறிய கலாட்டாவைப் பற்றிக் கொஞ்சம் கூறவேண்டும்,

மூன்றாவது 'இன்டர்நாஷனல்,' லெனின் போட்ட பிளான்படி, தொழிலாளர் வேலை நிறுத்தத்தின் மூலம் பூலோகத்தில் மோட்ச சாம்ராஜ்யத்தை ஸ்தாபிக்க, அதாவது, எல்லோருடைய வயிற்றுக்கும் சோறு கிடைக்கும்படி வசதி செய்ய முயலும் ஒரு திட்டத்தை அமைக்க எண்ணியது, லெனினுக்கு மேல் வரப்போகும் அரசியல் சண்டமாருதத்தைப் பற்றி முன் எச்சரிக்கை உண்டோ என்னவோ? வர்க்க பேதமற்ற தன் இலட்சியத்தை ஸ்தாபிக்க, அவன் ஐரோப்பிய நாடுகளில் வேலை நிறுத்தங்கள் செய்யத் தூண்டினான். பிரான்ஸில் ஒரு அரைகுறை வேலை நிறுத்தம் நடந்தது. இத்தாலியும் அதில் ஈடுபட்டது. வர்க்கப் போராட்டத்தை மூளவிட்ட பெனிட்டோவும், இத்தாலியில் அதற்கு எரியிட்டு வளர்த்தான்.

ரோக்கோ கார்க்கா சம்பவத்தின் தொடர்ச்சியாக, இத்தாலி இரத்த வெள்ளத்தில் மூழ்கிக் குளித்தது. 1914 ஜூன் 7-ம் தேதி முதல் 14-ம் தேதி வரை நடைபெற்ற விஷயங்களைச் சிவப்பு வார நிகழ்ச்சிகள் என்பர். ஜூன் மாதம் 8-ந் தேதி சர்க்கார் ராணுவ எதிர்ப்புக் கூட்டம் நடத்தலாகாது என்று விதித்திருந்த உத்தரவை மீறிக் கூட்டம் நடத்துவது என்பது அபேதவாதிகள் உத்தேசம்.

கூட்டம் நடைபெறுகையில் போலீஸ் படை வந்தது. உடனே கலகம்! 'புரட்சி நீடூழி வாழ்க!' 'அடி! உதை! சுடு!' என்ற கோஷங்கள். மூன்று தொழிலாளர் செத்து விழுந்தனர்.

கலகம் அகில இத்தாலியக் கிளர்ச்சியாக மாறியது-

அராஜகனான மால்டஸ்டாவும் 'அவாந்தி'ப் பத்திரிகாசிரியனான முஸொலீனி கிளர்ச்சியை வளர்த்தனர். மிலான், டூரின், பொலானா முதலிய தொழில் மிகுந்த நகரங்களில் வேலை நிறுத்தம் நடந்தது. இத்தாலியின் புரட்சித்தளம் என்றுகூறத்தக்க அன்கோனா, ரிமினி, போர்லி, ராவென்னா முதலிய பகுதிகளில் 'புரட்சிக் கமிட்டிகள்' அதிகாரத்தையே கைப்பற்றிக் கொண்டன. இத்தனைக்கும் காரணமாகத் திரை மறைவில் நின்றவன் மால்டஸ்டா; பத்திரிகைத் தலையங்கம் எழுதினவன் முஸொலீனி!

காரியக் கமிட்டிகள் சில சிறிய படைகளைக் கைது செய்தன. முனிஸிபல் அதிகாரத்தைக் கைப்பற்றின. சில பால் பண்ணைகள் சூறையாடப்பட்டன. சில மாதா கோயில் களில் கதவுகள் மட்டிலும் தீயாலெரிக்கப்பட்டன. ஓரிடத்தில் கோழிக் குஞ்சுகளை மட்டும் களவாடிச் சென்றனர் புரட்சியின் தூண்களாக விளங்கிய சிலர் மற்றோரிடத்தில் புரட்சிப்படை சர்க்கார் துருப்பின் ஜெனரலைக் கைப்பற்றியது. அவ்வூரில் சிறைச்சாலையில்லை, அதனால், 'மேற்கொண்டு' உத்தரவு' போடப்படும் வரை அந்த ஜெனரல் ஒரு ஹோட்டலில் சிறைவைக்கப்பட்டான்.

நகரங்களைக் கைப்பற்ற வேண்டியது தான் பாக்கி- இத்தாலியில் குடியாட்சி ஸ்தாபிக்கப்பட்டுவிடும் என்று எதிர் பார்த்தனர் புரட்சிக்காரர்; ஓரிடத்தில் பெர்ஸாக்ளீரி படை சிரித்துக்கொண்டு வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்க, கலகக் கூட்டம் நகரத்தில் குடியாட்சி ஏற்பட்டு விட்டதாக முரசறைந்துவிட்டது! ரோமாபுரியிலும், மிலானிலும்

குடியாட்சி ஸ்தாபிக்கப்படவில்லை என்பது நிச்சயமான பின்பே, புரட்சிக் கூட்டம் தான் கைது செய்த ஜெனரலை விடுதலை செய்தது. வண்ணாத்தி ஒருத்தி, இந்தத் தற்காலிக அவசரக் சிறைக்கூடத்தின் சாவித்தொளையின் வழியாக, ஜெனரலை மனமாரத் திட்டிக்கொண்டிருந்தாள்! விடுதலை பெறும்வரைஅவன் பட்ட துன்பம் இந்த ஏச்சைக் கேட்டுச் சகித்துக் கொண்டிருந்ததுதான்.

மிலானில் முஸொலீனியும் கலகத்தை நடத்தினான். ''மிலான்வாசிகளே, சந்தையிடத்தை, கடைகளைக் கைப்பற்றுங்கள்! அபேதவாதிகளே, பையாஜா டெல்குவோ மோவுக்குச் செல்லுங்கள்!'' என்று கோஷித்துக் கொண்டு முன்னேறினான். நகரமே ஒரு பாசறை. குதிரைப் படைகளின் தாக்குதல்களை அவன் கவனிக்கவில்லை. புஸ்தகங்களுடனும் கமிட்டிகளுடனும் தங்கள் சேவையை நிறுத்திக் கொண்ட அபேதவாதத் தலைவர்களுக்கு இவனுடைய போக்கே ஒத்துவரவில்லை.

சர்க்காரும் இந்த நிலையில் கைகட்டிச் சும்மா இரர்தல்லவா! அது கலகக்காரர்களை அடக்கப் படைகளை அனுப்பி வைத்தது. ஆனால் இதற்குள் அநேக நகரங்கள் அபேதவாத ஜனநாயகக் கட்சியினர், புரட்சிக்காரர் முதலியோர் வசமாயின. அவர்களுடைய அனுமதிச் சீட்டில்லாமல் பிடிபட்ட நகரங்களில் பிரவேசிக்க முடியாது. இதே சமயத்தில் தன் அதிகாரம் நிலைத்துள்ள இடங்களி லெல்லாம் சர்க்கார் பலரைக் கைது செய்ய முயன்றது.

'புரட்சியே ஏற்பட்டுவிட்டது' என்று உறுதியாக நம்பியிருந்த முஸொலீனியைத் தூக்கி வாரிப் போடும்படி, சீர்திருத்தவாதிகள் சமரசம் பேச ஆரம்பித்தனர்; பல இடங்களில் தங்கள் சகபாடிகளின் உத்தரவுகளை அவர்களே ரத்துச் செய்தனர்.

முடிவாகத் தேசீயக் கட்சியினர் கோராடினி, பெடர்ஜா ரோக்கோ என்ற மூவர் தலைமையில் திரண்டு நின்று, சர்க்காருடன் ஒத்துழைத்து, கலகத்தை அடக்கினர். பல்லாயிரக்கணக்கானவர்கள் கைது செய்யப்பட்டனர். அராஜகனான மால்டஸ்டா, சர்க்காருடைய வலை வீச்சுக்குத் தப்பி, லண்டனுக்கு ஓடிப்போனான்.

சமுத்திரம் பொங்கியது போல் எழுந்த புரட்சி, பயங்கொள்ளிகளான சீர்திருத்தவாதிகளின் சமாதானத்தால் வெறுங்கேலிக்கூத்தாக முடிந்தது. முஸோலீனி தோல்வி என்பது என்ன வென்பதை அப்பொழுதுதான் படித்துக் கொண்டான். புரட்சி ஏழுநாள் விந்தையாக மறைந்தது.

1906-ம் வருஷம் ரோமாபுரியில் அமெரிக்கஸ்தானீகராக இருந்தவர் ஹென்றி ஒயிட் என்பவர். அவருக்கு 'கோல்ப்' பந்து விளையாட்டு என்றால் அபார மோகம். ஆனால் அவரிடம் ராஜதந்திர விஷயங்களின் நெளிவு சுளுவுகளைத் தெரிந்துகொள்ள வந்த கவுண்ட் கார்லோ ஸ்போர்ஸா வாலிபர். 'கோல்ப்' விளையாடுவதில் அவருக்கு நல்ல தேர்ச்சியுண்டு, விளையாட்டுப் போக்கில் ராஜீயமும் கொஞ்சம் கலந்து கொண்டது.

காலடியிலிருந்த பந்தை ஓங்கியடிக்கிறார் ஸ்ரீ. ஒயிட். குறி தவறுகிறது. மட்டை வந்த வேகத்தில், பக்கத்தில் ஆள் நெருங்காமல் சுற்றிச் சுழலுகிறது, மறுபடியும் குறி வைக்கிறார். பந்து சிட்டாய்ப் பறக்கிறது. வியர்வையைத் துடைத்துக்கொண்டு இருவரும் நடக்கின்றனர். பந்து மட்டைகள் சுமப்பவன் பின்னால் தொடருகிறான்.

''சமீபத்தில் பால்போர் (பிரிட்டிஷ் பிரதம மந்திரி) கூடப் பேசிக்கொண்டிருந்தேன். அவர் என்ன சொன்னார் தெரியுமா? 'ஜெர்மனி தன் கப்பல் படையையும் வர்த்தகத்தையும் இனியும் இதற்குமேல் வளர்த்துக் கொள்ளுமுன், அதனுடன் சண்டை போடாமல் இருக்கிறது

முட்டாள் தனந்தான்!' என்றார். நான் திடுக்கிட்டுப் போனேன். 'என்ன' மிஸ்டர் பால்போர், தாங்களுமா கொள்கை உறுதியுடைய தத்துவவாதியான தாங்களுமா? தாங்கள் ஜெர்மன் வர்க்கத்தின்மீது வெற்றிபெற வேண்டுமானால் இன்னும் அதிகமாக உழைக்க வேண்டும்!' என்றேன். அவர் பதில் என்னை மேலும் தூக்கி வாரிப் போட்டது. 'என்ன ஒயிட், இப்படிச் சொல்லுகிறீர்? ஜீவனோபாயச் செலவைக் குறைப்பதற்கு வழி என்ன? இதையெல்லாம்விட, சண்டைக்குப் போவது இலேசில்லையா? நமது அதிகாரத்தையும் உயர்ந்த செல்வாக்கையும் காப்பாற்றிக் கொள்ள அதுதான் ஒரே வழி என்று நினைக்கிறேன்,' என்று சொன்னார்.''

இது எப்போதோ 1906-ம் வருஷம், சரஜீலோ சம்பவத்தை யாரும் கற்பனைகூடச் செய்ய முடியாத காலத்தில், நடந்தது.

உலக மகா யுத்தம். நாடி அதிர்ச்சியால் ஏற்பட்ட திடீர் சம்பவம் அன்று, நெடுங்காலக் கொந்தளிப்பின் பேரில் கக்கப்பட்ட விஷம். வல்லரசுகள் யாவும் முட்டிக்கொள்ளச் சமயம் பார்த்திருந்தன; காரணம் ஜெர்மனி, அதன் பிரபல பிரதம மந்திரி பிஸ்மார்க்கின் கீழும். அதற்கப்புறம் கெய்ஸர் வில்லியத்தின் ஆட்சியிலும், இதர நாடுகள் திகிலடையத் தக்கபடி வளர்ந்துவிட்டது. மேலும் தனது தேவைக்கு மிஞ்சிய பொருள்களையும் மக்களையும் திணிக்க வேறு நாடு தேடியது இந்த நிலையில் 1914-ம் ஸ்ரீ ஜூன் மீ 28-ம்வ ஆஸ்திரிய பட்டத்திளவரசனான ஆர்ச் டியூக் பிரான்ஸிஸ் பெர்டினான்ட் சரஜீவோவில் காப்ரில்லோ பிரின்ஸ்ப் என்ற அரசியல் வெறியனால் சுட்டுக் கொல்லப்பட்டான். ஆஸ்திரிய ஏஜெண்டுகள் ஸ்தலத்தில் விசாரணை நடத்தினர். செர்பிய

சர்க்கார் இந்தச் சதிக் கொலையில் நேரடியாகச் சம்பந்தப் பட்டிருந்ததற்கு ஆதரவாக ருஜுக்கள் இல்லையாயினும், அதற்கு இப்படிப்பட்டதொரு சம்பவம் நடைபெறும் என்று தெரியும். பொதுத் தேர்தல் வருவதை உத்தேசித்து, தகவலை வியன்னாவுக்கு அறிவிக்கத் தவறியது. இதனால் ஆஸ்திரியா சீறியது; ஜெர்மனி அதை ஆதரித்தது. ஜுலை 2-ம் வ செர்பியாவின் மீது போர் தொடுப்பதென்று நிபந்தனை விடுக்கப்பட்டது. செர்பியா அந்த நிபந்தனை களை ஏற்றால் தன் சுதந்திரத்தையே இழக்கவேண்டியது தான். நிபந்தனை விடுவிக்கப்பட்ட சந்தர்ப்பமும் ஒரு மாதிரி யானதுதான். பிரெஞ்சுப் பிரதம மந்திரியான பாயின்கரே யும் (இத்தாலியப்) பிரதம மந்திரி விவியானியும் ருஷிய மன்னன் ஜார் விருந்தினராக இருந்து விட்டு, கடல் மார்க்க மாகத் திரும்பிக்கொண்டிருந்தனர். செர்பிய யுத்தத்தை வைத்துக் கொண்டு பிரான்ஸ், ருஷியா இரண்டு நாடுகளின் மீதிலும் யுத்தத்தைச் சுமத்தவே இந்தச் சந்தர்ப்பம் உபயோகித்துக் கொள்ளப்பட்டது. செர்பியா அழித்து விடப்படுவதை ருஷியா கைகட்டிப் பார்த்துக்கொண்டிராது. செர்பியா போனால், ஹாம்பர்க் முதல் பாக்தாத் வரை ஜெர்மன் ஆட்சி ஏற்படும். 1849-ம் ஷு, ஆஸ்திரிய சிங்கா தனத்தில் ஏற பிரான்ஸிஸ் ஜோஸப்புக்கு ருஷியா ஆயுத பலமளித்ததெனினும், அதன் அபிலாஷைகளில் அடிக்கடி குறுக்கிட்டது ஆஸ்திரியாவே. ஆகையால் பெல்கிரேட் மீது குண்டு விழுந்தது என்ற செய்தி கிடைத்ததும், ருஷியா படை திரட்ட ஆரம்பித்ததில் அதிசயமொன்றுமில்லை. இந்தக் கொந்தளிப்பான நிலையில் ஆஸ்திரியாவைச் சமா தானப்படுத்தக்கூடிய நிலையில் இருந்தது ஜெர்மனிதான். அந்தச் சந்தர்ப்பத்தை நழுவ விட்டதற்கு, ஜெர்மனிக்கு காலனிகள் மேலிருந்த மோகமும், கெய்ஸருக்குத் தம் ஆப்த நண்பனின் கொலையினால் ஏற்பட்ட சீற்றமும் காரண மாகும்.

ஐரோப்பியக் கொள்கைகளே அமைதியில் பிறந்தவையல்ல; ஒவ்வொரு அந்நிய நாட்டுக் காரியாலயமும் தன் அபிலாஷைகளை யுத்தத்தின் மூலம்நிறைவேற்றிக்கொள்ளக் கனவு கண்டு கொண்டிருந்தது. பிரான்ஸுக்கு அல்ஸேஸ் லொரெயின் வேண்டும் என்று பிரியம்; ஜெர்மனி காலனிகளையும், பெரிய கடற்படையும், மத்திய கிழக்குப் பகுதியில் ஆதிக்கமும் வேண்டுமென்று விரும்பியது. ஆஸ்திரியா செர்பியாவை நசுக்கிவிடவும், ஸலோனிகா துறைமுகத்தைக் கைப்பற்றிவிடவும் ஆசைப்பட்டது. ருஷியருக்கு பாஸ்பரஸ், டார்டனல்ஸ் மீது கண். செர்பியாவுக்கு பாஸ்னியா, ஹெர்ஸ்கோவினா இவற்றின்மீது நாட்டம். ருமேனியாவுக்கு டிரான்ஸில்வேனியாவின் மீது விருப்பம். இத்தாலி டிரன்டினோ, டிரிஸ்டிவரை தன் எல்லைப்புறத்தை விஸ்தரிக்க விரும்பியது. இதுதான் போர் தொடுக்கும் பொழுது பல நாடுகளுக்கும் ஏற்பட்டிருந்த ஆசைகளும் எண்ணங்களும்.

—0—

## 8. மாஜி அபேதவாதி

யுத்த எச்சரிக்கைத் தந்திகள் ஐரோப்பாவின் ஒரு முனையிலிருந்து மற்றொரு முனைக்கு முன்னொளி போல் பாய்கின்றன. தேசங்கள் யுத்தத்திற்குப் படை திரட்டுகின்றன. இத்தாலிய தேசீயவாதிகள் தங்கள் தேசமும் உடனே யுத்தத்தில் கலந்து கொள்ள வேண்டுமென்று விரும்பினார்கள். இதற்குக் காரணம் நிர்ணயமான ஒரு அந்நிய நாட்டுக் கொள்கையன்று. பொதுவாக இதர தேசங்களில் காணப்பட்ட யுத்த வெறியின் பிரதிபலிப்பேயாகும். தேசீயவாதிகள் முதலில் நேச தேசக் கட்சியினரை எதிர்த்துப் போராட வேண்டுமென்று விரும்பினர். ஆனால் மறுகணம் ஆஸ்திரியா

வுடன் செய்துகொண்ட முக்கட்சி, ஒப்பந்தத்தை ரத்துச் செய்து விட்டு, அதன் மீது போர் தொடுக்க வேண்டுமென்று விரும்பினர். இத்தாலி எந்தக் கட்சியிலும் சேராது நடு நிலைமை வகிப்பதை அவர்கள் விரும்பவில்லை. மத்தியக் கட்சிகள், லிபரல் கட்சித் தலைவனான கியோலிட்டி வார்த்தைகளுக்குச் செவி சாய்த்து, நடுநிலைமையை ஆதரித்தன. அந்நிய நாடுகள் பெரிய யுத்த நெருக்கடியில் சிக்கியிருக்கும் சமயத்தில் தேசத்தின் போக்கை உணராத கியோலிட்டி தன் குறுகிய நோக்கத்திற்குத் தானே பலியானான். இத்தாலிய சர்க்கார் தேசத்தின் போக்கை உணர்ந்து ஆஸ்திரியாவை உதறித் தள்ளிவிட்டு நேச தேசத்தாரோடு சேர்ந்துவிட்டது. பெர்லின் காட்டும் ஆசை வார்த்தைகளுக்கு இணங்கி இத்தாலியை நடு நிலைமை வகிக்கும்படி செய்விக்க, சலாந்த்ரா என்ற பிரதம மந்திரியைப் பதவியிலிருந்து விலக்குவதற்குச் சூழ்ச்சி செய்ததாக, கியோலிட்டி குற்றம் சாட்டப்பட்டான். சண்டை போடாமலே ஆஸ்திரியாவிடமிருந்து எதையோ நிறையப் பறிக்கலாமென்று அவன் சொன்ன வார்த்தைகளே அவனுக்கு எதிராக வந்தன. செல்வாக்கு (மறைமுகமான சர்வாதிகாரம்) தொலைந்தது. ரோமாபுரியை விட்டு அவன் அகன்றான். தேசீயக் கட்சிகள் யுத்தத்தின் சார்பாகப் பொதுமக்களிடையே பிரசாரம் செய்தன.

இன்னொரு விசித்திரம். தீவிர அபேதவாதிகளான முஸொலீனியும், அவன் சகாக்களும் அவர்களுடன் ஒத்துழைக்க முனைந்தார்கள். 'இன்று யுத்தம்; நாளைப்புரட்சி! என்று கோஷித்தான் முஸொலீனி. 'யுத்தத்தினால் இத்தாலிய சமூகம் அதிரடித்துப்போகும்! தொழிலாளரின் புரட்சி மூலம் அபேதவாத சாம்ராஜ்ய சர்க்காரை ஸ்தாபித்து

விடலாம்' என்றெல்லாம் வாதித்தான். 'இன்று சரித்திரம் யுத்த முனையிலுள்ள பாசறைகளிலே சிருஷ்டிக்கப்படுகிறது. நாளைக்கு நாம் அதை நம் தெருக்களிலேயே ஏற்படுத்து வோம்!' என்று கோஷம் செய்தான். 'இதை அபேதவாதி என்ற நோக்கத்தோடு பார்க்கலாகாது; இத்தாலியன் என்ற நோக்கத்தோடு பார்க்கவேண்டும்' என்றான். 'யுத்தம் புரட்சியானால் ஒவ்வொரு புரட்சிக்காரனும் அதில் பங்கெடுத்துக்கொள்ள வேண்டும். தேசீய உணர்ச்சியும் வர்க்க உணர்ச்சியும் எதிரெதிரான உணர்ச்சிகளா? இவ் விரண்டையும் ஒன்றாக இணைக்கமுடியுமா என்று நாம் ஏன் முயற்சிக்கலாகாது?' இப்படிப்பட்ட வாதங்கள் 'அவாந்தி'ப் பத்திரிகையின் தலையங்கங்களாக வெளிவந்தன. இவை தான் அவன் அப்பத்திரிகையின் ஆசிரியப் பதவியிலிருந்து நீக்கப்படுவதற்குக் காரணம். பத்திரிகையில் அவனுக்கு ஆசிரியப் பதவியளித்த கான்ஸ்டாண்டினோ லஜாரியோவே அவனை அப்பதவியை விட்டு நீக்குவதற்கு முயன்றான்.

மிலான் முனிஸிபல் கூட்டம் நடக்கிறது. அங்கே மேர் ஒரு 'ஸிண்டிகலிஸ்ட்' அபேதவாதி. அவருக்கு ஒரு தந்தி வருகிறது. பிரித்து வாசிக்கிறார். முகம் சடக்கென்று மாறுகிறது! ''அவருக்குப் பதிலாக யார்?'' என்ற வார்த்தைகளைத் தம்மையறியாது வாய்விட்டுச் சொல்லு கிறார்........

''நான் 'அவாந்தி'ப் பத்திரிகை நடத்தும் பொறுப்பை ராஜிநாமாச் செய்கிறேன். கடைசியில் விடுதலை! ஆசி!

முஸொலீனி''

என்ன செய்வது............?

பொலோனாவில் அபேதவாதிகள் கட்சிக் கூட்டம். கூட்டத்திலே பெனிட்டோவுக்கு அபார எதிர்ப்பு. அபேத வாதிகள் பின்பற்றினாலும் பின்பற்றாவிட்டாலும், யுத்தத் தில் தலையிடுவது என்று அவன் தீர்மானித்துவிட்டான்.

'யுத்தம், யுத்தம்! இதுவே இத்தாலியின் அரிய சந்தர்ப்பம்!' என்று நினைக்கலானான் முஸொலீனி.

கூட்டத்தில் ஏக இரைச்சல், கூப்பாடு. அதில் ஓங்கி எழுகிறது பெனிட்டோவின் குரல்.

"நீங்கள் இப்போது வெறுப்பதற்குக் காரணம் உங்களுக்கு என்மீதிருக்கும் அபார அன்பே!

"நீங்கள் என்னை அரசியல் வாழ்விலிருந்து இன்று விரட்டி விடலாம் என்று நினைக்கிறீர்கள். அது உங்களால் முடியாது. இனியும் நீங்கள் என்னை எதிர்த்துத்தான் ஆக வேண்டும். அப்போது எனது பலத்தை உணர்வீர்கள்!"

சடக்கென்று கீழே இறங்கி வெளியேறினான் பெனிட்டோ. "ஹாய்! ஊய்!" என்ற ஊளையும் கேலியும் பின்புறமிருந்து வழியனுப்புகின்றன. அபேதவாதக் குழந்தைகள் தங்களது தற்காலிக வெற்றியில் தங்களைத் தாங்களே போற்றிக் கொள்கின்றன!

மிலானில் **போரோ போனபார்ட்டே** என்று ஓரிடம். அதில் மூன்றாவது மாடியில் மூஸொலீனியின் குடித்தனம். அதில் அவனும் அவன் சகாக்களும் கூடுகின்றனர். அவனோடு 'அவாந்தி'ப் பத்திரிகையில் வேலை செய்த அலிஸான்ட்ரோ கியோவானி, மார்கரட்டா, ஸர் பாட்டி முதலியோரே அந்த நண்பர்கள். இனி என்ன செய்வது? புதிய பத்திரிகை வேண்டும், புதிய கட்சி வேண்டும்! பணத்திற்கு பிரெஞ்சு மூலதனம் கிடைக்கிறது. இத்தாலிய தேசீயவாதிகளான கவிஞன் டி அனன்ஸியோ, மார்ட்டினெட்டி, காரிடோனி இவர்கள் ஒத்தாசை கிட்டுகிறது.

1914-ம் வருஷம் நவம்பர் 15-ம் தேதி 'போபோலோ டி' இத்தாலியா' பத்திரிகை உதயமாகிறது. பத்திரிகைத் தலைப்பின் கீழ், 'ஒரு அபேதவாத தினசரிப் பத்திரிகை; பொருள் உற்பத்தி செய்வோர், போர் வீரர்கள் இவர்களது

சார்பாகப் பிரசாரம் செய்யும் பத்திரிகை' என்று ஒரு வியாக்கியானம் வெளிவருகிறது.

வர்க்கப் போராட்டத்தையும், தேசியப் போராட்டத்தையும் இணைத்து, புரட்சியின் மூலம் குடியாட்சியை ஸ்தாபிப்பது என்பது இலட்சியம். அதாவது, யுத்தம் முடிந்த பிறகு, ஆஸ்திரிய அதிகாரத்தின் கீழ்ச் சிக்கிக் கிடக்கும் இத்தாலிய மைனாரிட்டிகளையும் தாய் நாட்டுடன் இணைத்து இந்த இலட்சியத்தைப் பூர்த்தி செய்வதாக உத்தேசம். அந்தக் கொள்கைகள் அபேதவாதிகளுக்கு வெறுப்பை யூட்டின. 1914-ம் ஷு நவம்பர் 24-ம் தேதி, அபேதவாதக் கட்சி முஸொலீனியைக் கட்சியிலிருந்து விலக்கியது. அவ்வாறு விலக்கிய தீர்மானம் வருமாறு; ''பெனிட்டோ முஸொலீனி, 'போபோலோ டி' இத்தாலியா' என்ற பத்திரிகையைப் பிரசுரித்து, அதில் கட்சியின் தீர்மானங்களுக்கு எதிராக எழுவதின் மூலம் கட்சியின் ஒழுக்கத்தை மீறியதற்காக, அவனையும் அவன் சகாக்களையும் கட்சியினின்றும்இச்சபை நீக்குகிறது. அபேதவாதம் நீடூழி வாழ்க! யுத்தம் ஒழிக!''

''மறுநாள் 'போபோலோ டி' இத்தாலியா'வில் முஸொலீனி பின்வருமாறு எழுதுகிறான்:

''நான் பின்னர் என் வஞ்சத்தைத்தீர்த்துக்கொள்வேன். இன்று என்னை விரட்டியவர்கள் இன்னும் என்னை நேசிக்கிறார்கள். என்னைப் புரிந்துகொள்ளாததினால் அவர்கள் என்னை நசுக்கிவிட்டார்கள். 'முன்னோக்கிச் சென்ற வீரன் நீதான்!' என்று அவர்களும் என்னைப் பாராட்டும் காலம் வரும். அதுதான் எனது வஞ்சம் தீர்க்கும் காலம்; அதுவே எனது நீதி!''

பத்து நாட்களுக்குள் பேஸிஸ்ட் கட்சி ஸ்தாபிதமாயிற்று. அதன் நோக்கம், தீவிரவாதிகள், அபேதவாதிகள் அராஜகர்கள் முதலியோரிடையே தேசியக் கொள்கை

யைப் பரப்புவது! இரண்டு மாதங்களுக்குள் 9,000 அங்கத்தினர்கள் சேர்க்கப்பட்டனர். மத்தியக் கட்சிகள் நடுநிலைமைக் கொள்கையை ஆதரித்த காரணம் என்னவெனில் அக்கட்சியைச் சேர்ந்தவர்களில் பலர் அந்நாட்டு ஆஸ்திரிய ஜெர்மன் மக்களோடு வர்த்தக சம்பந்தம் வைத்துக்கொண்டிருந்தார்கள். இந்த நிலையில் முஸொலீனி பின்வருமாறு தன் புதிய பத்திரிகையில் எழுதுகிறான்: நடுநிலைமைக் கொள்கை நீடிக்கப்பட்டால் இத்தாலி நாளைத் தலை குனிந்து நிற்கவேண்டியிருக்கும். அதன் சுயாட்சியை இழக்கும்; வருங்காலத்தின் மீதுள்ள நம்பிக்கையை இழக்கும். நம் சமுதாயத்திலே, ஹோட்டல்காரர், நாட்டிய வாத்தியார்கள், பூட்ஸ் துடைப்பவர் ஆகியோர்களே இத்தாலியின் பிரதிநிதிகளாக இருப்பார்கள்! உலகம் நம்மை கேலி செய்யும், மதிக்காது! போர் செய்யாமலே நாட்டை இழப்போம்! இழக்கு முன்னே செத்துக் கிடப்போம்!''

1915-ம் ௵ மே மாதம் பிரதம மந்திரி சலாந்த்ரா, வியன்னாவுக்கு யுத்த எச்சரிக்கை விடுத்தார். 'போபொலோ டி' இத்தாலியா' சர்க்காரின் தீர்மானத்தைப் பின்வருமாறு வரவேற்கிறது: ''இன்று முதல் நமது தேசம் யுத்தத்தில் ஆயுதம் தாங்கிவிட்டது. இன்று முதல் நாம் எல்லோரும் இத்தாலியரே! இனி இரும்பு இரும்பைத் தாக்கும். ஆயிரம் ஆயிரம் குரல்களில் 'வாழ்க இத்தாலியா! இத்தாலியா வாழ்க!' என்ற கோஷம் பறக்கும். இதற்கு முன், நாம், நமது தந்தையர் நாடு என்று ஒன்று இருக்கிறது என்பதை, இவ்வளவு ஆவேசத்துடன், உணர்ந்ததே கிடையாது. இவ்வுணர்ச்சி இயற்கை என்பதையும் நினைத்தது கிடையாது. இன்று இத்தாலி அதன் புராதனப் பெருமைகளுக்கேற்ப யுத்த சன்னத்தமாகிவிட்டது. அந்தப் பலம் நம் நரம்புகளிலே ஓடுகிறது.

''இத்தாலி அன்னையே! எங்கள் வாழ்க்கைகளை உனக்கு அர்ப்பணம் செய்கிறோம். பயமற்று, வருத்தமற்று, எங்கள் வாழ்வையும் சாவையும் உனது காலடியில் வைத்து வணங்குகிறோம்!"

---

## 9. கார்ப்பொரல்* பெனிட்டோ

''அபாஸோ லா' ஆஸ்திரியா
ஏ லா ஜெர்மானியா
கான் லா துர்ச்சியா
இன் கம்பாக்னியா!''

அணி அணியாக வாலிபர்கள் ஆயுதம் தாங்கி மேற் கூறிய பாட்டைப் பாடிக்கொண்டு யுத்த முனைக்குச் செல்லு கிறார்கள். தொண்டர் படையில் வாலிபர்கள், உழைப்பாளி கள், சர்வ கலாசாலை மாணவர்கள், கடைக் குமாஸ்தாக்கள் முஸொலீனியின் பிரசார மோகத்தில் அடிபட்டு, பீரங்கி வாயின் உணவுகளாகச் செல்லுகின்றனர். 'லெப்ட்—ரைட்—லெப்ட்—ரைட்' இப்படி ராணுவ நடை போடுகிறார்கள்.

இரண்டு லட்சம் படைவீரர்கள்! அத்தனை பேரும் வாலிபாகள். யுத்த முனைக்குச் சென்றுவிட்டார்கள்! இத்தாலிய சர்க்கார் இதைப் பிரமாதமாகக் கருதவில்லை. 1916-ம் வருஷம் வரை அது அசட்டையாகவேயிருந்து வந்தது. காரணம், அதிகாரம் யாவும் அபேதவாதிகள் கையிலிருந்ததே. 'அவாந்தி'ப் பத்திரிகை கிண்டல் செய்கிறது: பிறருக்கு உபதேசம் செய்வதே தலைவருக்கு வழககம் போலும்!'' என்று கேட்கிறது.

---

*கார்ப்பொரல் ஒரு ராணுவ அதிகாரம்; ஸார்ஜண்டுக்கு அடுத்தபடியிலுள்ளது.

இந்த நிலையில் 'போபோலோ டி' இத்தாலியா' பத்திரிகையின் ஆசிரியர், யுத்த முனைக்குச் செல்வதற்காகத் தம் வாசகர்களிடையே பின்வருமாறு விடைபெற்றுக் கொள்ளுகிறார்:

''நண்பர்களே,

''நான் யுத்த முனைக்குச் செல்லுகிறேன். அந்நிய நாட்டார் குரோத எண்ணத்துடன் நமக்கு வகுத்திருக்கும் எல்லைகளைத் தாண்டி யுத்த முனைக்குச் செல்லுகிறேன்ப் நீங்கள் என் தோழர்களாக, என் வருகைக்காகக் காத்திருய பீர்கள். 1884-ம் வருஷம் பொது மக்களிடையே தோன்றிய உற்சாகம் இன்று உங்களிடையே காணப்படுவது கண்டு மகிழ்ச்சியடைகிறேன். பொது மக்களது மனம் உறுதியாகத் தான் இருக்கிறது. பீரங்கிப் புகை அருகில் நின்று சேவை செய்யும் எனது சகாக்களான படைவீரர்கள் யாவரும் எந்தத் தியாகத்திற்கும் தயாராகவே இருக்கிறார்கள் என்று நம்பு கிறேன். அவர்கள் பலசாலிகள். அவர்களை நம்பலாம்.''

''இத்தாலி நிச்சயமான வெற்றியை எதிர்நோக்கித் தன் படையை அனுப்பிவிட்டது. நிச்சயம், நிச்சயம்!

''நாம் போராடுவோம்! நீங்களும் அப்படியே! ஆயுதப் பரிகரணமே வேண்டாம் என்பதே எங்கள் மூல மந்திரம்.''

பெர்சாக்ளீரிப் படை: அதில்தான் முன்பு அவன் பயிற்சி பெற்றான். அதனுடன் சேர்ந்தே யுத்த முனைக்குச் சென்றான். கொஞ்ச நாள் விசேஷ வேலைகளுக்காகப் பல இடங்களுக்கு அனுப்பப்பட்ட பிறகு, நவம்பர் மாதம் யுத்த முனைக்குப் படை சென்றது. இனி, தன் சேவையைப் பற்றி முஸொலீனியே கூறியவற்றைக் கவனிப்போம்:

''முதலில் சில மாதங்கள் ஆல்ட்டோ இஸோன்ஸோ எல்லையில் சேவை. கணவாய்கள் வழியாகப் பலத்த சேதத்துடன் யாத்திரை. கார்னியா தளத்தில் கொஞ்சம் அமைதி. செப்டம்பர் 20-ம் தேதி—பனி இன்னும் விழுந்து

90,91 PAGE MISSING IN BOOK

லிருக்கிற சிமோனி. உறைபனி பஞ்சு போல மெதுவாக விழுந்து கொண்டிருக்கிறது. விடாமல் விழுந்து கொண் டிருக்கிறது. எலும்பைக் குடைகிறது குளிர். ஒருவருக்கும் நடக்க முடியவில்லை. அசைந்தால் எதிரிலிருக்கும் ஆஸ்திரியத் துப்பாக்கிகள் குண்டுகளைக் கக்க ஆரம்பித்து விடும். பக்கத்திலிருக்கும் மற்றொருவன் முனகுகிறான். லெப்டினன்டுக்கு இது பிடிக்கவில்லை. கப்சிப்! மறுபடியும் ஒருவன், பொறுக்க முடியாமல், 'மேலெல்லாம் விறைத்துப் போச்சே!' என்கிறான். இப்படிப் பதினான்கு மணி நேரம் நிற்க முடியுமா? என்னையும் சிமோனியையும் காப்டனிடம் அனுப்பினார்கள். காப்டனைப் பார்த்தோம். அவன் அமைதியாகச் சுருட்டுப் பிடித்துக் கொண்டிருக்கிறான். 'ஆறு மணி நேரம் மழையிலும், அப்புறம் நான்கு மணி நேரம் உறைபனியிலும் நின்று விட்டு, அதற்கப் புறமும் அங்கிருப்பதென்றால் படை நசித்துவிடும் என்று லெப்டினன்ட் சொல்லச் சொன்னார், ஸார்!' என்று அறிவித்தோம்.........

''டிஸம்பர் 25-ந் தேதி :— பின்னும் ஒரு மாதமாக மழை. இன்று கிறிஸ்மஸ். அதாவது யுத்தம் ஆரம்பித்து மூன்றாவது கிறிஸ்மஸ். கிறிஸ்மஸ் கார்டு எனக்கு, ஊர் நினைவுகளையெல்லாம், குழந்தைப் பருவ நினைவுகளை யெல்லாம், கொண்டு வந்திருக்கிறது. 25 வருஷத்திற்கு முன்னே... இராத்திரி பகல் என்றில்லாமல், குருவிக் கூண்டு களைப் பிய்த்துக் கொண்டு திரிந்தேன்... பிரார்த்தனை நடக்கிறது... கூப்பிடு தூரத்திலே எமன் நிற்கிறான்... விடியற்காலம் ரொம்பக் குளிர்தான். யுத்த சமயத்தில் கிறிஸ்மஸ் ஊர் நினைவைத்தான் கொண்டுவருகிறது. டிரெஞ்சுகளில் ஒரே மௌனம், நிசப்தம்......

''எனக்காக ஒருவன் ஒரு கோழிக் குஞ்சைப் பொரித்துக் கொண்டு துப்பாக்கிப் பிரயோகத் திடையில்

வருகிறான். அவன் 'போபோலோ' பத்திரிகையில் சிப்பந்தி... டிரெஞ்சுகளில் ராத்திரி என்றால் நரகந்தான்.

''1917 பிப்ரவரி 23-ந் தேதி—குண்டு மழை. குண்டுகள் வெடிப்பதே ஒரு தினுசு. சில, பாதி வழியில் உயர வரும் பொழுதே வெடிக்கும்; சில வந்து விழுந்ததும் வெடிக்கும்; மற்றும் சில விழுந்து சில நிமிஷ நேரம் கழித்து வெடிக்கும்; விழுந்தும் வெடிக்காதவற்றை எடுத்து மீண்டும் எதிரி பக்கமாக வீசிவிடுவதால் ஓரளவு அபாயத்தைக் குறைக்க முடியும். இந்த வேலை எனக்கு... பிற்பகல். மேலெல்லாம் வேர்க்கிறது. வீசி வீசிக் கை ஓய்கிறது. நாங்கள் குண்டு மாரி பொழிந்துகொண்டிருக்கிறோம். பீரங்கிக் குழாய் சூடேறிவிட்டது. இனி அதை உபயோகித்தால் அபாயம். இருந்தாலும் காப்டன் நெருக்குகிறான். 'ஸினோர் டெனன்ட், குழாய் ஓரிடத்தில் கீறிவிட்டது! நாம் நிறுத்திக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் அபாயம்!' என்றேன்.

''இன்னும் ஒரே ஒரு தடவை சார்ஜெண்ட்!'' என்கிறான் லெப்டினென்ட்.

''டபார்...!''

லெப்டினென்டும் பக்கத்தில் சூழ்ந்திருந்த சோல்ஜர்களும் காலும் கையும் இழந்து கிடக்கிறார்கள். குண்டு, வெளியேறுவதற்குப் பதிலாக, உள்ளிருந்தே வெடித்து விட்டது. முஸொலீனிக்கு நாற்பது இடங்களில் காயம். தூக்கி எறியப்பட்டான். டோபர்டோவில்தான் ராணுவத்தின் வைத்தியப் பகுதி; அவன் அங்கு எடுத்துச் செல்லப் படுகிறான்.

''மார்ச் 18 - காலை எட்டு மணி. உயர விமானம் பறக்கும் சப்தம் கேட்கிறது. ஆஸ்பத்திரிக்கருகில் ஒரு வெடி குண்டு விழுகிறது. அப்புறம் ஒன்று; பிறகு மூன்றாவது. பக்கத்திலிருந்த நர்ஸ் அமைதியாகத்தானிருக்கிறாள்.

'ஆஸ்பத்திரியின் மேல் பறக்கும் சிவப்புக் கொடியை அவர்கள் பார்க்கவில்லை போலிருக்கிறது!' என்கிறாள்.

''மற்றொன்று...... ஆபரேஷனும் சிகிச்சையும் நடந்து கொண்டுதானிருக்கின்றன. இன்னொரு வெடி குண்டு ரொம்பச் சமீபத்தில் விழுகிறது. வெள்ளையாகத் தூசி அறை பூராவும் நிரம்புகிறது. படுத்திருந்தவன் ஒருவனுக்குக் காயம். கட்டுப் போட்டுக்கொண்டு வரிசையாகப் படுத்துக் கிடந்தவர்களுக்குள் ஒரே பீதி. அவர்கள் ஒரேயடியாகக் கூப்பாடு போடுகின்றனர். பக்கத் தறையிலிருந்து காய மடைந்த வேறு சிலர் இங்கு கொண்டுவரப்படுகிறார்கள். டாக்டர் ஒருவர் உள்ளே வந்து எல்லோரையும் சமாதானப் படுத்த முயல்கிறார். வெடிகுண்டுகள் சரமாரியாக விழுந்து கொண்டிருக்கின்றன. பிறகு ஒரு பெரிய வெடிப்பு. நிசப்தம். டாக்டர் ஒருவர் உள்ளே வருகிறார், காயமடைந்தவர்கள் எல்லாரையும் வேறு இடத்திற்கு எடுத்துச் செல்லப் போவதாக அறிவிக்கிறார். நான் மட்டும் இங்கிருக்க வேண்டுமாம். என்னைத் தூக்கினால் அபாயமாம். டாக்டர் களும் நர்ஸ்களும் மட்டும் இருக்கிறார்கள். காயமடைந்தவர் களில், என்னைத் தவிர யாவரும் வேறிடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு விட்டனர். நிசப்தம்! இருட்டு!''

இத்தாலிய ராணுவம் எவ்வளவு கஷ்டத்திற்குள்ளா யிற்று என்பதை அறிந்துகொள்ள வேண்டுமானால் அது போர் தொடுத்த முனைகளைத் தெரிந்துகொள்ள வேண்டும். அந்த இடங்களில் ஏற்கனவே ஜெர்மன், ஆஸ்திரிய ஆதிக்கம் இருந்ததால் அவைகளுக்குச் சாதகமான இடமாகயிருந்தது. வடக்கே **வேநட்டோ** சமவெளி. அதன் வட பாகத்திலும் கீழ் மேல் பாகங்களிலும் மலைகள். **பயேவ், டாக்ளியா மெண்டோ, இஸோன்ஜோ** என்ற மூன்று நதிகள் தென் திசை நோக்கி ஓடுகின்றன. ஆல்ப்ஸ் மலைப் பிரதேசத்தின்

டிரன்டினோச் சரிவு யுத்த களத்தின் வடமேற்கு மதிலாக இருக்கிறது. சமவெளியின் கீழ் முனையில் செங்குத்தான கார்ஸோ பீடபூமி. யுத்தத்துக்கு முன் ஆஸ்திரியாவின் எல்லைப் புறம், சமவெளியின் கிழக்குப் பகுதியையும், வடக்கு, வடமேற்குப் பகுதிகளில் டிரண்டினோவையும் தன்னுள் அடக்கியிருந்தது. ஆஸ்திரியப் படை இத்தாலியப் பிரதேசத்தில் அணிவகுத்து முதலில் நிறுத்தப்பட்டாலும், யுத்தம் ஆரம்பித்தவுடன் கார்ஸோ, டிரன்டினோ கணவாய்களின் துர்க்கங்களில் நின்று கொண்டது. 1915 முதல் 1916 வரை கார்ஸோ முனையைக் கைப்பற்றி டிரான்டினோ வழியாக ஆஸ்திரியர் வராமல் தடுப்பதே இத்தாலியர் நோக்கம். இம் முயற்சி தவறினால், கிட்டியிலகப்பட்ட மாதிரி இரு புறமும் முன்னேறும் ஆஸ்திரியப் படைகளுக்குள் இத்தாலியப் படைகள் அகப்பட்டுக் கொள்ளும். 1917 அக்டோபர் வரை இக்கொத்தளங்களை இத்தாலியர் கைப்பற்றியிருந்தனர். ஆனால் கார்ப்பெரெட்டோ வழியாக ஆஸ்திரியர் முன்னேறிவிட இத்தாலியர் கார்ஸோவைக் கைவிட வேண்டியதாயிற்று.

இத்தாலியர், பின்னுக்கு வாங்கி, பயேவ் நதிக்கரையில் உறுதியாக நின்றனர். 1918-ம் வருஷம் அக்டோபர் மீ" விடோரியோ வினேடோவில் இத்தாலியருக்குப் பெரிய வெற்றி. அவர்கள் ஆஸ்திரியர்களை விரட்டி, கார்ஸோ எல்லையையும் பீட பூமியையும் கைப்பற்றினர். இதே சமயத்தில் ஆஸ்திரியர்கள் டிரன்டினோ வழியாக நாட்டுக்குள் பாய்ந்து விடாதபடி தடுத்துக்கொண்டிருக்க வேண்டியிருந்தது. யுத்தம் யாவும் ஆல்ப்ஸ் மலைப் பனிச் சிகரங்களில். 1916-ம் வருஷத்தில் இத்தாலியர் படை கோரீஸியா நகரம் வழியாக முன்னேறி, சான்மக்கேல் ஸவோடினோ சிகரங்களைக் கைப்பற்றியது. இப்பொழுது இச்சிகரங்களை பேஸிஸ்ட் சர்க்கார் புனித ஸ்தலமாக

எல்லை கோலியிருக்கிறார்கள். இவை சென்ற யுத்தத்தின் குருக்ஷேத்திரங்களாகப் போற்றப்பட்டு வருகின்றன. கடைசி முனையில் ஜெனரல் டயாஸ் சேனாதிபதி. ஜெனரல் தலைமையில் 51 டிவிஷன்கள் (தளங்கள்), 63 ஆஸ்திரிய-ஜெர்மன் தளங்களை எதிர்த்து விரட்டின. இதில் மூன்று லட்சம் பேர் சிறை செய்யப்பட்டனர். கடைசிப் போராட்டத்தில் இத்தாலியர் முப்பத்து மூவாயிரம் பேரை இழந்தனர்.

மொத்தம் 59,03,000 பேர் திரட்டப்பட்டனர். யுத்தம் முடியும் சமயத்தில் 19,87,000 இத்தாலிய ஸோல்ஜர்கள் போர் முனைகளில் நின்றனர். 6,80,000 ஸோல்ஜர்கள் களத்தில் மடிந்தனர். 10,50,000 ஸோல்ஜர்கள் காயமடைந்தார்கள்.

யுத்தத்திலே முஸொலீனியின் சகாக்கள் பலர் உயிரிழந்தனர். ஸிஸோர் பாட்டிஸ்ட்டி இத்தாலியின் சார்பாக ஆஸ்திரியாவுடன் போராட வந்துவிட்டான். அவனை ஆஸ்திரியர்கள் 1916-ம் வருஷம் மானிடே கிராப்பாவில் சிறைப் பிடித்தனர். ஆஸ்திரிய ராணுவக் கோர்ட்டு, 'ராணுவத்திலிருந்து தப்பி ஓடியதாக' அவன்மீது குற்றம் சாட்டி, அவனை ஒரு தூணில் கட்டிக் கழுத்தை நசுக்கிக் கொன்றது. தேசத்திற்காக உயிர் விட்ட தியாகிகளில் பாட்டிஸ்டியும் ஒருவனாகக் கௌரவிக்கப் பட்டு வருகிறான். மார்ட்டி நெட்டியும், காலிடோனியும் யுத்த முனையில் உயிரிழந்தார்கள். கவிஞன் டி' அனன்ஸியோவுக்கு ஒற்றைக் கண் போயிற்று.

காயமடைந்த முஸொலீனி முதல் ராணுவ முகாமுக்குக் கொண்டுவரப்பட்டான். அங்கு, இத்தாலிய மன்னன் விக்டர் இமானுவல், காயமடைந்த முஸொலீனியைப் பார்த்து, ''உம்மைப் பாராட்டுகிறேன், கார்ப்பொரல்!'' என்று கூறினார். பூரண சௌக்கியமடைந்த பின் கார்ப்பொரல் மறுபடியும் பத்திரிகை ஆசிரியனானான்.

★

## 10. விஸிட்டர் நாற்காலி; வெடிகுண்டு

முஸொலீனி மறுபடியும் பத்திரிகைப் பொறுப்பை வகிக்க வந்துவிட்டான். உடலில் காயம். ஊரில் ஒரு பக்கம் புகழ்; மறுபுறம் ஜன்மப் பகை. இத்தாலிய ராணுவம் போர்க்களத்தில் 50 மைல் பின்வாங்குவதற்குக் காரணமான ருஷியப் புரட்சி, நாட்டிலும் கொந்தளிப்பை ஏற்படுத்தி விட்டது. ருஷியப் பொதுவுடைமைக்காரர்களின் மாதிரியைப் பின்பற்றி, இத்தாலியத் தொழிலாளர்களும் பொதுவுடைமை வாதிகளும் உழைத்தனர். நாட்டின் நிலைமை இரண்டுங் கெட்டானாக இருந்தது. ஒரு புறத்தில் ஆள் திரட்டும் அபேதவாதம்; மறுபுறத்தில் அதே மாதிரித் தன் சார்பில் கட்சி சேர்க்க முயலும் முஸொலீனியும் தேசீயவாதிகளும்.

'போபோலோ' பத்திரிகாலயம் மிலான் சேரிகளில் ஒன்றில் இருந்தது. பத்திரிகாசிரியர் அறை சிறிய குகை என்றே சொல்லவேண்டும். அதிலே ஒட்டடையும் புகையும். சுவர்ப் பக்கத்திலிருக்கும் அலமாரிகளில், புஸ்தகங்களைவிட வெடிகுண்டுகள்தான் அதிகம். சிறிதளவு வெளிச்சங்கூட இல்லை. சில சமயங்களில் திடீரென்று வெடிகுண்டுகளைக் குளிர் காய்வதற்காக அருகில் வைக்கப்பட்டிருக்கும் கணப்பு அடுப்புக்குள் ஒளித்து வைக்கவேண்டியிருக்கும். ஒரு நாள் ஆபீஸ் பையன் அடுப்பைப் பற்ற வைக்கப் போகிறான். அங்குள்ள உப ஆசிரியர்கள் பார்த்து விடுகிறார்கள். ''அடேடே, நிறுத்து" நெருப்பு ஒன்றும் பற்றவைக்க வேண்டாம்! உன் வேலையைப் பார்த்துக் கொண்டு வெளியே போ!'' என்று உத்தரவிடுகிறார்கள்.

முஸொலீனியின் மேஜையில் என்னதான் இருக்கும் என்று கிடையாது. விஸிட்டிங் கார்டு, கடிதங்கள், கடுதாசிகள், அரைகுறையாக எழுதின கட்டுரைகள், குத்தீட்டி, இரண்டு ரிவால்வர், ஹீன்ஸ் கவிதைகள்-எல்லாம் தலைமாறிக் கிடக்கும். இதல்லாமல் மேஜையின் மேல் எப்போதும் ஒரு 'கப்'பால் இருந்துகொண்டேயிருக்கும். அதுதான் அவனது சிற்றுண்டி. சுவரில் அர்தித்தி துவஜம்; அதாவது மூஸொலீனியின் பேஸிஸ்ட் படைவீரர்களின் கொடி. முஸொலீனி விமான ஏற்றம் பழகுகையில் போட்டுக் கொண்டிருந்த மஞ்சள் தோல்சட்டை ஒரு மூலையில் தொங்கும். தரையில் என்ன பத்திரிகைதான் என்று கிடையாது; எது வேண்டுமானாலும் காணப்படும். மூலையிலே புது ரகமான அமெரிக்க வெடிகுண்டுகள். திடீரென்று எதிரிகள் வந்து தாக்கிவிட்டால் என்னசெய்வது? எதிரிகள் வேறு யாருமில்லை. 'அவாந்தி'ப் பத்திரிகை நிர்வாகிகளும் தொழிலாளிகளுந்தான். ஆசிரியர் அறையில் இன்னொரு ஒற்றைக் காலில்லா நாற்காலி உண்டு. அதற்குத்தான் விஸிட்டர் நாற்காலி என்று பெயர். அது ஆசிரியனின் மன நிலையைக் காட்டும் அளவு கோல் என்று சொல்லலாம். மனசு சரியாயிருந்தால், அது தாங்க முடியாமல் சுமந்துகொண்டிருக்கும் புஸ்தகங்களை ஒரு தள்ளுத் தள்ளிவிட்டு, அங்கு வருகிறவரை அதில் உட்காரச் சொல்லுவான். ஆனால், முக்கால்வாசி வருகிறவர்கள் எல்லாரும் கால் கடுக்க நின்றுதான் பேசிவிட்டுப் போவார்கள். வருகிறவர்களை நிற்கவைத்தால் வழவழ என்று பேசி நேரத்தை வீணாக்கமாட்டார்கள். அவர்களை ஜல்தியாக விரட்டிவிடலாம் அல்லவா! முஸொலீனி தேர்தலுக்கு நின்ற சமயத்தில் அந்த நாற்காலியையே அறையைவிட்டு எடுக்கவேண்டியதாயிற்று. கண்ட இடத்திலுள்ள கழிசடையெல்லாம் அபேட்சகர்களாக நின்று கொண்டு,

பத்திரிகாசிரியனின் உயிரை வாங்க வந்துவிடும். ஆசிரியன் அறைக்கு வெளியிலே நோட்டீஸ் ஒன்றைத் தொங்கப் போட்டான்.

''உள்ளே வருகிறவர்கள் என்னைக் கௌரவிக்கிறார் கள்; வராமலிருக்கிறவர்கள் எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறார்கள்.''

முஸோலீனி வேலை செய்கிற மாதிரியே ஒரு தினுசு. சோர்வு ஏற்படாமலிருப்பதற்காக, ஓய்வு எடுத்துக்கொள்வ தற்குப் பதிலாக வேலையை மாற்றிக்கொண்டிருப்பான். சில சமயங்களில் ஓய்வு எடுத்துக்கொள்வதற்காகக் கத்திச் சண்டையில் ஈடுபடுவான். அதில் அவனுக்கு அபார பிரேமை. சில சமயத்தில், குஷி பிறந்துவிட்டால், உதவி ஆசிரியர்கள் இருக்கும் அறைக்குள் வந்து, ஏதாவது ஒரு விஷயத்தைப் பற்றி விவாதம் தொடங்கிவிடுவான். ஆசிரி யர்களும், பக்கத்து வீட்டு மாடியிலிருக்கும் பெண்ணும், குழந்தையும், குட்டிகளுமே சபையினர். ஆசிரியர் அறையில் அவதூறு போஸ்ட்டர் என்று ஒன்றை ஒட்டிவைப்பர்கள். அதில் அவர்களுக்கு இஷ்டமானதையெல்லாம், வேடிக்கை யானதையெல்லாம், எழுதி வைப்பார்கள். இதை முஸோலீனிதான் ஆரம்பித்து வைத்தான்.

அவன் முதல் முதலாக, ''சிப்பந்திகள் வருமுன் போய் விடக்கூடாது. அல்லது—வந்த பின்தான் போகவேண்டும்!'' என்று எழுதி வைத்தான். அப்புறம் ச்காக்களைப் போல் கார்ட்டூன் போடுவது, கிண்டல் எழுதுவது-இப்படி இந்தப் பத்தி வளர ஆரம்பித்துவிட்டது. இடையிடையே ஆபீஸ் கவிராயர்கள் பாட்டுக்கூடப் பாட ஆரம்பித்துவிடுவார்கள்.

'அவாந்தி'ப் பத்திரிகை ஆபீஸ் அடிக்கடி இந்தப் பத்திக்குச் சமாசாரம் அதிகமாகத் திரட்டிக் கொடுக்கும். 1914 நவம்பர் 19-ம் தேதி அவன் அந்தப் பத்திரிகையை விட்டு விலகியதிலிருந்து, அது அவனுடைய பேரைக்கூட

எவ்விடத்திலும் பிரசுரிக்காது. 1919 நவம்பர் 18-ம் தேதி தேர்தல் முடிந்தது. அதில் பேஸிஸ்ட்களுக்குப் பெருத்த தோல்வி. இந்த அபேதவாதப் பத்திரிகை பின்வரும் செய்தி ஒன்றைப் பிரசுரித்தது.

''நேற்று நாவிக்ளோ என்ற விடத்தில் மிகவும் அழுகிப் போன பிரேதம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. அதை பெனிட்டோ முஸொலீனி என்று அடையாளம் கண்டு பிடித்துச் சொன்னார்கள்.''

அபேதவாதிகளும் தேசீயவாதிகளும் மோதிக்கொள்வது சகஜம். நாடு யார் கையில் சிக்கும் என்பதை நிச்சயிக்க முடியாதபடி அவ்வளவு சரி சமானமான போராட்டம்.

ஞாயிற்றுக்கிழமை, ஹங்கேரியில் பொதுவுடைமை இயக்கம் வெற்றி பெற்றதற்காகக் கொண்டாட்டம் நடை பெறுகிறது. அதிலே, மனங் கசிந்த மாஜி ஸோல்ஜர்கள், கால் கை ஊனமானவர்கள் ஊர்வலம். ''யுத்தத்தை ஒழியுங்கள்!'' என்ற கோஷம்! பாண்டு வாத்தியம் இண்டர் நாஷனல் கீதம் இசைக்கிறது. ஆர்ப்பாட்டம் நடத்துகிறவர் களும் பாட ஆரம்பித்து விடுகிறார்கள். ஊர்வலம், அணி வகுப்பு ஒன்றுமின்றி, வெறும் ஜனக்கும்பலாக, சிவப்புக் கொடியைப் பிடித்துக்கொண்டு ''ருஷியா நீடூழி வாழ்க! புரட்சி நீடூழி வாழ்க! ஹங்கேரி நீடூழி வாழ்க! சோவியத்துகள் நீடூழி வாழ்க!'' என்ற கோஷத்துடன் செல்கிறது. அறைகுறையான திரிசங்குச் செல்வம் படைத்தவர்கள் (நடுத்தர வகுப்பினர்) வீட்டுக் கதவை அடைத்துக்கொண்டு, கோபத்தில் பொங்கிக்கொண்டிருக் கிறார்கள். போலீஸையே காணவில்லையே! அந்தப் பயல்களெல்லாம் எங்கே போய்விட்டான்கள்? தெரு வெல்லாம் காலிப்பயல்கள் கூட்டமாயிருக்கே!'' என்று வைகிறார்கள். ஆனால், ஜனக் கும்பல் குஷியாகவே கூடுகிறது ''இந்தப் பூர்ஷுவாக்கள் வேலை செய்யப்

பழகட்டும்!'' என்று கொக்கரிக்கிறது. எல்லோரும் சிரிக்கிறார்கள். ஊர்வலத்தின் முன்னனியில் செராட்டி செல்கிறான்.

''ஹங்கேரிப் பொதுவுடைமை ஸ்தாபனம் வாழ்க!
புரட்சி நீடூழி வாழ்க!''

ஊர்வலம் முன்னேறிச் செல்கிறது. மாதாகோவில் முன்னே மைதானத்தில் கூடுகிறது. எங்கு பார்த்தாலும் சிவப்புக் கொடி.

இந்தக் கூட்டங்கள் சில சமயங்களில் தேசீய ஊர்வலங்களோடு மோதிக்கொள்ளும். இவைகளைக் காக்க பேஸிஸ்ட் படைகள் ஆங்காங்கு நிறுத்தப்பட்டிருக்கும். அதாவது சமயம் வாய்த்தால் நன்றாகப் பூசைக்காப்புக் கொடுக்க முஸொலீனியின் காலாடிகள் நிறுத்திவைக்கப் பட்டிருப்பார்கள். அபேதவாதிகளும் பூர்ண யோகியர்கள் அல்லர். வசமாக மாட்டிக்கொண்டால் முதுகைப் 'பிடித்து'த்தான் விடுவார்கள்.

யுத்தத்திலிருந்து இத்தாலி வெற்றியோடு விலகிக் கொண்டது. ஆனால் யுத்தத்தின் விளைவுகள், அதாவது பலன்கள் இன்னும் கிட்டவில்லை. இத்தாலியின் இரகசிய லண்டன் உடன்படிக்கை எதிர்பாராத காரணங்களால் பாதிக்கப்பட்டது: (1) அமெரிக்க ஐக்கியநாடுகள் யுத்தத்தில் கலந்துகொண்டது (2) தோல்வியடைந்த மத்திய வல்லரசுகளிலிருந்து தனித் தனியாகப் புதிய நாடுகள் பிறக்கப் போவது (3) கிரீஸின் திரிசங்கு நிலை (4) ருஷியாவில் ஜார் ஆட்சி கவிழ்ந்தது (5) துருக்கி சாம்ராஜ்யம் தோல்வியுற்று இனிப் பங்கிடப்படுவது. இந்தச் சங்கடங்கள் சமாதான உடன்படிக்கைப் பிரதி நிதிகளின் அபிப்பிராயங்களை மிகவும் பாதித்தன, அந்தச் சமாதான மகாநாட்டையே பாதித்தன என்று சொல்லலாம். இவை யாவும் இத்தாலியின் நன்மைக்குப் பாதகமாகயிருந்த காரணம் முஸொலீனி அங்கு பேஸிஸ்ட் இயக்கத்தை

ஆரம்பித்ததே. நேசக் கட்சியினர் அவனது இயக்கத்தை விரும்பவில்லை. மேற்கூறப்பட்ட நிலைமைகளின் விளைவாகப் பின்வரும் புதிய காரணங்களும் சேர்ந்து கொண்டன.

(1) அமெரிக்கப் பிரசிடெண்ட் வில்ஸனது சுயநிர்ணயக் கொள்கை என்ற லட்சிய வார்த்தை (பகட்டுவார்த்தை என்று வேண்டுமானாலும் சொல்லலாம்) ஐரோப்பிய ராஜதந்திர முறைகளில் புகுந்தது. மக்களிடையே சுதந்திரத்தை ஏற்படுத்துவதற்காக அமெரிக்கா யுத்தத்தில் இயங்கியதாம். இரகசிய ஒப்பந்தங்கள் நிராகரிக்கப் பட்டன.

(2) நேசக் கட்சிகளில் ஒன்றான செர்பியா தனி நாடாகலாம் என்ற ஆசை வைத்துக்கொண்டிருந்தது. 1915-ம் வருஷத்து ரகசிய ஒப்பந்தத்தால் ஏட்ரியாடிக் கடற்கரையை அடுத்த பிரதேசத்தில் அரசியல் நிலைமை எப்படி மாறக் கூடும் என்பதைத் தெரிந்துகொண்டது. 1917-ம் வருஷம் அந்த ரகசிய ஒப்பந்தத்தின் ஷரத்துக் களைக் குறைத்துவிட யூகோஸ்லேவியக் கமிட்டியுடன் செர்பிய சர்க்கார் ஜூலை மாதம் ஒரு உடன்படிக்கை செய்துகொண்டது. அதற்கு கார்பூ உடன்படிக்கை என்று பெயர். அந்த ஒப்பந்தத்தின் விளைவுதான் யூகோஸ்லேவியா. அதுதான் இனி ஹாப்ஸ்பர்க் ஆஸ்திரியாவுக்குப் பதிலாக ஸ்தானத்தை வகிக்கப் போகிறது. ரோமாபுரியில் இத்தாலிய, யூகோஸ்லேவியப் பிரதிநிதிகள் இன்னொரு இரகசிய ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். அதன்படி தேசீயக் கொள்கையின் அஸ்திவாரத்தின் மீதும், பொதுமக்களின் தீர்மானத்தின் மீதும், தேச எல்லைகளை வகுத்துக்கொள்வது என்பது ஷரத்து. கிரீஸின் திரிசங்கு நிலையும், ருஷிய முடியாட்சி வீழ்ச்சியும், துருக்கி ஏகாதிபத்தியத்தின் வீழ்ச்சியும், 1915-ம் வருஷத்து லண்டன் ஒப்பந்தத்தில் எதிர்பார்க்கப்

படவேயில்லை. ஜெர்மனியின் பூப்பிரதேசங்களைக் கைப் பற்றுவதே அதன் ஷரத்துக்களின் நோக்கம். பிரிட்டனும் பிரான்சும் 1916-வருஷம் துருக்கியை எப்படிப் பிடித்துக் கொள்வது என்ற ஒப்பந்தம் செய்துகொண்டன. இத்தாலி பங்கு கேட்டுப் புறப்படவே, 1917-ம் வருஷம் ஏப்ரலில் ஸெயின் டேமாரின் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. ஆசியர் மைனரில் உள்ள ஸ்மிர்னா, அடிரியா பிரதேசங் களை, ருஷியாவின் அபிப்பிராயத்தின் பேரில், இத்தா லிக்குக் கொடுப்பது என்பதுதான் ஒப்பந்தத்தின் சாராம்சம்.

## 11. ''பேஸிஸ் டி கம்பாட்டிமென்டோ''*

முஸொலீனி தன் யுத்த டயரியில் 1915-ம் வருஷம் அக்டோபர் மாதம், ''இங்கு களத்திலிருக்கிறவர்கள் எல்லோரும், 'என் ஊருக்குப் போகிறேன்!' என்று சொல்வ தில்லை, 'இத்தாலிக்குப் போகிறேன்!' என்றுதான் சொல்லுகிறார்கள்'' என்று குறித்து வைத்திருக்கிறான். இது கொழும்பு சிங்கப்பூர் சென்ற நம்மவர்கள் 'இந்தியாவுக்குப் போகிறேன்!' என்று சொல்லுகிற மாதிரி. சமாதானம் ஏற்பட்டதும் தேசத்தில் இந்த உணர்ச்சி குறைந்துவிட்டது. அபேதவாதிகள் கூக்குரல் எழுந்தது. ருஷியா, ஜெர்மனி, ஹங்கேரி முதலிய இடங்களின் தீவிரவாதிகளுக்கு ஏற்பட்ட வெற்றி இவர் களுக்கு அதிக நம்பிக்கையை உண்டுபண்ணியது. சர்க்காரும், அதன் யதார்த்த பலவீனத்தைக் காட்டியது; அசட்டையாகவும் இருந்தது.

*பேஸிஸத்தின் போர் திட்டம் (Fasci di Combattimento).

இத்தாலி யெங்கும் ஒரே கோஷம்! ''தொழிற்சாலைகளெல்லாம் தொழிலாளர்களுக்கே! நிலங்களெல்லாம் விவசாயிகளுக்கே!''

இத்தாலிய டெலிகேட்டுகள் பாரிஸ் சமாதான மகாநாட்டுக்குச் செல்லுமுன் மந்திரி சபையில் பிளவு ஏற்பட்டது. அபேதவாதிகள் அதைப் பூரணமாக உபயோகப்படுத்திக் கொண்டனர். பாங்கி நெருக்கடியின் விளைவு மாதிரி, நகரத்தில் எங்கும் ஒரே பீதி. மாஸ்கோ நகரத்திலிருந்து அபேதவாதிகளுக்கு உதவி வர ஆரம்பித்தது. இத்தாலிய அபேதவாதிகள் தைரியமாக வெளியில் இறங்கினர். எங்கு பார்த்தாலும் மாஜி ஸோல்ஜர்கள் பாடு ஆபத்து! அபேதவாத முத்தாய்ப்புகள் அவர்களுடைய நெற்றியி லில்லாவிட்டாலும் முதுகில் கொடுக்கப்பட்டன. 'ஸ்டிரைக்' மும்முரம் சொல்லி முடியாது; காட்டுத் தீ போல் தொழிற் சாலைக்குத் தொழிற்சாலை பரவியது. ''எல்லாம் நமக்குத் தாண்டா!'' என்று நினைக்க ஆரம்பித்துவிட்டனர் தொழிலாளர்கள் யாவரும். முதலாளிகள் அப்படி நினைக்க வில்லை. முஸொலீனி, அவன் பத்திரிகை, அணி வகுப்புச் சிதறிய ஸோல்ஜர்களின் கும்பல் எல்லாம் இருக்கும் பொழுது அவர்களுக்கு என்ன பயம்? பத்திரிகை உறுதியான ஸ்தாபனமாயிற்று. அதைச் சுற்றித் தேசீயவாதிகள், வருங்கால வாதிகள் (!), 'டி அனன்ஸியோ' கட்சியினர் யாவரும் ஒன்றாகக் கூடினர்.

1919-ம் வருஷம் இத்தாலிய யூனிடேரியன் அபேத வாதிகள் ருஷியத் தீவிரவாதிகளுடன் உடன்படிக்கை செய்து கொண்டனர். இத்தாலியப் பொதுவுடைமைக் கட்சி ஸ்தாபித மாயிற்று. மிலானில் 'சிவப்புத் தினம்' கொண்டாடினார்கள். அபேதவாத இலட்சியப்படி, தேசீயக் கொடி கிழித்து அவமதிக்கப்பட்டது. மாஜி ஸோல்ஜர்கள் வாய்க்கு வந்தபடி ஏசினார்கள். நெடுங்காலத் தவிப்புக்கப்புறம் கைப்பற்றப்பட்ட

தேச எல்லைகள் திருப்பிக் கொடுக்கப்படவேண்டும் என்று வற்புறுத்தப்பட்டது. இதன் எதிரொலி எல்லா நகரங்களிலும் கேட்கலாயிற்று.

மிலானில் ஸெப்போலெரோ மைதானம். 1919, மார்ச் 23-ம்தேதி பெனிட்டோ மூஸொலீனி தனது இருநூறு சகாக்களையும் கூட்டினான். 'பேஸிஸ் டி கம்பாட்டிமென்டோ' ஸ்தாபிக்கப்பட்டது. கட்சியின் சின்னம் ஈஸாப் கதையில் ஐக்கியத்தால் ஏற்படும் பலத்திற்கு உதாரணமாகக் குறிப்பிடப்பட்டிருக்கும் விறகு கட்டு. பெனிட்டோ பூர்வத்தில் எலிமென்டரி பாடசாலை உபாத்தியாயரல்லவா? விறகுக் கட்டுக் கதை கூட ஞாபகமில்லாமலா போகும்! மற்றும் கட்சியின் திட்டம் வருமாறு:

1. யுத்தத்தில் தலையிட விரும்பியவர்களையும், யுத்தத்தில் வெற்றி கொடுத்தவர்களையும் ஒன்று கூட்டிச் சமாதானத்திற்கு ஏற்பட்டுவரும் அபாயத்தைத் தொலைப்பது.

2. பேஸிஸ்ட் ஸ்தாபனங்களை நாடெங்கும் ஆரம்பித்தல். யுத்தத்தில் தலையிட விரும்பியோர் நடத்தும் மகாநாட்டிற்கு அவை பிரதிநிதிகளை அனுப்பும்.

3. அந்த மாநாடு, தேசத்தின் அடிப்படைப் பிரச்னைகளை ஆராயும்.

4. அந்த மாநாட்டின் விளைவாக ஓர் எதிர்ப்புக் கட்சி (பேஸிஸ்ட் கட்சி) ஆரம்பிக்கப்படும். அது இப்பொழுதுள்ள கட்சிகளின் கொள்கைகள், மனப்போக்குகள், நம்பிக்கைகள் சித்தாந்தங்கள், விருப்பு வெறுப்புக்கள் எல்லாவற்றையும் எதிர்க்கும்.

5. இந்த பேஸிஸ்டுகளின் ஸ்தாபனம் இத்தாலிய தேச மக்களின் ஸ்தாபனம் ஒன்றை ஆரம்பிக்கப் பூர்வாங்க முயற்சியாக இருக்கும். இதில் மாஜி ஸோல்ஜர்களை ஏராளமாகச் சேர்த்துக்கொள்ள வேண்டும். பழைய கட்சிகள் யாவும் செத்துவிட்டன; அவைகளைப் புதைப்பது கஷ்டமில்லை.

முடிவாக......

பிரச்னைகளை எழுப்புவது எங்கள் நோக்கமல்ல; அவற்றைத் தீர்த்து வைப்பதே எங்கள் வேலை.

இப் பிரச்னைகளைக் கிளர்ச்சி மூலம் முடிவுகட்டும் ஸ்தாபனம் எங்களுடையதுதான்.

கிளர்ச்சி மட்டிலும் போதாதென்றால் சந்தர்ப்பங்களும், சம்பவங்களும், எங்கள் விருப்பமும் முடிவு கட்டுகிற பிரகாரம் இப் பிரச்னைகளைத் தீர்த்துவைக்கும் ஸ்தாபனமாக இதை மாற்றுவோம்.

பேஸிஸ்ட் ஸ்தாபனம் நீடூழி வாழ்க!—சீக்கிரம் காரியத்திலிறங்கி விடுவோம்.

23, நவ. 1918 முஸொலீனி.

முஸொலீனி, முதன் முதலில் தொழிற்சாலைகளில் தன் வேலையை ஆரம்பித்தான். யுத்தம் நின்றதும், கலைக்கப் பட்ட படைவீரர்கள் ஏகமேனியாகத் தொழிற்சாலைகளில் நுழைந்திருந்தனர். இத்தாலியில் மூன்று விதமான தொழிலாளர் சங்கங்களுண்டு. 1 தொழிலாளர் சம்மேளனம்; 2. இத்தாலிய ஸின்டிக்கல் சங்கம்; 3. இத்தாலியத் தொழிலாளர் சங்கம். மூன்றாவது ஸ்தாபனம் யுத்தத்தில் தலையிடவேண்டுமென்று கிளர்ச்சி செய்தவர்கள் நிறைந்தது யுத்த காலத்தில் இருந்த அதன் தேசீய உணர்ச்சி பின்னர் ஏற்பட்ட ஏமாற்றத்தில் மறைந்தது. 1919-ம் வருஷத்தி லிருந்து ஸின்டிக்கல் தொழில் ஸ்தாபனங்கள் 'ஸ்டிரைக்' நடத்துவதில் முனைந்தன. அவற்றின் நோக்கங்கள் யாவும் அரசியல் விஷயங்களில் கலந்தவை. வேலை நேரப் பிரச்னைகள் யாவும் காற்றோடு பறந்தன. தொழிலாளர் சம்மேளனத்திலிருப்பவர்கள் யாவரும் மாஜி ஸின்டிக்கல்-வாதிகள். இவர்களும் மாஜி-ஸோல்ஜர்களும்தான் பூர்வத்தில் பேஸிஸத்திற்குப் பலம் கொடுத்தவர்கள். இந்த நிலையில் கீரைக்கடைக்கு எதிர்க்கடை போட்டார்கள் அபேதவாதிகள்.

1919 ஜனவரி மத்தி. லியோனிடா பிஸோலிட்டி தான் மந்திரி சபையைவிட்டு ராஜினாமாச் செய்த காரணத்தையும் யுத்தத்திற்கப்புறம் சர்க்கார் கைக்கொண்டிருக்கும் கொள்கையையும் விளக்க, மிலானில் 'ஸ்காலா' கொட்டகையில் பேசப் போகிறான். எங்கு பார்த்தாலும் ஒரே கும்பல். லியோனிடாவைத் தொடர்ந்து என்ன பேசுகிறான் என்பதைக் குறிப்பெடுக்க நிருபர்களும் வந்திருக்கிறார்கள். கூட்டத்தில் 'தால்மேஷியா வாழ்க!' 'சமாதானம், சமாதானம்! சமாதானம் நீடூழி வாழ்க!' என்ற கூக்குரல். கூட்டத்திற்கு வந்து திரண்ட பெண்களும் அதே பல்லவிகளைப் பாடுகிறார்கள்.

பின், சிறிது அமைதி. பிஸோலிட்டியும் அவனைச் சூழ்ந்து, யுத்தத்தில் காலும் கையும் போன, மெடல்களைத் தாங்கிய படை வீரர்களும், மேடைக்கு வருகிறார்கள். ஒருபுறம் ஆரவாரமான வரவேற்பு! மற்றொரு புறம் ஊளையும் உறுமலும்!

முஸொலீனியும் சகாக்களும், தடிக்கம்பு சகிதம் சண்டை போடுவதற்குத் தயாராக ஒரு பக்கத்தில் நிற்கிறார்கள். மண்டபத்திற்கு வெளியே தேசீயவாதிகள், மாஜி அர்தித்திப் படையினர்—யாவரும் கறுப்புக்கொடி தாங்கி, கூப்பாடு போட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

முஸொலீனி, ஒரு பெஞ்சியின்மீது ஏறிக்கொண்டு ''அவன் பேசக்கூடாது, அவன் பேசவே கூடாது!'' என்று கூப்பாடு போடுகிறான். ஏதோ ஒரு மாதிரியாகக் கூச்சல் ஓய்வதற்கு அரைமணி நேரமாயிற்று. அந்த அமைதியும் ஐந்து நிமிஷந்தான், பிஸோலிட்டி பேசுவதற்காக வாயைத் திறந்தான். உடனே இரைச்சல் ஆரம்பித்து விட்டது. அந்தக் கூப்பாட்டுக் கிடையே அவனது பேச்சும் அரை குறையாகக் கேட்டது; ''யுத்தம் இத்தாலியின் பலத்தைப்

பெருக்கியது; பியூம் இத்தாலிக்குச் சொந்தமென்பது நியாயந்தான்; ஆனால் தால்மேஷியாவை இத்தாலிய தேசம் என்று கருதுவது சரியல்ல. வடக்கு டைரால் பிரதேசத்தை இத்தாலி சேர்த்துக் கொள்வதும் விவேகம் என்று கருதமுடியாது''—என்றெல்லாம் அடுக்கிக் கொண்டு போனான். அப்புறம், அமெரிக்கப் பிரஸிடெண்டு வில்ஸனையும், அவரது லட்சியக் குழந்தையான. சர்வதேச சங்கத்தையும் வானமளாவப் புகழ ஆரம்பித்தான். ஆஸ்திரிய ஏகாதிபத்திய வரம்புக்குள் புதிதாக உருவெடுத்திருக்கும் தேசங்களுக்கு நியாயமும் நேர்மையும் வழங்கவேண்டு மென்ற தன் கொள்கையை விரிக்க ஆரம்பித்தான். உடனே கூப்பாடு எல்லை கடந்தது!

''அவன் தன்னை விற்றுக்கொண்டான்!''

''துரோகி, துரோகி!''

என்ற ஆரவாரம்! தேசீயவாதிகளும் முஸொலீனியின் சகாக்களும் மேடைமீது பாய்ந்துவிட்டனர். பிரசங்கியார் மேடையை விட்டு ஓடிப் போகவேண்டிய தாயிற்று. விளக்கு அணைந்தது. அடிதடி! இருட்டோடு இருட்டாக ஊர் வலங்கள்! யுத்த கீதங்கள்! வெளியே ஹோட்டல்களில் கலகக்காரர்களின் கூட்டங்கள்!

வில்ஸனை ரோமாபுரி வரவேற்கிறது! அதே தினத்தில் 'போபோலோ டி' இத்தாலியா'பத்திரிகையின் தலையங்கம் அதிதியைப் பின்வருமாறு வரவேற்றது :

''வீரர்களே, அஞ்சாதீர்கள்! அவசியமானால் நமது நகரத்துப் பையாஜாக்களிலும் தெருக்களிலும் டிரெஞ்சுகள் (பாசறைகள்) வெட்டி, உங்களைப் பாதுகாப்போம். நான்கு வருஷங்களாகப் போராடி உலகத்திற்கு வெற்றி தந்த மக்களுக்குப் போதகாசிரியர்கள் தேவையில்லை. கௌரவ போஷகர்களை அவர்கள் ஏற்க மாட்டார்கள். வேண்டு மானால் வில்ஸன் அமெரிக்காவுக்குப் பிரசங்கம்செய்யட்டும்! அங்கு அவரைச் சட்டை செய்கிறவர்கள் ஒருவரு

மில்லை. இங்கு வந்து அவருடைய கேவலமான மோசடி களை நம் ரத்தத்தில் ஏற்றவேண்டாம்!''

இந்தத்தலையங்கம் வெளிவந்த அன்றுதான் ரோமாபுரி வில்ஸனைக் கௌரவப் பிரஜையாக ஏற்றுக்கொண்டது! தேசீய அபேதவாத சித்தாந்தங்களை ஒட்டவைத்து நெட்டுருப்பண்ணிய அறியாத கிராமவாசிகளிடையே முஸொலீனியின் திட்டம் காட்டுத் தீ போல் பரந்தது. அவனுடைய அகண்டாகாரமான கனவின் வித்து இத்தாலிய நாட்டில் எப்படி முளைக்க ஆரம்பித்தது என்பதற்கு டஸ்கனி மாகாணத்திலுள்ள ஒரு பேஸிஸ்ட் 'சர்க்கா'ரின் அறிக்கையைக் கீழே குறிப்பிடுவோம்.

''பேஸிஸ்ட் இலட்சியம் யுத்தத்தில் மாண்டவர், காயமடைந்தவர் பேரால் பிறந்தது. நாங்கள் உழைப்பவர்களை எதிர்த்துப் போராடவில்லை. ஆனால், புனிதமான சிந்தனைகள் என்ற பெயரால், பொதுமக்களிடை வெறுப்பைச் சாகுபடி செய்பவர்கள் மீதே போர் தொடுத்திருக்கிறோம். மற்றவரைப் பிடுங்கித் தின்னும் பூர்ஷுவாக்களை எதிர்க்கிறோம். ஆனால் பொருளுற்பத்திக்கு ஆதாரமான பூர்ஷுவாக்களைப் பாதுகாப்போம். ஆட்சி எந்த விதமானதாயிருந்தாலும் பிடுங்கித் தின்பவர்கள்தான் அதிருப்தி வித்துக்கள்.

''தொழிலாளர் விஷயம், கைத்தொழில், போக்குவரவு, சுகாதாரம் இவற்றின் தேசீய நிபுணர் கௌன்ஸில் அமைக்க நாங்கள் விரும்புகிறோம். அவ்வத் தொழில்களில் ஈடுபட்டிருப்போர் பிரதிநிதிகள் யாவரையும், எஜமானர்கள் உள்பட, கூட்டி வைத்துச் சட்டம் அமைக்க அதிகாரம் கொடுக்க விரும்புகிறோம். யார் ஆளுகிறது என்பது தற்கால, வருங்காலத் தர்ம ஒழுக்க நியதிக்கும், பொருளாதார நலன்களுக்கும் கீழ்ப்பட்டது. அதாவது, சரித்திரத்தின் தொடர்பையும், யதார்த்த நிலைமையையும் உணர்ந்த தேசமக்களின் கூட்டுறவு இது. ஆகையால், நாங்கள் இதை ஆதரித்து தற்போது இருந்துவரும் அமைப்பை எதிர்க்கிறோம்.

''புதிய தேவைகளுக்கு ஏற்ப, முக்கியமாக வயதுமுதிர்ந்த தொழிலாளர், அல்லது விவசாயிகள், அல்லது வேலை செய்ய முடியாதவர்கள் முதலியோருக்கு வசதி செய்வதற்காகச் சமூக சட்டங்கள் ஏற்படுத்த விரும்புகிறோம்.

''மாஜி ஸோல்ஜர்கள், யுத்தத்தில் காயமடைந்தவர்கள் முதலியோருக்கு நாம் காட்டும் நன்றியறிதலுக்கு அறிகுறியாக அவர்கள் சங்கங்கள் யாவற்றையும் ஒன்றுபடுத்த விரும்புகிறோம்.

''மூலதனத்தின் மீது அதன் அளவிற்கேற்ப விகிதம் உயரும் வரித் திட்டம் ஒன்றை அமுலுக்குக் கொண்டுவர விரும்புகிறோம்.

''யுத்த ஆயுதக் குத்தகைகளையெல்லாம் மறுபடி பரிசீலனை செய்து, யுத்தத்தில் கிடைத்த லாபங்களைப் பகிர்ந்து கொடுக்க வேண்டும்.

''அந்நிய நாட்டு விவகாரங்களில் பின்வரும் விஷயங்களை நாங்கள் விரும்புகிறோம். வெர்ஸேல்ஸ் உடன்படிக்கை மீண்டும் பரிசீலனை செய்து மாற்றியமைக்கப்பட வேண்டும். அதாவது பெரிய துவேஷங்களையும், புதிய யுத்தங்களையும் ஏற்படுத்தக்கூடிய அதன் ஷரத்துக்களை மாற்ற வேண்டும். லண்டன் உடன்படிக்கை அமுலுக்குக் கொண்டுவரப்பட வேண்டும். பியூம் இத்தாலியோடு சேர்க்கப்பட வேண்டும். லண்டன் உடன்படிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள இத்தாலியின் நலன்கள் காப்பாற்றப்பட வேண்டும். இத்தாலி தேசத்தை மேற்கத்தி முதலாளித்துவ தேசங்களின் பிடிப்பிலிருந்து, நமது சர்வ தேசப் பொருளாதார உற்பத்திச் சக்திகளை வளர்ப்பதின் மூலம், படிப்படியாக விடுதலை செய்ய வேண்டும். நமது வடக்கு, கிழக்கு எல்லைகளை வற்புறுத்துவதன் மூலம், பகைத் தேசங்களான ஆஸ்திரியா, ஜெர்மனி, பல்கேரியா, துருக்கி, ஆகியவற்றை ஒரே சமமாக, ஏற்றத் தாழ்வில்லாமல், கௌரவமாக நடத்துதல்; சோவியத் தென் கிழக்கு ஐரோப்பிய சர்க்கார்களும் உள்பட கீழ்ப்பிரதேசத்து மக்களுடன் உறவை வளர்த்தல்; காலனி உரிமைகளையும்

தேசத்தின் தேவைகளையும் மீண்டும் வற்புறுத்துதல்—இவையே வேலைத் திட்டம்''.

தேசத்தின் பொருளாதார நிலைமையைச் சிறிது கவனித்தால் தேசத்தின் குழப்பத்திற்குக் காரணம் தெரியும். இத்தாலி யுத்தத்தில் ஈடுபட்டபொழுது வாட்டிகன் (ரோமாபுரி குருபீடம்) இடைவிடாது எதிர்த்தது. யுத்தத்தின் வசதியால் ஆரம்பித்த ஆயுதத் தொழிற்சாலைகள் ஏராளமான லாபத்தை யடைந்தன. ஆனால் அதைத் தொடர்ந்தாற்போல் 'ஸ்டிரைக்'குகளும் கலகங்களும் நடந்தன. யுத்தத்தினால் சர்க்கார் செலவு அதிகமாயிற்று. யுத்தம் முடிந்தும் செலவு குறையவில்லை. கைத்தொழில்களுக்கும், ஏழைகள் உணவிற்காகவும் ஏராளமான மானியம் கொடுக்க வேண்டி வந்தது. பொது மக்களின் செலவு, விலைவாசி உயர்ந்தமையால், அதிகரித்தது. அதன் விளைவாக எங்கும் தொழிலாளர் சச்சரவுகள். 1917-18—ம் வருஷத்தில் சர்க்கார் செலவில் ஒரு கோடியே ஐம்பது லட்சம் லையர் துண்டு விழுந்தது. பொது மக்கள் கஷ்டமும் குழப்பமான நிலைமைக்குச் சாதகமாகவே யிருந்தது.

முஸொலீனி அபேதவாதிகளுடன் போர் தொடுத்து விட்டான். அதற்கு 'போபோலோ டி' இத்தாலியா' பத்திரிகையின் பைண்டு வால்யூம்களே அத்தாட்சி!

1919 -ம்ஞு வசந்த காலத்தில் இத்தாலி முழுவதும் பொது 'ஸ்டிரைக்'. சர்க்கார் லெனினைக் கௌரவிக்கக் கூடாது என்று விடுத்த உத்தரவிற்குப் பொதுவுடைமை வாதிகள் அளித்த பதில்தான் நாடெங்கும் 'ஸ்டிரைக்கு'கள்! போலீஸார் பொதுவுடைமைவாதிகளைத் தாக்கினர். போலீஸ் கொடுமையை எதிர்த்தும் 'ஸ்டிரைக்கு'கள் வளர்ந்தன. மிலான், டூரின், பாரி, மெஸினா, ஜெனோவா, பைஸா, நேபிள்ஸ், பெருகியா முதலிய இடங்களில் கடைகள் சூறையாடப் பட்டன. பிஸன்ஸியோ பள்ளத்தாக்குக் கருகில், 1919-ம் வருஷம், ஜூலை மாதம் அபேதவாதக் குடியாட்சி ஸ்தாபிக்கப்பட்டது. இரத்தம்

சிந்திய பின், உணவுப் பொருள்களின் விலையை 50-ஃ குறைப்பதாகச் சொல்லிக் கிளர்ச்சிக்காரர்களைச் சமாதானப் படுத்தவேண்டியதாயிற்று. இது எங்காவது நீடித்திருக்க முடியுமா? இந்த ஏற்பாட்டை ரத்துச் செய்த தினால் மறுபடியும் கலகம். ஆகஸ்டு மாதம் அராஜகர்கள் வெடிகுண்டு வீச்சில் இறங்கினார்கள். பொதுவுடைமைப் பிரசாரம், யுத்தத்தில் பின்வாங்கிய துரோகிகளுக்கு மன்னிப்பு, இத்தாலிய ராணுவம் கலைக்கப்பட்டது,— இவையாவும் குழப்பத்திற்குப் பன்மடங்கு பலம் அளித்தன.

1919 ம் வருஷம், அக்டோபர் மாதம் முதலாவது பேஸிஸ்ட் காங்கிரஸ் பிளாரன்ஸில் கூடியது. தேசத்திலுள்ள பொதுவுடைமைப் பிரசாரத்தைத் தொலைத்து, மாஜி ஸோல்ஜர்களுக்கும், வெற்றி தந்த வீரர்களுக்கும் அவர்களது தியாகத்தை மதித்து உரிய ஸ்தானத்தை அளிப்பது என்பதுதான் முஸொலீனியின் தலைமைப் பிரசங்கத் திட்டம். காங்கிரஸுக்கு 45,000பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். பொதுவுடைமைவாதிகள் திட்டத்தைத் தாக்கினார்கள். காங்கிரஸ் ரிவால்வர் யுத்தத்தில் முடிந்தது.

காங்கிரஸ் நடைபெறும் சமயத்தில்தான் பொதுத் தேர்தல் ஆரம்பமாயிற்று. பேஸிஸ்டுகளும் தங்கள் திட்டத்தைச் செயலில் நடத்திக் காட்ட அபேட்சகர் பத்தொன்பது பேரை நிறுத்தினார்கள். முஸொலீனி பிரடாப்பியோ தொகுதியில் நின்றான் ஐயாயிரம் வோட்டுக் கூட அவனுக்குக் கிடைக்கவில்லை. மற்றப் பதினெட்டுப் பேரும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். பொதுவாக, அபேத வாதிகளுக்குத்தான் வெற்றி. மிலான் பேஸிஸ்டுகள் ஊர்வலமாகவந்து 'போபோலோ டி இத்தாலியா' பத்திரிகை நிலயத்தைத் தாக்கினார்கள். ஒரு வெடிகுண்டு வீசப்

போலீஸார் 30 பேஸிஸ்டுகளைக் கைது செய்தார்கள். முஸொலீனியும் கைது செய்யப்பட்டான். கைகளில் விலங்குகள் போடப்பட்டு, காவலில் வைக்கப்பட்டான். அபேதவாதிகள் தூண்டுதலில் பிரதம மந்திரி நிட்டி இந்த வேலை செய்ததாகப் பொது ஜனங்கள் ஆட்சேபித்தனர். 24 மணி நேரத்திற்கப்புறம் முஸொலீனி விடுதலை செய்யப் பட்டான். சட்டசபைக்குச் சென்ற அபேதவாதிகள் மன்னர் ஆட்சியை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்தார்கள். டிசம்பர் மீ" விக்டர் இமானுவல் பார்லிமெண்டைத் திறக்கச் சபைக்குள் பிரவேசித்த பொழுது, அவர்கள் யாவரும் ஒரேயடியாக வெளியேறினார்கள்.

அடுத்த வருஷமும் ஸ்டிரைக்-தொத்து வியாதி பற்றிக் கொண்டது. ரயில்வே, தபால் தொழிலாளர்கள், பொது சர்வீஸ்களிலிருக்கும் சிப்பந்திகள் யாவரும் 'ஸ்டிரைக்' செய்து நெருக்கடியை ஏற்படுத்தினார்கள். கராராவில் கல் உடைக்கும் தொழிலாளர், பெஸாராவில் அச்சுத் தொழி லாளர், வெரோனாவில் டிராம்வே தொழிலாளர், புரோனாவில் பாங்குச் சிப்பந்திகள், மிலான் போலா என்ற விடங்களில் இரும்புத் தொழிலாளர்—எங்கும், யாவரும் 'ஸ்டிரைக்' செய்தனர். இத்தாலியப் பொதுவுடைமைக் கட்சி, அதன் தேசீயக் கௌன்ஸில் கூட்டத்தின் போது, ஸோவியத் அமைப்பைப் போல் கட்சியை மாற்றவேண்டு மென்று தீர்மானித்தது.

மிலான், அரிஸோ, அங்கோனா முதலிய இடங்களில் ரயில்வே பாதைகளில் வெடிகுண்டுகள் வைக்கப்பட்டன. பேஸிஸ்டுகள் கிரிமோனாவில் 'சிவப்பு' ஊர்வலத்தைக் கலைத்தார்கள். பிளாரன்ஸில் அவர்கள் தோற்கடிக்கப் பட்டார்கள். நிட்டி (பிரதம மந்திரி)யின் சர்க்கார், ஒழுக்கத்தையும் அமைதியையும் நிலைநாட்டத் தவறியது.

ஆனால், பழியெல்லாம் பேஸிஸ்டுகள்மீது! சர்க்காரின் விசித்திரப் போக்கே போக்கு! 'ஸ்டிரைக்'கின்போது, மிலான் பகுதியில் பேஸிஸ்ட் தொழிலாளர்கள் வேலையை விட்டு விலகாமலிருந்தது ஒரு குற்றமாம். பைஸா நகரத்தில் பொதுவுடைமைவாதிகளே நியாயத்தின் காப்பாளர்களாக நின்று, வேலையை விட்டு நீங்காதவர்களைச் சுட்டுக் கொன்றனர் பிப்ரவரி மீ 'ஸ்டிரைக்'குகள் வளர்ந்தனவே யொழியக் குறையவில்லை. ரசாயனத் தொழிற்சாலையில் வேலை செய்த இரண்டு லட்சம் தொழிலாளர்கள் 'ஸ்டிரைக்' செய்தனர். மார்ச் மாதம் பொது ஸ்தாபன சிப்பந்திகள் வேலைக்குச் செல்லவில்லை. பீட்மண்டிலும், நேபிள்ஸிலும் பொதுவுடைமைவாதிகள் தொழிற்சாலைகளைக் கைப் பற்றினர். நிட்டி சர்க்கார் குப்புறக் கவிழ்ந்தது; மறுபடியும் அதைத் தூக்கி நிறுத்தவேண்டியதாயிற்று! சர்க்கார் இலாகாவில் ஒவ்வொரு இனத்திலும் துண்டு விழுந்தது. மிலான் மேயர் அபேதவாதி; அப்படியிருந்தும் அவர் தேசீயக் கொடியை உயர்த்தியதால் அவருக்கு வேலை போயிற்று. இப்படியாக அபேதவாத வெறியாட்டம் எல்லை கடந்தது. முஸொலீனியின் கட்சியினரும் சாதுக்களல்லர். அவர்களும், அவர்களைப் போன்ற எதிர்ப்புக் கட்சியினரும் சர்க்காரின் வேலைகளைத் தாமே செய்ய ஆரம்பித்தார்கள். அதாவது, சொந்த ஹோதாவில் ஆயுதம் தாங்கிப் பொதுவுடைமை வாதிகளோடு சண்டையிட்டார்கள். இவ்வளவும் இத்தாலிய சர்க்காரின் பலவீனத்தையும், செத்தும் சாகாத அதன் தன்மையையுமே காண்பித்தது. தேசம் யார் கையில் சிக்குகிறதோ அவர்தான் இனிமேல் ராஜா!

1920, மே மாதம், நிட்டி, பிரதம மந்திரிப் பதவியை ராஜிநாமாச் செய்தார். ஜூன் மாதம் அவரது மந்திரி சபை குடி ஓடிப்போயிற்று. அப்பொழுது தேசீய வரவு செலவுத்

திட்டத்தில் 140 கோடி லையர் துண்டு விழுந்தது. பேஸிஸ்டுகள் நிட்டியை எதிர்த்துத் தேசமெங்கும் போராடினார்கள். நிட்டியின் போலீஸ் படை, நிராயுதபாணிகளான மாணவர்கள் தேசீய கீதம் பாடிய குற்றத்திற்காக, அவர்களைச் சுட்டது.

1919-ம் வருஷம் 'ஆம்ஸ்டர்டாம் இண்டர் நேஷனல்' ஓர் அகில ஐரோப்பிய 'ஸ்டிரைக்' நடத்தித் தொழிலாளர் யாவரும் ருஷியாவை ஆதரிப்பதைக் காட்டிக் கொள்ள விரும்பியது. பிரிட்டிஷ் தொழிலாளர் அதற்கு இணங்கவில்லை. பிரெஞ்சுக்காரர் ஓர் அரைகுறை 'ஸ்டிரைக்' நடத்தினர். ஆனால், அந்த வேலை நிறுத்தத்தில் தலை குப்புறக் குதித்தது இத்தாலி தேசமே! இத்தாலியத் தொழிலாளர்கள், தங்கள் ஐக்கியத்தை நிரூபித்து, தேசத்தைப் படுகுழியில் ஆழ்த்திவிட்டார்கள்.

இந்தக் குழப்பத்திலே இன்னொரு நபர் வந்து சேர்ந்தான். அவன்தான் 1915-ம் ஸூ விரட்டப்பட்ட கியோலிட்டி, இத்தாலியின் குணாகுணங்களுக்கு அவன் நல்ல பிரதிநிதி. அதன் பலவீனத்தையும் அதன் வார்த்தை மாறும் தன்மையையும் அவனும் ஒருங்கே பெற்றிருந்தான். 1920 ஸூ ஜுலை மாதம் மறுபடியும் அவன் அரசியலில் புகுந்தான். அவனுடைய வருகை குழப்ப நெருப்பிற்குப் பெட்ரோல் ஊற்றியது. கட்சியோடு கட்சியை முட்டவிட்டு, ஆட்சியைப் பலப்படுத்த அவன் முயன்றான். அபேதவாதிகளைத் தொலைக்க பேஸிஸ்டுகள் உதவியைக் கோரினான். சில சந்தர்ப்பங்களில் அவர்கள் உதவி கிடைத்தது; சில சந்தர்ப்பங்களில் உதவி மறுக்கப்பட்டது.

பேஸிஸ்டுகள் பலம் அதிகரித்தது. அபேதவாதிகள் மேலும் ஐக்கியப்பட்டு, நெருங்கி, அணிவகுத்துப் போராடத் தயாரானார்கள். காட்டுமிருகங்களின் தன்மையையும், மது

வுண்ட வெறியனின் குரூர உன்மத்தத்தையும் ஒருங்கே பெற்றது இந்த பேஸிஸ்ட்-அபேதவாதச் சண்டை. மிருகத் தன்மையும், குரூரமும், கொலை வெறியும் இத்தாலிய சமூக சரித்திரத்தின் பக்கங்களைக் கறைப்படுத்தின. வேனிற் காலம் முழுமையும் பெராராவும், பொலோனாவும் யுத்தப் பாசறைகளாகவே விளங்கின. இத்தாலிய தேசீயக் கொடி மண்ணில் புரண்டது; காலித்தனம் ஆரம்பித்தது! கடைகள், தொழிற்சாலைகள், துறைமுகங்கள், கிடங்குகள் எல்லாவற்றின் மீதும் வெடிகுண்டு வீச்சு! வேலை நிறுத்தங்கள் வேறு! தொழிலாளர்களுக்கு 70 லட்சம் லையர் நஷ்டம்; ஐந்து கோடி லையர் மதிப்புள்ள பொருள் உற்பத்தி வீணாயிற்று!

—ஃ—

## 12. இத்தாலிய டெபுடி பெனிட்டோ

1920-ம் ஞு ஜனவரி மீ 10- தேதி வெர்ஸேல்ஸ் உடன்படிக்கை அமலுக்கு வந்தது. அன்று தான் சர்வ தேசப் பலவீனம் என்று சொல்லவேண்டிய,—ஆனால், அப்போது சர்வதேச நம்பிக்கை என்று கருதப்பட்ட,—சர்வதேச சங்கம் பிறந்தது. ஒரு புறம் உடன்படிக்கைகளும், அதனடியாகப் பிறந்த மூன்று கிளை உடன்படிக்கைகளும், ஐரோப்பிய தேச எல்லைகளை மாற்றியமைக்க வசதி செய்தன. மாஜிப் பகை வல்லரசுகளின் ஆயுத பலத்தை ஒன்றுமில்லாமலாக்கவும், அக்கரைக்காலனிகளின் ஸ்தானத்தையும் நிர்வாகத்தையும் மாற்றுவதற்கும் நஷ்ட ஈடு வசூலித்து, சர்வதேச சங்கத்தின் மூலம் கூட்டுப் பாதுகாப்பு முறையை அமுலுக்குக் கொண்டு வரவும் முயற்சிக்கப்பட்டது.

இத்தாலியப் பார்லிமெண்டு சபையில் 1921 ஜுன் 21ல தேர்தல், 33 தடியர்களைக் கொண்டுவந்து உட்கார

வைத்திருக்கிறது. அதன் தலைவன் பெனிட்டோ முஸோ லீனி. அப்போது அவனுக்கு 38-வயது. சாதாரணமாக அவன் சகாக்களுக்கும் அதே வயது தான். அவனுடைய கட்சிக்கு அடுத்தாற்போல், தேசீயக் கட்சியில் 17 பிரதிநிதி கள். இந்த 49 நபர்களுக்கு கியோலிட்டி தலைமையில் அணி வகுத்து உட்கார்ந்திருக்கும் 400 பிரதிநிதிகளையும் எதிர்த்து எப்போது சண்டை வரும் என்று உட்கார்ந்திருக்கின்றனர். மத்தியில் கியோலிட்டியும் அதனது பாபுலர் கட்சி சகாக் களும், அவர்களுக்கு அடுத்தாற் போல் அபேதவாதக் கட்சி; அதன் வாலான பொதுவுடைமைக் கட்சி அடங்கிச் சுருண்டு பேஸிஸ்டுகளுக்கு நேர் எதிராக உட்கார்ந்திருக்கிறது.

பிரதம மந்திரி கியோலிட்டி சர்க்கார் சார்பில் பேசி விட்டு உட்கார்ந்தார். சபையில் எல்லாப் பிரதிநிதிகளும் வந்திருந்தனர். கூட்டம் ஜாஸ்தி. புழுக்கமும் அதிகம். வெளியே கடுமையான வெய்யில். கியோலிட்டி உட்கார்ந் தது தான் தாமதம். பெனிட்டோ எழுந்து நிற்கிறான். பையில் கையைப் போட்டுக் கொண்டு சபையைச் சுற்றி உருட்டி விழிக்கிறான்;

''நான் பேசப்போவது ஜனநாயகத்திற்கு எதிரிடை யானது. அபேதவாதத்திற்கும் எதிரிடையானது. அபேத வாதத்திற்கு எதிரிடையாக இருப்பதால் கியோலிட்டி கொள்கைகளுக்கும் எதிரானது. பிரதம மந்திரி, ஆல்ப்ஸ் மலை நமது தேசத்தின் எல்லையாகிவிட்டது என்று கூறுவதன் அர்த்தம்தான் நமக்குப் புரியவில்லை. நான் நேரடியாக அங்கு சென்று ஆல்டோ அடிஜ் பிரச்னையை விசாரணை செய்ததில் அவ்வாறு இருப்பதாக நான் காண வில்லை. அங்கே இத்தாலிய இயக்கத்திற்கெதிராக டூஷர் வெர்பாண்ட் என்ற இயக்கம் மூனிக்கிலிருந்து நடத்தப்பட்டு வருகிறது. அது அன்றியாஸ் ஆபர்பண்ட் இயக்கத்தின் கிளையாகும். இந்தச் சங்கம் வெரோனா எல்லைவரை யுள்ள பிரதேசங்கள் தனக்குச் சொந்தம் என்று உரிமை

கொண்டாடி வருகின்றது. அங்கு நிறுத்தப்பட்ட இத்தாலியத் துருப்புக்கள் கலைக்கப்பட்டவுடன் அந்த நாட்டை இத்தாலி கைப்பற்றவேயில்லை என்று அங்குள்ளவர்கள் உரிமை ஸ்தாபிக்கிறார்கள், அங்கு நடைபெற்ற பெர்ல்ஸானோ பொருட்காட்சி விழாவில் இத்தாலிய பாஷையும் இத்தாலியக் கடைகளும் பகிஷ்கரிக்கப்பட்டன. அகில ஜெர்மன் பிரசாரம் அங்கு எல்லையற்றுப் பரவுகிறது. மெரானோவில் இருந்த ஆஸ்திரிய மேயரை வேலையை விட்டுத் தள்ளக்கூடாது என்று அமுல் நடத்துகிறது. இத்தாலிய மன்னரையும் இத்தாலிய அரசியலமைப்பையும் கண்டபடி அவதூறு செய்து கேவலப்படுத்துகிறார்கள்; ஆல்டோ அடிஜ் வரை ஜெர்மனிக்குத் தான் சொந்தம் என்ற கொள்கையை ஸ்தாபிப்பதற்காக நான்கு ஜெர்மனிய பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கிறார்கள். இந்த ஜெர்மானிய ஸ்தாபனத்தை உடனே கலைக்கவேண்டும். அங்குள்ள ஜெர்மனிய உத்தியோகஸ்தரை உடனே வேலையை விட்டு நிறுத்த வேண்டும். பொதுநிர்வாக முறைகளில் இரட்டைப் பாஷை முறையை அமுலுக்குக் கொண்டு வரவேண்டும். இந்த நான்கு ஜெர்மன் பிரதிநிதிகளுக்கும் நான் ஒன்று சொல்லுகிறேன: எவ்வளவு கஷ்டம் நேரிட்டாலும் நாங்கள் பிரென்னர் எல்லையை விட்டுக் கொடுத்து விடமாட்டோம். இதை உங்கள் சகாக்களுக்குச் சொல்லுங்கள்.''

இந்த நேரடியான எதிர்ப்புப் பிரசங்கத்தைக் கேட்டதும் சர்க்கார் கட்சியும் கை தட்டியது. பிரதம மந்திரி கியோலிட்டி குறுக்கிட்டு, ''இதையெல்லாம் நாங்கள் முன்னமேதான் ஒப்புக்கொண்டிருக்கிறேமே!'' என்றார்.

''அட்ரியாடிக் கடற்கரை எல்லையில் பிரதம மந்திரி கியோலிட்டி யூகோஸ்லேவியாவிடம் உடன்படிக்கை செய்துகொண்டு, பியூம் நகரைத் தாக்கியதை அழுத்தமாகக் கண்டிக்கிறேன். வெர்ஸேல்ஸ் சமாதான உடன்படிக்கையின் ஷரத்துக்களை மாற்ற வேண்டியது அவசியம் என்பதை யாரும் மறுக்கவில்லை. பேஸிஸ்ட் கட்சி அமைக்கப்பட்ட

பொழுதே அதன் அவசியம் ஒப்புக்கொள்ளப்பட்டது. சமாதான உடன்படிக்கையும் அதன் கிளைகளும் உலகத்தின் எல்லாப் பகுதிகளிலும் அதிருப்தியைக் கொழுந்து விட்டெரியும்படி செய்துவிட்டன. இந்தச் சமயத்தில் நமது அந்நிய நாட்டுக் கொள்கைகளில் செய்யப்பட்டிருக்கும் மாறுதல்கள் பரிகசிப்புக்கு இடமாக இருக்கின்றன. மாண்டநீக்ரோவை சர்க்கார் ஸெர்பியாவின் கையில் பறி கொடுத்தது. பாலஸ்தீனத்தில் பிரிட்டிஷ் சர்க்கார் யூதர்களைக் குடியேற்றி வருவதைப் பார்த்துக் கொண்டிருக்கிறது. நான் இவ்வாறு சொல்லுவதிலிருந்து இத்தாலிய யூதர்களின் தியாகத்தை மறந்துவிட்டேன் என்று நினைக்கலாகாது. யுத்தத்திற்கு அவர்கள் செய்த சேவை மகத்தானது, தாராளமானது.''

அப்புறம் பொதுவுடைமைவாதிகளைக் கண்டித்துப் பின் வருமாறு பேச ஆரம்பித்தான்:

''வறுமை, துன்பம் இவற்றின் எல்லையில் முளைக்கிறது பொதுவுடைமைக் கொள்கை; சொத்தும் சுகமும் அழிந்து வரும் சமயத்தில் எல்லாவற்றையும் பொதுவாகப் பங்கிட்டுக் கொள்ளவேண்டுமென்ற ஆசை மனித இதயத்தில் பிறப்பது சர்வ சாதாரணம். அதுதான் பொதுவுடைமையின் முதல் அம்சம். அதாவது, விநியோக அம்சம்; அதற்கு அடுத்தபடியாகப் பொருள் உற்பத்தி; அது மிகவும் சிக்கலான பிரச்னை. விலாடிமிர் உலியனோவ் லெனின் என்ற பெயருக்கு ஆஜர் சொல்லும் நபர் இவ்விஷயங்களில் நிபுணர் என்று கூறப்பட்டாலும், பொருள் உற்பத்தியில் அவனே தடுமாறுகிறான். வெண்கலத்தையும் பளிங்குக் கல்லையும் நம்மிஷ்டம்போல் வளைத்துக் கொள்ளலாம். மனித இதயத்தை நம் இஷ்டப்படி செய்துகொள்வது அவ்வளவு எளிதல்ல.

''இத்தாலியப் பொதுவுடைமைவாதிகளாகிய உங்களில் பலர் எனது லட்சியக் குழந்தைகள். அந்தரங்க பாவத்தோடு உங்களை எனக்குத் தெரியும். இத்தாலியப் பொதுவுடைமைக் கொள்கையில் சிறிதளவு பெர்கஸனின் சித்தாந்தமும் பிளாங்கியின் தத்துவமும் கலந்து உங்களுக்குப்

புகட்டியவன் நான்தான். புதிய ஆத்மார்த்த சித்தாந்தங்களும் அவற்றின் கவிதா ரஸம் ததும்பிய உச்ச எல்லைகளும் சின்ன மூளைகளுக்குத் தாங்கமாட்டா. இந்தத் தத்துவங்கள் ருசியாக இருக்கலாம். ஆனால் இவற்றை ஜீரணிக்கும் சக்தி வேண்டும். இப்படி எனது நண்பர்கள்......அல்லது பகைவர்கள் ('பகைவர்கள், பகைவர்கள்' என்ற கூக்குரல்) அந்த மட்டுமாவது தெளிவாகிவிட்டதே, சரி! — இப்படி 25 வயதில் பெர்க்ஸனை விழுங்கிய பகைவர்கள் இன்னும் அவனை ஜீரணிக்கவில்லை. பொதுவுடைமைவாதிகள் பொது மக்களின் சர்வாதிகாரத்தைப் பற்றியோ அல்லது அதைப் போல் அசட்டுத்தனமான குடியாட்சித் தத்துவத்தைப் பற்றியோ கதைத்துக்கொண்டிருக்கும்வரை நம்மிடையில் போராட்டத்தைத் தவிர வேறு ஒன்றையும் காண முடியாது. இரண்டு வர்க்கங்கள் இருக்கின்றன வென்பதை நாங்கள் நிராகரிக்கிறோம். ஏனென்றால் வர்க்கங்கள் இரண்டு மட்டுமல்ல. எத்தனையோ! பொருளாதார சாஸ்திரத்தின் மூலம் மனித சரித்திரம் முழுவதையும் வியாக்கியாணம் செய்யலாம் என்பதை நிராகரிக்கிறோம். உங்கள் சர்வ தேசீயத் தன்மையையும் நிராகரிக்கிறோம். சர்வ தேசீயத் தன்மையை அநுபவத்திற்குக் கொண்டு வருவது ஒரு சிலருக்குத்தான் முடியும். அக்கொள்கையைப் போக வஸ்து என்றுதான் சொல்லவேண்டும். ஏனென்றால், பொதுமக்கள் அவர்கள் பிறந்த மண்ணோடு ஒட்டிக் கொண்டிருக்கிறார்கள். இனித்தான் முதலாளித்துவத்தின் உண்மைக் கதை ஆரம்பமாகிறது. ஏனென்றால், முதலாளித்துவம் மக்களை நசுக்கும் அமைப்புமட்டுமல்ல! மதிப்புக்களையும் தன்மைகளையும் தெரிந்தெடுத்து, படிப்படியாக அணிவகுத்து, தனி நபரின் பொறுப்புத் தன்மையை அபிவிருத்தி செய்வதே முதலாளித்துவம்.

''பிரதம மந்திரி கியோலிட்டி, ''சர்க்காரின் அதிகாரத்தை மறுபடியும் ஸ்தாபிக்க விரும்புகிறேன்' என்று சொல்லிக் கொள்வதில் பயனே கிடையாது. அந்த வேலை மிகவும் கடினமானது. ஏனென்றால், மூன்று அல்லது நான்கு சர்க்கார்கள் அதிகாரத்தை உபயோகிப்பதற்காகக் காத்துக்கொண்டிருக்கின்றன. சர்க்காரைப்

பாதுகாப்பதற்கு ரண சிகிச்சை அவசியம். பேஸிஸ்டுகள் ஹிம்சை முறை கொண்டிருப்பதாகக் குறை கூறப்படுகிறது. இதர கட்சிகள் அம்முறையை விட்டுவிட்டால் நாங்களும் அப்படியே செய்யத் தயாராக இருக்கிறோம். இதர கட்சிகளுக்கு நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். சமாதானத்திற்காக உங்களது ஹிம்சை மனப்பான்மையை ஒழித்து விடுங்கள்!

''ஹிம்சை முறை நாங்கள் கடைப்பிடிக்கும் கொள்கையுமல்ல; எங்கள் அமைப்பு விதியின் முறையும் அல்ல; இன்னும் விளையாட்டிற்காக அதைக் கைக்கொள்ளவுமில்லை. அவசியம் அவ்வாறு எங்களைத் தூண்டுகிறது. இது நெருக்கடியான காலம். விசுவாசத்திற்கு விசுவாசமளிக்கத் தயாராக இருக்கிறோம். நாங்கள் ஆயுதங்களைக் கீழே வைக்குமுன், உங்கள் மனத்திலுள்ள குரோதத் தன்மையை அகற்றி வைத்துவிடுங்கள்!''

இந்தப் பிரசங்கம் இத்தாலியச் சட்ட சபையில் பெருத்த பரபரப்பை ஏற்படுத்தியது. அதன் தன்மை சட்ட சபையின் சம்பிரதாயத்திற்கே புறம்பானது. அது சட்ட சபைக் கட்சிகளையெல்லாம் மூக்கில் குத்தும் நேரடியான பிரசங்கம்.

தேசத்தின் பொருளாதார நிலை தலைகுப்புறக் கிடந்தது. யந்திர, ஆயுத உற்பத்தித் தொழிற்சாலைகளான இல்வா டிரஸ்ட், ஆன்ஸால்டோ டிரஸ்ட் என்ற இரண்டு பெரிய ஸ்தாபனங்கள் முறிந்தன. இவற்றின் வீழ்ச்சியோடு, இவற்றோடு தொடர்பு பெற்றிருந்த கப்பல் கம்பெனிகள், பத்திரிக்கைக் கம்பெனிகள் முதலியனவும் முறிந்துபோயின. இவற்றின் முடிவால் பாங்குகள் பலவற்றையும் மூட வேண்டியதாயிற்று. இத்தாலிய நாணயமான லைராவின் மதிப்பு தொடர்ச்சியாக விழுந்து கொண்டே யிருந்தது. இதுதான் தேசத்தின் நிலை.

—

## 13. கட்சி நாடு பிடிக்கிறது

பாரிஸ் உடன்படிக்கை மகாநாடு இத்தாலிக்குப் பெருத்த ஏமாற்றத்தை யளித்தது. விட்டோரியோ வினோடோ யுத்தகளத்தில் வான் நோக்கி உயர்ந்த வெற்றி, சிறகிழந்து தரையில் விழுந்தது என்று சொல்ல வேண்டும்.

மத்திய வல்லரசுகளின் தோல்விக்குத் தன் வெற்றியே காரணம் என்று தெரிந்துகொண்ட இத்தாலீ, 1915-ம் வருஷத்து லண்டன் உடன்படிக்கை ஷரத்துக்களை நிறை வேற்றவேண்டுமென்று, அதாவது, தன் பங்கை மடியில் போட்டுவிடவேண்டுமென்று கும்மாள மடித்துக்கொண்டு நின்றது. யுத்தங்களை நிறுத்துவதற்காகக் கப்பலேறி வந்த அவதார புருஷர் என்று கருதப்பட்ட வில்ஸன், வெற்றி வாகை சூடியவர்களுக்குத் தெவிட்டும்வரை நாடு களைப் பங்கு போட்டுக் கொடுத்து, தோற்றவர்களைத் தோல்வி என்ற நிரந்தரமான படுகுழியில் ஆழ்த்திவிடுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. இத்தாலியைப் பொறுத்த வரை ஏமாற்றம் சீக்கிரத்தில் ஏற்பட்டது. வில்ஸனின் கௌரவம், ஏழு நாள் உபசாரமாக, எல்லை கடந்த வசை மாரியில் போய்ச் சேர்ந்தது. காரணம், அவர் லண்டன் உடன்படிக்கையை ஏற்றுக்கொள்ளவில்லை. அமெரிக்கா நேசக் கட்சியினர் சார்பில் யுத்தத்தில் இறங்கியபோது இந்த ஷரத்துக்கள் உத்தியோக முறையில் அறிவிக்கப்பட வில்லை என்பது அவர் கட்சி. இம்மாதிரியாக ஓர் உடன்படிக்கை இருக்கிற தென்பதே பிரிட்டிஷ் பொது மக்களுக்குத் தெரியாது. வில்ஸன் இதை எதிர்த்தார். ருஷியப் புரட்சிக்காரர்கள் இதை நிராகரித்

தார்கள், பிரிட்டிஷ், பிரெஞ்சு ராஜதந்திரிகள் 'முன்பு ஒப்புக்கொண்ட' கொள்கைகளை ஏற்றுக்கொள்வதன் அவசியத்தை மட்டிலும் ஏற்றுக்கொண்டார்கள்.

பாரிஸில் இத்தாலிய சமாதானப் பிரதிநிதிகள் நால்வருடன் (நான்கு வல்லரசுகளுடன்) சேர்ந்து சமாதான ஷரத்துக்களை வாசித்துக் கொண்டிருக்கும்போது இத்தாலியர் குழப்பம் எல்லை கடந்து நின்றது. நேசக் கட்சியினர் இத்தாலியப் பிரச்னைகளைப் பற்றி நீளநீளமாக விவாதித்தார்கள். வில்ஸன் முனகினார். லாயிட் ஜார்ஜ் சந்தர்ப்பத்தை உபயோகித்தார். கிளமென்கியோ உறுமினார். அர்லாண்டோ (இத்தாலியப் பிரதிநிதி) ஆட்சேபித்தார்; அழுதார். அவ்வளவுதான் மிச்சம். வில்ஸன் ஒவ்வொரு நாடும் தன் கதியை ஸ்வயமாக நிர்ணயித்துக் கொள்ள வேண்டுமென்று உபதேசித்த கொள்கையையே அட்ரியாடிக் கடற்கரைத் துறைமுகமான பியூம் பிரச்னையில் இத்தாலியர் உபயோகித்தனர். பியூம்வாசிகளே சர்வஜன ஓட்டின் மூலம், தாங்கள் இத்தாலியுடன் சேர்ந்து இருக்க விரும்புகிறார்களா இல்லையாவென்பதை அறிவிக்கட்டும் என்றனர்.

இத்தாலியக் கோரிக்கைகள் வருமாறு:

(1) 1915-ம்ஹு லண்டன் உடன்படிக்கைப் பிரகாரம் மனிதன் உழைப்பால் பண்படாத பிரதேசங்கள் (2) ஜெர்மனி இழந்ததிலிருந்து நஷ்ட ஈடாகக் காலனிகள் (3) உப உடன்படிக்கை, அதாவது, ஸென்ட் ஜீன் உடன்படிக்கைப் பிரகாரம் துருக்கி இழந்த காலனிகளில் நஷ்ட ஈடு (4) யுத்தச் செலவு நஷ்ட ஈடு (5) வில்ஸன் விரும்பிய சுய நிர்ணயக் கொள்கைப்படி பியூம் சர்வஜன ஓட்டுரிமை.

இவற்றில் முதல் கோரிக்கைப் பிரகாரம், ஆல்ப்ஸ் மலைத்தொடரில் வடக்கே பிரன்னர் கணவாய் முதல் ஜூலியன் கணவாய், இஸ்திரியா தீபகற்பம் வரை உள்ள

பிரதேசத்தைப் பெற்றது. இரண்டாவது கோரிக்கைக்கு உத்தர ஜுபாலாந்தைக் கொடுப்பதாக இத்தாலிக்கு உறுதியளிக்கப்பட்டது. துருக்கியிடமிருந்து ஸமிர்னா இத்தாலியருக்குக் கொடுக்கப்படாமல் கிரீஸுக்கு அளிக்கப்பட்டது. இதன் விளைவாக ஏற்பட்ட கிரேக்க-துருக்கி யுத்தம் மீண்டும் கிரீஸுக்குக் கஷ்டத்தை விளைவித்தது. நஷ்ட ஈடாக ஜார்ஜியா பிரதேசத்தின்மீது இத்தாலிக்கு மாண்டேட் அதிகாரம் அளிக்கப்பட்டது. வடக்கு ஆப்பிரிக்காவில் சிரேநியாகாவுக்கும் எகிப்துக்கும் நடுவிலுள்ள எல்லையைச் சரிப்படுத்திக் கொடுப்பதாகப் பிரிட்டன் இத்தாலிக்கு உறுதியளித்தது. உறுதி 1925-ம்ஆு நிறைவேறியது. இதே மாதிரியாக பிரான்ஸும் டிரிபொலி டீனியா—டூனிசியா—சஹாரா எல்லைகளைச் சரிசெய்து கொடுப்பதாக வாக்களித்தது. இதில் ஒன்றும் பிரமாதமில்லை. இத்தாலி லிபிய எல்லையில் சாத் ஏரிக்கரைமீது கொண்டாடிய உரிமை நிராகரிக்கப்பட்டது.

யுத்த நஷ்ட ஈடாக இத்தாலியின் பங்கும் கிடைத்தது. பியூம் பிரச்னையில்தான் நல்ல லாபத்தோடு இத்தாலியர் காரியத்தை முடித்துக்கொண்டார்கள்.

பியூம் துறைமுகத்தைக் கைப்பற்றுவதற்காக இத்தாலியில் வெகு மும்முரமான தேசீயப் பிரசாரம் நடந்தது. 'போபோலோ டி' இத்தாலியா' பத்திரிகை பியூம் ஆக்ரமிப்புக்காகப் பண வசூல் செய்ய ஆரம்பித்தது. தேசீய ஸ்தாபனங்கள் ஆங்காங்கு முளைத்தன. இத்தாலிய சர்க்காரின் ஏகாதிபத்திய ஆசைகளெல்லாம், மேடைப் பிரசங்கத்தோடும், துணிவும் தெம்புமற்ற ராஜதந்திர சம்பாஷணைகளோடும் முடிவுபெற்றன. ஏனென்றால் சர்க்காரின் வாழ்வே தேர்தல் என்ற தற்காலிகப் பொதுஜன உற்சாகங்களின் போக்கைப் பொறுத்ததாக இருந்தது.

இத்தாலிய சர்க்கார் முதலில் சட்டத்தைத் தன்சார்பில் ஆக்கிக் கொள்வதற்காக, சமாதான உடன்படிக்கை, ரகசிய லண்டன் உடன்படிக்கை இவற்றின் ஷரத்துக்கள் பிரகாரம் ஆங்காங்கு முதலில் தன் படைகளை நிறுத்தினாலும், புதிதாக முளைத்த யூகோஸ்லேவிய அரசின் மனுப் பிரகாரம் இத்தாலிய ராணுவத்திற்குப் பதிலாக நேசக் கட்சியின் படைகள் அவ்விடங்களில் நிறுத்தப்பட்டன. இதன் விளைவாக முக்கியமாக பிமியில் பிரெஞ்சுத் துருப்புக்களும் இத்தாலியப் படைகளும் மோதிக் கொண்டன. நெருக்கடியான நிலை. 1919-ம் வருஷம் மே மாதம், வெர்ஸேல்ஸ் உடன்படிக்கை கையெழுத்திடப்படுவதற்கு ஒரு மாதத்திற்கு முன், முஸொலீனி பியூம் நகருக்கு வந்து டியாற்றோ வெர்டி என்ற இடத்தில் பின்வருமாறு பிரசங்கம் செய்தான்:

''இத்தாலி தனக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய தன்மைகளை இழப்பதற்குக் காரணமாக பிரான்ஸின் நம்பிக்கைத் துரோகத்தையும் வில்ஸனின் மோசமான தீர்க்க தரிசனத்தையும், ஆங்கிலோ-ஸாக்ஸன், கிரேக்க அரசுகளின் ஏகாதிபத்திய ஆசைகளையும் நான் கண்டிக்கிறேன். மத்தியதரைக் கடலிலிருந்து இந்த அந்நியர்களை விரட்ட வேண்டும். முதன் முதலில் இந்த இங்கிலீஷ்காரர்களை விரட்ட வேண்டும். இத்தாலியின் புராதனக் காலனியும், களஞ்சியமுமான எகிப்து தேசத்தின் கிளர்ச்சியை நாம் ஆதரிக்க வேண்டும். அத்தேசத்தில் இரண்டு லக்ஷம் இத்தாலியர்களிருக்கிறார்கள். மார்டாவில் உள்ள இத்தாலியர்கள் அதை இத்தாலியுடன் சேர்க்க வேண்டுமென்று இயக்கம் ஆரம்பித்திருக்கிறார்கள். பிரான்ஸைப் பொறுத்தவரை அது தன் மத்தியதரைக் கடல் ஏகாதிபத்தியத்தை, அதாவது காலனிகளை இழக்க வேண்டும். பியூமின் விதிதான் என்ன? அந்தப் பிரச்னை தீர்ந்து விட்டது. இத்தாலி நிமிர்ந்து நின்ற மாதிரி பியூமும் தன் பிரச்னைகளைத் தானே தீர்த்துக்கொள்ள வேண்டும்.

இத்தாலிய மக்களின் புனிதமான அங்கீகாரத்தின் முன் பாரிஹில் ராஜதந்திரம் பேசிக்கொண்டிருக்கும் நான்கு கிழட்டு முட்டாள்களின் தீர்ப்புக்கள் எதிர்த்து நிற்க முடியுமா?

''அன்று 1915ம்-ஆல இத்தாலி 'யுத்தம் அல்லது குடியாட்சி!' என்ற கோஷத்துடன் போருக்கு இறங்கியது. இன்று 'பியூம் அல்லது மரணம்!' என்று தேசம் கோஷிக்கிறது.''

இப்பிரசங்கம் அங்குள்ள தேசீயவாதிகளுக்கு உன்மத்த மூட்டியது. அன்று மாலை நகரத்தைக் கைப்பற்று வதற்காகத் தொண்டர் படை திரட்டப்பட்டது. இந்தப் படைகளுக்குப் பயிற்சி யளித்தது, சட்டப்பிரகாரம் ஏற்கனவே இத்தாலிய சர்க்கார் நிறுவியிருந்த ராணுவம் நேசக்கட்சித் துருப்புக்கள் இவற்றின் நிலைமையைத் திரிசங்கு சொர்க்கமாக்கியது. தறிகெட்டு ஓடும் இத்தாலிய சமூகத்தில் 'பியூம் அல்லது மரணம்!' என்ற ஒரே கூக்குரல்.

இத்தாலிய பாரதி என்று சொல்லத்தக்க தேசீய வீரக் கவிஞன் கபிரியேல் டி அனன்ஸியோ புகழின் முன்னணிக்கு வந்துவிட்டான். கபிரியேல் பூர்வத்தில் இத்தாலியின் தேசீய இயக்கத்தில் பங்கெடுத்துக்கொண்டு, போர் முனைகளில் வீரங்காட்டியவன். மின் வெட்டுப் போன்ற பேச்சும் கவியும் அவனை இயற்கையாக இந்த அசாதாரண முயற்சிக்குத் தலைமை ஸ்தானத்தில் கொண்டுவந்து நிறுத்தின. அவன் ரோமிலிருந்து டோகியோவிற்கு விமானத்தில் பறந்து செல்ல எண்ணிக் கொண்டிருந்தான். இதில் தலைமை வகிப்பதற்காக அதை நிறுத்திக்கொண் டான். டிரிஸ்டி என்ற துறைமுகத்திற் கருகிலுள்ள ரோன்சியின் தன் சகாக்களை ஒரு படையாகத் திரட்டி னான். படை பெருக ஆரம்பித்தது. 'போபோலோ டி' இத்தாலியா'வின் பணமும் முஸொலீனியின் கறுப்புச் சட்டைத் தொண்டர்களும் படைக்குத் துணை.

அக்டோபர் மீ 9௳ பிளாரன்சில் நடந்த பேஸிஸ்ட் கூட்டத்தில் முஸொலீனி பியூம் பிரச்னையைப் பற்றி பின் வருமாறு பிரசங்கம் செய்தான்:

''உங்கள் முன் விஸ்தாரமாகப் பேசிக்கொண்டிருக்க எனக்கு நேரமில்லை. நான் இப்போது தான் பியூமிலிருந்து வந்தேன். அங்கு டி அனன்ஸியோவைச் சந்தித்துப் பேசினேன்.

''மகாஜனங்களே, உங்களைக் கடவுளர் என்று நான் புகழவரவில்லை. உங்கள் மீது அன்பு இருக்கத்தான் செய்கிறது. உங்கள் மனமும் உடலும் அழுக்கேறியிருக் கிறது. அதை நீங்கள் சுத்தம் செய்யவேண்டும். நீங்கள் அறிவிலிகள், அதனால் நான் சொல்வதைக்கேட்கவேண்டும். காய்ப்பு ஏறிய கைகள் வேலை செய்வதற்கு உபயோக மாகவிருக்கலாம். ஆனால் ராஜ்யத்தை நடத்த அவை மட்டுமிருந்தால், ஒருவனுக்குத் திறமை ஏற்பட்டுவிடாது. நீங்கள் 24 மணி நேரத்திற்குள் புரட்சி நடத்திவிடலாம். ஆனால் அதே நேரத்தில் ஒரு புதிய சமூகத்தை, அதாவது உலகக் கட்டுக்கோப்பிற்குள் அமைந்த தேசமக்களை, உங்களால் சிருஷ்டிக்கமுடியாது. ஆகையால் நீங்கள் எங்களைப் பூர்ஷுவாக்களின் காவலாட்கள் என்று தப்பித மாக நினைத்துக் கொள்ளக்கூடாது. இப்பொழுதுள்ள பூர்ஷுவாக்கள் யாவரும் மகா கேவலமானவர்கள். மோசடிக் காரர்கள். இவர்கள் தங்களைத் தாங்களேதான் காப்பாற் றிக் கொள்ளவேண்டும். நாங்கள் அவர்களைக் காப்பாற்றப் போவதில்லை.

''நாங்கள் தேசத்தைப் பாதுகாப்போம்; அதாவது, தேச மக்கள் யாவரையும் பாதுகாப்போம். மக்களின் லௌகிகப் பொருளாதார நலத்தையும், அவர் களுடைய ஒழுக்கத்தையும் வளர்க்க வேலை செய் வோம். இந்தக் கொள்கையை வைத்து இப்போது ஒற்றுமையற்றுத் தவிக்கும் மனிதக் கும்பலை ஒரு சக்தி வாய்ந்த தேசமாக்க முடியும் என்று நான் நம்புகிறேன்.''

1919-ம் ஆண்டு செப்டம்பர் மீ 12உ டி அனன்ஸியோ தன் படையுடன் சென்று நகரத்தைக் கைப்பற்றினான். அவனது படையில் நடுத்தர வகுப்புக் குடும்பங்களின் வாலிபப் பிரதிநிதிகள், தேசீய உணர்ச்சி 'பீடித்த' மாணவர்கள், வேலையில் அதிருப்தி கொண்ட குமாஸ்தாக்கள், வேலையில்லாமல் தவித்துக் கொண்டிருந்த பட்டினிப்பட்டாளம்—இத்தகைய கும்பல் உண்டு. கவிராயர் பந்தாவாக நகரத்திற்குள் பிரவேசித்தார். ஒரு சேசீயக் கௌன்சில் அமைக்கப்பட்டது. அமைப்பு விஸ்தாரம் யாவும் நாடகாலங்கார படாடோபங்களோடு! பொம்மை விளையாட்டுக்கு நிஜமான வெடிகுண்டுகளும் தோட்டாக்களும் உபயோகமானதுதான் விசித்திரம்! பியூம் நகருக்குத் தற்காலிக அரசியலமைப்பை வகுத்துக் கொடுத்த பிஅம்பிரிஸ் அன்று கட்சியிலிருந்து துரத்தப்பட்டு அந்நிய நாட்டில் தவியாய்த் தவித்து உயிர் விட்டான். 'போபோலோடி' இத்தாலியா'வில் வசூலான பணத்தையெல்லாம் இத் தொண்டர்படை அங்கத்தினர்கள் சாப்பிட்டு ஏப்பம் விட்டார்கள்.

நகரத்திற்குள் பிரவேசித்த காபிரியேல் தனது வசை மொழி நிபுணத்வத்தை விஸ்தாரமாகக் காண்பிக்க ஆரம்பித்தான். அவன் வெள்ளைக்காரருக்குத் தன் வசையில் தனி ஸ்தானம் கொடுத்திருக்கிறான். அது வருமாறு :

''இன்று பியூம் நகரை யாரும் தோற்கடிக்க முடியாது. அன்றும் அப்படித்தான்; இன்றும் அப்படியே. அதன் இடிந்த மதில்களின் கீழ் நாம் ஒருவேளைவிழுந்து சாகலாம். ஆனால் அந்தச் சிதைவிலிருந்து எழும் ஓர் அற்புதச் சக்தியின் பலத்திற்கு யாராலும் எல்லை வகுக்க முடியுமா? அயர்லாந்தின் ஸின்பீனர்கள் முதல்எகிப்தின் சிவப்புக்கொடி இயக்கத்தினர் வரை, நிராயுதபாணிகளான தேசங்களை நசுக்குபவர்களையும், பச்சை மாமிசத்தைத் தின்கிறவர்களையும் எதிர்த்துக் காட்டுத் தீ போல ஒரே புரட்சி ஓங்கி நிமிரும். பாரசீகத்தையும், மெஸபொடேமியாவையும், புதியஅரேபியாவையும், ஆப்பிரிக்காவில்பெரும் பகுதியையும்

விழுங்கி ஏப்பம் விட்டும், இன்னும் பசி ஓயாத ஏகாதிபத்திய விருப்பினால் தனது விமானக் கொலைகாரர்களை நம்மீது அனுப்பி, எகிப்தில் அன்று வெட்கமில்லாமல் கொன்று குவித்ததுபோல், நம்மையும் இன்று கொன்று குவிக்கட்டும்!''

இம்மாதிரியாகத் தனது வாக்குவன்மை என்ற வசையால் மக்களின் மனசைக் கவர்ச்சித்துக் கொண்டிருந்தான்.

இத்தாலியப் பிரதிநிதித்வ சட்டசபையில், இச்சம்பவத்தைப் பற்றிப் பிரதம மந்திரி ஸினோர் நிட்டி, ''முதல் முறையாக ராணுவத்தில் ராஜத்துவேஷம் ஆரம்பித்து விட்டது!'' என்று தமது நிர்வாக பலவீனத்தைக் கோடு போட்டுக் காண்பித்துக்கொண்டார்.

''இம் மாதிரிச் சம்பவங்கள்தான் நீர் பயந்து நடுங்கிக் கொண்டிருக்கும் போல்ஷிவிஸத்திற்குக் கதவைத் திறந்து கொடுக்கிறது!'' என்று எதிர்க்கட்சியில் இருந்த அபேதவாதி பிலிப்பினோ தூராட்டி ஒத்துப் பாடினான்.

பேஸிஸ்ட் கொள்கையைக் கிரியாம்சையில் பரிசோதித்தது இதுதான் முதல்தடவை. இதில் தான் முதல்முதலாக முதலாளி, நிலச்சுவான்தார் வகுப்புக்கள் பார்லிமெண்டுக்கு எதிராகப் போராட ஆரம்பித்தன.

இன்னும் பேஸிஸ்ட் கட்சியினுடைய சம்பிரதாயச் சின்னங்கள் யாவும் டி' அனன்ஸியோ வகுத்தவையே. அதாவது, அவன் தன் தொண்டர் படைக்குக் கொடுத்தவையெல்லாம் பேஸிஸ்ட் கட்சியின் சின்னங்களாயின. முஸொலீனியின் புயல்-படைகள் அதுவரை கறுப்புத் துணிகளைச் சிறு துண்டுகளாகக் கத்தரித்துக் காலரில் வைத்துக்கொண்டு வந்தன. ஒவ்வொரு தளத்திற்கும் ஒவ்வொரு விதமான வர்ணம் இடையில் இருக்கும். இவற்றிற்குக் கறுப்புக் கனல்கள் என்று பெயர். அர்தித்திப் படையில் மண்டையோட்டுச்

சின்னம் பேஸிஸ்ட் கட்சியின் சின்னமாயிற்று. அடுத்தபடியாகக் கழுத்தில் கறுப்புத் துண்டுகளைப் பட்டி மாதிரிக் கட்டிக் கொள்வது சம்பிரதாயமாயிற்று, முடிவாகக் கறுப்புத் துண்டு கறுப்புச் சட்டையாயிற்று. இதுதான் கறுப்புச் சட்டை (பேஸிஸ்ட் யுனிபாரம்) வளர்ந்த விதம்.

இந்தச் சமயத்தில்தான் முஸொலீனிக்குத் தேர்தலில் தோல்வி. தேர்தல் முடிந்து இரண்டாவதுநாள்.பெனிட்டோ பத்திரிகாலயத்தில் தன் அறையில் உட்கார்ந்துகொண்டிருக்கிறான். பக்கத்தில் மார்கரெட்டா சர்பாட்டி இருக்கிறாள். எங்கு பார்த்தாலும் போலீஸார் சோதனையிட்டு ஆட்களைக் கைது செய்துவருகின்றனர். முஸொலீனியின் சகாக்கள் பலர் அவனைத் தலைமறைவாக ஓடிப்போகும்படி ஆலோசனை சொல்லுகிறார்கள். ''நான் எங்கிருக்கிறேன் என்பது எனக்குத் தெரியும். வேண்டுமானால் அவர்கள் வந்து பிடித்துக் கொண்டு போகட்டும். நான் ஓடிப்போக மாட்டேன்!'' என்று சொல்லிவிட்டான். திடீரென்று போலீஸ் கமிஷனர் உள்ளே பிரவேசித்தார். சர்க்கார் உத்தரவு ஒன்றை அவன் கையில் கொடுத்தார். அதை வாசித்துவிட்டு, பக்கத்திலிருந்த ஸ்ரீமதி சர்பாட்டியிடம், ''என்னைக் கைது செய்துவிட்டார்கள். நான் போய் வருகிறேன்!'' என்று சொன்னான்.

'இத்தாலியைக் காப்பாற்றியவனை இப்படியா நடத்துவது?' என்று பத்திரிகையின் பிரதம நிருபர் அங்கலாய்த்தார்.

பேஸிஸ்ட் காரியாலயங்கள் சோதனையிடப்பட்டன. அதில் பலர் கைது செய்யப்பட்டனர். கவிஞன் மார்ட்டினெட்டியும் அவர்களில் ஒருவன். பியூம் சம்பவத்தில்கலந்து கொண்டதற்காகவும், ராஜாங்கத்தின் அமைதிக்குப் பங்கம் வரும்படியாக ஆயுதந் தாங்கிச் சதி செய்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டான்.

மறுநாள்......

இத்தாலியைப் பாதுகாத்ததற்காக
பெனிட்டோ முஸொலீனி கைது!
சிறையில் தள்ளப்பட்டார்!!

இவ்வாறு படாடோபமான தலைப்புக்களுடன் 'போபோலோ டி' இத்தாலியா' செய்தியைப் பிரமாதப்படுத்தியது. பிரதம மந்திரி நிட்டிக்கு நெஞ்சில் தென்பில்லாததனால், மேற்கொண்டு நடவடிக்கை எடுத்துக்கொள்ளாது அதிரடித்துப் போனான். 24 மணி நேரத்திற்கப்புறம் முஸொலீனிக்கு விடுதலை கிடைத்தது. அப்பொழுதுதான் முஸொலீனி மோட்டார் ஓட்டுவதற்கு லைசென்ஸ் வாங்கிக் கற்றுக்கொள்ள ஆரம்பித்தான். அந்தக் காலத்தில்தான் விமானம் ஏறப் பயிற்சி பெற்று, 'பைலட்' லைசென்ஸ் பெற்றது.

பியூம் ஆதிக்கம் பதினாறு மாத வாழ்வே. அதாவது 1919-செப்டம்பரிலிருந்து 1920-ம் வருஷம் கிறிஸ்மஸ் வரை. அதற்குள் இத்தாலிய சர்க்காரில் மாறுதல் ஏற்பட்டு, நிட்டி போய், கியோலிட்டி வந்து விட்டான். நிட்டியின் உள் நாட்டுக் கொள்கையும், சமாதானக் கொள்கையும் அவனது ஆட்சிக்கு உலை வைத்தன. அவனை அடித்துச் சென்ற தேர்தல் வெள்ளம், அதே மூச்சில் கியோலிட்டியைச் சபையுள் கொண்டுவந்து ஒதுக்கியது. அவனும், அவன் மந்திரி சபையில் அந்நிய நாட்டு மத்திரியான கவுண்ட் ஸ்போர்ஜாவும், 1920-ம் வருஷம் நவம்பர் 12-ந்தேதி யூகோஸ்லேவியாவிடம் உடன்படிக்கை செய்துகொண்டார்கள். அதன்படி பியூம் ஒரு தனி இத்தாலிய நாடாயிற்று. ஜெனரல் கவிக்ளியா தலைமையில் அனுப்பப்பட்ட கப்பல் படை, 1920-ம்ஞு கிறிஸ்மஸ் இரவன்று பியூம் நகரை முற்றுகையிட்டது. டி' அனன்ஸியோ அடிபணிந்தான். ஏனென்றால்

அவன் கட்சியிலிருந்த இத்தாலிய சர்க்கார் ராணுவம் கவிக்ளியா படையுடன் சேர்ந்துவிட்டது. அவன் நகரத்தைப் படைகளின் வசம் ஒப்புவித்துவிட்டு, வெளியேறுவதற்குத் தடைஏதும் செய்யப்படவில்லை.

''இறந்த என் சகாக்களையும், எனது வருத்தத்தையும், எனது வெற்றியையும் உங்கள் வசம் ஒப்படைக்கிறேன்!'' என்று சொல்லிவிட்டு, தான் ஆக்ரமித்துக்கொண்ட அதிகாரத்தைப் பிரதம மாஜிஸ்திரேட் முன்னிலையில் எதிரிகள் வசம் ஒப்புவித்துவிட்டு, அவன் வெளியேறினான்.

மான்டெனவேஸோ, இளவரசர் என்ற பட்டம் பெற்று, கார்டா ஏரிக் கரையிலுள்ள விசித்திர மாளிகையில் சமீப காலம் வரை வாழ்ந்து வந்தான். சமீபத்தில் அவனது மரணத்தை இத்தாலியரும் முஸொலீனியும் படாடோபப் படுத்திக் கொண்டாடினர்.

★

## 14. தடிக் கம்பு ஆட்சி

முஸொலீனியின் வெடிகுண்டுப் பேச்சு, கியோலிட்டியின் ராஜிநாமாவுக்குக் காரணமாயிற்று. காரணம், முஸொலீனியின் கண்டனமன்று; சர்க்கார் கட்சியில் நெருக்கடி ஏற்படும் என்று தோன்றியதால், அவன் மந்திரி சபையைக் கலைத்துத் தனக்குச் சௌகரியமான ஒன்றைக் கூட்டுவதற்காக முயற்சித்தான். சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் இந்தச் சமயம் பார்த்து ஸ்டிரைக்செய்ய ஆரம்பித்தார்கள். இத்தாலி முழுவதும் கலகங்களும் குழப்பங்களும் மறுபடியும் ஆரம்பித்தன. தெருக்களில் பேஸிஸ்டுகள், அபேதவாதிகளுடனும் பொதுவுடைமைவாதிகளுடனும் தீவிரமாகச் சண்டை போட்டார்கள். 1921ம் வருஷம்வேனிற் காலத்தில் கியோலிட்டிக்குப் பதில் பொனாமி பிரதமமந்திரி

யானான். இவன் அபேதவாதத்தில் மிதமான நம்பிக்கை கொண்டவன். நிர்வாக விஷயங்களில் நல்ல திறமை வாய்ந்தவன் என்றும் சொல்வார்கள். கியோலிட்டி, பேஸிஸ்டுகளை ஒரு சமயம் எதிர்த்து, மறுதடவை தழுவிக் கொள்வான். அதுதான் அவனது ராஜதந்திர முறை. ஆனால் பொனாமி விஷயத்தில் அப்படியில்லை. வெட்டு ஒன்று, துண்டு இரண்டு. ஒன்று நண்பனாக இருப்பான். அல்லது எதிரியாக இருப்பான். பேஸிஸ்டுகளின் கும்மாளம் அதிகமாயிற்று. உக்ரமாயிற்று. ரோமாபுரியிலும் இத்தாலிய எல்லைப்புறமான டிரிஸ்டியிலும் ஒரே விதமான சண்டை தான். ராவன்னா என்ற இடத்தில் அபேதவாதிகளின் பலம் அதிகம். 6000 கறுப்புச் சட்டைத் தொண்டர்கள் அவர்களைத் தாக்கினார்கள். ஸார்ஸானா என்ற இடத்தில் இதே மாதிரி அபேதவாதத் தாக்குதல் நடத்திச் சென்ற படையை சர்க்கார் துருப்புகள் வழிமறித்தன. கறுப்புச் சட்டைத் தொண்டர்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப் பட்டது. பலர் களத்தில் மடிந்தனர். அநேகருக்குக் காயம். இந்தச் சமயத்தில் பதுங்கிக் கிடந்த பொது வுடைமைவாதிகள், சிதறி ஓடும் கறுப்புச் சட்டைத் தொண் டர்கள்மீது பாய்ந்து, சின்னாபின்னப்படுத்தினர். அன்று 18 பேஸிஸ்டுகள் கொல்லப்பட்டனர், 35 பேருக்குப் படுகாயம். ஜூலை மாதத்தில் குரோஸெட்டோ என்ற இடத்தில் பதிநான்கு பொதுவுடைமைவாதிகள் கொல்லப்பட்டார்கள்.

போ நதிக்கரை. அமைதியான கிராமம். தூரத்தில் நாய் குலைக்கும் சப்தமும், கோழி கூவும் சப்தமும் தவிர வேறு ஒன்றும் கேட்காது. கிராமவாசிகளுக்கு நல்ல தூக்கம். இன்னும் நன்றாக விடியவில்லை.

பின்காரா என்ற இச்சிறு கிராமத்தில் ஒரு மாதா கோயிலும் அதைச் சுற்றியிருக்கும் நாலைந்து குடியானவர்

குடிசைகளும்தான். மாதா கோயிலுக்கு எதிரிலுள்ள ஒரு சிறு குடிசையில்தான் விவசாயிகள் சங்கத்துத் தலைவனான ஓர் ஏழைத் தொழிலாளி வசித்து வருகிறான். அவனுடைய வீட்டைச் சுற்றிச் சில கறுப்பு உருவங்கள் நெருங்கி வருகின்றன. அப்போதுதான் மணி நான்கு அடிக்கிறது. வந்தவர்களில் இரண்டு பேர் கதவைத் தட்டுகிறார்கள்.

''கிரார்டீனி?''

ஒரு ஸ்திரீயின் தலை, ஜன்னல் வழியாகத் தெரிகிறது.

''யார் அது?'' என்று கேட்கிறாள்.

''நண்பர்கள்தான். உன் புருஷனைக் கண்டு பேச வேண்டும்!''

''அவர் இரண்டு நிமிஷத்தில் வருவார். சிறிது காத்திருங்கள்!''

வேலி ஓரத்தில் குசுகுசுவென்ற சப்தம். தொழிலாளி, சட்டையைப் போட்டுக்கொண்டு, மெத்தைப் படியில் இறங்கி வரும் சப்தம் கேட்கிறது. கதவைத் திறக்கிறான்.

''என்னப்பா, என்ன வேண்டும்?''

''என்ன வேண்டுமா!''

முதலில் இரண்டு பேர் அவன்மீது பாய்கிறார்கள்; அப்புறம் ஐந்து, அப்புறம் பத்து, அப்புறம் இருபது பேர்! அவனும் தைரியசாலிதான். கதவண்டையிலிருந்து அவ்வளவு பேருக்கும் ஜவாப் சொல்லுகிறான். ''இங்கே வேண்டாம்; குழந்தைகள் இருக்கின்றன!'' என்று மட்டும் சொல்கிறான். இந்தச் சத்தத்தைக் கேட்டு, மனைவியும் இறங்கி வந்து சண்டையில் கலந்து கொள்கிறாள்.

இரண்டு குழந்தைகள் மாடிப் படியின் உயர இருந்து கொண்டு அழுதுகொண்டிருக்கின்றன.

''நீ தானேடா விவசாயிகள் சங்கத் தலைவன்?'' என்கின்றான் ஒருவன்.

''போடுடா அவன் மண்டையில்!'' என்கிறான் மற்றொருவன்.

விவசாயத் தொழிலாளியின் மண்டையிலிருந்து ரத்தம் பிரவாகமாக ஓடி, முகத்தை நனைக்கிறது.

''குழந்தைகளை மட்டும் விட்டுவிடுங்கள்!'' என்று கெஞ்சுகிறான் விவசாயி.

தடியர்கள் அவனையும் அவன் மனைவியையும் நையப் புடைக்கிறார்கள். விவசாயியின் மண்டை நொறுங்கி விடுகிறது. அவன் பிரேதமாகி விழுகிறான். தலை இருந்த இடம் தெரியாமல் ஆகிவிட்டது. எதிரிகள் ஓடிவிடுகிறார்கள். மனைவி பக்கத்தூருக்கு உதவி கோரி ஓடுகிறாள். காரியம் மிஞ்சிய பிறகு, உதவி வந்து என்ன பயன்?

''நேற்றிரவு சான் ஜியர்ஜியோவில் விவசாயிகள் தலைவன் ஒருவனைக் கல்லால் அடித்துக் கொன்றுவிட்டார்கள். பிரேதத்தைக் கல்லைக் கட்டித் தண்ணீருக்குள் இறக்கிவிட்டார்கள்!'' என்று வதந்தி பரவுகிறது.

ரோஸ் கிராஸ்டாடா என்பது டஸ்கனியில் ஒரு ஊர். அவ்வூர் மேயருக்குப் பின்வரும் கடிதம் கிடைத்தது :

ஐயா, இத்தாலி, இத்தாலிய மக்களுக்குத்தான் சொந்தம். ஆகையால் உம்மைப் போன்ற நபர்களிடம் நிர்வாகம் இருக்கலாகாது. 1921ம் வருஷம் ஏப்ரல் 17ம்தேதிக்கு முன், நீர் உமது மேயர் பதவியை ராஜிநாமா செய்து விடுவதால் உமக்குத்தான் நன்மை என்று சொல்லுகிறேன். நீர் இந்தப் புத்திமதியைக் கேட்காமல் இருந்துவிட்டால் விபரீதம் ஏதும் நடக்கலாம். அதற்கு நீர்தான் ஜவாப்தாரியாவீர். உமக்கு நான் கொடுத்திருக்கும் ஆலோசனையைப் பற்றிச் சர்க்காருக்குத்தெரிவித்தால் 13ந் தேதி புதன்கிழமை நீர் சொர்க்க லோகம் செல்ல வேண்டியிருக்கும்.

(ஒப்பம்)

டினோ பெரோன் கம்பாக்னி,

நெ. 1, பையாஜா அக்டேவியானி, பிளாரென்ஸ்.

கையெழுத்திட்ட இந்தப் பேர்வழியின் பெயரைக் கேட்டாலே டஸ்கனி முழுவதும் நடுங்கும்.அவனதுகுடும்பமே புராதன காலத்திலிருந்து இன்று வரை கூலிக்காகக் கொலை பாதகம் செய்து வந்திருக்கிறது. இன்று அவன் பேஸிஸ்ட் கட்சிக்கு ஊழியம் பண்ணுகிறான்!

பேஸிஸ்ட் சகாக்கள் வசம் மோட்டார் லாரிகள் உண்டு. ஆயுதங்கள் உண்டு. நிமிஷத்திற்குள் டஸ்கனி முழுவதை யுமே சுட்டுப் பரப்பிவிடுவார்கள். இந்த உண்மையை அந்த ஊர் பரிபூரணமாக அறிந்துகொண்டது. தவணைக் காலம் முடியும் சமயத்தில், பேஸிஸ்டுகளுடைய மோட்டார் லாரிகள் நகரைச் சூழ்ந்துகொண்டன. முதலில் மேயர் வீடும் நகரப் பிரதிநிதி வீடும் தீக்கிரையாயின. விவசாயிகள் வயலில் போய் ஒளிந்துகொண்டார்கள். கொள்ளையிடப் பட்ட வீடுகளுக்கெல்லாம் கறுப்புச் சிலுவைக் குறியிடப் பட்டது. நடுத் தெருவில் மிஷின்கன் நிறுத்தப்பட்டது. கிராமத்து ஹோட்டலை இந்தக் காலிகள் சூறையிடும்போது போலீஸ்காரர்கள் கையைக் கட்டிக்கொண்டு நின்றார்கள் மணி ஒன்பது ஆகுமுன், காலிக் கூட்டம் லாரிகளில் ஏறிச் சிட்டாய்ப் பறந்து ஓடிவிட்டது. பத்து நிமிஷ வேலைதான். ஆனால் 10 பேர் கொல்லப்பட்டனர், 30 பேருக்குக் காயம், 15 வீடுகள் தீக்கிரையாயின! வெகு நேரம் கழித்து,போலீஸ் படை தலையை நீட்டியது. ஒருவரையும் கைது செய்ய அதற்குத் தைரியமில்லை. மோட்டார் லாரி ஒன்றில் ஒரு வன் செத்துக் கிடக்கிறான். இரண்டு கிழட்டுக் குடியானவர் கள் வீட்டு வாசலில் கொல்லப்பட்டுக் கிடக்கின்றனர். ஒரு தாயின் கையிலிருந்த குழந்தையைப் பிடுங்கிக் காலிகள் கொன்றார்களாம்.இத்தாலி முழுவதிலும் இதேநிலைதான்!

★

## 15. இல்தூஸே ஆகிறான்

முஸொலீனியும் பொனாமியும் சளைக்காமல் சண்டை போட்டார்கள். ஒருவன், 'பொதுவுடைமைக் காலித்தனத்திலிருந்து தேசத்தை விடுதலை செய்வதாக'ச் சொல்லிக் கொண்டு கொன்று குவித்தான். மற்றவன், 'அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்காக'ச் சட்டத்தின் சார்பில் நின்று கொண்டு, அதே சேவையைச் செய்து முடித்தான். எல்லையில்லாமல் எத்தனை நாள் தான் இந்தச் சேவையில் ஈடுபடுவது?

1921-ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 3-ந் தேதி முஸொலீனியும் பொனாமியும் சமாதானமாகப் போவதென்று உடன்படிக்கை ஒன்று செய்து கொண்டார்கள். இத்தாலியப் பிரதி நிதித்வ சபைத் தலைவர் முன்னிலையில், இந்த உடன்படிக்கையில், முஸொலீனி, பேஸிஸ்ட் கட்சியின் சார்பாகக் கையெழுத்திட்டான்.

தலைவர்கள் நினைத்த நேரத்தில் சமரசம் பேசி, சமாதான உடன்படிக்கையில் கையெழுத்திட்டு விடலாம்; கட்சி அங்கத்தினர்கள் அந்த முடிவை ஏற்கவேண்டும் என்பது அவசியமன்று என்ற உண்மையை முஸொலீனி உடனே தெரிந்து கொண்டான். மற்றக் கட்சிகள் சிறிது ஒடுங்கினாலும், பேஸிஸ்டுகள் குருவுக்கு மிஞ்சிய சீடர்களாகிவிட்டார்கள். எதற்கெடுத்தாலும் *லாட்டியை விளையாட விட்ட கட்சி அங்கத்தினர்களுக்கு, அதைக் கீழே வைத்துவிடுவதற்குப் பிரியமில்லை. பல இடங்களில் மாகாணத் தலைவர்கள், முஸொலீனி கையெழுத்திட்ட சமாதான ஒப்பந்தத்தை ஏற்க மறுத்துவிட்டார்கள்.

---

* லாட்டி—குறுந்தடி.

முஸோலீனியின் சொந்த மாகாணமான ரோமாக்னா, ரீஜீயோ எமிலியோ, வினட்டோ முதலியவற்றிலும், ஒப்பந்தமாவது மண்ணாங்கட்டியாவது என்று தள்ளிவிட்டார்கள்.

கறுப்புச் சட்டைத் தொண்டர்கள், ஸினோர் கிராண்டி தலைமையில், இந்த ஒப்பந்தத்தை மீறுவதற்காகவே விசேஷசிரத்தை எடுத்துக் கொண்டு, தொண்டாற்றினார்கள்.

வேறு வழியில்லை. அதிகாரத்தைப் பலப்படுத்திக் கொள்வதென்றால், அவர்களே ஒப்புக் கொண்டு தலை வணங்கும்படி செய்யவேண்டும்.

1921-ஆகஸ்ட் 19-ந்தேதி கட்சியின் நிர்வாகக் கமிட்டிக்கு முஸோலீனியின் ராஜிநாமாக்கடிதம் கிடைத்தது. 19-ந்தேதி நடந்த கமிட்டி கௌன்ஸில் கூட்டம், ''அது பெரிய விஷயம்; காங்கிரஸ்தான் முடிவுகட்ட வேண்டும்,'' என்று ராஜிநாமாவை ஏற்க மறுத்தது.

1921-நவம்பர் 6-ந் தேதி ரோமில் அகஸ்டியோ கான்ஸர்ட் ஹாலில் கறுப்புச் சட்டைத் தொண்டர்களின் மாபெருந் தேசீய காங்கிரஸ் கூடியது. முஸோலீனி கூட்டத்திற்கு வந்திருந்தான். ஆனால், அதன் நடவடிக்கைகளில் கலந்து கொள்ளவில்லை.

ஆட்களை ஏவி வலையை விரித்தாய் விட்டதே! எல்லோரும் வந்து கண்ணியில் மாட்டிக் கொள்ளும் வரை பொறுமையை இழப்பது சாதுரியமல்ல, அல்லவா?

ஒரு பேஸிஸ்ட் பிரதிநிதி எழுந்தான். பேஸிஸ்டுகளின் சேவையைப் புகழ்ந்தான்; கட்சி, ஒன்றிலிருந்து பத்தாகி, நூறாகி, ஆயிரம் பதினாயிரமாக வளர்ந்த கதையை விரித்தான். 'வளர்த்தவன் அதோ தனியாக உட்கார்ந்திருக்கிறானே!' என்று சுட்டிக் காட்டி ஏங்கினான்.

கறுப்புச் சட்டைத் தொண்டர்களும் மனிதர்கள்தானே! பிரசங்கத்தில் மயங்கினார்கள். முஸோலீனியைப் பேசும்படி

கேட்டுக் கொண்டார்கள். கொள்கைக்கும் நடத்தைக்கும் வித்தியாசம் ஏற்பட்டு விட்டதால், இனி தன்னால் நடத்த முடியாது என்றும், 'ஆனால் நான் சொல்லுகிறபடி, நான் செல்லும் திசையில், என்னைப் பின்பற்றி வருவதற்குத் தயாராக ஐக்கியப்பட்டால் தலைமைப் பதவி வகிக்க முடியும்!" என்று 'கண்டிஷன்' பேசினான் முஸோலினி.

கிராண்டி எழுந்து நின்றான். ''இனிமேல், ஒற்றைப் பாறாங்கல் மாதிரியாகக் கட்சியின் ஐக்கியம் இருக்கும்,'' என்று உறுதி கூறினான்.

கிராண்டியும் முஸோலினியும் இத்தாலிய சம்பிரதாயப் படி தழுவி முத்தமிட்டுக் கொண்டனர்.

முஸோலினி 'இல் தூஸே' ஆனான்; அதாவது, அவன் விதித்த உத்தரவுக்கு அடிபணிவது தவிர, கறுப்புச் சட்டைத் தொண்டர்களுக்கு வேறு தர்மம் கிடையாது. இதற்கு முன்பு வெறும் கலகக்காரக் கும்பலாக—பேஸிஸ் டி' கம்பாட்டி மென்டோ என்று—இருந்தது, இப்போது ஒன்றாகப் பிணிக் கப்பட்டு, பேஸிஸ்ட் தேசீயக் கட்சி யாற்று.

பெனிட்டோவின் கொள்கையில்,—அதாவது, அவன் பட்டவர்த்தனமாகப் பேசி வந்த கொள்கையில்—ஒரு புது மாறுதல் ஏற்பட்டது. மாஜி— அபேதவாதியாக இருப்ப தற்கும், மன்னராட்சியில் அசையாத நம்பிக்கை வைப்பதற் கும் நெடுந்தூரமிருந்தாலும், பெனிட்டோ அந்தரடிப்பதில் நிபுணன்; மேலும் அவன் ஆஸ்பத்திரியில் படுத்துக் கிடக்கும் பொழுது, ராஜாவே நேரில் வந்து, ''கார்ப்பொரல் பெனிட்டோ, உம்மைப் பாராட்டுகிறேன்!'' என்று சொல்ல வில்லையா?

மாஜினி போன்று மூன்றாவது மறுமலர்ச்சி உண்டு பண்ணப் போவதாகச் சொல்லிக் கொண்டான் முஸொலீனி. 1922-ம் வருஷம் செப்டம்பர் 20-ந் தேதி, உன்னாதன் என்ற

மாகாணத் தலை நகரில், தானும் மாஜினியின் வாரிசு என்பதை விளக்கி விரிவாகப் பிரசங்கம் செய்தான்.

அதற்கப்புறம் 'போபோலோடி' இத்தாலியா' இந்தக் கொள்கையைப் படிப்படியாக, பேஸிஸ்டுகளிடையே உருவேற்ற ஆரம்பித்தது.

இந்தச் சமயத்தில்தான் லிபரல் கட்சித் தலைவனும் 'கொரீயர் டெல்லா ஸெரா' என்ற பத்திரிகையின் சொந்தக் காரனும், செனட் (மேல் சபை) பிரதிநிதியுமான அல்பர்டினி கூட்டுக் கட்சி ஸ்தாபித்து, மந்திரி சபையைக் கைப்பற்ற முஸொலீனியுடன் பேச்சு ஆரம்பித்தான். எல்லாம் பேச்சோடு நின்றது.

கையில் ராணுவ வேலை செய்யக்கூடிய கட்சி இருக்கிறது; சர்க்காரின் ராணுவத்தையும், ராஜாவையும் பயப் படுத்தாத புதிய ராஜாங்கக் கொள்கையால் நம்பிக்கை அதிகரிக்கிறது. மிரட்டியே மந்திரிப் பதவியைக் கைப்பற்ற வசதியிருக்கும் பொழுது, சமரசம் என்ன வேண்டியிருக் கிறது?

அபேதவாத-பொதுவுடைமைக் கட்சிகள், சமரசம் என்பது நிராகரிப்பதற்காகவே செய்துகொள்ளப்படுகிற தென்பதைப் பின்னால்தான் தெரிந்து கொண்டன. எப்பொழுதும் பின்னால் வருகிறவர்கள் பாடு கொஞ்சம் இரண்டாம் பட்சந்தானே! 'தொழிலாளர் ஐக்கிய ஸ்தாபனம்' ஒரு பொது ஸ்டிரைக்கை ஆரம்பித்தது. வெட்டிச் சாய்க்கும் வேலையை ரொம்ப மும்முரமாகவே நடத்தியது. ஆனால் நான்கு லட்சம் கறுப்புச் சட்டைத் தொண்டர்கள் சேவை செய்து வரும் பொழுது, எதிராக என்ன செய்ய முடியும்? இருபத்து நான்கு மணி நேர நோட்டீஸ் கொடுத்து வேலை ஆரம்பித்தார்கள் பேஸிஸ்டுகள்.

மிலானிலும், ஜினோவாவிலும் அபேதவாத முனிஸிபல் அங்கத்தினர்கள் உதைத்து விரட்டப்பட்டார்கள்.

முனிஸிபல் ஸ்தாபனங்கள் பலவற்றை பேஸிஸ்ட் தொண்டர் படை ஆக்கிரமித்துக் கொண்டது.

''பொது ஸ்டிரைக்கைத் தொலைத்ததுடன், பேஸிஸம், தனது சரித்திரத்தில் இரத்தம் தோய்ந்த மகத்தான பக்கத்தை எழுதியது. எதிரிகளை அவர்களது கடைசிக் குகையிலிருந்து விரட்டியதே அது. சர்க்கார் ஸ்தானத்தை வகித்து, அமைதியையும் நல்வாழ்வையும் நிலைநாட்ட முடியும் என்பதை அதன் மூலம் இத்தாலிய மக்களுக்கு பேஸிஸம் நிரூபித்திருக்கிறது. 1922 ஆகஸ்ட்டில் தொழிலாளர் ஐக்கிய ஸ்தாபனம் தோற்றுவிட்டது. இப்பொழுது அரசியல் அரங்கத்தில் ஜனநாயக—லிபரல் அரசாங்கமும் ஆயுதம் தாங்கிய பேஸிஸமுமே நிற்கிறது.''

இவ்வாறு முஸொலீனி பத்திரிகையில் எழுதினான்.

1922-ம் வருஷம், சர்க்கார், நெருக்கடியிலிருந்து நெருக்கடிக்குத் தாவிச் சென்றது. பொனாமி மந்திரி சபை மூன்று தடவை மாறி, அப்புறம் ஓட்டமெடுத்தது. அதற்கப்புறம் கியோலிட்டியின் சீடன் என்று சொல்லத்தக்க ஸினோர் டாக்டர் பிரதம மந்திரியானான். 1922-ம் வருஷம் வேனிற் காலத்திற்குள், அவனும் இரண்டு மூன்று மந்திரி சபை கூட்டிவிட்டான்.

இந்தச் சமயத்தில்தான் பாங்கா டி ஸ்கோன்டோ என்ற சர்க்கார் பாங்கி முறிந்து போயிற்று.

இத்தாலியின் அயல் நாட்டுக் கொள்கையோ, கையாலாகாதவன் கட்சி பேசுவது போல் இருந்தது. சமாதான மகாநாட்டில் இத்தாலியைச் சௌகரியமாக—மறந்துவிடாமல்—அசட்டை செய்தார்கள்.

இந்தச் சந்தர்ப்பத்தில்தான் மற்றொரு சம்பவம் நடந்தது.

1922, பிப்ரவரி 6-ந்தேதி, அச்சிலிராட்டி பதினோராவது போப் என்ற பெயரில் பேதுரு குருபீடத்தில் அமர்ந்

தார். அவர் 1921-ம் வருஷத்தில் மிலான் ஆர்ச் பிஷப்பாக இருந்தவர். முஸொலீனி போல்ஷிவிஸத்தின் எதிரி என்று அப்பொழுதே அவருக்குத் தெரியும்.

பூஜ்யர் பதினோராவது போப்பரசருக்கும் போல்ஷி விஸம் தெரியும். அவரும் அதன் எதிரிதான்.

எனவே, அரசியல் காரணங்களுக்காக முஸொலீனியைப் பக்தனாக்கிய பெருமை அவருக்கே உரியது.

★

## 16. 'சிம்மாசனத்தை ஒதுக்கிப் போடு!'

மூன்றாவது விக்டர் இமானுவல் 1869-ம் வருஷம் பிறந்த ஐரோப்பிய மன்னர்களுள் ஒருவன். சதிகாரனின் கோபா வேசத்திற்குப் பலியான தன் தகப்பனாருக்குப் பின் சிம்மாசனம் ஏறினான். அன்று முதல் இன்றளவும் சௌகரிய மாக வாழ்ந்து வருவதில் அவன் தனிச் சிறப்புப் பெற்றவன். வாலிபத்தில் அவனுக்கு ராணுவ சேவையுமுண்டு. மாண்ட் ஜெனெரியின் இளவரசியான எலினா அவன் மனைவி. இவன் தன் வாழ்க்கையிலேயே இரண்டு தடவைதான் மன்னனாக நடந்துகொண்டான்: அதாவது, மன்னனின் அதிகார ஆதிக்கத்தை வகித்தது இருமுறைதான். 1915-ம் ஹூ பிரதம மந்திரி கியோலிட்டியை டிஸ்மிஸ் செய்தது முதல் முறையாகும்.

தடிக் கம்பு அமுல் மூலம் நாட்டைக் கலக்கிய கறுப்புச் சட்டைத் தலைவனான பெனிட்டோ, முடியரசின்மீது புதிதாக அபார நம்பிக்கை கொண்ட மாஜி-அபேதவாதி யான பெனிட்டோ, மன்னனின் பின்னணியில் நின்று அவனைச் சூத்திரப் பாவையாகப் பொம்மலாட்டங் காட்டி, நிர்வாகத்தை நடத்துவதற்கு வசதியுண்டு என்று கண்டு கொண்டான். அதிகாரக் கைலையங்கிரி கைக்கு வாக்காக இருந்தது. இலகுவில் தூக்கித் தோளில் வைத்துக் கொள்ள

லாம் என்று நினைத்தான். நாட்டைக் கலக்கிய தடிக்கம்பு, சர்க்கார் நிர்வாகத்தையும் மண்டையிலடித்துக் காலின் கீழ்க் கொண்டு வந்து போடாதா என்று அவனுக்கு நம்பிக்கை. வடக்கு இத்தாலியில் கட்சியைப் பலப்படுத்திக் கொண்ட முஸொலீனி, தென்திசை திரும்பினான். அக்டோபர் 24-ந் தேதி நேபிள்ஸ் நகரில் நடந்த பேஸிஸ்ட் காங்கிரஸுக்கு ஆயுதபாணிகளான தொண்டர்கள் 35,000-க்கு மேல் வந்திருந்தனர். கட்சி பலம் தகுதியாக இருக்கிறதென்பதை பேஸிஸ்ட் காங்கிரஸ் எடுத்துக் காட்டியது.

நேபிள்ஸ் திரும்பிய பெனிட்டோ, தனது புரட்சிகரமான திட்டத்தை நடத்த ஆரம்பித்தான். நேபிள்ஸ் மகாநாடு நடைபெறுவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு, ஒரு நடு நிசியில் இரகசியக் கூட்டத்தில் ரோமாபுரிப் படையெடுப்பு ஏற்கனவே வகுக்கப்பட்டுவிட்டது. யுத்தரங்கத் தளகர்த்தர்களாகப் பின்வரும் நால்வர் தெரிந்தெடுக்கப்பட்டனர்:

1. பால்போ
2. டிவெச்சி
3. டிபோனோ
4. மைக்கேல் பயாங்கி

இந்நால்வர்களும் நான்கு திசைகளிலிருந்து கறுப்புத் தொண்டர் படையை ரோமாபுரி நோக்கி நடத்திச் செல்வது என்று தீர்மானிக்கப்பட்டது. முற்றுகைத் திட்டம் வருமாறு:

1. முதலில் முக்கியத் தலை நகரங்களிலுள்ள சர்க்கார் காரியாலயங்களைக் கைப்பற்றிவிடுதல்.

2. பேஸிஸ்ட் துருப்புக்களைத் தலைநகருக்கு 50 மைல் வடமேற்கிலுள்ள ஸாந்தாமெரிநல்லாவிலும், கிழக்குத் திசையில் 26 மைல் தூரத்திலுள்ள டிவோலியிலும், டைபர் நதி தீரத்தில் ரோமாபுரிக்கு 16 மைல் தூரத்திலுள்ள

மாண்டர் ரோடோண்டோ என்ற இடத்திலும் ஏராளமாகத் திரட்டுவது.

3. யுத்தத்தொண்டர் படைகளுக்குத் தலைமை ஸ்தலம் பெருகியாவில் அமைப்பது.

4. போலிக்னோவில் மூலபலத்தை நிறுத்துவது.

5. மந்திரி சபையை டிஸ்மிஸ் செய்யவேண்டுமென்று சர்க்காருக்கு எச்சரிக்கை கொடுப்பது.

6. மூன்று தளங்களை ரோமாபுரிக்கு அனுப்பி எந்த விதத்திலும் சர்க்கார் காரியாலயங்களைக் கைப்பற்றுவது.

7. இம்மாதிரி முன்னேறிச் செல்லும் படைகளுக்குப் பாதுகாப்பிற்காகத் தென்பகுதி பேஸிஸ்டுகள் காவல் அமைப்பார்கள்.

**தோற்றுப் போனால்.................**

அதற்குத் திட்டம் வருமாறு:—

1. கறுப்புச் சட்டைத் துருப்புக்கள் வடகிழக்காக அம்ரியாவுக்குப் பின்வாங்கிச் செல்லும். போலிக்னோ மூல பலம் அதற்குப் பாதுகாப்பாகச் செல்லும்.

2. மத்திய இத்தாலியிலுள்ள ஏதாவது ஒரு நகரத்தில் பேஸிஸ்ட் ஆட்சியை ஏற்படுத்துதல்.

3. மான்ட்வா, பிரிமோனா, எமெலியா, ரோமாக்னா முதலிய இடங்களில் கறுப்புச் சட்டைத் தொண்டர்களை ஏராளமாகத் திரட்டி நிறுத்துதல்.

4. மீண்டும் ரோமாபுரியைத் தாக்க முயல்வது.

அக்டோபர் 27-ந் தேதி இரகசியமாகப் படைதிரட்டுவது என்று யுத்த கௌன்ஸில் நால்வர் கமிட்டி (க்வாட்ரம் வெரேட்) நிர்ணயித்தது. 24-ந்தேதியே பெருகியாவில் ராணுவத்தலைமைக்காரியாலயம் அமைக்கப்பட்டு, நிர்வாகப் பொறுப்பு ஜெனரல் டிபோனோ வசம் ஒப்புவிக்கப்பட்டது. பாலபோ முன்னேறிச் செல்லும் படைகளுக்குத் தலைமை

வகித்தான். பயாங்கி ஒற்றுவேலை இலாகாவை நிர்வகித்தான். டிவெச்சி கிராண்டியின் ஒத்தாசையால் மிகவும் நுட்பமான ராஜதந்திர வேலையை ஏற்றுக் கொண்டான். இவ்வாறு, முஸொலீனி மந்திரிசபை அமைப்பதற்கு, அரசனையும் சர்க்காரையும் இணங்கவைக்கும் நயமான சூழ்ச்சிகளுக்குள் இறங்கினார்கள். பேஸிஸ்டுகளின் இந்த ரகசிய முயற்சி கத்தோலிக் சர்ச்சுக்கு எப்படியோ தெரிந்துவிட்டது. பாதிரிகள், முற்றும் துறந்தவர்களானாலும், முன் ஜாக்கிரதை யுள்ளவர்களல்லவா? மத சம்பந்தமாக, முக்கியமாகக் கத்தோலிக் சர்ச் சம்பந்தமாக, பேஸிஸ்டுகள் எவ்வித நோக்கம் கொண்டிருக்கிறார்கள் என்பதை அவசர அவசரமாகப் பெருகியாவிலிருக்கும் பேஸிஸ்ட் தலைமைக் காரியாலயத்திற்கு ஆள்விட்டுக் கேட்டார்கள். 'சர்ச்சுகள் பாதுகாக்கப்படும், கௌரவிக்கப்படும்' என்ற பதில் வந்தது.

அக்டோபர் 25-ந் தேதி முஸொலீனியிடமிருந்து முடிவான உத்தரவு புறப்பட்டது. அன்றைய தினமே டிவெச்சியும் கிராண்டியும் ரோமாபுரிக்குப் பிரயாணமானார்கள். மிதவாதப் பூனைகளான சலாந்த்ரா, ஆர்லாண்டோ என்ற தலைவர்களுடன் சமரசம் பேச ஆரம்பித்தார்கள். பேஸிஸ்டுகளின் தேசீய 'நன்னோக்கத்தை' மகாராஜாவுக்கு எடுத்துச் சொல்லி, பிரதம மந்திரி பாக்டாவிடம் ராஜிநாமாக் கடிதம் வாங்கிட வேண்டுமென்று அவரைத் தூண்டும்படி ஆலோசனை சொன்னார்கள்.

அக்டோபர் 27-ந்தேதி பேஸிஸ்டுகள் படை திரட்ட ஒரு பிரகடனம் வெளியிட்டார்கள். அதன் விவரமாவது:

''பேஸிஸ்டுகளே! இத்தாலியர்களே!

''போர் தொடங்கும் நேரம் பிறந்துவிட்டது! நான்கு வருஷங்களுக்கு முன் இதே நேரத்தில் நமதுதேச ராணுவம், பகைவர்களின் மூலபலத்தைச் சிதற அடித்து, வெற்றியின்

பாதையைச் செப்பனிட்டது. இன்று கறுப்புச் சட்டை ராணுவம் சிதைந்து சின்னாபின்னப்படுத்தப்பட்ட அவ் வெற்றியை மறுபடியும் ஊர்ஜிதம் செய்து, புகழ் வாய்ந்த தலைநகரமான ரோமாபுரிக்கு அதை அழைத்துச்செல்கிறது. தூஸேயின் உத்தரவின் பேரில், கட்சியின் ராணுவ, அரசியல், நிர்வாக அதிகாரங்கள் எல்லாவற்றையும் இரகசிய நால்வர் கௌன்ஸில் வகிக்கிறது. அதன் உத்தரவுக்கு எதிராக ஒன்றும் கிடையாது.

''தேசத்தின் மூல பலமான ராணுவம் இப்போராட்டத்தில் கலந்துகொள்ளக் கூடாது. விட்டோரியோ வெனிடோவில் வாகை சூடிய படையை பேஸிஸம் மறுபடியும் பாராட்டுகிறது. பொதுஜன அமைதியையும் ஒழுங்கையும் பாதுகாக்கும் சக்திகளின்மீது பேஸிஸம் போர் தொடுக்கவில்லை. சென்ற நான்கு வருஷங்களாகத் தேசத்தை ஆளத்தெரியாது பதவியில் ஒட்டிக்கொண்டிருந்த கோழைகள் மீதும், திறமையற்றவர்மீதும் பேஸிஸம் போர் தொடுத்திருக்கிறது.

''செழிப்பையும் பொருளாதார நலன்களையும் வளர்க்கும் சக்திகளுக்குத் துணைபுரிந்து பலப்படுத்தவே தேசத்தின்மீது ஒழுங்கையும் அமைதியையும் பேஸிஸம் சுமத்த விரும்புகிறது என்பதைப் பொருளுற்பத்தி செய்யும் நடுத்தர வகுப்பினர் யாவரும் அறிவர்.

''வயற் புறங்களிலும், தொழிற்சாலைகளிலும், ஆபீஸ்களிலும் உழைக்கும் தொழிலாளர்கள், பேஸிஸத்தைக் கண்டு அஞ்ச வேண்டியதில்லை. நியாயமான உரிமைகள் விசுவாசத்துடன் கவனிக்கப்படும். நிராயுதபாணிகளான எதிரிகளிடம் தாராளமாக நடந்துகொள்வோம்; இதரர்களிடம் தாட்சண்யமே காட்டப்பட மாட்டாது.

''இத்தாலிய வாழ்வை இறுகப் பிணித்து வளர்ச்சியைத் தடுக்கும் சிக்கல் கயிற்றை அறுத்தெறியவே பேஸிஸம் வாளை உருவுகிறது! எங்கள் ஆசை ஒன்றுதான், எங்கள் உறுதி ஒன்றுதான், எங்கள் இதயத்தில் கனிந்து கொழுந்துவிடும் இலட்சியமும் ஒன்றுதான் என்பதற்குத் தெய்வமும்,

அன்று வெனிடோ களத்தில் மடிந்த ஐந்து லட்சம் வீரருமே சாட்சி. எங்கள் தேசத்தின் புகழை வளர்ப்பதே எங்கள் ஆசை.

''இத்தாலிய பேஸிஸ்டுகளே!

''புராதன ரோமாபுரி வீரர் போல், உங்கள் சக்தியை யும் பலத்தையும் காப்பாற்றுங்கள். நாம் வெற்றிபெற வேண்டும்! நாம் வெற்றி பெறுவோம்! இத்தாலி வாழ்க! வாழ்க பேஸிஸம்!

(ஒப்பம்) நால்வர் கௌன்ஸில்''

சமரசப் பேச்சு ஒருபுறம்; படை திரட்டும் பிரகடனம் மறுபுறம். பேஸிஸ்டுகள் ரோமாபுரியைச் சூழ்ந்து முற்றுகை யிட்டனர். பிரதம மந்திரி ஸினோர் பாக்டாவும், கோட்டைக் கதவுகளை மூடி, அலங்கத்தில் பீரங்கி ஏற்றி, பதில் சவால் கொடுத்தான்.

இச்சந்தர்ப்பத்தில் இத்தாலிய மன்னன் டஸ்கனியி லுள்ள ஸான்ரஸோர் என்ற இடத்திற்குச் சுக வாசத்திற் காகச் சென்றிருந்தான். 'நெருக்கடி, உடனே வந்தால் நலம்!' என்று ஆலோசனை கூறி, பாக்டா மன்னனுக்குத் தந்தியடித்தான். மன்னன் அவன் ராஜிநாமாச் செய்தால் நன்மை ஏற்படுமா என்பது பற்றி ஆராயும்படி பதிலளித்தான். பாக்டா அப்படிச் செய்ய வில்லை. தான் பிறப்பித்த ராணுவ உத்தரவை ஊர்ஜிதம் செய்யும்படி மன்னனைக் கேட்டுக்கொண்டான். மன்னன் அதற்கு இணங்கவில்லை. நிலைமை எப்படியெல்லாம் மாறும் என்பதைக் கவனிப்பதற்காக ஒன்றிலும் பட்டுக் கொள்ளாமல் இருந்தான் மன்னன். சர்க்கார் அமுல், நின்று போனது போலாயிற்று. வேறு வழியில்லாமல் பாக்டா ராஜிநாமாச் செய்தான். பிறகு, விக்டர் இமானுவல், டிவெச்சிக்கு அழைப்பு அனுப்பினான். கிராண்டியும் டிவெச்சியும் மன்னனைப் பேட்டி கண்டார்கள்.

மன்னன் எடுத்த எடுப்பிலேயே, ''இம்மாதிரி நகரத்தை முற்றுகை போடுமாறு நான் உத்தரவு போடும்படி,

அறிவிக்கவில்லையென்பதை இத்தாலிய மக்கள் யாவரும் தெரிந்துகொள்ளவேண்டுமென்பது என் விருப்பம்'' என்று கூறினான். ''இந்த உத்தரவு நான் இங்கு இல்லாமலிருந்த பொழுது, எனக்குச் சமர்ப்பிக்கப்படாமலே, பிறப்பிக்கப்பட்டது. ஆனால், நான் அதைப் பார்த்த பிறகு கையெழுத்திட மறுத்தேன். அதனால் வேறு வழியில்லாமல் பாக்டா அதை ரத்துச் செய்தான்!'' என்றான்.

பிறகு மன்னன், சலாந்த்ராவை அழைத்து, பேஸிஸ்டுகளுடன் சேர்ந்துகொண்டு ஒரு கூட்டு மந்திரிசபை அமைக்குமாறு கேட்டுக்கொண்டான்.

அன்று மாலை 'போபோலோ டி' இத்தாலியா'காரியாலயத்திலிருந்த முஸொலீனிக்கு கிராண்டியும் டீவெச்சியும் நிலைமையை டெலிபோன் செய்தனர். மந்திரி சபை அமைக்க விரும்பும் சலாந்த்ரா, முஸொலீனியையும் சேர்த்துக்கொள்ளத் தயாரென்று கூறினான்.

''கூட்டு மந்திரி சபையில் பங்கெடுத்துக்கொள்வதாக ஒப்புக்கொள்ள வேண்டாம். பேஸிஸ்டு வெற்றி சிதைக்கப் படுவதை நான் விரும்பவில்லை'' என்று மறு டெலிபோன் செய்தான் முஸொலீனி. சலாந்த்ரா, தன் கோரிக்கைகளை இறக்கிக்கொண்டு, முஸொலீனுக்குப் பிரதம மந்திரிப் பதவி கொடுக்கத் தயார் என்பதையும் கூறினான்.

இந்தச் சமயத்தில் ரோமாபுரியைச் சுற்றிக் காவலிருக்கும் பேஸிஸ்டுப் படைகள் ஆவேசத்தால் துடித்துக்கொண்டிருந்தன.

மிலானில் பேஸிஸ்ட் பத்திரிகை ஆபீஸ் விசேஷப் பதிப்பு வெகு வேகமாகத் தயாராகிக்கொண்டிருக்கிறது. முஸொலீனியின் தம்பி ஆர்னால்டோ, 'ஸ்டோன்' அருகில் நின்று பக்கம் போடுவதை மேற்பார்வை செய்து கொண்டிருக்கிறான். பத்திரிகை வெளிவரும் சமயம், காரியாலயத்

தில் எங்கும் பரபரப்பு. உதவி ஆசிரியர்கள், கடைசித் தந்திகளைக் கன வேகமாக எழுதிக்கொண்டிருக்கிறார்கள். 'ஸ்டோன்' அருகில் நின்ற ஆர்னால்டோ ஏழு காலம் தலைப்பை அடுக்கும்படி உத்தரவிட்டுக்கொண்டு, தற்காலிகமாகப் பாரசீகம் படிப்பது போல், ஈய எழுத்துக்களைத் தலைகீழாக வாசித்துக்கொண்டிருக்கிறான். அப்போது முஸொலீனி கையில் ஒரு தந்தியை வைத்துக்கொண்டு வெகுவேகமாக ஆர்னால்டோவிடம் வந்து, ''முதல் பக்கம் போட்டாய்விட்டதா?'' என்கிறான். ஆர்னால்டோ, ''ஆமாம், ஆய்விட்டது. இதோ இரண்டு நிமிஷத்தில் பக்கத்தை முடுக்கிவிடலாம்'' என்கிறான்.

''முடுக்க வேண்டாம். வேறு ஓர் ஏழு காலம் தலைப்பு அடுக்கிக்கொண்டு வரச்சொல்லு. 'பேஸிஸ்டுகளுக்கு மகத்தான வெற்றி!' 'ரோமாபுரி அடி பணிகிறது!' 'இல்தூஸேக்கு மன்னர் அழைப்பு!' என்று அடுக்கிவரச் சொல்லு. இதோ இந்தத் தந்தியைக் கம்போஸ் செய்து போடச் சொல்லு!' என்று கூறிவிட்டு நிற்கிறான். அப்போதுதான் ஆர்னால்டோவுக்குத் தகவல் என்ன என்று தெரிய வந்தது. சகோதரர்கள்இருவரும் ஜன்னலண்டைவந்து நிற்கிறார்கள். வெளியில் ஒன்றிலும் லயிக்காமல் பார்த்துக்கொண்டிருந்த பெனிட்டோ, ''இப்போது நமது தாயார் இருந்தால்!...'' என்று மெதுவாகச் சொல்லுகிறான்.

மௌனம். குரல் மாறுகிறது. ''நான் இன்றைக்குச் சாயங்காலம் ரோமாபுரிக்குப் புறப்படுகிறேன். நீதான் இனி மேல் பத்திரிகை நடத்தவேணும்!'' என்று கூறிவிட்டுத் தன் அறைக்கு வந்துவிடுகிறான்.

அன்று மாலை மிலானிலிருந்து புறப்பட்ட ரயில்வண்டி முஸொலீனியையும் அவனுடைய சகபாடிகளையும் ஏற்றிச் சென்றது. நண்பர்களில் ஒருவன், ''இந்தச் செய்தியைக் கேட்டதும் உமது மனைவி என்ன சொன்னாள்?'' என்று கேட்டான் முஸொலீனியைப் பார்த்து.

''அவள் ஒன்றும் சொல்லவில்லை. பேசாமல் மௌன மாக முத்தமிட்டு விட்டு, சீக்கிரம் வந்துவிடும்படி மெதுவாகச் சொன்னாள்!'' என்றான் முஸொலீனி.

''குழந்தைகள்?'' என்று கேட்டான் அந்த நண்பன்— மீண்டும்.

''இரண்டு பையன்களும் ஒன்றும் சொல்லவில்லை, பேசாமலிருந்தார்கள். 'ரோமில் படிக்க உனக்கு ஆசையா?' என்று எட்டாவைக் கேட்டேன். 'எனக்கு இங்கேயே இருக்கத்தான் பிரியம்' என்று அவள் சொன்னாள்'' என்றான் முஸொலீனி.

முஸொலீனி நேராக ரோமாபுரிக்கு வரவில்லை. சான்டாமரினல்லாவில் இறங்கி பேஸிஸ்ட் அணி வகுப்பைப் பார்வையிட்டான். 1922-ம் ஆண்டு அக்டோபர் 22-ம் உ காலை 11 மணிக்கு, முஸொலீனி, மன்னனைப் பேட்டி கண்டான். தனது கட்சி உடையான பேஸிஸ்ட் கறுப்புச் சட்டையுடனேயே மன்னனைச் சந்தித்தான். மன்னன் அவனைச் சந்தித்ததும் சுமுகமாக வரவேற்றான். அதற்கு முஸொலீனி, ''இத்தாலியின் வெனிடோ வெற்றியை ஒரு புதிய வெற்றியால் மெருகிட்டு, தங்கள் சந்நிதானத்தில் சமர்ப்பிக்கிறேன்!'' என்றான். ராஜ மாளிகைக்கு வெளி யிலே பேஸிஸ்டுப் படைகள் திரண்டிருந்தன. இல்தூஸே யாக உள்ளே சென்ற முஸொலீனி, இத்தாலியப் பிரதம மந்திரியாகவெளியே வந்தான். உற்சாக ஆரவாரம் சிறிது ஓய்ந்ததும், இருபத்து நான்கு மணி நேரத்திற்குள் கறுப்புச் சட்டைப் படைகள் எல்லாம் வெளியேறிவிட வேண்டு மென்று உத்தரவிட்டான். அப்படியே நடைபெற்றது. □

## 17. சர்வாதிகாரி பேசுகிறான்!

1922-ம் ஆண்டு நவம்பர் மாதம் 16-ம் தேதி சர்வாதிகாரி முஸொலீனி, பிரதம மந்திரி என்ற ஹோதாவில், செனெட், கீழ்ச்சபை இரண்டையும் ஒன்றாகக் கூட்டிவைத்துத் தனது முதற் பிரசங்கம் என்ற வெடிகுண்டை எறிந்தான்:

''எனது தாராளச் சிந்தைக்காக, இவ்விரண்டு சபைகளும், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளும் என்னை வாழ்த்தவேண்டும். புரட்சிக்கு உரிமை உண்டு. கறுப்புச் சட்டைத் தொண்டர்களின் புரட்சியைப் பாதுகாத்து, அதை வளர்க்கவே நான் இங்கு வந்திருக்கிறேன். நான் விரும்பியிருந்தால் என் எதிரில் இருப்பவை எல்லாவற்றையும் நிர்த்தூளியாக்கியிருக்க முடியும். ஆனால், நான் அப்படிச் செய்ய விரும்பவில்லை. எனது நடவடிக்கைகளுக்கு ஒரு எல்லை வகுத்துக்கொண்டேன். எனது வார்த்தையை மந்திரோச்சாடனமாக ஏற்று, எதற்கும் துணிந்து தயாராக இருக்கும் 30 லக்ஷம் படை வீரர்களையும் திரட்டி பேஸிஸத்தின் பெயரை அவமதித்தவர்களைத் தண்டித்திருப்பேன். இந்த மண்டபத்தை எனது படைத் தளங்களின் பாசறையாக்கியிருப்பேன். இந்தப் பார்லிமெண்டை ஒரேயடியாக மூடி விட்டுத் தன்னந்தனியாகப் பேஸிஸ்ட் ஆட்சியை ஏற்படுத்தியிருப்பேன். இவற்றை யெல்லாம் நான் செய்திருக்க முடியும். ஆனால், தற்போதைக்கு அவ்வாறு செய்யவேண்டாமென்று உத்தேசித்திருக்கிறேன்.

''பார்லிமென்டரி மெஜாரிடி இல்லாதவருக்காக நான் இன்று கூட்டு மந்திரி சபையை அமைக்கவில்லை. இன்று, மெஜாரிடியின் உதவியில்லாமலே, நான் என் காரியங்களைச் செய்துகொள்ள எனக்குச் சக்தியிருக்கிறது. ஆனால் இன்று தவித்துக்கொண்டிருக்கும் மக்களின் உதவிக்காகச் சேவை செய்ய விரும்பும், ஆனால், கட்சி மனப்பான்மையே சிறிதும் இல்லாதவர்களின் ஒத்துழைப்பையும் நான் நாடுவதால் அவ்வாறு செய்தேன்.''

பிறகு கட்சிக் கொள்கையையும் திட்டத்தையும் விளக்க ஆரம்பித்து அந்நிய நாட்டுக் கொள்கையை முதன் முதலாக எடுத்துக்கொண்டான்;

''நமது அந்நிய நாட்டுக் கொள்கையில் பின்வரும் அடிப்படையான மாறுதல்கள் ஏற்படும். சமாதான உடன்படிக்கைகள், அவை நல்லவையானாலும், கெட்டவையானா

னும் கையெழுத்திடப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டனவாயின், அவற்றின் ஷரத்துக்கள் ஏற்று நடத்தப்படும். ஆனால், உடன்படிக்கைகள் சாகா வரம் பெற்ற நித்திய வஸ்துக்களல்ல. அவை மாற்றியமைக்கமுடியாதவையல்ல. அவை சரித்திரத்தின் அத்தியாயங்கள்; சரித்திரத்தின் முடிவுரையல்ல. அவற்றின்படி நடப்பதென்றால், அவற்றைப் பரீட்சிப்பதென்றே அர்த்தம். ஷரத்துக்களின் படி நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்போது, உடன்படிக்கைகளின் அசந்தர்ப்பங்கள் தெளிவானால், மீண்டும் அவை பரீட்சிக்கப்படுவதற்காகப் புதிய வசதியை அளிக்கின்றன.

''இரண்டு வல்லரசுகளிடையில் செய்துகொள்ளப்படும் வர்த்தக ஒப்பந்தங்கள் ஐரோப்பியப் பொருளாதாரச் சீர்திருத்தத்திற்கே மிகவும்உபயோகமுள்ளவையாயிருக்கும். இவ்வுடன்படிக்கைகள் குழப்பமும் சிக்கலுமான தோல்வியின் பாதையில் செல்லும் மகாநாடுகளின் விளைவுகள் அல்ல.

''தேச கௌரவத்தையும், தேசத்தின் நலத்தையும் ஒருங்கே வளர்க்கும் கொள்கையையே நாம் பின்பற்றப் போகிறோம்.

''புத்தியீனமாக, தியாகம் என்ற போக வஸ்துவையோ அல்லது மற்றவர்களின் சூழ்ச்சிகளுக்குத் தலை வணங்கும் அறியாமையையோ, சுமந்துகொண்டு பேசாதிருப்பதற்கு, இப்போது நமக்குச் சாத்தியமுமில்லை, வசதியுமில்லை. இன்று இத்தாலி ஒவ்வொன்றையும் கணக்கெடுக்கிறது. அது அவ்வாறு செய்தே ஆகவேண்டும்.

''எனது திட்டம் இதுதான். பொருளாதார, அரசியல் சம்பந்தமான ஒழுக்கத்திற்கிணங்கி பல காரணங்களினால் யுத்தத்தில் தன்னோடிருந்த சகாக்களை இத்தாலி கைவிட விரும்பவில்லை. ஆனால் இத்தாலி தன்னைத் தீர ஆராய்ந்துகொள்ள வேண்டும். அதன் சகாக்களும் அப்படியே தங்கள் உள்மணங்களைச் சோதித்துக் கொள்ள வேண்டும். இந்த ஆத்மசோதனையை உடன்படிக்கை

ஏற்பட்டது முதல் இன்றுவரை யாரும் செய்து கொள்ள வில்லை.

இன்று ரோமாபுரி பாரிஸுடனும் லண்டனுடனுமே இருக்கிறது. இன்று நேசக் கட்சி எந்த நிலையிலிருக்கிறது? ஜெர்மனியைப் பொறுத்தவரை இந்த நேசக் கட்சியின் ஸ்தானந்தான் என்ன?ருஷியாவைப் பொறுத்தவரை அதன் நிலைமை தான் என்ன? ருஷிய-ஜெர்மன் ஒப்பந்தம் ஒன்று ஏற்பட்டால் அப்போது அதன் நிலைமை எவ்வாறு இருக்கும்?

நேசக் கட்சியில் இத்தாலியின் ஸ்தானம் என்ன? அதனோடு சேர்ந்ததின் விளைவாகவே—அதன் சர்க்காரின் பலவீனத்தாலல்ல—அது அட்ரியாடிக் கடலிலும் மத்தியதரைக் கடலிலும் தனது முக்கியக் கொத்தளங்களை இழந்தது. அதன் அடிப்படை உரிமைகளே இப்போது விவாதிக்கப்படும் நிலைமையில் வந்து விட்டன. காலனிகளோ அல்லது மூலப் பொருள்களோ இல்லாத இத்தாலி, நேசக் கட்சியின் பொதுவான வெற்றிக்காக ஏற்ற கடன் சுமையால் நசுக்கப்படுவதா?

பிரான்ஸ், பிரிட்டன் இவற்றின் பிரதம மந்திரிகளை நான் சந்தித்துப் பேசுவேன். அப்பொழுது இப் பிரச்னை களையெல்லாம், அவற்றின் சிக்கல்களையெல்லாம், அவர்களுக்கு எடுத்துக்காட்டி, அவர்களோடு ஆலோசனை செய்வேன்.

''இந்தப் பரிசோதனையினால் இப்படிப்பட்ட நிலைமை ஏற்படக்கூடும் (1) இத்தாலி சமமான அந்தஸ்தும், உரிமையும், கடமையும் உள்ள நேசக் கட்சியினருடன் சேர்ந்த ஒரு வல்லரசாகும். அல்லது தனது சொந்த இஷ்டப்படி நடந்துகொள்ளும். சௌகரியம் வாய்த்தவுடன், வேறு ஒரு கொள்கையின் மூலம், தன் நலன்களைப் பாதுகாத்துக் கொள்ள இத்தாலி நடவடிக்கை எடுத்துக்கொள்ளும், நான் முதலில் கூறிய முடிவு காலாகாலத்திலாவது ஏற்படுமென்று நம்புகிறேன்.

நாம் சமாதானக் கொள்கையொன்றைப் பின்பற்ற விரும்புகிறோம்; ஆனால், தற்கொலை செய்துகொள்ள விரும்பவில்லை. ஆஸ்திரியாவுக்குத் தான் உதவி புரிவதாகக் கொடுத்த வாக்குறுதிகளை இத்தாலி கடைப்பிடிக்கும். ஆனால், அதைப்போலவே, ஹங்கேரியிலும் பல்கேரியா விலும் பொருளாதார சம்பந்தமுள்ள சிலநடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளாமல், அசிரத்தையாக இருக்காது.

தனக்குச் சேரவேண்டியவைகளைத் துருக்கி பெற்றுக் கொண்டபின், மேலும் மேலும் கேட்டு, தாவாச் செய்து கொண்டிருக்கக் கூடாது. துருக்கி அத்துமீறினால் 'இதற்கு மேல் ஒன்றும் கிடையாது, ஜாக்கிரதை!' என்று சொல்ல வேண்டிய அவசியமேற்படும்.''

பிறகு, முஸொலீனி தனது உள்நாட்டுக் கொள்கையை விளக்கினான்.

''பிரஜைகள் எந்தக் கட்சியினரானாலும் சுதந்திரமாக நடமாடலாம். எல்லாவிதமான மதங்களும் கௌரவிக்கப் படும். ஆனால், குறிப்பாக யாவரும் பின்பற்றும் கத்தோலிக் மதத்திற்கு விசேஷ கௌரவம் அளிக்கப்படும். சட்டப்படி யுள்ள உரிமைகள் எதுவும் பாதிக்கப்படமாட்டாது. எந்தவித மான முறையையும் கையாண்டு, சட்டத்தின் கௌரவம் காப்பாற்றப்படும்.

சர்க்கார்தான் மிக்க பலமுள்ளது. அதன் பலத்தை அது ஒவ்வொருவர் மீதும் காட்டும்; பேஸிஸ்டுகள் சட்ட விரோதமாக நடந்துகொண்டால் அவர்கள் மீதும் காட்டும். யாருக்காயினும், எவர் முன்பாயினும், சர்க்கார் தலை வணங்கத் தயாரில்லை. சர்க்காருக்கு எதிராக எழுகிறவர்கள் யாவரும் தண்டிக்கப்படுவார்கள்.

இச்சபையின் அபிப்பிராயத்திற்கு விரோதமாக ஆட்சி நடத்த, அவ்வாறு செய்யாதிருப்பது சாத்தியமானால் நான் விரும்பவில்லை. ஆனால் இந்தச் சபை தனக்கு இரண்டு அல்லது மூன்று வருஷ ஆயுள்தான் உண்டு என்பதை உணர வேண்டும்.

நாங்கள் முழு அதிகாரத்தையும் கேட்கிறோம். ஏனென்றால், எல்லாப் பொறுப்புக்களையும் ஏற்க விரும்பு கிறோம். முழுஅதிகாரமும் இல்லாவிட்டால், ஒரு லைராவைக்கூட மிச்சம் பிடிக்க முடியாது.

உங்களுடைய ஒத்துழைப்பு கிடைக்காது போய்விடும் என்று நாங்கள் நம்பவில்லை. கிடைத்தால் அதை மகிழ்ச்சி யோடு ஏற்றுக் கொள்ளுகிறோம். நாம் யாவரும் நமது வேலையின் கஷ்டத்தை வெகுவாக உணர்கிறோம். தேசம் எங்களுக்கு ஊக்கமளித்து எங்களுக்காகக் காத்திருக்கிறது. இனி நாங்கள் வெற்று வார்த்தைகள் வீசிக்கொண்டிருக்க மாட்டோம். எங்கள் விருப்பத்தைச் செய்கையின் மூலம் காட்டுவோம். சர்க்காரின் வரவு செலவு கணக்கை சமன் செய்வோம் என்று வாக்குறுதி கொடுக்கிறோம். அந்நிய நாட்டுக் கொள்கைகள் சம்பந்தப்பட்ட வரையில் சமாதானத் தையே பின்பற்றுவோம். ஆனால், கௌரவமும் உறுதியுமே அவசியம் என்று ஏற்படும் சந்தர்ப்பங்களில், அவ்வாறு நடந்துகொள்வோம். தேசத்திற்கு உத்தரவு கொடுப்பது என்ற பொறுப்பை நாங்கள் ஏற்றுக் கொண்டோம். அவ்வாறே கொடுப்போம்!''

முஸோலீனி அமைத்த மந்திரி சபையில் 15பேர் பேஸிஸ்டுகள். மூன்று பேர் தேசீயவாதிகள்; மூன்று பேர் மிதவாதிகள்; ஆறு பேர் பாபுலர் கட்சியைச் சேர்ந்தவர்கள்; இன்னும் மூன்று பேர் ஜனநாயகக் கட்சி. உள்நாட்டிலாகா வும், அந்நிய நாட்டிலாகாவும் பிரதம மந்திரி வசம். மந்திரி வேலை ஏற்ற தினத்தன்று உத்தியோக முறையில் தனது பத்திரிகாசிரியர் பதவியை ராஜிநாமாச் செய்து, ஆர்னால் டோவை அந்த ஸ்தானத்திற்கு நியமித்தான் முஸோலீனி. பிறகு, தன் குடும்பத்தை மிலானிலிருந்து ரோமாபுரிக்கு மாற்றினான்.பதவி ஏற்றதும் அவன் 'ஸவாய்' ஹோட்டலில் தற்காலிகமாகத் தங்கியிருந்தான். பிறகு சில நாள் வேறோர் வீட்டிலிருந்துவிட்டு, அதிகாரமும் செல்வாக்கும்

அதிகமானதும், வில்லா டோரோலினியா என்ற மாளிகையில் குடியேறினான். பலாஜா வெனிஜியா அவனது அரசாங்கக் காரியாலயமாயிற்று. வில்லா டோரோலினியா இளவரசரின் நன்கொடை; அந்த இடத்தின்மேல் முஸொலீனி ஆசை வைத்ததனால் இளவரசர் அதை 'நன்கொடை' யளித்துத் தீரவேண்டியதாயிற்று. நிற்க......

ரோமாபுரிப் படையெடுப்பின்போது பிரான்ஸில் தூத ராயிருந்த கௌன்ட் ஸ்போர்ஸா தமது ஸ்தானத்தை ராஜி நாமாச் செய்திருப்பதாகத் தந்தியடித்தார். இந்த ராஜ தந்திரியின் அந்நிய நாட்டுக் கொள்கை விவகாரங்களே முஸொலீனிக்குப் பிடிக்காது. 'ஏற்றுக்கொள்ள முடியாது' என்று பதில் உத்தரவு போட்டான் முஸொலீனி. இரண்டு நாள் கழித்து கௌன்ட் ஸ்போர்ஸாவுக்கு டிஸ்மிஸ் உத்தரவு ஒன்று வந்தது. ஸிவில் சர்விஸிலும் இம்மாதிரி 'முக்கிய மான சில மாறுதல்கள்' ஏற்பட்டன. ஜெனரல் டயாஸை யுத்தமந்திரியாக்கினான். அட்மிரல் தயாம் டி ரெவெல் என்பவரைக் கடற்படை மந்திரியாக்கினான்.

முஸொலீனி கூட்டுச்சபைகளின் முன் பேசி ஒரு வாரத்திற்கப்புறம் பார்லிமெண்டு அவனுக்குச் சர்வாதி காரத்தையும் கொடுந்திருப்பதாக ஒரு தீர்மானத்தை நிறை வேற்றியது. பிறகு பேஸிஸ்ட் சர்க்கார் நிதி, விவசாய, கைத்தொழில் விஷயங்களில் சிரத்தை கொண்டு பொருள் உற்பத்தியை வளர்க்கத் தீவிரமாக முயற்சி எடுத்துக் கொண்டது. 1923-ம் ஷு ஜனவரி மீ பேஸிஸ்ட் தொண்டர் படை, ராஜாங்கத்தைப் பாதுகாக்கும் பேஸிஸ்ட் ராணுவ ஸ்தாபனமாக்கப்பட்டது. பிறகு கிராண்டு பேஸிஸ்ட் கௌன்ஸில் ஒன்று முஸொலீனியின் அதிகாரத்தின் கீழ் அமைக்கப்பட்டது. அதற்குப் பார்லிமெண்டின் மீதும் அதிகாரம் உண்டு. இன்று அது உத்தேசிப்பதை நாளை பார்லிமெண்டு சிரமேல்தாங்கிச் செய்யும்.

முஸோலினி, தான் வகுத்த அந்நிய நாட்டுக் கொள்கையின்படி நடக்க, நடவடிக்கை எடுத்துக் கொள்ள ஆரம்பித்து விட்டான். ஸ்விட்ஸர்லாந்து, பால்டிக் ராஜ்யங்கள், கானடா, தென் அமெரிக்கா இவற்றுடன் வர்த்தக ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டன. ருஷியா, துருக்கி உடன்படிக்கையைப் பரிசீலனை செய்வதற்காக லாஸேனில் நேசக் கட்சியினரின் மகாநாடு ஒன்று 1922-ம் ஸூ நவம்பர்மீ" கூடியது. அப்பொழுது ஸினோர் முஸோலினி இத்தாலிய சர்வாதிகாரியாக அங்கு சென்றான். 10 வருஷங்களுக்கு முன் தன்னால் நாடு கடத்தப்பட்ட ஒருவன், தன் நாட்டுக்குள்ளே, தனக்குச் சமமான அந்தஸ்துள்ளவனாக வருவதைக் கண்ட ஸ்விட்ஸர்லாந்து சர்க்கார் கொஞ்சம் 'தடுமாறியது'. மகா நாட்டுக்குப் பாயிங்கரேயும், பல காலம் இந்தியாவில் வைஸராயாக இருந்து அமுல் நடத்திய, கீல்வாதப் பிடிப்புள்ள லார்டு கர்ஸனும் பிரதிநிதிகள். இரண்டு பேரும் பழய மோஸ்தர் படாடோபவாதிகள். மிகவும் முறுக்கானவர்கள். இந்த மனிதர்களிடையே சமமாக நடந்து கொள்ளுவதற்கு என்ன செய்வது என்று யோசித்து ஒரு தந்திரம் செய்தான் முஸோலினி.

ஹோட்டல் பெவிரிட்ஜில் சர்க்கார் விருந்து. சாயங்கால வண்டியில் பாயிங்கரேயும், லார்டு கர்ஸனும் வந்து சேர்ந்தார்கள். முஸோலினி வரவில்லை. அவனுக்குப் பதிலாக காரியதரிசி மாஸிக்ளி மாத்திரம் வந்திருந்தான். இவர்களிருவரும் முதலில் தன்னை வந்து பேட்டி கண்டால் தான் விருந்துக்கு வர முடியும், இல்லாவிட்டால் வர முடியாது என்று முஸோலினி திட்டமாக அறிவித்து விட்டதாக மாஸிக்ளி சொன்னான். பாயிங்கரே தமது பாரிஸ் நாகரிகத்தையும் குடியாட்சிக் கௌரவத்தையும் மறந்து, 'அந்தப் பயல் எங்கே?' என்றார். லாஸேனுக்குப் பத்து மைல் தூரத்திலுள்ள ஒரு ஹோட்டலில் முஸோலினி தங்கியிருக்கிறான் என்று தெரிய வந்தது. நிலைமை தர்ம

சங்கடம். ஒப்பந்தமோ துருக்கி-ருஷியாவைப் பற்றியது. அதாவது ஜெர்மனியின் சார்பில் சண்டை போட்ட இரு சர்க்கார்களின் சம்பந்தத்தைப் பற்றியது. இதைப் பரிசீலனை செய்ய வந்த நேசக் கட்சி வல்லரசுகளும் ஒன்றுக்கொன்று யார் முதலில் வந்து சந்திப்பது என்கிற காரணத்திற்காகச் சண்டை போட்டுக் கொண்டன என்று வெளிவந்தால், மானம் போய்விடுமே என்று, ஒரு ஸ்பெஷல் வண்டியில் ஏறி, பத்து மைல் தூரத்திலுள்ள அந்த கிராண்டு ஹோட்டலுக்குப் போய்ச் சேர்ந்தார்கள். முஸொலீனி, தன்கையில் குண்டாந்தடியும் பின்னே பேஸிஸ்ட் பரிவாரமும் அலங்காரம் செய்ய, பேஸிஸ்ட் உடையணிந்து, அந்த ஹோட்டல் ஹாலில் நின்று கொண்டு, இவ்விரண்டு அரசியல்வாதிகளையும் வரவேற்றான். "ஏது, விருந்து சாப்பிடலாமே!" என்று அழைத்தான். அரசியல்வாதிகளானாலும் பசியில்லாமலா இருக்கும்? நன்றாக வெளுத்து வாங்கிவிட்டார்கள். லார்டு கர்ஸன் தமது கீல்வாதக் காலை ஒரு முக்காலியில் வைத்துக் கொண்டு முஸொலீனிக்கு முதுகைக் காட்டிக் கொண்டு பிரெஞ்சுப் பிரதம மந்திரியுடனேயே சம்பாஷித்துக் கொண்டிருந்தார். விருந்து முடிந்ததும் முஸொலீனி அவர்கள் கூட வரச் சம்மதித்தான். ஹோட்டலுக்கும் ரயில் நின்ற இடத்திற்கும் நூறு கெஜ தூரம்தான். ஆனால், எங்கிருந்தோ ஒரு பேஸிஸ்ட் பட்டாளம் வந்து பாண்டு வாத்தியம் முழங்க, பேஸிஸ்ட் கீதங்களைப் பாடிக்கொண்டு இவர்களை ஊர்வலமாக ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்றது. இந்த அரசியல் கிழங்களும் வேறு வழியில்லாமல் பின்தொடர்ந்தன.

அந்த வருஷம் டிஸம்பர் மீ யுத்தப் பொறுப்புக்களையும், கடன் சுமைகளையும் பற்றி, பிரிட்டிஷ் பிரதம மந்திரி போனர்லாவையும், பாயிங்கரேயையும், டானிஸையும் கலந்து பேசுவதற்காக முஸொலீனி லண்டனுக்குச் சென்றான்.

இத்தாலிய சர்வாதிகாரியை அழைத்து வந்த டோவர் மெயில், வாட்டர்லூ ஸ்டேஷனில் வந்து நின்றது. வழக்கம் போல் முஸொலீனி குண்டாந் தடியை எடுத்துக் கக்கத்தில் வைத்துக் கொண்டான். இந்த விசேஷமான சந்தர்ப்பத்தில், சர்வாதிகாரி தனது குண்டாந்தடி அதிகாரத்தின் மகிமை மூலம் அசந்தர்ப்பமான நிலைமை ஏற்படுத்திவிடக் கூடாதே என்று நினைத்து, முஸொலீனியின் பரிவாரத்தின் பிரதம தலைவனான பேரன் ரோஸோ, ''இந்த விசேஷ சந்தர்ப்பத்தை நான் என்றும் மனத்தில் வைத்திருக்கும்படியாகத் தங்கள் குண்டாந்தடியை ஏந்தி நிற்கும் பணியை எனக்கு அருளவேண்டும்!'' என்று கேட்டுக்கொண்டானாம்.

பிரிட்டிஷ்-இத்தாலிய உறவைப் பலப்படுத்துவதற்காக ஐந்தாவது ஜார்ஜும், மேரி ராணியும் 1923-ம் வருஷம் மே மாதம் ராஜாங்க விருந்தினராக இத்தாலிக்கு வந்துவிட்டுப் போனார்கள்.

பியூம், அட்ரியாடிக் பிரச்னைகள் தீர்ந்தபாடில்லை. யூகோஸ்லேவிய மனம் கசந்திருந்தது. முஸொலீனி பதவி வகித்த உடனேயே ரப்போலோ உடன்படிக்கையை எவ்வளவு சீர்திருத்த முடியுமோ அவ்வளவும் செய்தான். ஸான்டா மார்கரிட்டா கன்வென்ஷன்படி பெல்கிரேடில் ஓர் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. அதன் ஷரத்துப்படி இத்தாலியர் பின்வாங்கிய பியூம் பகுதி 'சுதந்திரம்' உள்ள பியூம் ஆயிற்று, யூகோஸ்லேவியாவுக்கு கவுன்ட் ஸ்போர்ஸா வழங்கிய டெல்டாவும் பாராஸ் துறைமுகமும் சுதந்திர பியூமுக்குள் அடக்கம். தால்மாஷியக் கடற்கரையில் ஸாரா துறைமுகம் தவிர மற்ற இடங்களிலுள்ள இத்தாலியப் படைகள் வாபஸ் வாங்கிக்கொள்ளப்பட்டன. இந்தஒப்பந்தம் இத்தாலிக்கும், யூகோஸ்லேவியாவுக்கும், 'சுதந்திர' நாடாக்கப்பட்ட பியூமுக்கும் திருப்தி யளிக்கவில்லையென்றாலும், ஏதோ ஒருவிதமான போலி மனச் சாந்தியையாவது அளித்தது. இதன் மூலமாக பியூம்

பிரச்னை ஒருவாறு தீர்க்கப்பட்டது. பிரான்ஸ், ஆஸ்திரியா ஹங்கேரி, செக்கோஸ்லவேகியா, போலந்து, ஸ்பெயின் இவற்றுடனும் முஸொலீனி வர்த்தக ஒப்பந்தங்கள் செய்து கொண்டான். வாஷிங்டன் மகாநாட்டில் கடற்படைகளைக் குறைத்துக்கொள்வது என்று செய்து கொள்ளப்பட்ட தீர்மானத்தையும் சர்வாதிகாரியின் சர்க்கார் அங்கீகரித்தது. இந்த நிலையிலே......

○

## 18. மிஷின் துப்பாக்கி விவாதிக்கிறது

1923-ம் ஷூ ஆகஸ்டு மாதத்திலே மகாநாட்டுத் தூதர்கள் கிரீஸ் - அல்பேனிய எல்லைப்புறத்தில் வரம்பு வகுத்து சர்வே செய்வதற்காக இத்தாலிய ராணுவத் தூதுக் கோஷ்டி யொன்றை அனுப்பினார்கள். கார்பூ கடற்கரை களில் சர்வே கணக்குத் தவறுவதால் தங்களுக்கு இருக்கும் ஆதிக்கம் போய்விடக்கூடாது என்று கிரேக்கர்கள் கவலை கொண்டார்கள். இவர்களுடைய நலன்களைப் பாதிக்கும் பகுதிகளில் தூதுக் கோஷ்டி சர்வே செய்ய ஆரம்பித்ததும், கிரேக்கப் பொதுமக்களின் கொந்தளிப்பு அதிகமாயிற்று. "இந்தத் தூதுக் கோஷ்டியே ஒரு பெரும் மோசடி. இங்கு வந்து சர்வே செய்து இங்குள்ள நிலைமைகளை இத்தாலிய சர்க்காருக்கு இரகசியமாக அறிவிக்கவே இந்தக் கும்பல் வந்திருக்கிறது!'' என்று கிரேக்கப் பத்திரிகைகள் கண்டித்தன. ஆகஸ்ட் 27-ம்வ கிரேக்க ராணுவ உடையணிந்த சிலர் (அவர்கள் கொள்ளைக் கூட்டத்தினர் என்று சிலர் கருதுகிறார்கள்) யானினா என்ற இடத்தருகில் இத்தாலிய சர்வே தூதுக் கோஷ்டியின் மோட்டார் காரை மறித்து அந்தத் தூதுக் கோஷ்டி முழுவதை யுமே கொன்று விட்டனர். அந்தத் தூதுக் கோஷ் டியில் ஒரு ஜெனரல், ஒரு வைத்திய இலாகா

மேஜர், ஒரு லெப்டினென்ட், மோட்டாரை ஓட்டி வந்த ஒரு சிப்பாய், ஓர் அல்பேனிய துவிபாஷி—இவர்களே அந்த இடத்தில் மாண்டவர்கள். இந்தச் செய்தி ஆகஸ்ட் 28உ ரோமாபுரிக்கு எட்டியது. முஸொலீனி, அன்றிரவே டரென் டோவிலிருந்த இத்தாலியக் கடற்படையைத் திரட்டி ஏதென்ஸ் சர்க்காருக்கு ஓர் எச்சரிக்கைக் கொடுத்தான்: ''கிரேக்க சர்க்காருடன் ஒத்துழைத்து வேலை செய்து வந்த ராணுவத் தூதுக் கோஷ்டிக்குப் பாதுகாப்பளிக்க கிரேக்க சர்க்கார் தவறியது. அந்த சர்க்கார், பத்திரிகை களின் ஆத்திரமூட்டத்தக்க பிரசாரங்களைக் கண்டித்துக் கட்டுப்படுத்தவும் தவறியது. இதற்காகக் கிரேக்க சர்க்கார் பட்டவர்த்தனமாக மன்னிப்புக் கேட்டுக்கொண்டு, கண்டிப் பான விசாரணைக் கோர்ட்டு ஒன்று ஏற்படுத்தி. இவ் விஷயத்தைக் கட்டுப்பாடாக ஆராய்ந்து, ஏதென்ஸ் மாதா கோவிலில் மன்னிப்புச் சடங்கு நடத்தவேண்டும். அதில் இத்தாலியத் துவஜத்திற்கு விசேஷ கௌரவம் அளிக்கப்பட வேண்டும். சதிக் கொலைகாரர்கள் உடனே கைது செய்யப்பட்டு மரண தண்டனை விதிக்கப்படவேண்டும். ஐந்து கோடி லையர் நஷ்ட ஈடு கொடுக்கப்படவேண்டும். இந்நிபந்தனைகளுக்கு கிரீஸ் சம்மதிக்கிறதா இல்லையா என்பதை முடிவாகக் கூற 24 மணி நேர அவகாசம் கொடுக் கப்பட்டிருக்கிறது.''

ஐரோப்பிய சமாதானத்தை நிலைநிறுத்துவதற்காகவே சர்வதேச சங்கம் அவதரித்திருக்கிறது என்று நம்பியவர் களுக்கு, இது தூக்கிவாரிப் போட்டது போலிருந்தது.

கிரேக்க சர்க்கார் எச்சரிக்கையை நிராகரித்தது. ஆனால் ஜெனிவா கோர்ட்டில் இவ்விஷயத்தைச் சமர்ப்பிக்க தயாராயிருப்பதாக அறிவித்தது. இதற்குப் பதிலாக 24 மணி நேரத்தில் கார்பூ துறைமுகத்தில் இத்தாலியக் கடற்படை வெடிகுண்டு வீச ஆரம்பித்தது.

ஆகஸ்ட் 31உ இத்தாலியக் கடற்படை ஒன்று அந்தத் தீவுக்கு வந்தது. அந்தத் தீவின்மீது ஆக்கிரமிக்கப் போவதாக அறிவித்தது. இத்தீவு தனது கொடியை இறக்க மறுத்ததால் சண்டைக் கப்பல்கள் வெடி தீர்க்கஆரம்பித்தன. குண்டுகளில் சில கோட்டைமீது விழுந்தன. துருக்கிப் பிரதேசத்திலிருந்து தப்பியோடிவந்த சிலர் அந்தக் கோட்டைக்குள் இருந்தனர். வெடிகுண்டு வீச்சின் விளைவாக 20 பேர் கொல்லப்பட்டனர். அவர்களில் குழந்தைகள் 16. 80 பேருக்குக் காயம், உடனே இத்தாலிய கடற்படை கார்பூ தீவை லேசாகப் பிடித்துக்கொண்டு அதில்பிரவேசித்து விட்டது. உடனே கிரீஸ் சர்வதேச சங்கத்திற்கு மனுச் செய்துகொண்டது. இதர நாடுகளிலுள்ள லிபரல்கள் எல்லாரும் 'இந்தப் பேஸிஸ்ட் அக்கிரமத்தை'க்கண்டித்தனர். ஜெனிவாவில் லார்ட் ராபர்ட் ஸெஸில் கிரேக்க சர்க்கார் ஆட்சேபனையை அங்கீகரித்தார். லார்ட் கர்ஸன் அதை ஆதரித்தார். கார்பூ ஆக்கிரமிப்பு இத்தாலிய ராணுவத் தூதுக் கோஷ்டியின் சதிக் கொலையை அறவே மறைத்து விட்டது. யாவரும் கிரிஸுக்குப் பரிந்து இத்தாலியைக் கண்டித்தார்கள். ராஜதந்திரிகளின் மகாநாட்டின் உத்தரவுப்படி நடந்துகொண்டுவந்த ராணுவத் தூதுக் கோஷ்டியின் கொலையைப் பற்றிப் பரிசீலனை செய்யலாம் என்று கிரீஸ் அனுமதிக்கிறது என்று கூறிக்கொண்டே இத்தாலியின் விஷயத்தில் ஜெனிவா தலையிட்டால், அது சர்வதேச சங்கத்தை விட்டு விலகிவிடும் என்பதைத் திட்டமாக அறிவித்து விடும்படி சலாந்த்ராவுக்கு உத்தரவு கொடுத்தான் முஸொலீனி. இந்த உத்தரவு சர்வதேச சங்கத்தைப் பின் வாங்கச் செய்தது. இதன் விளைவாக பியூம் பிரச்னையின் அபாயங்களை எடுத்துச் சொல்ல யூகோஸ்லேவியா முன்வந்தது. ராஜதந்திரிகள் மகாநாடு

கட்சிப் பிரதிகட்சிகளின் ஆவேசங்களுக்கு ஆட்படாமல் இத்தாலியின் நிபந்தனைகளைக் கிரீஸுக்கு அறிவித்தது. கடைசியாக கிரேக்க சர்க்கார் அவைகளை ஏற்றுக்கொள்வதாக ஒப்புக்கொண்டது. நிபந்தனைகளின்படி கிரீஸ் நடந்தவுடன் கார்பூவிலிருந்த படைகள் வாபஸ் வாங்கப்பட்டன. ஐந்துகோடி லையரையும்நஷ்ட ஈடாக வாங்கிய இத்தாலிய சர்க்கார், புதிதாகப் பிறந்த ஐரோப்பிய இலட்சியத்தின் விதியை அதன் தலையில்பச்சை குத்தியதோடு, கார்பூவில் தங்கியிருந்து கஷ்டப்பட்ட ஆர்மீனியர்களிடையே விநியோகிக்கும் படியாக அந்தப் பணத்தைக் கொடுத்து விட்டது. கடைசியாக, பியூம் பிரச்னை 1924-ம்ஞூ முடிவுகட்டப்பட்டது. இத்தாலியர்கள் போர்ட்டோ பராஸையும் டெல்டாவையும் யூகோஸ்லேவியாவுக்குக் கொடுத்தார்கள். பியூமிலுள்ள ஸஸ்ஸாக் பகுதியின்மீது தனக்குள்ள அதிகாரத்தை வாபஸ் வாங்கிக் கொண்டுஅதை இத்தாலியர் வசம் ஒப்படைத்தது யூகோஸ்லேவியா. 1924 மார்ச்சு மீ பியூம் நகர்இத்தாலிய தேசத்தோடு சேர்க்கப்பட்ட வைபவம், அங்கு வந்திருந்த இத்தாலிய மன்னன் முன்னிலையில், கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

—ஃ—

## 19. அரசியல் மாந்தமும் விளக்கெண்ணெய் சிகிச்சையும்

வெற்றி வெறி தலைக்கேறிவிட்டது. சாதாரணமாகவே அபேதவாதத்தின்மீது சீறி விழுகிறவர்களுக்கு அதிகாரத்தையும் கட்டிக் கொடுத்தால் கேட்கவேண்டுமா? ''ஊருக்கிளைத்தவன் பிள்ளையார் கோயில் ஆண்டி'' என்பார்கள் நம் கிராமங்களில். இத்தாலியிலே முஸொலீனியின் அமுலிலே, அவாந்திப் பத்திரிகை, பிள்ளையார் கோயில் ஆண்டியின் ஸ்தானத்தை வகித்தது. பேஸிஸ்ட் சீற்றம் ஏற்பட்டால்,

அதுதான் முதல் களப்பலி; பேஸிஸ்ட் உற்சாகத்திற்கும் அதுதான்பலி. முஸொலீனியின் ரோமாபுரி ஆரோகணிப்பின் படை தலை மறையவில்லை. அவாந்தி, மான்டோவொஸி, ரிபப்ளிக்கானா முதலிய பத்திரிகைகள் தீ நாக்குகளை நீட்டிக் கருகிச் சுருள ஆரம்பித்தன. கார்ல் மார்க்ஸ், லெனின் பொம்மைகள் அந்த ஓம குண்டத்தில் ஆகுதிகளாகப் போடப்பட்டன.

வயது வந்தோர் ஓட்டுரிமை மசோதா 1923-ம் வருஷம் ஜூலை மாதம் பிரேரிக்கப்படும் பொழுது, அந்தரங்கத்தில் பேஸிஸ்ட் பார்லிமெண்டை அமைப்பதே நோக்கம் என்றாலும், தர்மம், சட்டம் எல்லாம் அவனுடைய பக்திக் குரிய வார்த்தைகளாகக் கொட்டிப் பகட்டப்படுகின்றன. பேச்சு முடிந்ததும் தனது அந்தரங்க அறைக்குச் செல்லு கிறான் முஸொலீனி. அவாந்தி, கியூடிஜியா பத்திரிகைகளின் சந்தாதார்கள் பட்டியலை எடுத்துச் சிவப்புப் பென்ஸிலால் குறி போடுகிறான். பட்டியல் ஓரத்தில் 'பேஸிஸம் தூங்கி விட்டதா?' என்ற கேள்வியும் குறிக்கப்படுகின்றது.

(அரசியல் மாந்தத்தைப் போக்க நவீன எதேச்சாதி காரிகள் உபயோகிக்கும் மருந்து விளக்கெண்ணெய். ஒரு பாட்டிலை உள்ளே தள்ளினால் உடம்பில் துளிகூட அபேத வாதமாவது ஒட்டுமா?—இது பேஸிஸ்ட் 'வைத்தியர்கள்' நம்பிக்கை. இதற்குமேல் ஸ்தாயி சிகிச்சையாகக் குண்டாந் தடி வைத்தியம். மூன்றாவது டிகிரி, நேரடியாக வான் லோகத்திற்கு வழி திறந்துவிடும் அரிய சேவை.)

எதிர்க்கட்சி யாடுபவர்கள் அபேதவாதிகள்-பேஸிஸ்ட் ராணுவக் கொட்டடிகளுக்குள் அழைத்துச் செல்லப் படுவார்கள். அக, புறச் சிகிச்சைகள் செய்யப்பட்டு வெளியே அனுப்பப்படுவார்கள்; அல்லது போனவழி பெரிய வழியாகிவிடும்.

ஸ்ரீமான் பொதுஜனம் எப்பொழுதும் நல்லவர்; தனியாக இருக்கும்பொழுதெல்லாம், தம்முடன் எதிர்க்கட்சியாட முயலுகிறவர் கட்சியையே அநாவசியமான உற்சாகத்துடன் ஆதரிப்பார். கூட்டத்தில்தான் அவருக்குப் பலம்; ஜனநாயகத்திலும், சர்வதேசக் கூட்டுப் பாதுகாப்பிலும், ஆயுதப் பரிகரணத்திலும் ஆணித்தரமான அபிப்பிராயங்கள் ஏற்படும்.

''ஆமாம், ஸார்! ரொம்ப மோசமாத்தான் இருக்கு; முஸோலினி இல்லாவிட்டால் இதைவிட மோசமாகத்தானே இருக்கும்!'' என்று கதைக்கிறார் இத்தாலிய ஸ்ரீமான் பொதுஜனம்.

டூரின் என்ற இடத்தில் இரண்டு பேஸிஸ்ட் தளங்களுக்குப் படுகாயம், -தெருச் சண்டையில் அமுல் நடத்தியதால். நகரத்தில் ஏழைகள்-அபேதவாதமும், பணக்கார-மிதவாதமும் மிக மலிவு. இவர்களைக் கண்டாலே பேஸிஸ்டுகளுக்குப் பிடிக்காது. நகரத்திற்குப் புத்தி கற்பிக்க வேண்டாமா?

மறுநாள் காலையிலேயே பேஸிஸ்டு தளம் நகரத்திற்குள் புகுந்துவிடுகிறது; களப்பலி பொதுவுடைமைக்கார கார்லோ பெர்ரூட்டி, வீட்டிலேயே கைது செய்யப்பட்டான். அவனை மோட்டாரில் பிடித்துத் தள்ளிக் கோட்டையை நோக்கிச் சென்றார்கள், கறுப்புச் சட்டைக்காரர்கள். கோட்டை அருகில் ஒரு பொட்டல்.

வண்டியிலிருந்து இறங்கி நடக்கும்படி உத்தரவு.

'நட!'

பெரூட்டி நடந்தான். ஆறு ரிவால்வர்கள் வெடித்தன; பெர்ரூட்டியின் உடல் மண்ணைக் கவ்வியது; அவனும் வேறு ரூபத்தில் நடையைக் கட்டினான்.

□

மத்தியானம். வயாபாலங்கேரி மூன்றாவது நம்பர் வீட்டின்முன் ஒரு மோட்டார் வந்து நின்றது.

இரண்டு பிரஜைகள். அப்பாவிகள். போ நதிக் கரைக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர். அவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. இறங்கி நடக்க உத்தரவு.

எட்டு ரிவால்வர்கள் வெடிக்கின்றன.

இருவரில், ஸிஸேர் பொச்சினெட்டோ மாண்டு விழுகிறான்; ஜுரி லெட்டி, மாண்டு போனதாகக் கருதப்பட்டு விட்டுச் செல்லப்படுகிறான்.

அதே நேரத்தில், இதர துருப்புக்கள், வேறு இடங்களில் அபேதவாதத் 'துருவை'ப் போக்கி ரத்தத்தால் மெருகிடுகின்றன.

டிராம் கண்டக்டர் மாட்டியோ சியொலீரோ அப்பொழுதுதான் சாப்பிட உட்காருகிறான். இளம் மனைவியும் புதுக் குழந்தையும் இருக்கின்றனர்.

வெளியிலே கதவு தட்டும் சப்தம்.

''யாரது? உள்ளே வரலாம்!''

உள்ளே வருகிறவர்கள் ஆயுதபாணிகள்!

''யாரைப் பார்க்கவேண்டும்?''

''மாட்டியோ சியொலீரோ!''

''நான்தான்!''

அவன் மேற்கொண்டு வேறு வார்த்தை சொல்ல அவகாசம் அளிக்கப்படவில்லை.

இளம் மனைவி, புதுக் குழந்தையின் தகப்பனார்பிரேதத்தின் மீது விழுந்து அழுதுகொண்டிருக்கிறாள்.

ஆயுதபாணிகள் சென்றுவிட்டார்கள்.

இதுதான் ஆரம்பம்......

சாயங்காலம் பேஸிஸ்ட் துருப்புக்கள் காஸா டெல்பொபொலோவைச் சூழ்ந்துவிட்டன. சர்க்கார் துருப்பு—

அதாவது மன்னர் படை என்ற விசேஷப் பெயர் பூண்டது —துரத்தப்படுகிறது.

கறுப்புச் சட்டைக்காரர்கள் ஸ்தலத்திற்குவருகின்றனர். கதவைத் திறக்க வெடிகுண்டு வீச்சு. காரியாலயத்தில் உள்ள சிப்பந்திகளில் பாதிப் பேர் கொல்லப்பட்டனர். அப்புறம் கட்டிடம் தீப்பற்றிக்கொள்ளுகிறது. அதைச் சுற்றிலும் பேஸிஸ்ட் வெறிக் கூத்து. வெற்றியைப் போல —தற்காலிகமானாலும்—போதையூட்டும் மது, உலகத்தில் ஏது?

துரதிர்ஷ்டம்! பியட்ரோ பெராரோ அங்கு ஏன் வர வேண்டும்? கும்பல் சூழ்ந்துகொண்டு அவனைத்தாக்குகிறது.

கீழே விழுந்துவிடுகிறான்.

''பயலைப் பிடித்து லாந்தல் கம்பத்தில் கட்டுங்கள்!'' என்ற கூக்குரல்.

ஆனால் கும்பலில் சில ரஸிக சிகாமணிகளும் உண்டு. அவன் கால்கள் இரண்டையும் சேர்த்து இறுக்கி, மோட்டார் லாரிக்குப் பின்னால் கட்டிவிடுகிறார்கள். பியட்ரோ இன்னும் சாகவில்லை.

லாரி புறப்படுகிறது......

கார்ஸோ நகரத்தின் தெருக்கள் முழுதும், கிழிந்து தொங்கும் சதைக் குப்பை இழுத்துச் செல்லப்படுகிறது. அவனது தங்கையால் கூட அவன் உடலை அடையாளம் கண்டுபிடிக்க முடியவில்லை.

பியட்ரோ பெராரோ உலோக வேலைத் தொழிலாளர் யூனியன் காரியதரிசி, அராஜகன். அவனது ஒரே ஆசை தனக்கும் தன் சகாக்களுக்கும் போதுமான கல்வியறிவு தேடிக்கொள்ளுவதே.

டிஸம்பரில் யமன் பட்டியல் கொஞ்சம் ஜாஸ்திதான்.

ஆன்ட்ரியே சியோலோவை அவனது பாட்டியார் முன்

ஊிலையில் தூக்கிலிட்டுக் கொன்றார்கள்; அதனால் அவளுக்குப் பீதியில் மூளை கலங்கியது......

டார்ஜியோ, பெக்கியோ, மஜொலா, மஸாரோ...... இப்படி எத்தனையோ பேர்....

விசாரணை நடைபெற்றது. குற்றவாளிகள் இன்னார் என்று கண்டுபிடிக்கப்படவில்லை என்ற தீர்ப்பு.

டூரின் பேஸிஸ்ட் தலைவருக்கு 'நைட்' பட்டம்அளிக்கப் படுகிறது.

ஸினோர் டிவெச்சி அப்பொழுது பென்ஷன் இலாகா மந்திரி; இப்பொழுது வாட்டிகனுக்கு ராஜாங்க தூதர்—அவர்தான் கொலைக்கெல்லாம் காரணம்....

மாலினெல்லா.

கும்மிருட்டு....

அடித் தொண்டையில் பேசும் சப்தம்—ஆண் குரல், பெண்குரலும் கூட.

காட்டுப் பொட்டலில் இடிந்த குடிசை. பணக்காரர்கள் வேட்டைக்கு வந்தால், பகலில் அங்கு தங்குவார்கள்.

முன்னால் வந்திருக்கிறவர்கள் தரையில்உட்கார்ந்திருக் கிறார்கள்.

''கிழவன் எப்படியிருக்கிறான்?''

''இன்னும் திடமாகத்தான் இருக்கிறான். உங்கள் மீது ரொம்பப் பெருமை அவனுக்கு; கடைசி வரை நீங்கள் போராடவேணும் என்கிறான்.''

''நாங்கள் போராடத்தான் போகிறோம்!''

''கடைசி வரை போராடுவோம் என்று அவருக்குச் சொல்லும். பேஸிஸ்டுகள், சர்க்கார், நிலச்சுவான்தார் (ஜமீன்தார்கள்) எல்லாரோடும் கடைசிவரைபோராடுவோம் ...கடைசிவரை!''

தலைவன் பேசுகிறான்....

''பொலோனாவில் உள்ள என் நண்பரிடம் (எனக்கு வக்கீலும் அவர்தான்) கலந்து பேசினேன்; நம் யூனியனைக் கலைத்ததைப்பற்றி*பெர்பெக்டிடம் சென்று ஆட்சேபித்தார். நமது கிளர்ச்சி அவருக்கு மகா கேவலமாக இருக்கிறதாம்; சர்க்கார் இதை அடக்கித்தான் தீருமாம்...அப்படி என் நண்பரிடம் சொல்லிவிட்டார். இன்னும் தெரியுமா? பேஸிஸ்ட் சங்கத்தில் சேராத தொழிலாளிக்கு வேலை கொடுக்கக் கூடாது என்று பேஸிஸ்ட் கட்சி உத்தரவு போட்டிருக்கிறதாம்......''

''நிஜமாகவா?''

''நிஜமாகத்தான்! எதிர்த்துத்தான் ஆகவேண்டும். இவர் ரோமிலிருந்து நமக்கு உதவி கொண்டு வந்திருக்கிறார்... யாருக்குப் பணம் ரொம்ப அவசியம் என்பதைக் கணக்குப் பார்ப்போம்!''

''ஸ்ரீ. எம்.—இருக்கிறாரே, அவர் வீட்டில் இரண்டு நாள் பட்டினி, குழந்தைகளுக்கும் உடம்புக்குக் குணமில்லை... ஸ்ரீ. எஸ்.—வீட்டிலே ரொம்பத் தொல்லை. தாத்தா ஆஸ்பத்திரியில் இருக்கிறார். தாயார் இரத்தம் கக்குகிறாள்... நேற்று அவளை பேஸிஸ்டுகள் அடித்துப் போட்டுவிட்டார்கள்...''

புதியவன் ஏதோ பேச ஆரம்பிக்கிறான். வெளியே சீட்டிச் சப்தம் கேட்கிறது.

ஆபத்து......

கூட்டம் கலைந்து விடுகிறது......

மறுநாள் மத்தியானம்.

ரகாஸிதான் எதிர்க் கட்சித் தலைவன். இவர்களைக் கேவலப்படுத்துவது என்று தீர்மானித்து விட்டான்.

வயது வந்த பெண்களை நிர்வாணமாக்கி, மேலே சிவப்புச் சாயத்தைப் பூசி, பட்டப் பகலில் நடுத்தெரு

---

* மாஜிஸ்திரேட் அதிகாரம் உள்ளவர்.

வழியாக அழைத்துச் செல்லுகிறார்கள்.

பின்பக்கம் கறுப்புச் சட்டைக் கும்பல்......

''அபேதவாதம் சிவப்பாய்த்தானே இருக்கும்!'' என்று கிண்டல் செய்கிறது அந்தக் கும்பல்.

இந்தனையும் மோனாலீல்லாவில் நடந்தது, அதற்கப்புறம் கொலைத் தொழில்.

★

## 20. மாட்டியோட்டி அதிர்ச்சி

1924 மே மாதம் 30-ந் தேதி.

புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபை, சென்ற 24-ந் தேதியிலிருந்து நடந்துவருகிறது.

ஆரம்பத்தில் 30 பேர் பேஸிஸ்டுப் பிரதிநிதிகள்; இப்பொழுது 350. இவர்களுடைய தேர்தல் நேரிய முறையில் நடைபெற்றது என்று ஊர்ஜிதம் செய்வதே விவாதத்திலிருக்கும் தீர்மானத்தின் நோக்கம். சபைத் தலைவர் முன் அது சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

மாட்டியோட்டி, கையில் குறிப்புத் தாள்களுடன், பேசுவதற்கு எழுந்து நிற்கிறான். மாட்டியோட்டிதான் யூனிடேரியன் அபேதவாதிகளின் அரசியல் காரியதரிசி. தேர்தல் நடைபெற்றபொழுது பேஸிஸ்டுகள், அவனைப் பிடித்துக் கொண்டு போய், ஆள் நடமாட்டமில்லாத காட்டில் விட்டு விட்டு வந்தார்கள். அப்படியிருந்தும் சட்டசபைக்குள் நுழைந்து விட்டான். அவன் பணக்காரன். பேஸிஸ்ட் நிர்வாகத்தையும் நிர்வாகிகளையும்கண்டிப்பவன். சமீபத் தேர்தலில் அவனுடைய சகா பிக்கினின்னி கொல்லப்பட்டான். குழந்தைகளுக்குத் தெரியக் கூடாது என்பதற்காக வீட்டுக்கு வெகுதூரம் தள்ளிச் சென்று எதிரிகளுக்குத்

தன் உடம்பை அவன் ஒப்புவித்தானாம்.

எதிர்க் கட்சியில் பல பகுதிகள்; பாப்புலர்கள், அபேத வாதிகள், பொதுவுடைமைவாதிகள், ஜனநாயக அபேத வாதிகள்... இத்யாதி, இத்யாதி, பழைய சலாந்த்ரா, கியோலிட்டி, ஆர்லான்டோ யாவரும் வந்திருக்கிறார்கள்.

பேஸிஸ்ட் மந்திரி சபை உண்மையில் பேஸிஸ்ட் தேசீயக் கூட்டு மந்திரிசபை. ஆனால் முக்கிய இலாகாக்கள் யாவும் முஸொலீனி வசம். அடிப்படையில் இரண்டு கட்சிதான்; ஒன்று பேஸிஸ்ட். மற்றது பேஸிஸ்ட் எதிர்ப்பு. ஆனால் சட்டசபையே பேஸிஸ்ட் முகாம்.

மாட்டியோட்டி எழுந்ததும் ஒரே கூப்பாடு.........

ஓயட்டும் என்று மார்பில் கையைக் கட்டிக் கொண்டு அவன் நிற்கிறான். நான்கு வருஷங்களாக இவ்வாறு காத்திருந்து காத்திருந்து அவனுக்குப் பழக்கம்...........

''மெஜாரிட்டியை ஊர்ஜிதம் செய்வதற்காக இம் மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது; நாங்கள் இதை ஆட்சேபிக்கிறோம்.........''

''என்னடா அலட்டுகிறாய்!'' —என்று ஒரு குரல்.

''......மெஜாரிட்டிக் கட்சி ஏகதேசமாக 40 லட்சம் வோட்டுகள் பெற்றிருக்கலாம்; ஆனால் அவை ரத்தம் சிந்தியதன் மூலம் கிடைத்தவை.........''

இது சர்க்கார் கட்சிக்குக் கோபமூட்டியதில் அதிசய மில்லை. பலர் மூக்கை உடைப்பது போலக் கைகளை ஆட்டினார்கள்; சில உற்சாகிகள் மேலே பாய்ந்து விழுவதற் காக எழுந்து விட்டார்கள். முஸொலீனியின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்கிறது.

மாட்டியோட்டி மேலும் பேசுகிறான்.........

''தேர்தலின் தீர்ப்பை சர்க்கார் எதிர்பார்க்கவில்லை

என்று பேஸிஸ்ட் கட்சித் தலைவர் பட்டவர்த்தனமாகக் கூறியிருக்கிறார். சிறுபான்மைக் கட்சியாக இருந்திருந் தாலும் அது அதிகாரத்தை வகித்திருக்கும்......''

பாரினாஸி: ஏன், புரட்சி நடத்திப் பார்க்கிறது தானே!

ஸ்டாரெஸ்: அப்படித்தான்; நாங்கள் தான் அதிகாரத்தை வகிக்கிறோம்; இனியும் வகித்துத்தான் வருவதாக உத்தேசம்!

சபையில் ஏக அமளி. ''பயலுக்கு முதுகில் குண்டு போட்டால் மரியாதையாகப் பேசுவான்! நீங்களெல்லாம் பயங்கொள்ளிக் கும்பல்!'' என்ற பேஸிஸ்ட் உறுமல்கள்!

மாட்டியோட்டி கூச்சல் தானே ஓயட்டும் என்று பேசாது இருந்து விடுகிறான்.......

பிறகு, ''சர்க்காரின் உத்தேசங்களை நிறைவேற்ற ஆயுதம் தாங்கிய படை இருக்கிறது...'' என்கிறான்.

''படை நீடூழி வாழ்க!''

''......ஆனால், அப்படை சர்க்காரின்—தேசத்தின்—அதிகாரத்தின் கீழ் இல்லை...ஒரு கட்சியின் அதிகாரத்தின் கீழ் இருக்கிறது.''

டெரூஜி: ''போதும்! போதும்!''

சர்க்கார் கட்சி. பேச்சு காதில் விழாதபடி மேஜையில் தட்டுகிறது.

''......எனது அபிப்பிராயத்தைச் சொல்லுமுன் நான் மேடையை விட்டு இறங்கமாட்டேன்...''

அமளி உச்ச நிலையை எட்டிவிட்டது. மாட்டியோட்டி மார்பில் கைகளைக் கட்டிக் கொண்டு காத்து நிற்கிறான்.

''ஒருவேளை வெடி குண்டுகளின் உதவியால் தேர்தல் நடத்தும் மெக்ஸிகோவில்.........''

மறுபடியும் கூச்சல்...

''இப்படிப்பட்ட அவமானகரமான உதாரணமாக மெக்ஸிகோவைக் குறிப்பிட்டதற்கு அதனிடம் நான் மன்னிப்புக் கேட்டுக்கொள்ள வேண்டும்.''

போதும் போதும்!—பயலை மேடையை விட்டு இழுத்துத் தள்ளுங்கள்!''

பிறகு மாட்டியோட்டி எதிரிகளின் அட்டூழியங்களைப் படலம் படலமாக வருணிக்க ஆரம்பித்தான். பத்திரிகை களுக்கு வாய்ப்பூட்டுப் போடப்பட்டதைக் கண்டித்தான்.

''நீ ஏன் பயந்து நடுங்குகிறாய்!'' என்று ஒரு குரல்.

''தூராட்டியைக் கேள்!'' என்று மற்றொரு குரல்.

**தூராட்டி :** பேசுவதற்கு வசதி பெறுவதற்காக உங்களது பாதுகாப்பைப் பெற்று வருகிறேன் என்பதை ஒப்புக் கொள் கிறேன்.

எதிர்க்கட்சியின் ஆரவாரிப்பு.

இந்தக் குழப்பத்தை உபயோகித்து வேறு ஒருவரைப் பேசும்படி தலைவர் உத்தரவிட்டார்.

**மாட்டியோட்டி :** எனக்குப் பேச இருக்கும் உரிமைக்கு மதிப்புக் கொடுங்கள்! மகா கேவலமாக இருக்கிறது!

''பேசாதே!—பேசாமல் இருக்கக் கற்றுக் கொடுக்க வேண்டுமா?''—என்று ஒரு குரல்.

**மாட்டியோட்டி :** ஒரு அபேட்சகர் அந்த வார்த்தைக்கு அர்த்தத்தைத் தெரிந்துகொண்டார். பிக்கினின்னி, வீட்டரு கில் வைத்துக் கொல்லப்பட்டான். தேர்தலுக்கு நின்றதும் குற்றம். அவனது நினைவுக்கு மரியாதை செலுத்துகிறேன்!

''உனக்கும் அந்தக் கதிதான்!''

''நீ சிறையில் இருக்கவேண்டியவன். பார்லிமெண்ட் வேறா உனக்கு!''

அவதூறு! வசை!

இவ்வளவுக்கும் முஸொலீனி பேசாமல் உட்கார்ந்திருக்கிறான். கைகளில் கன்னத்தை ஊன்றி, குனிந்து, ஒரே பார்வையாகப் பார்க்கிறான்—அர்த்தம் புரிந்துகொள்ள முடியாத பார்வை!

மாட்டியோட்டி : சுதந்திரம் தவறுகள் செய்யலாம்; மக்கள் அவற்றை நிராகரிப்பார்கள். ஆனால் கொடுங்கோன்மை ஒரு தேசத்தின் சாவுமணி! இதை நிச்சயமாக நம்புங்கள்!

சபை குழப்பத்தில் முடிகிறது.

சர்க்கார் காரியாலயம்.

முஸொலீனி தன் அந்தரங்க அறையில் கைகளைப் பின்னுக்குக் கட்டிக்கொண்டு வெகு வேகமாக நடக்கிறான்.

மூலையில் அவனது கறுப்புச்சட்டை சகாக்கள் சிலர்...

''அந்தப் பயல் என்ன தொந்தரவு கொடுக்கிறான்—சீ!''

1924 ஜூன் மாதம் 10-ந்தேதி... பிற்பகல்.

வியா பிஸானல்லியில் உள்ள 40-ம்நெம்பர் வீட்டிலிருந்து மாட்டியோட்டி வெளியே வருகிறான். பார்லிமெண்டுக்குப் போகத்தான் புறப்பட்டிருக்கிறான்......

சில நாட்களாகவே பேஸிஸ்ட் பத்திரிகைகள் அபேதவாதிகளைத் தாக்கி வருகின்றன. மாட்டியோட்டி மீது போலீஸ் கண்காணிப்பு,—பாதுகாப்புக்காகவாம்!

லுங்கோ டிவேரி என்ற இடம் வரை அவன் செல்லுகிறான்......

மறுநாள்.

அவனது மனைவி, தனது புருஷனைக் காணவில்லையென்று போலீஸாருக்குத் தகவல் அறிவித்தாள்.

அவனை வீட்டுக்கு அருகில் யாரோ சிலர் பிடித்து மோட்டாரில் ஏற்றிச் செல்வதைக் கண்டதாகப் பலர் வந்து சாட்சியமளித்தனர்.

மாட்டியோட்டி கடத்தப்பட்ட செய்தி, பெட்ரோல் பற்றிக் கொண்ட மாதிரி, எங்கும் பரவியது.

ஒரே பீதி. அவன் கொல்லப்பட்டிருப்பான் என்ற நம்பிக்கை. பேஸிஸ்டுகள் தான் அவனைக் கொன்றிருக்க வேண்டும் என்பது எதிர்க் கட்சியினரின் உறுதியான நம்பிக்கை.

ஜூன் மாதம் 12-ந் தேதி, காணாமற்போன சட்ட சபைப் பிரதிநிதியைக் கண்டுபிடிக்கும்படியாகத் தானே நேரில் போலீஸாருக்கு உத்தரவிட்டிருப்பதாக பெனிட்டோ அறிவித்தான்.

''இவ்விஷயத்தைத் தெளிவுபடுத்திக் குற்றவாளிகளைப் பிடிப்பதற்கு எல்லா விதமான முயற்சிகளும் எடுத்துக் கொள்ளப்படும்'' என்பது அறிக்கையின் சாரம்.

இருபத்தி நான்கு மணி நேரத்தில் மாட்டியோட்டி கடத்திச் செல்லப்பட்ட மோட்டார் கார் கண்டுபிடிக்கப் பட்டது. அவனுடன் அதில் சென்ற மூவர் கைது செய்யப் பட்டனர்.

மிலான் பேஸிஸ்ட் படையைச் சேர்ந்த அவனுடைய சகாக்கள் சிலரும் கைது... பேஸிஸ்ட் பிரபலஸ்தர்கள் மீது வாரண்டு. குற்றத்திற்கு உடந்தையாக இருந்ததாக அவர் கள்மேல் சந்தேகம். விளம்பர இலாகா மந்திரி ஸிஸேர் ரோஸி, பேஸிஸ்ட் கட்சித் தலைமைக் காரியதரிசி மாரி னல்லி, பேஸிஸ்ட் பத்திரிகாசிரியர் பிலிப்பில்லி முதலியோர் சந்தேகிக்கப்பட்டனர்.

ஸிஸேர் ரோஸி பிரான்ஸுக்கு ஓடிவிட்டான்... பின்னர் பிடிபட்டான்.

நாடெங்கும் ஒரே பீதி. சட்டசபையில் பேஸிஸ்ட் பிரதிநிதிகள் ஒவ்வொருவரும் இச்சம்பவத்தைக் கண்டித்

தனர். ''எங்கள் சீற்றம் பெரிதா, அவமானம் பெரிதா என்பதுதான் தெரியவில்லை!'' என்றார் ஒரு பிரதிநிதி.

''இரவு பகலாக என்னைக் கவிழ்ப்பதற்குச் சதிசெய்த பகைவன் ஒருவன்தான் இவ்வட்டூழியத்தை நடத்தியிருக்க முடியும்!'' என்றான் முஸொலீனி.

இப்படிப்பட்ட அரசியல் 'சம்பவங்களில்' குற்ற அம்சம் காற்றோடு கலப்பது விசித்திரமன்று. எதிர்க்கட்சி சட்ட சபையை விட்டு வெளியேறியது.

முஸொலீனியைத் துரத்திவிடுவது என்று அரசியல் சட்ட வரம்புக்குட்பட்ட மன்னன் 'துணிச்சல்' கொண்டு விட்டான் என்ற வதந்தி.

ஜனங்களும் மிரண்டுவிட்டனர். பேஸிஸ்டுகளும், குருவுக்கு மிஞ்சிய சீடர்களாக, பேஸிஸ உபாசனையில் இறங்கி விட்டார்கள். முஸொலீனியின் அமுலுக்கே திரை விழுந்து விடும்போலிருந்தது. பலாஜா சிக்கியிலிருந்து தவறினால் சிறைக் கிடங்குதான்! கரணம் தப்பினால்?

''நெருக்கடியான சந்தர்ப்பத்தில்தான் அரசியல் வரம்புக் குட்பட்ட மன்னன் தலையிடலாம்; சட்டசபை, செனெட் அங்கத்தினர்கள்தாம் முதலில் வேலையை ஆரம்பிக்க வேணும்'' என்று வியாக்கியானம் செய்கிறான் விக்டர் இமானுவல்.

''பொதுஜன உரிமைகளும் அரசியலமைப்பும் பட்ட வர்த்தனமாகத் தகர்த்தெறியப்பட்ட பொழுது வரம்புக்குட் பட்ட மன்னன் தலையிடுகிறான்!'' என்கிறது எதிர்க்கட்சி.

''காத்திருங்கள்!'' என்கிறான் மன்னன்.

காத்திருந்தார்கள்...

முஸொலீனி செனெட் சபையைக் கூட்டினான். எதிர்க் கட்சியின் முகத்தில் மிதிப்பது போலத் தனது சீர்திருத்தத் திட்டங்களைச் சமர்ப்பிக்க ஆரம்பித்தான்.

செனெட்டில் நடுநிலைமை வகிக்கும் அங்கத்தினர்கள்

இருப்பார்கள் என்பது சம்பிரதாயம். அங்கே பழைய உளுத்துப் போன ஜனநாயக மிதவாதக் கும்பல்தான் உட்கார்ந்திருந்தது.

முஸொலீனி பேசியதாவது......

''எனது கட்சி புரட்சிகரமானது என்பதை உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். பெரிய இயக்கங்களில் நல்லவர்களும் பொல்லாதவர்களும், துறவிகளும் போக்கிரிகளும், இலட்சியவாதிகளும் திருடர்களும் சேர்ந்துவிடுவது இயற்கை. சிலர் தங்கள் இலட்சிய உத்வேகத்தால் முரட்டுத் தனத்தில் இறங்குகிறார்கள். வேறு சிலர் லாபத்திற்காக இறங்குகிறார்கள். சாதாரணக் காலங்களிலேயே சரியான நபர்களைத் தேர்ந்தெடுப்பது கஷ்டம்; நெருக்கடியான காலங்களில் அது மிக மிகக் கஷ்டமான வேலை. எதிர்பாராத குற்றங்கள் அபாய அறிவிப்பாக மாறுதலின் அவசியத்தை அறிவிக்கின்றன.

எனது சர்க்கார் கொள்கையின் பொதுவான இலட்சியம் மாறவில்லை. அரசியல் விவகாரங்களிலும் தேசத்திலும் சமாதானத்தை எந்த விதத்திலும் நிறைவேற்றப் போகிறேன். தினசரி கண்காணிப்பின் மூலம் கட்சியில் உள்ள விஷக் கிருமிகளை ஒழிப்பேன். சட்ட விரோதமான நடத்தைகள் ஏற்படாதபடி கட்டுப்படுத்திவிடுவேன்.''

பேச்சு அவனுக்குப் பலனளித்தது. செனெட்டர்கள் 252 பேரில் 225 பேர், முஸொலீனி மீது தமக்கிருக்கும் அபார நம்பிக்கையை, வோட்டு மூலம் காண்பித்தனர்......

இந்தச் சமயத்தில் ரோமாபுரிக்கு 12 மைல் தூரத்தில் மாட்டியோட்டியின் பிரேதம் கண்டுபிடிக்கப்பட்டது. ஒரு குப்பைக் குழியில் புதைக்கப்பட்டுக் கிடந்தது......

மாட்டியோட்டி சம்பவத்தை பேஸிஸ்ட் பிரபலஸ்தன் ஒருவனுடைய தலையில் சுமத்திவிடுவதே எதிர்க்கட்சியின் நோக்கம். போலீஸ் இலாகா தலைவர் டிபோனோவுக்கு விஷயம் தெரியும் என்பது அவர்களது குற்றச்சாட்டு.

1924-ம் வருஷம் வேனிற்கால ஆரம்பம். பேஸிஸ்ட் கட்சிக்குள்ளாகவே எதிர்ப்பு. மாகாணத் தலைவர்கள் மீண்டும் நகரத்தைக் 'கைப்பற்றி' அட்டூழியத்தைப் போக்குவது என்று புறப்பட்டனர். பெலோனா, டூரின், வெனிஸ், பிளாரன்ஸ் முதலிய இடங்களில் மறுபடியும் குண்டாந்தடி-விளக்கெண்ணெய்ப் பிரயோகம். 'அப்பழுக்குக் கூற முடியாத' பாரினாஸி என்பவன் மாகாணத் தலைவனாக எதிர்க்க ஆரம்பித்தான். எதிர்க் கட்சிகளும் இச்சந்தர்ப்பத்தைச் சாதுரியமாக உபயோகித்து முஸொலீனியைத் தூக்கியெறிய முயற்சித்தன.

இந்த நிலையில், சர்க்கார் வரவு செலவு கணக்கில் 417 லையர் மிச்சம் என்ற போலிக் கணக்கு வெளியிடப்பட்டது. நிரந்தரமாகத்துண்டு விழும்சர்க்கார் கணக்குவிவரங்களையே பார்த்துவந்த இத்தாலியப் பிரஜைகளுக்கு அபார நம்பிக்கை ஏற்பட்டுவிட்டதாம். பணம் அல்லவா? குண்டாந்தடியும் விளக்கெண்ணெயும் பிரமாதமாகத் தெரியவில்லை போலும்!

1924 டிஸம்பர் 28-ந் தேதி, ஓடிப்போன ரோஸீ, பிரான்ஸிலிருந்து ஓர் அறிக்கை வெளியிட்டான்; அதன் மூலம் மாட்டியோட்டி கொலையில் முஸொலீனியின் பங்கு வெளியாயிற்று. எதிர்க்கட்சிப் பத்திரிகை அதைப் பிரசுரித்தது.

1925-ம் வருஷப் பிறப்பு.

எதிரிகளை மடக்கத் திடீரென்று சபை கூட்டினான் முஸொலீனி. ராஜிநாமாச் செய்யப்போகிறான் என்று எதிர் பார்த்தார்கள். ஆனால் எதிரிகளைத் தாக்கிப் பேசிக் கலங்க வைத்துவிட்டான்.

மாகாண பேஸிஸ்ட் படையெடுப்பு பிசுபிசுத்துவிட்டது. பாரினாஸி பேஸிஸ்ட் கட்சிக் காரியதரிசியாக நியமிக்கப் பட்டான். குண்டாந்தடி-விளக்கெண்ணெய்ப் பிரயோகத்

தில் தனக்கிருக்கும் அபூர்வத் திறமையை நிரூபித்துவிட்டான் முஸொலீனி. அவ்வளவுதானே வேண்டும்....

பேஸிஸ்ட் எதிர்ப்புப் பத்திரிகை ஒன்று, முஸொலீனியையும் அவனது மந்திரி சபையையும், அரசியலமைப்பை மீறியதாகத் தண்டிக்கவேண்டும் என்று எழுதியது....

ஜனவரி மூன்றாம் தேதி மறுபடியும் கூட்டப்பட்ட சபை முன் பேசலானான் முஸொலீனி :

''அரசியலமைப்புச் சட்டத்தின் 47வது ஷரத்து கூறுவதாவது:- ''மன்னரின் மந்திரிகள் மீது குற்றம் சாட்டி ஹைகோர்ட்டில் வழக்குத் தொடர சட்ட சபைக்கு உரிமை இருக்கிறது.' இந்த 47வது ஷரத்தின்படி என்னைக் குற்றம் சாட்ட இச் சபையிலோ அல்லது இதற்கு வெளியிலோ விரும்புகிறவர்கள் யாராவது இருந்தால் முன்வரட்டும். சென்ற மூன்று மாதங்களாக பேஸிஸ்ட் எதிர்ப்புக் கட்சிகள் இத்தாலியை மகா கேவலமான நிலைமைக்குள்ளாக்கி வருகின்றன. சட்ட விரோதமான நடத்தைகள் அடக்கப்பட்டு வருகின்றன; அதன் விளைவாக நூற்றுக்கணக்கான பேஸிஸ்டுகள் இன்று சிறையிலிருந்து வருகிறார்கள்.''

''இந்தச் சபைக்கும் இத்தாலிய மக்களுக்கும் நான் ஒன்று கூற விரும்புகிறேன். இதுவரைநடந்த சம்பவங்களில், அரசியல், ஒழுக்க, சரித்திரப் பொறுப்புக்களுக்கு நானே ஜவாப்தாரி. ஒருவனைத் தூக்கில் போடுவதற்கு ஏதோ அரைகுறை வார்த்தைகள் போதும் என்றால், தூக்கு மரத்தை நட்டு, கயிற்றைமாட்டுங்கள்! பேஸிஸம் இத்தாலிய யுவர்கள் பெருமை கொள்ளும் இலட்சியமாக அல்லாது, வெறும் குண்டாந்தடி விளக்கெண்ணெய்ப் பிரயோகமாய் மட்டிலும் இருந்தால், அக் குற்றம் என்னைச் சார்ந்ததே. பேஸிஸம் வெறும் அயோக்கியக் கும்பலாக இருந்தால், பலாத்காரம், குறிப்பிட்ட சரித்திர, அரசியல், ஒழுக்க சந்தர்ப்பங்களின் விளைவாக இருந்தால், அதற்கும் நானே ஜவாப்தாரி. அந்தச் சரித்திர, அரசியல், ஒழுக்க சந்தர்ப்ப விசேஷத்திற்கு ஜெர்மன் யுத்தம்ஆரம்பித்ததிலிருந்து இன்று வரை நான்தான் பிரசாரம் செய்து வந்தேன்.''

''ஸினோர்களே! இத்தாலி அமைதியை, சாந்தியை, உழைப்பதற்கு வசதியைப் பெற விரும்புகிறது. இந்த விஷயங்களை சாத்தியமானால் அன்பின் மூலம்அளிப்போம். அவசியமானால் பலாத்காரத்தின் மூலம் அளிப்போம். இந்தப் பேச்சுக்கு 48 மணி நேரத்திற்கப்புறம் நிலைமை தெளிவுபட்டுவிடும். இது தற்பெருமைக்கு என்றுசொல்லப் படவில்லை. சர்க்காரின் திமிர்ப் பேச்சும் அன்று. இத்தாலி மீதுள்ள எல்லை கடந்த அன்பின் விளைவே இந்தப் பேச்சு!''

நாற்பத்தெட்டு மணி நேரத்திற்கப்புறம் பத்திரிகை களுக்கு வாய்ப்பூட்டு; அடக்குமுறைச் சட்டங்கள் பிறந்தன.

பதினைந்து தினங்களில் எதிர்கட்சிப் பத்திரிகைகள் ஏழு நிறுத்தப்பட்டன.

மாட்டியோட்டி கொலை வழக்குவீணாக நீண்டுகொண்டு சென்றது.

கடைசியாக 1926ம் ஞூ மார்ச் மாதம் வழக்கு முடி வடைந்தது. எதிரிகள் யாவரும் விடுதலை செய்யப்பட்ட னர். அல்லது, லேசான தண்டனை பெற்றனர். விசாரணை எல்லைப்புறத்தில் உள்ள சீயட்டி என்ற ஏதோ ஒரு கண்ணற்ற கிராமத்தில் நடைபெற்றது.

வழக்கின் போக்கு, மாட்டியோட்டி மனைவி வீலியா வுக்குப் பெருத்த ஏமாற்றத்தை அளித்தது....

''சீயட்டியில் விசாரணை நடத்திய நீதிபதிகளுக்கு அவள் பின்வருமாறு எழுதினாள்:

''கியகோமோ மாட்டியோட்டியின் கொலை எனக்கும் என் குழந்தைகளுக்கும் ஒரு பெருத்த துன்பம் என்பது மட்டுமல்ல; இத்தாலிய சுதந்திரத்திற்கும் மனித நாகரிகத் திற்குமே ஒரு பெரிய துன்பம். நீதி பெறலாம் என்பதே எனது ஒரே நம்பிக்கையாக இருந்தது. அதனால்தான் வாதியாக ஆஜரானேன்.

விசாரணையின் போக்கினாலும், சமீபத்திய மன்னிப்பி னாலும், உண்மை வழக்கு மறைந்துவிட்டது.

நான் குறையிரந்து வரவில்லை; நியாயம் கிடைக்க வேண்டும் என்றுதான் கேட்டுக்கொண்டேன். மனிதன் மறுத்துவிட்டான்; தெய்வமும் சரித்திரமும் அதை எனக்கு அளிக்கும்.

ஆகையால் வழக்கிலிருந்துவிலகிக்கொள்ள அனுமதிக்கும் படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

எனது வக்கீலும் இதே அபிப்பிராயம் கொண்டிருக்கிறார். அவர் சட்ட ரீதியில் இம் மனுவைத் தயாரிப்பார். விசாரணைக்கு ஆஜராகும் சித்திரவதைக்கு ஆளாகாதபடி என்னை அனுமதிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். ஆஜராவது கியகோமோ மாட்டியோட்டியின் நினைவுக்கு அவமரியாதை செலுத்துவது போலாகும். அவரது நினைவிற்காகவும், அவரது இலட்சியத்தின்படி குழந்தை களை வளர்ப்பதற்காகவும் வாழும்,

வீலியா மாட்டியோட்டி''

வழக்கு பின் எவ்வாறு முடிவு கட்டப்பட வேண்டும் என்பதை முஸொலீனியே தன் கையெழுத்திட்ட கட்டுரை மூலம் அறிவிக்கிறான் :

''குற்றம் தற்செயலாகச் சம்பவித்தது என்பது சரித்திர பூர்வமாகவும் சட்ட ரீதியாகவும் நிரூபிக்கப்பட்டுவிட்டது. உண்மை என்னவெனில் ஜூன் மாதக் கேலிக்கூத்து, அதை நடத்தியவர்கள் எதிர்பாராத விபரீத சம்பவமாக முடிந்தது....''

கொலை நடத்தியவர்கள் என்று நிரூபிக்கப்பட்டவர் களுக்கு மட்டிலும் தண்டனை. சதிகாரர்கள் தப்பினார் கள்....

கொலையும் குண்டாந்தடியும் ஓய்ந்துவிடவில்லை...

## 21. பன்னிரண்டு வருஷக் கொடுமை

மனிதர்களுடைய அபிப்பிராயத்தை வோட்டைக் கொண்டு அளப்பார்கள். மனிதன் பரிபூர்ண சுதந்திரமுள்ள ஜந்து. சமூக நல்வாழ்வின் தன்மையை நிர்ணயிக்கத் தனி மனிதர்களின் அபிப்பிராய சேர்க்கைக்கே, அதாவது—பல பேருடைய ஏகோபித்த அபிப்பிராயத்திற்கே உரிமையுண்டு என்பார்கள். ஒத்த அபிப்பிராயம் கொண்டிருந்தாலும் வோட்டுப் போடாமல் சும்மா இருப்பதா என்பர் பிரிட்டிஷ் காரர். 'மேலவீட்டுப் பெரியவர் சொன்னால் போதும்' என்பதும் ஒருவிதமான அரசியல் மனநிலையைக் காண்பிக் கிறது. பழய காலத்து அரசர்கள், தம்மையே தெய்வாம்ச மாகக் கருதி, ஏன், தெய்வமாகவே கருதி, மனித சமூகத்தின் சர்வாம்சங்களிலும் தலையிட முயன்றதுபோல, சர்வாதிகாரி தனது பயனற்றுக்கிடக்கும் புத்திசாலித்தனத்தை வைத்துச் 'சமூக நல்வாழ்வை' ஸ்தாபிக்க முயலுகிறான். பெனிட்டோ பிரதம மந்திரி வேஷத்தில் வந்தாலும் சர்வாதிகாரிதான். சர்வாதிகளுக்கு வோட்டு என்றால் வேப்பங்காய். அவர் களுக்கு மற்றவர்கள் புத்திசாலித்தனத்தில் நம்பிக்கையே இருப்பதில்லை.

முஸொலீனியின் ஆட்சியின் முதல் பத்து வருஷத்தில், இத்தாலிய அரசியல் அமைப்பு என்ற கட்டை வண்டி, பிய்த்து எறியப்பட்டு, பீரங்கியேற்றிச் செல்லும் கவச மோட்டாராக ஆக்கப்பட்டது. பேஸிஸ்ட் சித்தாந்தம் என்று ஒன்று கியைாது. முஸொலீனி அப்போதைக்கப்போது விதித்த அடக்குமுறைச் சட்டங்களின் குப்பையிலிருந்து பேஸிஸ்ட் அரசியல் சித்தாந்தம் ஒன்றைச் சிருஷ்டிக்க

முயலுகிறார்கள் இப்போது. 1925-ம் ஞூ ஜனவரி மீ" முஸோலீனியுடன் ஒத்துழைத்து வந்த கட்சிகளெல்லாம் உதைத்து விரட்டப்பட்டன. 'பேஸிஸ்ட் கார்ப்பொரேட் ராஜாங்க'த்தின் அஸ்திவாரம் பலப்பட்டது என்று சொல்ல லாம். 1927-ம் ஞூ ஏப்ரல்மீ" தொழிலாளர் உரிமைகளை ஒன்றுமில்லாதடிக்கும் தொழிலாளர் விசேஷச் சட்டம் பிறப் பிக்கப்பட்டது.

இவ்விரண்டு வருஷங்களுக் கிடையில் வெகு துரிதமாக நிறைவேற்றப்பட்ட சட்டங்களைப் பத்துப் பகுதிகளாகப் பிரிக்கலாம். இவை, சட்டசபையில் விவாதமோ, எதிர்ப்போ இன்றி வெகு கெடுபிடியாக நிறைவேற்றப்பட்டன.

(1) பெபோடெல் சுவர்னோ என்ற ஹோதாவில் முஸொலீனியின் நிர்வாக அதிகாரத்தைப் பலப்படுத்தி விரிவு படுத்திய சட்டங்கள் (1925 டிசம்பர் 24 ; 1926 ஜனவரி 31—சட்டங்கள்.)

(2) மாகாணங்களில் பேஸிஸ்ட் ஆட்சியைப் பலப் படுத்தி மத்திய சர்க்காரின் ஆட்சியை விரிவுபடுத்தியவை. (1925, டிசம்பர் 24, 26; 1926 பிப்ரவரி 4;1926 செப்டம்பர் 2; 1926 ஏப்ரல் 3—சட்டங்கள்.)

(3) தேசத்தில் தோல்வி மனப்பான்மையோ ஒழுக்க ஹீனமோ ஏற்படாது தடுக்கும் சட்டங்கள். அவையே பத்திரிகைகள் மீது பாணங்கள். (1925 டிசம்பர் 31 சட்டம்.)

(4) தேசீயப் பொருளாதார நிதி நலன்களைப் பாது காக்கும் சட்டங்கள். அதாவது நோட்டின் மதிப்பு குறைந்து வருவதைத் தடுப்பதற்கும், 1925-ல் பாங்க் ஆப் இத்தாலி முறிந்து போகாமல் பாதுகாப்பதற்கும், மாகாணப் பொருளா தார கௌன்சில்கள் காரியாலயங்கள் ஏற்படுத்தவும், தேசீய ஏற்றுமதிக் காரியாலயம் ஏற்படுத்தவும், விவசாயக் கடன் திட்டங்கள் அமைக்கவும் பிறப்பிக்கப்பட்ட சட்டங்கள்.

முஸொலீனி இத்தாலிய நாணயமான லைராவைப் பாதுகாக்கப் போவதாக 1929-ம்ஹூ ஆகஸ்ட் 18வ. பெஸாரோ நகரத்திற் செய்த பிரசங்கமெல்லாம் வெறும் பேச்சு. யுத்தத்தின் விளைவாக இதர தேசங்களின் நாணய மதிப்பு குறைந்து கொண்டே வந்தது. அதாவது நோட்டின் எண்ணிக்கையை அதிகரித்து நாணயச் செலாவணியைக் கட்டுப்படுத்த முயற்சிசெய்யப்பட்டது. இதர தேசங்களின் பொருளாதாரப் போக்கின் விளைவாக லைராவும் மதிப்பை இழந்து கொண்டே வந்தது. 1925-ம் வருஷம் மாட்டி யோட்டி சம்பவத்திற்கப்புறம் அதன் விளைவாகப் பவுனுக்கு 180 லையர் ஆயிற்று. ஸினோர் பிரலி என்ற ரப்பர் முதலாளி பேஸிஸ்ட் கௌன்ஸிலில் அங்கத்தினராக்கப்பட்டார். கௌன்ட் வோல்பி நிதி மந்திரியாக்கப்பட்டார். 1925-ம்ஹூ நவம்பரில் அமெரிக்காவுடன் யுத்தக்கடன் ஒருவாறு சமரசம் செய்து கொள்ளப்பட்டது. அமெரிக்கா, மொத்தக் கடனில் 85% ரத்துச் செய்ததோடு, மார்கன்ஸ் ஏஜென்ஸி மூலம் 45 கோடி டாலர் மேற்கொண்டு கடன்கொடுத்தது. இத்தாலி பெற்ற இக்கடனுக்கு 'இத்தாலியப் பொது மராமத்துக்கடன்' என்று பெயர். இவ்வளவு தூரம் அமெரிக்கா ஏன் தாராள மாக இருந்தது என்று கேட்டால், இத்தாலிய மின்சார, தண்ணீர், கைத்தொழில் திட்டங்களிலும், இத்தாலிய டெலிபோன் சர்விஸிலும் அமெரிக்கா புகுவதற்கு இடம் கொடுக்கப்பட்டது. இதன் விளைவாகவே லைராவின் மதிப்பைக் காப்பாற்ற முடியும் என்று முஸொலீனி ஜம்பம் பேசிக் கொண்டிருந்தான். 1926 ஐூன்மீ" பவுனுக்கு 145 ஆக இருந்தது 1927-ல் பவுனுக்கு 92–6 லையராக ஆயிற்று.

(5) தொழில், வேலை, தொழிலாளர் ஸின்டிகேட்டு கள், கடன், போக்கு வரவு-இவை சம்பந்தமான ஸ்தாபனங் களை ஒன்றாக இணைக்க 1925-27 வரை சட்டங்கள் இயற்றப்பட்டன.

(6) ராஜாங்கத்தின் யுத்தப் பாதுகாப்பு முறைகளைப் பலப்படுத்தும் சட்டங்கள்,

(7) சுகாதாரம், சமூகம், ஸ்திரீகள், சிசுக்கள் சம்ரக்ஷணை, பிரம்மசரிய வரி, 'பைலில்லா' என்ற சிறுவர்கள் ஸ்தாபன அமைப்பு, நோய் எதிர்ப்பு முதலிய வற்றிற்கான சட்டங்கள்.

(8) இத்தாலியின் செல்வாக்கை வெளிநாடுகளிலும் காலனிகளிலும் அதிகரிக்கச் செய்யும் சட்டங்கள். அதாவது ராஜதந்திர ஸ்தானீகக் காரியாலய அமைப்புச் சட்டங்கள். இதுவரை கூலி வேலைக்காக ஏற்றுமதியாகிக் கொண்டிருந்த இத்தாலியர்கள் இனி பேஸிஸ்ட் பிரஜைகளாக அயல் நாடுகளில் பிரயாணம் செய்வார்களாம். இது, அயல் நாடுகளில் பேஸிஸ்ட் ஸ்தாபனங்களை ஏற்படுத்தும்முயற்சி.

(9) டிரிப்போலிட்டானியா ஸிரனைகா என்ற வடக்கு ஆப்பிரிக்காவிலுள்ள இத்தாலியக் காலனிகளின் நிர்வாகத்தைப் பற்றிய சட்டங்கள்.

(10) 'கார்ப்பொரேட் ராஜாங்க' விஸ்தரிப்பு சம்பந்தமான சட்டங்கள். அதாவது. நாளுக்கு நாள் இத்தாலியின் தனி மனித சுதந்திரத்தை ஒன்றுமில்லாத தாக்கும் தடை விதிகள்.

1927-ம் ஞு தொழிலாளர் பிரகடனம் என்ற சட்டம் பிறப்பிக்கப்பட்டபின், பேஸிஸத்தை இத்தாலியில் பரிபூர்ணமாக அமுலுக்குக் கொண்டுவந்த சில சட்டங்கள் பிறந்தன. 1928-ம் வருஷத்தில் தேர்தல் சீர்திருத்த மசோதா சட்டமாக நிறைவேறியது. 1929-ம் ஞு பிப்ரவரிமீ", ரோமன் கத்தோலிக்க மதத் தலைவரான போப் சாமியாருக்கும் இத்தாலிய சர்க்காருக்கும் நெடுங் காலமாக இருந்து வந்த சர்ச்சை தீர்த்து வைக்கப்பட்டு, ஒரு முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. இதிலிருந்து முஸொலீனி வாழ்வில் ஒரு பெருத்த மாறுதல் ஏற்பட்டது. நாஸ்திகம் பறந்தது. கத்தோலிக் மதத்தில் அவன் அபார அழகுகளைக்

கண்டதோடு, தினசரி பிரார்த்தனை செய்யவும் ஆரம்பித்து விட்டான். தன்னுடைய அரண்மனையில் பிரார்த்தனை மண்டபமொன்று தனக்காகவே அமைத்துக் கொண்டான். இவ்வளவையும் செய்து வைத்த பதினோராவது போப் அச்சிலிராட்டி என்பவர் முஸொலீனியை முன்பே பரிச்சயம் செய்து கொண்டவர். மிலானில் அவர் கார்டினலாக இருக்கும் போது இவன் பத்திரிகாசிரியனாக இருந்தான். இந்தச் சமரசத்திற்கு 'லேட்டரன் கன்கார்டட்' (ஒப்பந்தங்கள்) என்று பெயர். இதன் சாராம்சம் வருமாறு:

(i) கத்தோலிக் மத நிர்வாகிகள் அரசியலில் கலந்து கொள்ளக் கூடாது. அவர்கள் இத்தாலிய தேசீயக் கொடியைத் தங்கள் துவஜமாக ஏற்றுக் கொள்ள வேண்டும்.

(ii) கத்தோலிக் மத ஸ்தாபகர்கள் சொந்தத்தில், பேஸிஸ்ட் ஸ்தாபனத்திற்கு மாறாக, வேறு எந்தத் தொழில் ஸ்தாபனங்களையும் வகுக்கலாகாது. தேசத்திலுள்ள பேஸிஸ்ட் ஸின்டிகேட்டுகளுடன்தான் அவர்கள் ஒத்துழைக்க வேண்டும்.

(iii) கத்தோலிக் நிர்வாக இலாகா டைரக்டர் காரியாலயத்தில் நியமிக்கப்படுபவர்கள் யாவரும் பேஸிஸ்டுகளாக இருக்க வேண்டும்.

(iv) கத்தோலிக் வாலிப இயக்கங்கள் யாவும் தங்கள் பெயரையும் தன்மையையும் மாற்றிக் கொள்ள வேண்டும். அதாவது, அவையாவும் மத சம்பந்தமான சேவைகளிலேயே ஈடுபட வேண்டும்.

இந்த ஒப்பந்தம் 1931-ம் ஹு செப்டம்பர் மாதத்தில் நிறைவேறியது.

பேஸிஸமும் அதன் பார்லிமெண்டரி முறைகளும் என்னவென்று சிறிது கவனிப்போம்:

(1) தனிப்பட்ட நபர், சமூக நலன்களுக்கு ஏற்பத் தன் சொந்த நன்மைகளை இணைப்பதற்காக இயற்றவேண்டிய கடமைகளை விவரிப்பதுதான் பேஸிஸம். ஒரு குறிப்பிட்ட நபர் இன்னதைச் செய்கிறானா இல்லையா என்பதை நடுநிலைமை வகித்து நிர்ணயிக்கும் அதிகாரம் ராஜாங்கத் திற்குத்தான் உண்டு. ஒருவனுடைய காரியாதிகள் திருப்தி கரமாக இல்லையென்று சர்க்கார் கருதினால், அவற்றில் தலையிட அதற்கு அதிகாரம் உண்டு.

(2) பொருள் உற்பத்தியில் தனிப்பட்ட நபரின் முயற்சி அவசியம் என்று கருதப்படுவதால், தனிச்சொத்து உரிமை யும் குடும்ப வாழ்வும் வற்புறுத்தப்படுகின்றன.

(3) தனிப்பட்ட சொத்து என்பதும், சமூகம் ஒரு மனிதனிடம் ஒப்படைத்த சொத்துத்தான். அதன் தன்மையைப் பற்றி அவன் சமூகத்திற்கு ஜவாப்தாரி. அவன் தன் நிர்வாக உரிமைகளைத் துர்விநியோகம் செய்தால், அவற்றைக் குறைக்கச் சமுதாயத்திற்கு அதிகாரம் உண்டு. ஆகையால், குடும்ப வாழ்வையோ ராஜாங்கத்தையோ தொலைக்க முயலும் பிரசாரத்திற்கு அது இடம் கொடாது.

(4) ராஜாங்கத்தின் அபிலாஷைகள் எத்திசையிலிருக் கின்றனவோ அத்திசையிலேயே தனி மனிதனும் தன் காரியாதிகளை நடத்த வேண்டும்.

(5) ஒருவன் இரண்டு எஜமானர்களிடம் சேவை செய்ய முடியாது. அதாவது, ஒரு மனிதன் ஒரு ராஜாங்கத்திற்கும் அதற்குப் புறம்பான ஓர் அரசியல் ஸ்தாபனத்திற்கும் ஒரே சமயத்தில் சேவை செய்ய முடியாது. ஆகையால், சர்வதேச போல்ஷிவிக் அபேதவாத ஸ்தாபனங்களில் ஈடுபட்டிருப்ப வர்கள் அந்நியராகக் கருதப்படுவார்கள்.

(6) வர்க்கப் போராட்டம் குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் ஏற்படலாம்; ஆனால் அவசியமன்று. ஆகையால் அது ஏற்பட வேண்டு மென்பவர்களின் அரசியல் உரிமைகளை யெல்லாம் பறித்து விடுவது நியாயமே.

(7) தனிப்பட்ட நபர்கள், தனிப்பட்ட ஸ்தாபனங்கள் —இவற்றின் விவகாரங்களைத் தீர்த்து வைக்கும் பொறுப்பும் தன் தீர்ப்பை வற்புறுத்தி நடத்தும் அதிகாரமும் சர்க்காருக்கு உண்டு.

(8) பார்லிமெண்டரி சம்பிரதாயமான கட்சி சர்க்கார் அவசியமில்லை. நேர்மையான ஆட்சிக்கு உபயோகமுள்ள ஆலோசனைகள் மட்டுமே போதும்.

(9) பொதுஜன ஆதரவும் சர்க்காருக்குஅவசியம்தான். ஆனால் அது ஆட்சியின் உயர்வை அளந்து காட்டும் அளவு கோலாக இருக்கவேண்டிய அவசியமில்லை. இன்னும் மெஜாரிட்டியினர் ஒரு சர்க்கார் சட்டத்தை ஆதரிப்பதால் அது சரி என்று ஆகாது. மெஜாரிட்டியினர் அபிப்பிராயம் சரியான அபிப்பிராயமாக இருந்தால்தான் அந்த ஆதரவுக்கு அர்த்தமுண்டு.

(10) மத்திய சர்க்கார் பொதுமக்களின் தேவைகளை அறிந்துகொள்வதற்காக முறைகள் வகுக்கப்பட வேண்டியதும் அவசியம்.

(11) நிர்வாக இலாகா, பலமுள்ளதாகவும் தீவிரமாக வேலை செய்யக் கூடியதாகவும் இருக்க வேண்டும்; அத்துடன் சட்டசபைக்குக் கட்டுப்பட்டதாக இருக்கலாகாது.

(12) மனிதன் தன் இஷ்டப்படி நடந்துகொள்ள உரிமை அளிக்கப்பட வேண்டும். அவனுடைய அந்தரங்கக் காரியாதிகளில் சர்க்கார் தலையிடலாகாது. குறைந்த பட்ச அளவிலேயே சர்க்கார் அதிகாரங்கள் இருக்கவேண்டுமென்பது செத்துப்போன உளுத்துப்போன சித்தாந்தம்.

முஸொலீனி பதவிக்கு வருமுன் மத்திய சர்க்காரின் ஆட்சி இத்தாலியில் இல்லாமலேயிருந்தது என்று கூடச்

சொல்லலாம். ஸ்தல ஸ்தாபனங்கள் தனித்தனிச் சிற்றரசு கள் போல் அதிகாரம் செலுத்தி மத்திய சர்க்காரைஎதிர்க்கத் தைரியமும் படைத்திருந்தன. இதனாலேயே இத்தாலியப் பார்லிமெண்டைச் சந்தி சிரித்தது. முஸொலீனி, அவ்வளவை யும் தொலைத்துவிட்டு, மத்திய சர்க்காரின் நேரடியான அதிகாரத்தின் கீழ் நியமிக்கப்பட்ட பொடஸ்டா என்ற மாஜிஸ்திரேட் மூலம் அவற்றை யெல்லாம் ஒன்றாக இணைத்தான். மாகாண மாஜிஸ்திரேட்தான் ஸ்தல விவகாரங்களில் முடிவான அதிகாரம் படைத்தவர். பொது ஜன அமைதியைப் பாதுகாத்து நிர்வாக இலாகாக்களை இணைப்பதும் அவர் பொறுப்பே. அவர் உள்நாட்டு மந்திரிக்கே ஜவாப்தாரி.

பேஸிஸ்ட் சர்க்காரில் அரசன்தான் பிரதம நிர்வாக அதிகாரி. பிரதம மந்திரி, நிர்வாகம் நடத்தும் சர்க்காரின் அதிகாரி. இதர மந்திரிகள் யாவரும் தனித் தனியாகப் பிரதம மந்திரிகட்கு உட்பட்டவர்கள். அவன் மூலமாகவே அரசனுக்குக் கட்டுப்பட்டவர்கள். அதாவது இதர மந்திரி களுக்கும் மன்னனுக்கும் நேரடியான சம்பந்தம் கிடையாது. மேலும், பிரதம மந்திரி அவர்கள் மீது அதிகாரம் செலுத்த உரிமையுள்ளவனே தவிர, மன்னனிடம் அவர்களின் பிரதிநிதி என்ற ஹோதாவில் செல்வதில்லை. ஆகையால் பிரதம மந்திரி தான் எல்லாம். அவனுக்கு மேல் பெயரளவில்தான் அரசன் அதிகாரி. இன்னும், பிரதம மந்திரி மன்னனுக்குக் கட்டுப்பட்டவனே தவிர, பார்லிமெண்டுக்குக் கட்டுப்பட்ட வனில்லை. இதல்லாமல், பிரதம மந்திரிக்கு வேறு அதிகாரங் களும் உண்டு. மன்னன் மைனராக இருக்கும் பட்சத்தில், நிர்வாகத்தை நடத்த நியமிக்கப்படும் ரீஜென்ஸி கௌன் ஸிலில் நியமனம் பெறாமலே அவன் அங்கத்தினனாயிருப் பான். அதிலுள்ள ராஜ குடும்பத்தைச் சேர்ந்த அங்கத் தினரைத் தவிர மற்றவர்களில் முதன்மை வகிப்பவன்

அவனே. பிரதம மந்திரியின் உயிருக்கு ஹானி தேடுபவனுக்குக் கடுந்தண்டனை விதிக்கும்படி சட்டமுண்டு.

இத்தாலியப் பார்லிமெண்டில் இரண்டு சபைகள் உண்டு. ஒன்று செனெட்; மற்றொன்று பிரதிநிதித்வ சபை அல்லது கீழ்ச் சபை. இந்தக் கீழ்ச் சபையில் தேசத்தில் பொருள் உற்பத்தி செய்யும் சக்திகளைப் பிரதிநிதிகளாக்குவதே முஸோலீனியின் நோக்கம், அதாவது, அதை முதலாளிகளின் கிடங்காக்குவது. மேல் சபையில் ராஜ குடும்ப அங்கத்தினர்கள், பிரபலஸ்தர்கள், குறிப்பிட்ட அளவு வரி செலுத்துபவர்கள் —முதலியோர் பிரதிநிதிகள்; அதாவது, அது முதலாளிகளுக்கு வால்பிடிப்பவர்களின் கூடாரம்.

முஸோலீனி, தேசத்திலுள்ள பொருளுற்பத்தி ஸ்தாபனங்களை யெல்லாம் பேஸிஸ்ட் அணுக்களாக வகுத்து, அவற்றிலிருந்து கீழ்ச் சபைக்குப் பிரதிநிதிகளைத் திரட்டுகிறான். அதனால் எதிர்க்கட்சி என்பதற்கே அங்கு இடம் கிடையாது.

நாட்டிலே இவ்வாறு பேஸிஸ்டுகள் எதிரிகளையெல்லாம் துவம்சம் செய்து விடவே, இத்தாலியின் புதிய ஆட்டத்தை அதிரவைக்க அந்நிய நாடுகளில் ரகசியக் கூட்டங்கள் பலாத்கார முறைகளை அந்தரங்கத்தில் வகுக்க ஆரம்பித்து விட்டன. 1927-ம் ஃ ஏப்ரல் மாதம் இத்தாலிய மன்னன் மீது வெடிகுண்டு வீசப்பட்டது. ஆனால், மாண்டவர்கள் சுற்றியிருந்த 16 பேர்கள். இதன் விளைவாகப் பொதுவுடைமைவாதிகள் யாவரும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுக் கடுந்தண்டனை விதிக்கப்பட்டார்கள். அயல் நாடுகளில் உள்ள ஸ்தானீகர் காரியாலயங்கள் எல்லாம் வெடிகுண்டு விபத்துக்களுக்கு உள்ளாக ஆரம்பித்தன. நான்கு வருஷங்களில் 27-முறை ஏற்பட்ட இவ்விபரீத நிகழ்ச்சிகளால் சிறைசென்றவர்கள் அனந்தம் பேர். நான்ஸி, பியூனாஸ் அயர்ஸ், லீஜ், தூனிஸ், லூஸம்பர்க், பிரஸெல்ஸ், பேயன்ஸா, கர்டோவா, பாரிஸ், லுபானோ,

கிரனோபிள், பிட்ஸ்பர்க், டின் முதலிய இடங்களில் வெடித்த வெடிகுண்டுகள் சில பேஸிஸ்ட் அதிகாரிகளைக் காயப்படுத்தியதுதான் மிச்சம். 1932–ம் ஆண்டு ஸ்பார்டோ லோட்டோ என்ற அராஜகன், முஸொலீனிக்கு எதிராகச் சதி செய்ததாகக் கைது செய்யப்பட்டு விசேஷக் கோர்ட்டு மூலம் மரண தண்டனை அளிக்கப்பட்டான். இந்த நிகழ்ச்சிகளைக் கண்ட முஸொலீனி, 'போபோலோ டி' இத்தாலியா' பத்திரிகையில், இக்குற்றங்கள் அடிக்கடி நிகழ்வதிலிருந்து வெள்ளை நாகரிகம் க்ஷீணித்துவிட்டது என்றே உணர வேண்டியிருக்கிறது என்று எழுதினான். இக்காலத்தில்தான் புரோருஸிட்டி என்ற பேஸிஸ்ட் எதிர்ப்புக் கட்சி ஒன்று தலைநிமிர்ந்து அட்டகாசம் செய்து கொண்டிருந்தது.

இதல்லாமல் பன்னிரண்டு முறை பேஸிஸ்ட் எதிரிகள் முஸொலீனிமீது தம் கைவரிசைகளைக்காண்பித்துத்தோல்வியுற்றார்கள். 1924-ம் ஆண்டு ஆகஸ்ட் 31௳, ரிவால்வர் குண்டு அவனைத் தாண்டிப் பின்புறத்திலிருந்த காரில் பாய்ந்தது.

1925ம் ஆண்டு நவம்பர் மீ 4௳ இத்தாலிய யுத்த சமாதான தினம் கொண்டாடப்பட்டபோது, பலாஜா சிக்கியில் நின்ற முஸொலீனியைக் கொலை செய்யச் சதி செய்த மாஜி ராணுவ உத்தியோகஸ்தனான ஜானிபோனி கைது செய்யப்பட்டான். இதன் விளைவாகப் பேஸிஸ்டுகளுக்கு எதிராகப் பிரசாரம் செய்ய முயலும் பத்திரிகை ஆபீசுகள் தீக்கிரையாயின.

1926-ம்ஆண்டு ஏப்ரல் 7ம்௳ சர்வதேச ரண வைத்தியர்கள் மகாநாடு ரோமாபுரியின் புராதனப்பகுதியான காபிடோவில் ஆரம்பமாயிற்று. அதற்கு ஊர்வலமாகச் சென்ற முஸொலீனியின்மீது குமாரி வைலட் கிப்ஸன் என்பவள் துப்பாக்கி கொண்டு சுட்டாள். குண்டு மூக்கின் மேல் உராய்ந்து கொண்டு சென்றது. லேசாகத் தலை யசைத்ததினால்தலை தப்பியது. இதைப் பார்த்துப், பெண்தான் என்று அவன்

கண்டதும், ''சீ, பொட்டச்சியா!'' என்றானாம். ரண வைத்திய மகாநாடு ஆரம்பிக்குமுன் முஸொலீனிக்கு வைத்தியம் செய்யும் கௌரவம் புரொபஸர் பாஸ்டியா நெல்லி என்பவருக்குக் கிட்டியது. பிறகு அன்று அவன் பலாஜா சிக்கி என்ற மாளிகை முன்நின்றிருந்த கூட்டத்தினிடையே மூக்கில் பாண்டேஜுடன் பேசும்போது, ''நீங்கள் இன்று என் முகத்தைப் பார்க்க முடியாது. ஆனால் என் குரலைக் கேட்க முடியும். நான் ஒரு சிறிதும் மாறவில்லையென்பது உங்களுக்குத் தெரியும்!'' என்றான். குமாரி வைலட் கிப்ஸன் முஸொலீனிக்குப் பிரதம அந்தரங்கக் காரியதரிசியாகக் கொஞ்சநாள் இருந்தாள். இச்சம்பவம் நிகழ்வதற்கு 15 நாட்களுக்கு முன்புதான் அவளுடைய தாயார் இறந்து போனாள். அவளைப் பைத்தியம் என்று சிறைக்கு அனுப்பிவிட்டார்கள். இந்தச் சம்பவத்தின்போது தான் முஸொலீனி வேறோர் இடத்தில் செய்த பிரசங்கத்தில், ''குண்டுகள் பறக்கின்றன ஆனால் எனக்கு ஆபத்து ஏற்படுவதில்லை. நான் முன்னேறிச் சென்றால் என்னைப் பின்பற்றுங்கள்! நான் பின்னடைந்தால் என்னைக் கொன்றுவிடுங்கள்! நான் கொல்லப்பட்டால் என்மீது வஞ்சந் தீருங்கள்!'' என்று பிரசங்கம் செய்தான்.

இதல்லாமல், செப்டம்பர் 11ந் தேதியும் லூஸெட்டி என்ற அராஜகன் அவன்மீது வெடிகுண்டு எறிந்தான். பிரயோசனமில்லை. அதற்கு ஆறு வாரம் கழித்து, பேஸிஸ்ட் ராஜாங்க ஊர்வலத்தில் செல்லும் முஸொலீனி மீது ஜாம்போனி என்ற அராஜகன் ரிவால்வர்கொண்டுசுட்டான். குண்டு பெல்ட்டின் பொத்தான் மீதுபட்டுத் தெறித்தது. முஸொலீனி தப்பினான். பக்கத்திலிருந்தவர்கள் ஜாம்போனியை ஸ்தலத்திலேயே குத்திக்கொன்றனர். அவனுடைய சிதைந்த உடலின்மீது 40 கட்டாரிக்குத்துகள் காணப்பட்டன.

இதன் விளைவாக எதிர்ப்புப் புகை பலமாவது கண்ட

முஸொலீனி ராஜாங்கப் பாதுகாப்புக் கென்று ஒரு விசேஷக் கோர்ட்டு அமைத்தான். அது ஆயிரக் கணக்கானவர்களைத் தண்டித்துக் கண்ணற்ற தீவுகளில் அடைத்துச் சித்திரவதை செய்தது.

★

## 22. மாட்டியோட்டிகளும், கிரமேஷிகளும்

பேஸிஸ்ட் அதிகாரம் வேரூன்றுவதற்காக இத்தாலியில் செய்யப்பட்ட கொடுமைகள் யாரையும் திடுக்கிடச் செய்வன. குண்டுகளால் மரித்தவர் எத்தனை பேர்! தீவுகளிலும் சிறைக்கூடங்களிலும் வருஷக்கணக்காக மரித்துக்கொண்டே யிருப்பவர் எத்தனை பேர்! துன்பத்தால் பைத்தியம் பிடித்தவர் எத்தனை பேர்? இவற்றிற்கெல்லாம் காரணந் தான் என்ன? புகழ்பெற்ற எழுத்தாளரும் பிரெஞ்சு அறிஞரு மான ஸ்ரீ. ரொமெய்ன் ரோலண்டு இக்காரணத்தை அலசி யெடுத்துக் காண்பித்திருக்கிறார். ஒருவனுடைய அசட்டுத் தனம் மற்றெல்லாருடைய விதிகளையும் நாசப்படுத்துகிற தென்று அவர் கூறுகிறார்.. பேஸிஸ்ட்ஆட்சி, மனித வர்க் கத்தின் மனச்சாட்சியையே தலைகுப்புறத் தள்ளுகிறதென்று அவர் எடுத்துக் காட்டியிருக்கிறார். கொலைகளிலெல்லாம் பெருங்கொலை சுதந்திரத்தை வதைப்பது என்று துடித் திருக்கிறார். இத்தாலி முன்னால் நெடுங்காலம் அந்நியருக்கு அடிமைப்பட்டுக் கிடந்ததன் பின்பு, இப்பொழுது, மிகுந்த அறிவும், உறுதியும் கொண்ட ஒரு சுதேசிக் கொடுங் கோலனிடம் அகப்பட்டுத் தவிக்கிறதே என்று அவர் ஏங்கியிருக்கிறார். ஆனால், சிறைக்கூடங்களுக்குள்ளேதான் புதிய லட்சியப் பயிர் உண்டாகிறதென்றும், சோகத்தால் துடிக்கும் ஆயிரக்கணக்கான லட்சியவாதிகளின் கண்ணீரே அப்பயிரை வளர்க்கிற தென்றும், அந்தப் பயிரை யாராலும் அழிக்க முடியாதென்றும், அவர் தெரிவித்திருக்கிறார். அவர் கூறியுள்ள விஷயங்கள் வருமாறு:

''19, ஏப்ரல், 1926.

''அடுத்த புதிய யுத்தம் வந்தால் ஐரோப்பா அழிந்து விடும் என்பது நிச்சயம். நமது ஐரோப்பா அந்த அதிர்ச்சியி லிருந்து எழுந்திருக்க முடியாது. மேல் நாடுகள் முழுவதும் ஒரேயடியாக இருளடைந்து விடும்.

''யுத்தத்தைத் தூண்டுவது அல்லது, அதைத் தடுப்பதற்கு எல்லா விதத்திலும் முயற்சிக்காமல் இருப்பது, பிரான்ஸையும், மேல் நாட்டு நாகரிகத்தையும், ஐரோப்பிய ஜீவசக்தியையும் எதிர்த்து மன்னிக்க முடியாத குற்றமிழைப்பதாகும்.

''நாம் இதை உரக்கக்கூறி வற்புறுத்திப் பறைசாற்ற வேண்டும். குற்றம் இழைப்பதற்குத் தயார் செய்யப் படுகிறது. குற்றவாளிகள் எங்கும் இருக்கிறார்கள். ஐரோப்பாவிலுள்ள ஒவ்வொரு தேசத்திலும் பொது மக்களிடையே அவர்கள் வசிக்கிறார்கள். நமக்குப் பக்கத்திலிருக்கும் ஒரு ராஜ்யத்தில் ஒருவன் தலைமை வகிக்கிறான். அவன் சமாதானத்தைப் பட்டவர்த்தனமாகக் கேலி செய்து, அதைக் கொலை செய்ய முயற்சிக்கிறான்.........

''ஒருவனுடைய அசட்டுத்தனம் மற்ற எல்லாருடைய விதிகளையும் நாசப்படுத்தும் துரதிர்ஷ்டமான நிலையில் ஐரோப்பா இருக்கிறது. ஆகையால் ஐரோப்பா சாந்தியைக் காப்பாற்றுவாளாக. அதுதான் அவளுக்கு இருக்கும் சொற்பப் பொக்கிஷம். இருந்தாலும் அதுதான் அவள் வசம் பெரிய சொத்தாக இருக்கிறது. அது அவள் ஜீவன். எந்தத் தேசமோ, எந்தத் தனி மனிதனோ அதைப் பறிக்க முயல்வானாயின், அவன் நாசமடையக் கடவதாக! ஐரோப் பாவின் ரத்தக் கறை அவன் தலையில் படிந்து, அதன் பலனை அவன் அனுபவிப்பானாக!'' ★

''23, ஏப்ரல், 1926.

''இத்தாலிய பேஸிஸத்தை அடிப்படையாகக் கொண்டு எழுந்த ஆட்சி. மனித வர்க்கத்தின் மனச்சாட்சியைத் தலை

குப்புறத் தள்ளுகிறது. பொய்யையும் பயத்தையும் சுமத்திப் புனிதமான சுதந்திரத்தைக் கேவலப்படுத்துவதின் மூலம் அது ஆட்சி நடத்துகிறது.

''அதை பிரான்ஸில் கொண்டுவர முயல்வதே ஒரு பெருங்குற்றம்; சிந்தனைச் சுதந்திரமுள்ள பிரான்ஸின்மீது ஒரு பெரும் குற்றம் இழைப்பதாகும். புரட்சியை நடத்திய ஒரு மகத்தான சுதந்திர தேசத்தின்மீது குற்றமிழைப்ப தாகும். சுதந்திர ஜீவாத்மாக்களின்மீது குற்றமிழைப்ப தாகும்.

''நான் கொலையை மன்னிக்க மாட்டேன். நான் எல்லாக் கொலைகளையும் கண்டிக்கிறேன். சுதந்திரத்தைக் கொலை செய்பவனே பெரும் குற்றவாளி.''

''11, மே, 1927.

''அன்பார்ந்த பிலிப்போ தூராட்டி,

''எங்கள் அன்புக்குப் பாத்திரமான, மகத்தான இத்தாலியின், சுதந்திர இத்தாலியின், சித்திரவதை செய்யப்பட்ட உங்களையும் உங்கள் பிரதிநிதிகளையும் நாங்கள் பாராட்டுகிறோம்.

''ஐயோ, துரதிர்ஷ்டமுள்ள இத்தாலியே! தியாகிகளின் தேசமே! வருங்கால மனித வர்க்கத்தையும், சாகா வரம் பெற்ற தர்மத்தையும், நீதியையும் பாதுகாப்பதற்காக எத்தனையோ நூற்றாண்டுகளாக ரத்தத்தையும் கண்ணீரை யும் கொட்டியிருக்கிறார்கள். அயலான் ஒவ்வொருவனுடைய நுகத்தடியும் உன் கழுத்தை அமுக்கியிருக்கிறது. ஆனால், இப்பொழுது சுதந்திரமடைந்த உடனேயே, அதனினும் கொடுமையான விதி உன்னை ஆட்டிவைக்கின்றது. உன் கொடுங்கோலன் ஒருவனே உனக்கு விலங்கிட்டு விட்டான். இப்படியாகத் தொழிற் சுறுசுறுப்பும் செழிப்புமுள்ள இத்தாலி, பூகம்பங்களாலும் அக்கினி ஆறுகளைக் கக்கும் எரிமலைகளாலும் அழிக்கப்பட்டு வருகிறது.

''பஞ்ச பூதங்களின் எதிராக அறிவு எதிர்த்துப் போராடு மாக! அடிமைப்பட்டுக் கிடக்கும், அவமானப்படுத்தப்படும் மகா ஜனங்களின் சுதந்திரத்திற்காக நீங்கள் போராட வேண்டும். நீங்கள் உலக மகா சுதந்திரத்திற்காகவே போராடுகிறீர்கள்.

''பிரச்னை இதுதான். யார் முடிவில் வெற்றி பெறு வார்கள்? மனித வர்க்கத்தை அடிமைப்படுத்தும் மிருக பலமா? அல்லது விலங்குகள் தாமே கழன்று விழும்படி செய்யும் அறிவுச் சுடரா?'' ★

''செப்டம்பர், 1934.

''முஸொலீனியின் சிறையில் மாளும் அண்டோனினோ கிரமேஷி முதலியோருக்கு......

ஹிட்லரின் துர்நடத்தைகளில் ஒன்று முஸொலீனியை இருட்டுக்குள் தள்ளிவிட்டது. மகா காவிய பந்தாவில் எரி யூட்டுவதும், சித்ரவதை, சர்வ சம்ஹாரம் முதலியன செய் வதும், மெஷின் கன்னும் விளக்கெண்ணெயும் வைத்து மகா வீரீயவானுடைய பிரபலத்தை ஒளிகுன்ற வைத்துவிட்டன. அடோல்புக்கு (ஹிட்லர்) அருகில் பெனிட்டோ அவன் பெயருக்கேற்பச் சாதுவாகி விட்டான். கிழடுதட்டும் ஜடா முனி அந்தஸ்துள்ள மனிதனாகிவிட்டான். தொந்தி வைத்து விட்டது. சமீபத்தில் நம் பார்வைக்கு வரும் அவனது புகைப்படங்களில் கிண்டல் கலந்த தாராளச் சிரிப்புடன் தோன்றுகிறான். பிரெஞ்சு-இத்தாலிய ஒப்பந்தத்தின் அவசியங்களினால், அதை இழந்தால் ஹிட்லர் காலில் விழ வேண்டியிருக்கும் என்ற ஒரு கட்சியை இடைவிடாமல் பிரசாரம் செய்வதின் மூலம், கட்சிப் பிணக்குகள் சூழ்ந்த ரோமாபுரிக்கும் அமைதியும் சாந்தியும் நிறுவுவதாக நமக்கு இடைவிடாமல் எடுத்துக் கூறப்படுகிறது. அவன் பெரிய மனுஷன். பூர்ஷுவா மனத்திற்கேற்றவன். அவனுடைய கதை குழந்தைகளின் 'நன்மை'க்காக 'யோக்கியமான' சாறில்லாத சக்கை நடையில் எழுதப்படுகிறது.

''இந்தக் கோலாகலங்களை நாம் கலைக்க வேண்டாம். ஆனால் நாம் வேறு ஒரு ராகத்தில் பாடவேண்டியிருக்கிறது. ஜெர்மனியில் கொலைகள் நடைபெறுவதால் மாட்டியோட்டியை நம்மால் மறக்க முடியாது. தேல்மனுடைய 18மீ" சிறை, கிரமேஷியின் 7 வருஷச் சிறை அனுபவங்களை மறைத்துவிடாது.....உங்கள் தூஸேக்கு அருகில் பூஹ்ரருக்கு (ஹிட்லர்) இடவசதி செய்யுங்கள். ஏன், உயர்ந்த இடத்தில் அவன் இருப்பதுதான் சரி. அவன் குரு, இவன் சிஷ்யன்.

''இவ்விருவரையும் ஒரே ஸ்தானத்தில் வைத்து அவனை அவமதிப்பது என் நோக்கமன்று. ஆரிய நாகரிகம் என்று கூக்குரலிட்டுக் கொண்டிருப்பவனிடம் அறியாமையே குற்றத்தின் தந்தை. மார்க்ஸும் மாக்கியவில்லியும் பயின்றவனுக்கு (முஸொலீனிக்கு) எல்லாவற்றையும் தூண்டுவதும், தீமையையும் நன்மையையும் தூண்டுவதும் அறிவுதான். ஆனால் சீற்றம், பெருமை, வெறுப்பு இவையெல்லாம் அவனுடைய காதலிகள். என்ன செய்கிறோமென்று அவனுக்குத் தெரியும். ஹிட்லரைப் போல, தன் வெறுப்புக்கள் இழுத்த திசையில் செல்லும் வெறியனல்லன் அவன். எந்தக் காலத்திலும் சிந்தனைகள் அவனைத்தூண்டவில்லை அவனே சிந்தனைகளைத் தூண்டுகிறான். அவன் அவற்றின் படி நடப்பதில்லை, அவற்றை அவன் இஷ்டப்படி நடப்பிக்கிறான். அவை என்னவென்று அவனுக்குத் தெரியும். அவைகளின் அர்த்தம் என்னவென்பதும் அவனுக்குத் தெரியும். அவை எவற்றைக் கண்டிக்கின்றன என்பதும் அவனுக்குத் தெரியும். ஏனென்றால் அவற்றைக் காட்டிக் கொடுத்தவன் அவனே! இன்று அவன் சித்திரவதை செய்பவைகளில் சிந்தனையும் ஒன்று. அவனுக்குப் புத்தியில்லையென்று நாம் அவனைக் குற்றம்கூற முடியாது. அவனுடைய பகைவர்கள் அவனை வெறுக்கும் காரணம்என்னவென்பதை அறிந்துகொள்ள மற்றவர்களிடம் போய் ஆலோசனை கேட்கும் அவசியமில்லை அவனுக்கு. அக்காரணங்களை அவன் பார்க்காதிருப்பதன் காரணம், அவற்றை அழிக்கும் போது மனத் தொந்தரவு ஏற்படக்கூடாது என்பதே.

அதனால்தான் அக்காரணங்கள் இல்லையென்றே அவன் நிராகரித்து விடுகிறான். தான் மறுப்பது இருக்கிறது என்பது அவனுக்கு நன்றாகத் தெரியும். அவன் போர் தொடுத்துவருவது இணங்கவில்லையென்பதும் அவனுக்குத் தெரியும். தேசப் பிரஷ்டத்திலும் சிறைக் கோட்டங்களிலும் அவன் சட்ட விரோதமாக்கிய (அவனே பயிர்செய்த) எண்ணங்கள், குறுகுறுக்கும் மனச்சாட்சி போல, இருந்து வருகின்றன வென்பதும் அவனுக்குத் தெரியும். அவனுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமான, அவன் கட்டளைகளை மிருத்யுவின் ஆலய வாசல்வரை ஏற்றுச் செல்லக்கூடிய பணியாட்கள்மீது அவன் கசந்துபோயிருப்பதற்குக் காரணம் இதுதானா? அவனது அறிவே ஹிட்லர் அடைய முடியாத ஒரு கௌரவத்தை அளிக்கிறது. அவன் கையில் சிக்குண்டவர்களை அவன்முன் நிறுத்திக் காரணம் கேட்போம், அவன் அறிவு மிகுந்த கொடுங்கோலன். சோனிகள் விதியென்று சொல்லிக்கொண்டிருக்கும் சந்தர்ப்பத்திற்கு அவன் ஒன்றையும் விட்டுவிடுவதில்லை. செய்வதையெல்லாம் மனஉறுதியுடனேயே செய்கிறான். அவனுடைய அறிவே அவனுக்கு ஒரு தனிக் கௌரவம் அளிக்கிறது. அதைப் பெற ஹிட்லருக்கு அருகதை கிடையாது.''

★

''இத்தாலியில் சுற்றுப் பிரயாணம் செய்துவிட்டுப் பாரிஸுக்குத் திரும்பிய சில நல்ல மனிதர்கள் பேஸிஸத்தின் அபார அழகுகளை மூட்டை கட்டி வந்திருக்கிறார்கள். அங்கே கொடுமையின் சாயையே விழுவதில்லையாம். எதிர்ப்பு என்ற பேச்சே மருந்துக்குக்கூடக் கிடையாதாம். சிறைக் கிடங்குகளிலும் அப்படித்தானாம். அங்கிருந்து நாடுகடத்தப்பட்டவர்களையும் கேட்டுக்கொள்ளலாமாம். அவர்கள் பின்வரும் குறிப்புக்களைத் தருகிறார்கள்: 1932ம் ஆண்டு வரை இத்தாலிய விசேஷக் கோர்ட்டு முன் 3500 பேர் விசாரணை செய்யப்பட்டனர்.

''2000 பேர் தண்டிக்கப்பட்டனர்.

''1926-ம் வருஷத்திற்கப்புறம் மொத்தம் 3000 பேர் நாடு கடத்தப்பட்டனர். 1932ம் வருஷத்தில் சந்தேகத்தின் பேரில் 276 பேர் விசாரணையின்றிக் கோர்ட்டின் முன் ஆஜர் செய்யப்பட்டனர். 220 பேர் தண்டிக்கப்பட்டனர் அவர்களில் இருவர் சுட்டுக் கொல்லப்பட்டனர். 700 பேர் நாடு கடத்தப்பட்டனர். 10,000 பேர் கைது செய்யப்பட்டு, சிறிதுகாலம் காவலில் வைக்கப்பட்டு, பிறகு விடுதலை செய்யப்பட்டனர்.

''1933ம் வருஷத்தில்; ''61 பேர் தண்டிக்கப்பட்டனர். 600 பேர் நாடு கடத்தப்பட்டனர். 500 பேர் விசாரணைக்கு முன் சிறையில் கிடக்கின்றனர். சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு, பிறகு சிறிது காலம் காவலில் வைக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டவர்கள் 13,000 பேர்.

''1926-ம்௵ நவம்பர் மாதத்திற்கப்புறம், அதாவது, ராஜாங்கத்தைப் 'பாதுகாப்பதற்காக' விசேஷபேஸிஸ்ட் சட்டங்கள் பிறப்பிக்கப்பட்டதும், ஆயிரக்கணக்கான ஸ்திரீகள் கைது செய்யப்பட்டனர். அவர்களில் பலருக்கு 17 அல்லது 18 வருஷம் தண்டனை. பெரும்பான்மையோர் டிரானி சிறையிலோ அல்லது போன்ஸா தீவிலோ காவல் வைக்கப்பட்டிருக்கின்றனர். சிறையில் சுகாதார நிலை எவ்வளவு கேவலமா யிருக்கிறது என்பதைச் சொல்லி முடியாது. டூரின் பள்ளிக்கூட உபாத்தினியான காமில்லா ரவேரா, பொலோனா ஆசிரியையான லியா கியாகாக்லியா போன்ற பலருக்கு இரத்தாசய காச நோய் வியாதிகள். இவர்கள் யாவரும் தனிச் சிறையில் அடைக்கப்பட்டுக் கிடக்கின்றனர். பலர் புத்தி ஸ்வாதீனத்தையே இழந்து விட்டனர். உதாரணமாக, ஜியார்ஜினா ராஸெட்டி என்ற யுவதி மான்கிராண்டோ பருத்திச் சாலையில் வேலை செய்து கொண்டிருந்தவள். அவளுடைய ஒரே குற்றமென்ன வென்றால், அவளுடைய காதலன் சிறை செய்யப்பட்டி ருந்ததே.

''கைது செய்யப்பட்டவர்களின் குழந்தைகள் ரோம், மிலான், டிரிஸ்டி முதலிய இடங்களில் காவலில் வைக்கப்

பட்டிருக்கின்றன. பியானோஸா, ஸிவிட்டா வெச்சியா என்ற இருளடைந்த சிறைக் கூடங்களில் தவித்து மடியும் தியாகிகளின் சரித்திரம் இனித்தான் எழுதப்பட வேண்டும்.

''அம்பர்டோ டெராஸினி என்ற வக்கீல் ஸிவிட்டா வெச்சியா சிறையில் 20 வருஷத் தண்டனை அனுபவித்து வருகிறார். காசநோய் அவரைக் கொன்று வருகிறது. கிரோலாமோ லிகாஸி என்ற ரோமன் கத்தோலிக் பாதிரியாரின் நிலைமை ரொம்ப மோசமாக இருக்கிறது. ஆனால் தண்டனை 20 வருஷம், ஒன்பது மாதம். அபேதவாதியான தூராட்டியின் நண்பன் ஸான்ரோ பெர்ட்டின், பியானோஸா சிறையில் வாடுகிறான். சிற்பியான பெராரா கினோ லூஸெட்டி என்பவனுக்கு 30 வருஷம் தண்டனை. கண் குருடாகி வருகிறது. இஸிடோரோ அஸாரியோ என்ற ஸ்டேஷன் மாஸ்டருக்கு 10 வருஷம் தண்டனை. அவருக்குப் பைத்தியம் பிடித்து பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் காவல் வைக்கப்பட்டிருக்கிறார். மாஜி பார்லிமெண்ட் டெபுடியான டோமெனிக்கோ மார்ஷியோரோ என்ற பொதுவுடைமை வாதிக்கு 17 வருஷம் தண்டனை. வயிற்றில் பெருவியாதி. இவர்கள் எல்லோரிலும் முக்கியஸ்தனும் பிரபலஸ்தனுமான அண்டோனினோ கிரமேஷியும் சிறையில்வாடுகிறான்.

''அவன் வீரன். அவனுடைய கஷ்டங்கள் அவனுடைய விசேஷத் திறமைகளைக் காண்பிக்கின்றன. இத்தாலியின் சரித்திரத்தில் மாட்டியோட்டியின் அருகில் அவன் பெயரும் செதுக்கப்படும். அவன் தாராளமான இதயம் படைத்தவன். விசாலமான அறிவு படைத்தவன். இத்தாலியில் புதிய சமூகத்தைச் சிருஷ்டிக்க முனைந்தவர்களில் அவன் ஒருவன்......

''அவனும் இறந்துவிடுவான். இத்தாலியப் பொதுவுடைமை இயக்கமும் ஒரு பெரிய தியாகியைப் பெறும். வருங்காலப் போராட்டத்தில் இந்த வீரச்சுடரே அவர்களை முன்னழைத்துச் செல்லும். அதுதான் முஸொலீனியின் எண்ணமா? சமீபத்திலே புராதன ரோமன் போரத்தில்

(அரங்கு-Forum) 'கார்னியில்' என்ற நாடகம் நடிக்கப்படு வதைப் பார்க்கச் சென்றான். நெப்போலியன் போலக் காப்பி அடிப்பதில் ஆசை போலும்! ஆனால் நெப்போலியன் தனது டில்ஸிட் வெற்றியின்போது ஸின்னா என்ற நாடகத்தை நடிக்கும்படி ஏவினான். முஸொலீனியும் அதை வாசித்தால் நலம்தான். தன்னிடம் எது இல்லையென்பதை அவன் கண்டு கொள்ளலாம். அதுதான் தாராளத்தன்மை.''

★

''4, நவம்பர், 1934.

''பார்ஸலோனா, ஒவீடோ யுத்த வீரர்களுக்குப் புகழ் உண்டாவதாக! 1871-ம் வருஷத்துக்கப்புறம் மேற்கு ஐரோப்பாவில் ஏற்பட்ட பொதுஜன உழைப்புத் தொண்டர் களுக்கு வெற்றி உண்டாவதாக! அவர்களது தோல்வியே ஸோவியத் புரட்சி வெற்றிக்குக் காரணம். ரத்தக் கறை படிந்த அஸ்தூரிய மலைச்சாரல்களிலிருந்தும் வெற்றியென்னும் ஜீவநதி ஐரோப்பா வெங்குமே பாயும்! உலகம் முழுவதுமே அதன் பாசனத்தில் செழிக்கும். இதுவரை தோற்கடிக்கப்படாத ஸ்பானியப் புரட்சியுடன் நமக்குள்ள ஐக்கியத்தைப் பறைசாற்றுவோம். அதன் தியாகத்திற்காக நாம் பெரிதும் கடமைப்பட்டிருக் கிறோம். அதன் காயங்களை ஆற்ற முயல்வோம். அதன் கொலையாளிகளிடமிருந்து அவர்களைத்தப்பவைப்போம்.''

○

''10, ஜூன், 1934,

''இன்று உலகத்தில் மூன்றில் இரண்டு பங்கு முதலாளித்வ அமைப்பின் கீழ் இருக்கிறது. அதன் விளைவே ஏகாதிபத்திய யுத்தம் என்று சொல்லலாம். யுத்த ஆயுதங்கள், உற்பத்தியாளர்கள், யுத்த தளவாடங்கள், இரும்பு, பெட்ரோல், ரஸாயனப் பொருள்கள் இவற்றை உற்பத்தி செய்பவர்கள் முதலாளிகள். இவர்கள்தான் எல்லா சர்க்கார்களிலும் பின்புறமிருந்து அவைகளை ஆட்டிவைத்து வருகின்றனர். கையில் ஆயுதம் தாங்கிய

கப்பெனி ஏஜெண்டுதான் தோற்கடிக்கப்பட்ட தேசங்களில் வெற்றி வாகை சூடிய முதலாளித்வத்தின் பொருள்களைக் கொண்டு திணிக்கிறான். சமூக அதிருப்தியைப் போக்கடிப்பதற்கு இதுதான் எப்பொழுதும் செய்யப்படும் சூழ்ச்சி. 'தேசத்திற்கு ஆபத்து!' என்று கூப்பாடு போட்டு ராணுவச் சட்டம் பிறப்பித்து, புரட்சிகளை நசுக்கி விடுவார்கள். ருஷியாவைப் போல் யுத்தத்தில் ஈடுபட்ட பொது மக்களின் கஷ்டத்தையும் தோல்விகளையும் உபயோகித்து முதலாளித்துவ முறையை ஒழித்து, புதிய சமூக அமைப்பைப் புரட்சியின் மூலம் ஏற்படுத்துவது கடினம். பெரும்பான்மையாக 'யுத்தம், பொதுமக்களை ராணுவ அடிமைகளாக்கி, தாங்களே தங்களுக்கு வேண்டியவற்றைச் சிந்திக்கும் சிரமம் ஏற்படாதவாறு செய்துவிடுகிறது. மனித வர்க்கத்தின் ஜீவ சக்தியைத் தேசீயத் தற்பெருமை என்ற கோரஸ்வரூபத்தால் கொன்றுவிடுகிறது. அப்பாதையில் சென்றால் சர்வாதிகாரத்துவமும் பேஸிஸமுமே ஏற்படும். நாம் உயிரைக் கொடுத்து அது ஏற்படாதவாறு போராட வேண்டும். ஐரோப்பிய மக்களில் ஆயிரக்கணக்கானவர்கள் இந்த அபாயத்தை உணர்ந்து இதைத் தடுப்பதற்கு ஐக்கியமாக அணிவகுத்து நிற்க ஆரம்பித்துவிட்டனர்....

''புதிய பொதுவுடைமைச் சமூகம் தங்களது ஆத்மார்த்த உரிமைகளைப் பாதிக்கிறது என்று ஏன் பயப்படவேண்டும்? உண்மையில் அது விஸ்தாரமான, ஆழ்ந்த, நிரந்தரமான அபிவிருத்தியின் அறிகுறியாக அல்லவோ இருக்கிறது! கொப்பர் நிகஸ்ஸும், கலிலியோவும் சொல்லிய உண்மைகள் பூலோகம் என்ற இந்தக் கிரக மண்டலத்தின் தனி விசேஷத்தை நாசப்படுத்திவிட்டது என்றல்லவோ பயந்தனர். பூமண்டலத்துக் கப்பால் எல்லையும் வரம்புமில்லாத வான் வெளி இருக்கிறது என்ற அறிவு தங்களையே நசிக்கச் செய்துவிட்டது என்று பயந்தார்கள்.

''அப்படியே இன்றும் போலித் தனி மனித சுதந்திரம் என்னும் தத்துவம் உண்மைக்கு மாறாகத் தனக்குள்ளேயே

தன்னைக் கட்டிக் கொண்டு, யாவரிடமும் இருக்கும் மனிதத் தன்மையை மறக்க முயலுகிறது. அன்று உலகம் சூரியனைச் சுற்றி வருகிறது என்று சொன்னதற்காகத் தண்டித்த பிற்போக்காளர்களான 'அறிவாளி'களின் இரத்த சகோதரர்கள்தாம் இன்று காணப்படும் இந்த நபர்களும். அன்று அவர்கள் கலிலியோவைத் தண்டிப்பதன் மூலம் உலகம் சுற்றுவதைத் தடுத்துவிட நினைத்தார்கள். இன்று பிரெஞ்சு அறிவாளிகளும் தங்களது அதிகாரத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காக மனித வளர்ச்சியின் அபூர்வ விதிகள் வேலை செய்வதை முட்டுக்கட்டை போட்டுத் தடுக்க முயற்சிக்கின்றனர். இந்தத் தலைகீழ்ப் புரட்சியின் மறைமுகமான காரணம் இதுதான். அவர்களுடைய ஆத்மார்த்தப் புரட்சி ஒரு ஜாதிக் கட்டுப்பாடு. அது அந்த ஜாதியின் நன்மைக்குத் தவிர வேறு யாருக்குமில்லை.

''இன்னும் அவர்களுக்கு அரசியல் விஷயங்களின் நுணுக்கம், அதன் ரகசிய மறைகள், திருகாணிகள் இவைகளைப் பற்றி ஒன்றும் தெரியாது. அவர்களது தற்பெருமை அவர்களைமறைத்துஅதிகாரம் வகிக்கும் நபர்கள் பக்கம் கொண்டு போய்த் தள்ளுகிறது.. அவர்கள், இந்தக் கண்மூடி 'பூர்ஷுவா'க்களின் பயங்களை எழுப்புவதற்கு, அதாவது, பேஸிஸ்ட் மாத்திரைகளில் சர்க்கரை தடவுவதற்கு, இவர்களை உபயோகிக்கிறார்கள். ஐரோப்பாவில் எல்லா இடங்களிலும் பேஸிஸத்தின் ஆட்சியே அமுலுக்கு வந்து விட்டது. ஒன்று, அது கண்டகோடரி தாங்கிப் பட்டவர்த்தனமாக அமுல் நடக்கிறது; அல்லது கொடியில் மறைந்த பச்சைப் பாம்பு மாதிரி, மறைமுகமாகப் பின்னுக்கு வேலை செய்கிறது. இத்தாலியிலும் ஜெர்மனியிலும் அது என்ன ரூபம் எடுத்ததோ, அதே ரூபம்தான் பிரான்ஸிலும் ஏற்பட வேண்டும். என்பது கட்டாயமில்லை. ஜெர்மனியின் கட்டுப்பாடான ஜாதீய ஐக்கியம் பிரான்ஸுக்கு ஏற்காது. ஏனென்றால் இது பத்து ஜாதிகளின் கதம்பம். இத்தாலிய தூஸேயின் அபார சாமர்த்தியம் சந்தைக் கடையில் விற்கும் சரக்கன்று. அதை ஏற்றுமதியும் செய்ய முடியாது.

பிரான்ஸிலே பூர்ஷுவாக் கும்பலும். உத்தியோகஸ்தர் கூட்டமுந்தான் ஒன்று கூடி பேஸிஸத்தை அமைக்கமுயலும். தலை கொழுத்துப்போன அறிவாளிகள், திமிர் பிடித்துப் போன நபர்கள் அதற்கு உடுக்கடிப்பார்கள். ராணுவமும் இதற்குத் தகுந்தாற்போல் களைபிடுங்கிவளர்க்கப்படுகிறது. பாங்கியிலும் பொருளுற்பத்தியிலும் ஈடுபட்டிருக்கும் ஒரு சுயநலக் கும்பல் பிரான்ஸில் பேஸிஸ்ட் பொம்மலாட்டம் காட்ட முயலும்—அதாவது வியாபார வெறிபிடித்த புராதன ரோம சாம்ராஜ்யக் கம்பெனி தளகர்த்தர் காலம் மாதிரி. இந்த அபாயத்தை எதிர்க்கவே நாம் வாலிபர்களைத் தட்டி யெழுப்ப வேண்டும். வாலிபர்களோ, எந்த வலையிலும் சிக்கக்கூடியபடி அனுபவமற்று இருக்கின்றனர். பார்லி மெண்டின் மீதிலும் கெட்டுப்போன ஆட்சியின் மீதிலும் பொதுஜன வெறுப்பு ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. பார்லிமெண்டைத் தொட்டால் நொறுங்கிவிடும். ஆனால், வாலிபர்களும் பொதுமக்களும் அணி வகுப்புப் பட்டாளம். இவர்கள் மீது பேஸிஸக் கொடுங்கோலன் சவாரி செய்கிறான். அவர்தான் உண்மையான பகைவன். அவனை நசுக்க வேண்டும்!''

★

## 23. பேஸிஸ்ட் ரதம் புறப்படுகிறது

மெஷின்-கன். தற்காலிகப் பரீட்சார்த்தக் கலியாணம், விவாகரத்து, விஷவாயு இவற்றைப் போன்ற விஷயங்களை வைத்து நாகரிகத் தன்மையைக் கணிப்பது ஒருமுறை. இவற்றைப் போல, விபூதிச் சம்புடம், பிராத ஸ்நானம், சதி, வேதம் சாஸ்திரங்கள் ஆகியவற்றின் உண்மைகளைக் கண்டு பிடித்து, அவற்றின் மூலம் நாகரிகத்தின் உயர்வை அளப்பதும் ஒருமுறை. இவ்விரண்டிலும் எது உயர்வு எது தாழ்வு என்பது விவாதத்திற்கு அநாவசியமாயினும், இன்று உயிருக்கு-பொதுவாழ்வுக்கு, அபாயத்தை விளைவிப்பது முன்னதாகும். ஐரோப்பிய அரசியல் அரங்கத்தில் காயுருட்டி விளையாடுவதற்கு ஒழுக்கமும் தர்மமும் துணை செய்வதை

விட, வெடிகுண்டுகள் விஷவாயுக்கள் இவற்றின் ஒத்தாசைகள் மிகவும் அவசியம். இதை ஞாபகத்தில் வைத்துக் கொண்டு இத்தாலியைக் கவனிப்போம். நாட்டிலே வறட்சி; பொக்கிஷமோ காலி. செலவோ தலைக்குமேல். இந்த நிலையில் பேஸிஸ்ட் சர்க்கார் நிலைத்திருக்க வேண்டுமெனில், பொதுமக்களின் கவனம் அல்லது ரத்தம் வேறு திசையில் சிந்தப்பட வேண்டும். முஸொலீனி. இத்தாலியின் ஏமாற்றங்களுக்கு எரியூட்டி வளர்த்து, புராதனப் பெருமைகள் மூலம் ஏகாதிபத்திய ஆசைகளைக் கிளப்பினான். ஆனால், இவையாவும் பக்கமேளமே. முஸொலீனியின் கண் இத்தாலிய சோமாலிலாந்துக்கு அருகிலுள்ள அபிசீனியா மீது விழுந்தது. அபிசீனியாவுக் கருகில் பிரிட்டிஷ் சோமாலிலாந்தும் பிரெஞ்சு காலனியின் ஒரு பகுதியும் இருக்கிறது. முஸொலீனியின் கவனம் இதில் விழுந்தால், பிரிட்டனும் பிரான்ஸும் சும்மா இருக்கமாட்டா. 1925-ம் வருஷத்திலேயே அபிசீனியாவில் தங்கள் தங்கள் செல்வாக்குள்ள பகுதிகள் எவையெவையென்பதைப் பாகுபடுத்தும் ஓர் உடன்படிக்கையை ஸர் ஆஸ்டின் சேம்பர்லினும் முஸொலீனியும் செய்துகொண்டனர். அபிசீனியா 1923-ம் ௵ சர்வதேச சங்கத்தில் சேர்ந்திருந்தது. அவ்வாறு சேர்ந்ததன் மூலம் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளலாமென்று நம்பியது. 1935-ம் ௵ செப்டம்பரில், முஸொலீனி தனது பழைய ஒப்பந்தத்தைக் குறிப்பிட்டு, அது அபிசீனியாவை இரண்டு துண்டாகப் பிரித்துவிடுகிறதே என்று சீறினானாம். பிரிட்டிஷார் தானா ஏரியருகில் ஒரு அணைகட்ட விரும்பினார்கள். அதற்குப் பதிலாக அபிசீனியாவுக்கு மேற்கிலுள்ள பகுதிகளில் இத்தாலிய 'செல்வாக்கை'க் காப்பாற்றவும், அபிசீனியா வழியாக எரிட்ரியாவையும் சோமாலிலாந்தையும் இணைக்கும் ஒரு ரயில்வே பாதை அமைப்பதை ஆதரிக்கவும் ஒப்புக்கொண்டார்கள் பிரிட்டிஷார். ஆனால், அபிசீனிய மன்னரான ஹெயிலி ஸெலாஸி ஜெனிவாவில் செய்த கிளர்ச்சியின் பயனாக அம்முயற்சி கைவிடப்பட்டது. 1928-ம் ௵ இத்தாலி அபிசீனியாவுடன் ஒரு தேச உடன்

படிக்கை செய்திருந்தது. அச்சமயத்தில்தான் அபிசீனியச் சக்கரவர்த்தி இத்தாலிக்கு வந்து ராஜாங்க விருந்தினராக இருந்தார். அப்பொழுது பரஸ்பர சந்தேகமும் வெறுப்புமே பிந்திய விளைவுகளுக்குப் பக்கபலமாக இருந்தன. முஸொலீனி இந்தச் சம்பவத்தைப் பற்றி ஓரிடத்தில் குறிப்பிடுகையில், ''நான் அவரிடம் நேசமாக இருக்க முயன்றேன். அவர் என்னை விரோதியாகப் பாவிக்கிறார்!' என்று தன் பொறுப்பைத் தட்டிக் கழிக்கிறான்.

1934-ம்ஸு டிசம்பர் மீ 5-வ உவால் உவால் என்ற இடத்தில் 'எல்லைப்புறச் சம்பவம்' ஒன்று நிகழ்ந்தது. அதாவது இத்தாலியர் அபிசீனிய எல்லைப்புறத்தில் கலகம் விளைவித்தனர். 32-இத்தாலியர்களும், 110 அபிசீனியர்களும் அந்தக் களத்தில் மாண்டனர். சண்டை எப்பொழுது ஏற்படுமென்று காரணம் தேடிக்கொண்டிருந்த முஸொலீனி, மூன்று கோடி 30 லட்சம் லையர் செலவில் தயாரித்த யுத்த முஸ்தீப்புகளை அபிசீனியத் தலைநகரான அடிஸ் அபாபா நோக்கித் திருப்பிவிட்டான்.

இந்தச் சமயம், பிரிட்டன் தன்மீது காயம்படாமல் 'சர்வதேச கௌரவத்தைக் காப்பாற்ற' முனைந்தது. பிரிட்டிஷ் ராஜதூதராக ஸ்ரீ அந்தோனி ஈடன் இத்தாலிக்கு வந்தார். 1935-ம்ஸு ஜூன் 25-வ ரோமாபுரியில் அந்தோனி ஈடனும் ஸினோர் கிராண்டியும், பரஸ்பரம் கௌரவத்தை விட்டுக்கொடுக்காமல் இருவருமாகச் சேர்ந்து அபிசீனியாவைக் கற்பழிப்பது என்று வெகு நேரம் சம்பாஷணை நடத்தினர். பேச்சுக்கள் பயனற்றுப் போகவே ஈடன் பலாஜா சிக்கியிலிருந்து திரும்பினார். திரும்பிய சிறிது நேரத்திற்கெல்லாம் அவருடைய அறையின் டெலிபோன் மணியடித்தது. அது பலாஜாவிலிருந்து வந்த செய்திதான். ''இவ்வளவு நேர சம்பாஷணையில் பிரிட்டிஷ் சர்க்கார் முடிவான வார்த்தையைச் சொல்லிவிட்டதா?'' என்ற குரல். ஸ்ரீ அந்தோனி ஈடன், ''ஆம்!'' என்றார். பேசியது முஸொலீனிதான்.

முஸொலீனி. இப்போது என்னால் பின்வாங்க முடியாதே!

ஸ்ரீ ஈடன்: 'இந்த முடிவுக்காக நான் வருந்துகிறேன். ஆனால், தங்கள் தைரியத்திற்காகவும், உறுதிக்காகவும் உங்களைப் பாராட்டுகிறேன்.

முஸொலீனி : ராஜதந்திரியான ஈடன் பேசுகிறாரா? அல்லது பிரிட்டிஷ் சிப்பாய்களில் ஒருவரான காப்டன் ஈடன் பேசுகிறாரா என்பதுதான் ஆச்சரியம்!

இவ்வாறு ஈடன் தூது ஒன்றுமில்லாது போயிற்று. இச்சம்பவம் நிகழ்ந்த சில தினங்கள் கழித்து முஸொலீனி ஒரு பிரிட்டிஷ் நிருபருக்குப் பேட்டி யளித்தான். அதில் அவன் கூறியதாவது:

''நான் எப்படிப் பின்வாங்குவது? இரண்டு லட்சம் துருப்புக்களை அபிசீனிய எல்லைப் புறத்திற்கு அனுப்பி விட்டு, 'சும்மா விளையாட்டுக்குத்தான் உங்களை அங்கே போகச் சொன்னேன்!' என்றால் கேட்டுக் கொண்டு பேசாமல் இருப்பார்களா? சர்வதேச சங்கம் தன் வேலை இன்னது என்று தெரியாமல் குழம்பிக் கொண்டிருக்கிறது. இதில் பிரிட்டிஷ்காரருக்கு என்ன இவ்வளவு ஆத்திரம்?

''இப்போது நாங்கள் ஹெய்லி ஸெலாஸியின் ராஜ்யத்தைத் தான் தாக்குகிறோம்; ஐந்தாவது ஜார்ஜ் மன்னரின் ஏகாதிபத்தியத்தை அன்று.

''இவர்கள் சமாசப் பேச்சுக்களும் ஒரே கேலிக்கூத்தாக இருக்கின்றன. இன்னும் இரண்டு பாலைவனங்களை எனக்குத் தருகிறார்களாம். ஒன்று வெறும் கல்லும் கட்டியும் நிறைந்தது; இன்னொன்று உப்பு மண். அங்கு ஒரு அபிசீனியனால்கூடக் குடித்தனம் பண்ண முடியாது. ட்யூனிஸ் எல்லைப்புறம் சம்பந்தமாக பிரெஞ்சுக்காரருடன் ஒப்பந்தம் செய்து கொண்ட பொழுது ஒரு லட்சம் மைல் விஸ்தீரணத்திற்கு சஹாரா பாலைவனத்தில் எனக்குப் பங்கு கொடுத்தார்கள். அதில் எத்தனை பேர் வசிக்கிறார்கள் தெரியுமா? 62 பேர்! எனக்கு இம்மாதிரிப் பாலைவனம் சேகரித்துக் கொண்டிருப்பதில் அபாரப் பிரியம் இருப்பதாகச் சர்வதேச சங்கம் நினைத்துக் கொண்டிருக்கிறது போலும்!''

ஈடன் ரோமாபுரிக்கு வந்து சமரசப் பேச்சு நடத்தியது சம்பந்தமாக இத்தாலியில் இத்தாலியர் பின்வருமாறு சொல்லிக் கொள்கிறார்கள் :

''ஸ்ரீ. ஈடன் இல்லாவிட்டால், முஸோலீனி அபிசீனியாவில் வெற்றி யடைந்திருக்க முடியாது; முஸோலீனி இல்லாமல் ஸ்ரீ. ஈடனும் பிரிட்டிஷ் அந்நிய நாட்டு மந்திரியாகியிருக்க முடியாது!''

தர்மத்தையும் நியாயத்தையும் பற்றி வெகுவாகப் பேசும் சர்வதேச சங்கம், எண்ணெய் நிர்ப்பந்தத்தின் மூலம், அதாவது, யுத்தத்திற்கு அத்தியாவசியமான பெட்ரோல் விற்பனையைத் தடுப்பதின் மூலம் இத்தாலியை மடக்கி விடலாம் என்று ஒரு பிளான் போட்டது. திட்டத்தில் பழுது ஒன்றும் இல்லை. அதைப் பந்தாவாக, அறிக்கை, மேலறிக்கை, விவாத நிபுணர் ஆராய்ச்சி இத்யாதி வகையறாக்கள் மூலம் ஒரு வழிக்குக் கொண்டு வருமுன், இன்னும் மூன்று வருஷங்கள் வரை தனக்குத் தேவையான தளவாடங்களை இத்தாலி முன்னதாகவே வாங்கிச் சேகரித்துக் கொண்டு, தன் காரியத்தில் ஈடுபட்டது.

கூட்டத்தில் தர்மத்தையும் நியாயத்தையும் பற்றிப் பேசினாலும், சர்வதேச சங்கத்தின் தனிப்பட்ட நபர்கள் தங்கள் தங்கள் மீது அடி விழாமல் காப்பாற்றிக் கொள்வதிலேயே கண்ணுங் கருத்துமாக இருந்தனர். வெர்ஸேல்ஸ் உடன்படிக்கை ஊசிமேல் ஒற்றைக் காலில் நிற்கும் கழைக் கூத்து வித்தை; அதன் மூலம் ஏராளமான நன்மையை அடைந்த நியாயத்தின் மெய்க்காப்பாளர் போன்ற தேசங்கள் அச்சமயத்தில் பயப்பட்டதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

ஸ்ரீ. ஈடனின் முயற்சி இவ்வாறு பிசுபிசுத்துவிடவே பிரஞ்சுக்காரர் வேறுவிதமாக முயன்றனர். பிரிட்டிஷ் அந்நிய நாட்டு மந்திரி ஸர் ஸாமுவேல் ஹோரும், பிரெஞ்சுத் தரப்பில் ஸ்ரீ. லவாலும் சேர்ந்து, முஸோலீனியைச் சமாதானம் செய்து எப்படியாவது யுத்தத்தை நிறுத்த ஒரு திட்டம் வகுத்தார்கள். கெட்டிக்காரப் பத்திரிகை நிருபர் ஒருவர் இந்தச் சதியை வெளிக்குக் கொண்டுவரவே, அப்பொழுது ஏற்பட்ட பொதுஜனக் கொந்தளிப்பில் ஹோரும் லவாலும் பதவியை விட்டு விழுந்தார்கள். ஸ்ரீ. ஈடன் அந்நியநாட்டு மந்திரியானார்.

வெற்றி நிர்ப்பந்தப் பேச்சுக்களும் இந்த வல்லரசுகளின் சூழ்ச்சிகளும் போகிற போக்கைக் கண்ட முஸொலீனி, எது எந்த நிமிஷத்தில் மாறுமோ என்பதை நிச்சயிக்க முடியாமல் காரியத்தைச் சீக்கிரம் முடிக்க விஷவாயு யுக்தியைக் கைக் கொண்டான்.

1936, மே மாதம் 5-ந் தேதி மாலை நான்கு மணிக்கு இத்தாலியப் படைகள் அடிஸ் அபாபாவில் நுழைந்தன. அதற்கு முன்பே ஹெய்லி ஸெலாஸி, அபயக் குரல்களால் பயனில்லை என்று தெரிந்துகொண்டு, பரிவாரத்தோடு பிரிட்டனில் குடி புகுந்தார்.

ஒரு வருஷம் கழிந்தது; முஸொலீனியும் அபிசீனிய வெற்றி வருஷோற்சவம் கொண்டாடிவிட்டான்.

நியாயத்தின் கௌரவத்தை நிலைநாட்டும் பிரிட்டனும் பிரான்ஸும் வெற்றியை ஏற்றுக்கொண்டுவிட்டன. மன்னர் ஹெய்லி ஸெலாஸி வெறும் ஸ்ரீமான் ஹெய்லி ஸெலாஸி ஆனார்.

—ஃ—

## 24. ரோம்-பெர்லின் தட்டாமாலை

1933-ம் ஹிட்லர் ஜெர்மனியில் அதிகாரத்தைக் கைப்பற்றினான். அதிலிருந்து, இத்தாலிய மிருக சம்பிரதாயத்தைப் பின்பற்றி, ஜெர்மனியில் நாஜிகளை வைத்து அதிகார சிகரத்தை அடைந்தான். விழித்தெழுந்த ஜெர்மனி பிரான்ஸுக்கு நிரந்தர ஆபத்தாயிற்று. பிரான்ஸின் நண்பனான பிரிட்டனுக்கும் அது வினையாயிற்று. பிரிட்டன் தன் ஏகாதிபத்தியச் செல்வாக்கைப் பணமூட்டைகளின் மீது கட்டியிருந்தது. அந்தப் பணமூட்டைகளை ராணுவக் கொத்தளங்கள் தாங்கி நின்றன. இந்த நிலையிலே,

வளரும் இத்தாலி வழி செய்துகொள்ள வேண்டுமானால், மத்தியதரைக் கடலில் அது செல்வாக்கு வகிக்கவேண்டும், அதற்கு வழியென்ன? தன்னைப் போன்ற சர்வாதிகார நாட்டின் உதவியைப் பெறுவதுதான் சரி என்று முஸொலீனி நினைத்தான். 1934-ம் ஆு ஜூன்மீ 11வ ஹிட்லரை முஸொலீனி வெனிஸ் நகரத்தில் சந்தித்தான். அதன் விளைவு சந்தேகமும் நம்பிக்கையற்ற தன்மையுமே தவிர வேறு ஒன்றுமில்லை. முஸொலீனி படாடோபமான வர வேற்பு அளித்தான். அவனுடைய பத்திரிகைகள் ஹிட்லரைப் பிரமாதமாகப் புகழ்ந்தன. ஆனால் முதல் சந்திப்பு தோல்வி யுற்றத்தின் காரணம் ஹிட்லர் புது ஆள்தானே என்று முஸொலீனி கருதியதுதான் 'நாம் சொன்னபடியெல்லாம் கேட்பான்' என்று எதிர்பார்த்திருந்த ஆசாமி, தன்னைப் போல் சக்தி படைத்தவனாக இருக்கக் கண்டதில் சிறிது ஏமாற்றம். முதல் சந்திப்பினால் முஸொலீனி ஜெர்மனிக் கெதிராக ஆஸ்திரியா பக்கம் சேர்ந்து கொண்டான். ஏனெனில், அப்போது இத்தாலி அபிசீனியாவில் கால்வைக் கும் சமயம். நிற்க.

1934-ம் வருஷத்திலேயே இவ்விரண்டு சர்வாதிகாரி களும் ஸ்பெயினில் தங்கள் கவனத்தைச் செலுத்தப் பல காரணங்கள் தூண்டுதலாக இருந்தன. பிரிட்டிஷ் அந்நிய நாட்டுக் காரியாலயம் வெகு காலமாகப் பிரனீஸ் மலைத்தொடர் எல்லையுடனேயே ஐரோப்பா முடிவடைந்துவிடுகிறது என்பது போல ஸ்பெயினைப் பற்றி அசிரத்தையாக இருந்தது. ஸ்பானியப் புரட்சிகள் எல்லாம் எப்போதோ எங்கோ நடைபெறும் கண்ணற்ற பிரதேசச் 'செய்தி'களாகவே அது கருதிவந்தது. ஸ்பெயினிலே பிற்போக்கான முதலாளித்துவமும், ராணுவமும், மதமும் ஒரு கட்சியாக நின்றுகொண்டு, தேச வளர்ச்சிக்குப் பாடு படும் மக்களின் வளர்ச்சிக்கும் முட்டுக்கட்டை போட்டுக் கொண்டிருந்தன. மேலும் சப்மரைனும், வெடி

குண்டு எறியும் விமானமும் கண்டுபிடிக்கப்பட்டபின் பிரிட்டனையும் பிரான்ஸையும் நெருக்க ஸ்பெயின்தான் சரியான இடம். அதனருகில் உள்ள பல்யாரிக் தீவுகள் பிரான்ஸுக்கும் வடக்கு ஆப்பிரிக்கக் காலனிகளுக்கு மிடையில் இருக்கின்றன. பொதுவாகப் படை திரட்ட ஆரம்பித்தால் ஆப்பிரிக்கக் காலனிகளிலுள்ள துருப்புக்கள் முதலில் காலடி எடுத்து வைக்க வேண்டியஇடம் அவைதான். இன்னும் வடக்கு ஸ்பெயினி லிருந்து கொண்டு விமானமூலம் மார்ஸேல்ஸையும் மற்றுமுள்ள பொருளுற்பத்தி செய்யும் நகரங்களையும் லகுவாகத் தாக்கலாம். ஸ்பானிய மொராக் கோவையும் அண்டுலேஷ்யாவையும் கைப்பற்றிவிட்டாலோ, ஜிப்ரால்டரைக் கலக்குவதன் மூலம் பிரிட்டன் கண்ணில் விரலைவிட்டு ஆட்டி விடலாம். இதனால் இத்தாலிக்கு ஸ்பெயினில் தலையிடுவதன் மூலம் மத்தியதரைக் கடலில் ஏராளமான வசதி இருந்தது. 1923–ம் வருஷத்திலேயே பிரிமோ டிரிவரா ஸ்பெயினில் அதிகாரம் வகித்திருக்கும் போது, பிரான்ஸைப் பயங்காட்டுவதற்காக லேசாக ஓர் உடன்படிக்கை செய்துகொண்டான் முஸொலீனி. அப்போது அதை ஒருவரும் அவ்வளவு பிரமாதமாகக் கருதவில்லை. அந்தச் சமயத்தில் ஒரு ரஸமான சம்பவம் நடந்ததாகச் சொல்லுவார்கள்.

இத்தாலிய மன்னனும் முஸொலீனியும் ஸ்பெயினுக்கு விருந்தினராகச் சென்றிருந்த போது, 13-வது அல்பான்ஸோ என்ற ஸ்பானிய மன்னன் இத்தாலிய விக்டர் இமானுவலிடம் பிரிமோ டிரிவராவை அறிமுகம் செய்து வைக்கும்பொழுது, ''இந்தாருங்கள், நமது முஸொலீனியை உமக்கு அறிமுகம் செய்து வைக்கிறேன்¡'' என்றானாம். இது முஸொலீனிக்குப் பிடிக்கவில்லை. இன்னும், பிரிமோ டிரிவராவும், போப்பிடம் ஸ்பானியரைக் கார்டினல் ஆக (கத்தோலிக் மத நிர்வாகிகளில் ஓர் அந்தஸ்து) நியமிக்கா திருப்பது குறித்துக் குறைப்பட்டுக் கொண்டானாம்.

அப்போது தெய்வசன்னதத்தின் மூலமே இந்த உத்தியோகத்திற்கு ஆட்கள் நியமிக்கப்படுவதாகப் பதிலளித்த போப், சிறிது காலங் கழித்து, இத்தாலியர் பலரைக் கார்டினல்களாக நியமித்தார். 1924-ம்ஞ இத்தாலிய மன்னன் ஸ்பானிய மன்னனைச் சந்திக்கச் சென்றான். அச்சமயத்தில் மாட்டியோட்டி சம்பவம் அவனை அவசர அவசரமாக இத்தாலிக்குத் திரும்பும்படி செய்தது. அப்புறம் பிரிமோ டிரிவரா அமைத்திருந்த சர்க்கார் கவிழ்ந்து விட்டது.

இது இவ்வாறிருக்க, முஸொலினி நம்பிக்கையை இழந்து விடவில்லை. 1934-ம்ஞ மார்ச் மாதம் ஸ்பானிய மன்னனின் கட்சித் தலைவர்கள் சிலர், முஸொலீனியிடம் உதவி வேண்டி வந்தார்கள். அச்சந்தர்ப்பத்தில் நிகழ்ந்தவைகள் பற்றிய தஸ்தாவேஜு சமீபத்தில் வெளியாயிற்று. அது வருமாறு:

''கீழே கையெழுத்திட்டிருக்கும் நாங்கள்—லெப்டினென்ட் ஜெனரல் எமிலியோ பெரைரா (சொந்த ஹோதாவில்): டான்ரபேல் ஒலாஸாபால், ஸெனர்லெஸாரா (கம்யூனியான் ரெடிஷனலிஸ்டா கட்சிச் சார்பாக); டான் அந்தோனியோ கயோகீகியா (ஸ்பானிய மறுமலர்ச்சிக் கட்சித் தலைவர் என்ற ஹோதாவில்), 1934-ம்ஞ மார்ச்மீ 31உ பிற்பகல் 4-மணிக்கு இத்தாலிய சர்க்கார் தலைவரான ஸினோர் முஸொலீனியுடனும், மார்ஷல் இத்தாலோ பால்போவுடனும் செய்த சம்பாஷணைகளை அறிக்கையாக எழுதியிருக்கிறோம். தலைவர், அவருடைய கேள்விகளுக்கு நாங்கள் அளித்த பதிலின் மூலம், ஸ்பானிய அரசியல் நிலைமையையும் ஸ்பானிய ராஜாங்கத்தின் ராணுவ, கடற்படை, மன்னர் கட்சிப் பலங்களையும் பற்றித் தெரிந்து கொண்டார். கூடியிருந்த எங்களிடம் பின்வருமாறு அறிவித்தார்: (1) ஸ்பெயினில் அப்பொழுது ஆட்சி

செய்யும் சர்க்காரைத் தொலைக்கவும், மன்னராட்சியை ஏற்படுத்தும் ரீஜென்ஸி கௌன்சிலை நியமிக்கவும் அங்கு போராடும் இரண்டு கட்சிகளுக்கும் ஒத்தாசை யளிப்பதாக வாக்களித்தார். மேற்கண்ட உறுதிமொழியை முஸொலீனி மூன்று முறை ஆணையிட்டுச் சொன்னார். (2) தமது நோக்கத்தைச் செயலில் காண்பிப்பதற்காக உடனே 20,000 துப்பாக்கிகளும், 20,000 கை—பீரங்கிகளும், 200 மெஷின் கன்களும், ரொக்கமாக 15 லட்சம் பெஸ்டாக்களும் கொடுப்பதாக வாக்களித்தார் (பெஸ்டா—ஸ்பானிய நாணயம்). (3) இந்த உதவி பூர்வாங்க உதவியென்றும், மேற்கொண்டு வேலைத் திறமைக்கும் சந்தர்ப்பத்திற்கும் அவசியமானதைச் செய்வதாகவும் அவர் கூறினார். ஒப்புக் கொள்ளப்பட்ட தொகை ஸெனர் டான்ரபேல் ஒலாஸா பால் என்பவர் வசம் ஒப்புவிக்கப்பட வேண்டும் என்றும், அவர் அந்த நிதியைப் பொறுப்பேற்று ஸ்பெயினில் கொண்டு வந்து இரு தலைவர்களுமான டிரொடென்ஸோ விடமும் கயோகீகியா என்பவரிடமும் ஒப்புவிக்கவேண்டும் என்றும் அங்கு கூடியிருந்த பிரதிநிதிகள் ஒப்புக் கொண்டார்கள். இம்மாதிரியே முதலாவது ஒப்புவிக்கப்படும் யுத்த தளவாடங்களும் ஸ்பெயினில் கொண்டு வந்து ஒப்புவிக்கப்படவேண்டும் என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ரோம், மார்ச் 31, 1934.''

இதுதான் ஸ்பானியப் புகைச்சலுக்கு வித்து. பிறகு பிராங்கோவுக்கு ஜெர்மனியும் இத்தாலியும், பட்டவர்த்தனமாக, ஒளிவு மறைவில்லாமல் உதவி செய்து கொண்டிருந்தன. நான்கு வருஷங்களாக வீரமாகப் போராடி வந்த ஸ்பானியக் குடியாட்சிக் கட்சித் தொண்டர்களுக்குக் கிடைத்து வந்த உதவிக்கு ஓர் உலை வைக்கும்படியாகச் சர்வதேச சங்கம், ஐரோப்பிய வல்லரசுகள் எல்லாம் சேர்ந்து

நியாயம் பேசிக்கொண்டிருந்தன. ஆஸ்திரியாவைக் கபளீகரம் செய்துவிட்ட ஜெர்மனியின் கை உயர்ந்திருந்ததால், அரசியல் சதுரங்கக் காய் உருட்டுவதில் வல்லவனான முஸொலீனி, செக் பிரதேசத்தில் துராக்ரகம் செய்த ஹிட்லருக்கு வெற்றி நிச்சயம் என்று தெரிந்து கொண்டபின் இனி யுத்தம் ஏற்பட்டால் தாம் ஜெர்மன் கட்சியையே ஆதரிக்கப்போவதாகப் பட்டவர்த்தனமாகச் சொல்லிக் கொண்டான். பிரிட்டிஷ் ராஜதந்திரத்தின் துடை நடுக்கத்தால் மத்திய ஐரோப்பாவில் பேஸிஸம்கும்மாளம் அடித்தது. பேஸிஸ்ட் கருங்கடல் மத்தியில் பிரான்ஸ் தனித்து ஜனநாயகத் தீவாகி வந்தது. ஸுடேடன் பகுதியில் நடைபெற்ற ஆக்ரமிப்புக்குத் தலை சாய்த்துக் கொண்டிருந்த சர்வ தேச சங்கமும் அதன் வல்லரசுகள் யாவும் எவ்வளவு தூரந்தான் வெறும் பயத்திற்கு அடிமையாகிக் கொண்டிருக்குமோ என்று உலகம் கவலையுற்றது.

ஸ்பெயினில் ஜனநாயகக் கட்சியினரும் அபேதவாதிகளும் ஒரு புறமும், ஜெனரல் பிராங்கோவின் தலைமையில் ராணுவத்தாரும், முதலாளிகளும், பேஸிஸ்டுகளும் மற்றொரு புறமும் நின்று போராடினார்கள். அதாவது ஸ்பெயினுக்கு வெளியேயிருந்த பேஸிஸ்ட்—ஜனநாயகப் போராட்டம், அந்தத் தேசத்தினுட் புகுந்து, அதைத் தன் களமாக ஆக்கிக் கொண்டது. முஸொலீனி தான் ஆதியில் வாக்களித்தபடியே ஏராளமான பேஸிஸ்ட் தொண்டர்களை ஸ்பெயினில் பிராங்கோவுக்கு உதவ அனுப்பிவைத்தான். பேஸிஸ்ட் ஆயுதங்களும் ஏராளமாக வந்து குவிந்தன. ஜனநாயக நாடுகளிலிருந்தும் தொண்டர்கள் ஸ்பெயினை நோக்கி சென்றார்கள். சுருங்கச் சொன்னால், ஸ்பெயின், பிறருடைய கைவரிசையைப் பரீட்சை செய்து கொள்வதற்கு ஒரு ரணகளமாக்கப்பட்டது. ஆயிரம் ஆயிரமாக ஸ்பானியர்களும் மடிந்தார்கள். நகரங்களும் நாடும் பாழாகியது. முதலில், 1937-ல் எல்லாம் தோல்விக்குமேல் தோல்வியாகப் பெற்று வந்த பிராங்கோ முடிவில் வெற்றி பெற்றான்.

ஸ்பெயினின் தலை நகரமான மாட்ரிடும், அரசாங்கமும் அவன் கையில் சிக்கின. தன்னால் வெற்றி பெற்ற பிராங்கோ, தன்னிடமே தீட்சை பெற்று, தன்னைப் போலவே எதிர்காலத்தில் ஒரு குட்டி ஜடாமுனியாக விளங்கு வான் என்ற நம்பிக்கையில் முஸொலீனி பூரித்தான். அவனுடைய தீர்க்க தரிசனமும், ஐரோப்பிய வல்லரசுகளைப் பற்றி அவன் கொண்டிருந்த அலட்சியமும், எடுத்த காரியத் தில் கடைசிவரை நிற்கும் உறுதியும் அவனுக்கு ஸ்பெயினி லும் வெற்றியைத் தேடிக் கொடுத்தன. ஆம், அவன்தானே அங்கு வென்றான்!—பிராங்கோ மூலம் வென்றான், அவ்வளவுதான். பிராங்கோ, பின்னால் எப்படியிருப்பான், முஸொலீனியிடம் படித்ததை அவனிடமே ஏட்டைத் திருப்பி விட்டால்? இது எதிர்காலத்தியப் புதிர்!

ஜீவிய சரித்திரம் எழுதுவதில் பிரபலஸ்தரான எமில் லட்விக் முஸொலீனியைத் தாம் சந்தித்த சமயத்தில் நிகழ்ந்த சம்பாஷணை யொன்றைப் பின்வருமாறு குறிப் பிடுகிறார்.

''சமீபத்தில் யாரோ ஒருவருடைய அறையில் 'விதிக்கு அப்பால்' என்ற பழமொழி எழுதியிருப்பதைப் பார்த்தேன்'' என்று நான் சொன்னேன்.

அதற்கு முஸொலீனி, ''அந்த மனிதன் தன் விதியை எதிர்த்துப் போராடியவனா?'' என்று கேட்டான்.

''ஆமாம், அவன்தான் அந்தப் பிரபல விமானி!'' என்றேன்.

''அதுவும் எனது லட்சிய வார்த்தை. யாரும் ஒரு தடவைக்கு மேல் விதியைச் சவால் கூறி அழைக்க முடியாது. எப்படியிருந்தாலும் அவனவன் குணத்திற்குத் தக்கபடியே மரணம் கிட்டுகிறது!'' என்றான் முஸொலீனி.

○

## 25. ஆசை செல்லும் பாதை

இத்தாலியின் அந்நிய நாட்டுக் கொள்கையை வகுப்பது முஸோலீனிதான். இத்தாலி ஏன் இவ்வளவு முறுக்காக இருக்கிறது என்றாலோ, அது அவன் குணம். அவன் தனது தனது அதிகார வெறியைப் பற்றி ஒளிவு மறைவு வைத்துக் கொள்ளவில்லை.

''இந்த வெறி என்னைப் பிடித்தாட்டுகிறது. வியாதி மாதிரி என்னை அறுத்துத் தின்னுகிறது. எனது மனப் போக்கைக் கொண்டு, சிங்கம் தன் நகங்களால் கிழித்து வடுச்செய்வது போல, சரித்திரத்தில் ஒரு குறியிட விரும்புகிறேன்!''

இதுதான் அவன் ஆசை. இந்த வடுவை ஏற்றவர் ஒருவர் ஹடயோகம் கற்க இலங்கைக்குப் பிரயாணமாகி விட்டார். மற்றொரு இஸ்லாமிய ராஜா, தலைதப்பியது போதும் என்று சிட்டாய்ப் பறந்துவிட்டார், அதிகார வெறியும் அதை நிறைவேற்றும் உறுதியும் அளவு கடந்தவை. மிரட்டலுடன் கத்தியும் பளபளக்கும். முஸொலீனி பலாத்காரம் அவசியம் என்று வற்புறுத்துகிறான். அதுதான் வாழ்க்கையின் நியதியாம். அவன் மற்றோரிடத்தில்சொல்லியிருப்பதைப் பாருங்கள் :

''யுத்தந்தான் மனித சக்திகளை உச்ச நிலைக்கு முறுக்கேற்றுகின்றது. அதை ஏற்கத் தைரியம் படைத்த மக்களே தேஜஸ்விகளாகின்றனர்.''

சர்வாதிகாரியாகி அதிகாரத்தைக் கைவசப்படுத்திய முஸொலீனி அருகில் உள்ள நாடுகளின் சுதந்திரத்திற்கு

உலை வைத்துவிட்டான். ஆஸ்திரியாவில் பேஸிஸம் பிறந்து வளர்ந்ததும், இன்று அது நாஜி ஜெர்மனியானதும் அவன் செய்த வேலையின் விளைவுகளே. அவன்தான் ஸ்பெயின் குடியாட்சியின் மீதும் கைவைத்தான். சர்வதேச சங்கத்திற்கு எதிராகச் சதி செய்தவனும் அவனே. லொகார்னோ ஒப்பந்தம் கையெழுத்திடப்படும் பொழுதுதனதுபிரதிநிதிகள் முன் கோபாவேசத்துடன், ''இதன் அர்த்தம் உங்களுக்கும் புரியவில்லை. இந்த ஒப்பந்தம் இன்னும் பத்து வருஷங்களுக்கு என்னை யுத்தம் செய்யாமல் கட்டிப்போடுகிறதே!'' என்று சீறினான். இத்தாலியின் கொள்கையை வகுக்கும் அதிகாரம் அவன் கைவசம் இருக்கும்வரை பொது விதிக்கு எதிராக அவன் ஆரம்பித்த எந்த இயக்கத்தையும் அவன் நிறுத்தமாட்டான். அவன் சர்வாதிகாரியாக இருக்கும்வரை அமைதி கிடையாது.

அவனுடைய ஆசையெல்லாம் இத்தாலிய ஆட்சி மத்தியதரைக் கடல், செங்கடல் கரையோரங்கள் வழியாக ஒருபுறம் சூயஸ் கால்வாயையும், மறுபுறம் ஜிப்ரால்டர் முனையையும் தழுவி அணைக்க வேண்டும் என்பதே.

அவனுடைய இலட்சிய புருஷன் நெப்போலியன் என்ற பிரெஞ்சு சம்ராட். முஸொலீனி 'காம்போடிமாகியோ' என்று ஒரு நாடகம் எழுதியிருக்கிறான். அதன் கதாநாயகனான நெப்போலியன் தோற்றதுக்குக் காரணம் அவனிடம் இத்தாலிய யுத்தவீரர் இல்லாமையே என்று கூறுகிறான்.

இன்னும் 1938-ம் வருஷம் மார்ச் 30-ம்தேதி இத்தாலிய செனெட்டில் பேசுகையில், அவன் நெப்போலியன் வார்த்தைகளை மேற்கோள் காட்டிப் பின்வருமாறு கூறுகிறான்:

''இத்தாலியர் ஒரு காலத்தில் முதல்தரமான படைவீரர்களாக இருப்பார்கள்.....

''நாம் வேண்டுவது என்னவெனில் அன்று நெப்போலியன் கூறிய இந்தத் தீர்க்க தரிசனத்தை இன்றைய பேஸிஸ்ட் ரோம உண்மையாக ஆக்க வேண்டும்.''

யுத்தமே மனித வர்க்கத்தை உயர்த்தும் என்பது அவன் சித்தாந்தம். அவன் சொல்லுகிறான்:

''மனுஷ வம்சவளர்ச்சியின் போது யுத்தம் ஏற்படுகிறது என்பதைச் சரித்திரம் போதிக்கிறது. பெண்ணுக்குக் கரு என்பதைப் போலவே மனிதனுக்கு யுத்தம். நிரந்தர சமாதானத்தில் நான் நம்பவில்லை. அது மனிதனின் அடிப்படைக் குணங்களை நசிக்கச்செய்கிறது என்று நான் கருதுகிறேன். ரத்தக்கறை விழுந்தபொழுதுதான், சூரியரஸ்மி பட்டது மாதிரி அது ஓங்கி வளருகிறது......''

யுத்தத்தைப் பற்றி அவன் அடித்திருக்கும் பம்பை கொஞ்ச நஞ்சமன்று. அப்படியிருந்தும் அவன் ஏன் இந்த யுத்தத்தில் கலந்து கொள்ளவில்லை என்பதை அவனே அறிவான். சென்ற யுத்தத்தில் கலந்து கொண்டவர்கள் சீரழிந்த கதையை அவன் மறந்து போகவில்லை. இத்தனை நாள் வெறியூட்டுவதற்காக ஏற்பட்ட ஏராளமான நஷ்டத்தை வர்த்தகமூலம் ஈடு செய்துகொள்ளப் பார்க்கிறான். இன்று விமான உற்பத்தியில் முன்னணியில் நிற்கும் நாடு இத்தாலி. மற்றநாடுகள் சண்டை போட்டுக் கொண்டிருக்கும் பொழுது இதைப்போன்ற லாபகரமான தொழில் (தேசசேவை) வேறு என்ன?

நிற்க. அவனுடைய மகன் அபிசீனியப் படையெடுப்பின் போது வெடிகுண்டு வீசும் கைங்கரியம் செய்தான். அதைப் பற்றி வருணித்தும் எழுதிவிட்டான். யுத்தத்தைப் பற்றிப் பேசுகிறவர்கள், மனிதருடைய குரூர சிந்தனையின் பாதை எப்படி என்பதைத் தெரிந்து சொல்லுகிறவர்கள், நோக்கங்களையும் வழிகளையும் அலசி ஆராய்கிறவர்கள் யாவரும் அதைப் படித்துப் பரிசீலனை செய்து விட்டார்கள்.

''ஆம்பா மலைச் சரிவுகளில் போராட்டம்'' என்ற புஸ்தகத்தில் முஸொலீனியின் புத்திரபாக்கியமான விட்டோரியோ தன் அனுபவங்களையெல்லாம் கூறுகிறான். அவன் அபிசீனிய யுத்தத்தின்போது வெடிகுண்டு வீசும் விமானப் படையில் ஒரு விமானியாக இருந்தான். அப்போது அவனுக்கு வயது இருபது. அவன் சொல்லுகிறான்....

''ஒவ்வொரு வாலிபனுக்கும் இச்சிறு புஸ்தகம் அவனுடைய வருங்கால முயற்சிகளுக்கு உபயோகமாயிருக்கும்.'

தன் போர் அனுபவங்களைப்பற்றிக் கூறுமிடத்து விட்டோரியோ சொல்லுகிறான். ''நான் பல தடவை தீயணைக்கும் படையோடு, அது உதவிக்குச் செல்லும் பொழுதெல்லாம், உடன் சென்று பார்த்திருக்கிறேனாயினும் கொழுந்து விட்டெரியும் நெருப்புக் கோளத்தை இதற்குமுன் பார்த்ததே கிடையாது. 14-வது தளத்திற்கு அடி அபோ எல்லையின்மீது வெடிகுண்டுகளை வீசும்படி உத்தரவு வந்தது. நாங்கள் சென்றோம். வெடிக்கும்பொழுதுகூரிய ஆயுதங்களையும் சிதறும் கிரனேடுகளையும் நாங்கள் எடுத்துச் சென்றதுண்டு. அவை ரொம்ப உபயோகமாயிருந்தன. சுமார் 50 கள்ளப் பயல்கள் (சர்வாதிகாரியின் மகன் அபிசீனியருக்குக் கொடுத்த அடைமொழி!) எங்களுடைய வெடிகுண்டுகளின் சக்தியை அனுபவித்தார்கள். பார்ப்பதற்கு ரொம்ப குஷியாயிருந்தது. பரிதாபகரமாயிருந்தாலும் ரொம்ப அழகாயிருந்தது. தீ வைக்கும் வெடிகுண்டுகள்தான் ரொம்பத் திருப்தியளிக்கக்கூடியவை. வேறொன்றும் இல்லாவிட்டாலும் நெருப்பையும் புகையையுமாவது பார்க்கலாம்!''

இன்னொரு இடத்தில் அவன் கூறுவதாவது: ''சுற்றிலும் வட்டமாக எல்லாத் திசைகளிலும் தீ! சுமார் 5000 எதியோப்பியர்கள் துடித்துத் துடித்துச் செத்தார்கள். நரகந்தான். புகை வான மண்டலத்தையே தாவியது.''

அப் புஸ்தகத்தின் 48-வது பக்கத்தில் அவன் இன்னும் கூறுவதாவது: கல்லா எல்லைப்புற வகுப்பினர் கறுத்த உடையணிந்த ஒருவனைச் சுற்றி நிற்கையில் அவர்கள் மீது வீசிய வெடிகுண்டு என்ன செய்தது என்பது இன்னும் நினைவிலிருக்கிறது. ஆகாச டார்ப்பிடோ ஒன்றைஅவர்கள் மத்தியில் எறிந்தேன். இதழ்கள் மலர்ந்து விரியும் ரோஜாப் புஷ்பம் போல் அந்தக் கூட்டம் சிதறியது. பார்ப்பதற்கு என்ன அழகாயிருந்தது தெரியுமா?''

அவன் முடிவுரையாகச் சொல்லுவது : ''ஒருவனுக்குச் சரியான அறிவும் கல்வியும் யுத்தத்தில்தான் கிடைக்கின்றன ஒவ்வொருவனும் குறைந்த பட்சம் ஒரு யுத்தத்திலாவது சேர்ந்து போர் செய்வது அவனது கடமை என்பதை நான் நம்புகிறேன். ஆதலால் எல்லோருக்கும் யுத்தத்தின் அவசியத்தைச் சிபார்சு செய்கிறேன்.''

தகப்பனார் சித்தாந்தம் மகனுடைய சிந்தனைகளை எவ்வாறு இயக்கியிருக்கிறது என்பதை இப்புஸ்தகம் விளக்கு கிறது. விட்டோரியோ வாலிப இத்தாலியின் பிரதிநிதி. இத்தாலிய வாலிபர்களின் யுத்த மோகம் முஸோலீனியின் சித்தாந்தங்களின் விளைவே.

முஸோலீனியின் யுத்தமுரசு, இத்தாலிக்குப் புகழையும், பெருமையையும், சாம்ராஜ்யத்தையும் சேகரித்துக் கொடுக் கும் சாதனம் என்பதோடு, நாட்டின் கவலையையும்கவனத் தையும் வேறு திசையில் செலுத்தும் தந்திரமுமாகும். மத்தியதரைக் கடல் ஏகாதிபத்திய இத்தாலியின் சொந்தக் கடலாகவேண்டுமென்பது முஸோலீனியின் கருத்து. இத்தாலிக்குச் சொந்தக் கடலாக மட்டும் இருந்தால் போதாது. ஏனென்றால், அப்போது இருந்த நிலையில் அதன் அபாயங்கள் ஜாஸ்தி. ஒரு புறத்தில் சூயஸ் கால்வாயும் இன்னொரு புறத்தில் ஜிப்ரால்டருந்தான் அதிலிருந்து வெளிவரும் சிறிய வழிகள். அவ்விரண்டையும்

அடைத்து விட்டால் பாலஸ்தீனத்திலிருந்தும் எகிப்திலிருந்தும் சமுத்திரத்தின் மீது ஆதிக்கத்தைச் செலுத்த முடியும். அவ்விரண்டு பாதைகளிலும் ஓரளவாவது அதிகாரத்துக்குள் வைத்திருந்தால் தான் முஸாலீனி மத்தியதரைக் கடலில் எஜமானாக நினைத்ததைச் சாதிக்க முடியும். இல்லாவிட்டால் இருபுறத்திலும் இறுக்கி மூடிய பால் புட்டி போல இருக்கும் மத்தியதரைக் கடலுக்குள் அவன் சிறைப்பட்டுக் கிடக்கவேண்டியதுதான். இதுதான் ஸ்பானியக் கொலைக் களத்தில் அவன் குதித்ததற்குக் காரணம். ஆப்பிரிக்காவில் பிரிட்டிஷ் பிரெஞ்சு காரியாதிகளுக்கு முட்டுக்கட்டை போட்டுக்கொண்டு வந்ததற்கும் காரணமாகும். 'டாஸ்வெல்ட்கெஷன் ஆம் மிட்டல்மீயர்' என்ற நாஜிப் பிரசுரத்தில் முஸொலீனியின் நினைப்பு என்னவென்பது பின்வருமாறு தெளிவாக்கப்பட்டிருக்கிறது.

மத்திய ஆப்பிரிகா மூலம் சாத் ஏரி வழியாக அட்லாண்டிக் சமுத்திரத்தை அடைவதே இத்தாலியின் கனவு. எகிப்திலும் ஸுடானிலும் இத்தாலி இருந்துகொண்டு பிரிட்டனைத் தன் இடுக்கிகளில் வைத்து நசுக்கிவிடும். ஒருபுறம் லிபியாவும் எரிட்ரியாவும் மறுபுறம் அபிசீனியாவுந்தான் இந்த இடுக்கியின் கைகள். மத்தியதரைக் கடலில் உள்ள தன் பலவீனத்தைப் போக்கிக்கொள்ளவே வடகிழக்கு ஆப்பிரிக்காவில் ஓர் ஏகாதிபத்தியத்தை ஸ்தாபிக்க அவன் விரும்புகிறான். இது அவனது சக்தியை எகிப்தின் மேல் சுமத்தி அலெக்ஸாண்டிரியா துறைமுகத்தின் உபயோகத்தை ஒன்றுமில்லாமலாக்கிவிடும். இந்த யுத்தத்தின் ஓர் அம்சந்தான் அபிசீனியப் போர். அபிசீனியாவில் போரை நடத்திக்கொண்டு பாலஸ்தீனிலும் ஸிரியாவிலும் பிரிட்டனுக்கெதிராகச் சதி செய்துகொண்டிருந்தான் முஸொலீனி. இஸ்லாத்தின் காப்பாளன் என்று அவன் தன்னைப்

பிரகடனம் செய்து கொண்டான். இவன் இந்தப் பட்டத்தைச் சூட்டிக்கொண்டதிலிருந்து, லிபியா இத்தாலிப் பிரசாரத்தின் கேந்திரஸ்தானம் ஆயிற்று. பிரிட்டனுக்கும் பிரான்ஸுக்கும் எதிராக அராபியரை மூட்டி விடுவதே பிரசாரத்தின் நோக்கம். 1938-ம் வருஷம் பிப்ரவரி மீ 16-ம்தேதி பாலஸ்தீன் சம்பந்தமாக எழுந்த விவாதத்தில் பின் வருமாறு அறிவிக்கப்பட்டது.

''சமூக ஊழியர்கள் போலவும் ரோமன் கத்தோலிக் கன்யாஸ்திரீகள் போலவும் மாறுவேடம் பூண்ட இத்தாலிய ஸ்திரீகள் அராபியரிடையே சென்று யூதருடைய கொடுமைகளைக் காட்டும் பொய்ப் படங்களைக் காண்பித்து, பிரிட்டிஷ் நிர்வாக ஊழலே அராபியரிடை காணப்படும் வறுமைக்குக் காரணம் என்று பிரசாரம் செய்தார்கள். டூரிங் சினிமா கம்பெனிகள் யூதர்கள் அராபியரைக் கொல்வது போன்ற பித்தலாட்டப் படங்களைக் காண்பித்தன. பாரி (Bari) என்ற இடத்திலுள்ள இத்தாலிய ரேடியோ ஸ்தாபனம் நடத்தும் அராபிய நிகழ்ச்சியில், 'பாலஸ்தீனம் அராபியருக்குச் சொந்தம். யூதர்களைக் கொல்லுங்கள். பாலஸ்தீன ஜாதியர்கள் படை திரட்டுங்கள்!'' என்றெல்லாம் கோஷமிட்டு விஷமப் பிரசாரம் செய்தது.'' இதே மாதிரி ஸிரியாவிலும் நடந்தது என்பதைப் பிரிட்டிஷ் அயல்நாட்டு உதவிக் காரியதரிசியான லார்ட் கிரான்போர்ன் பின்வருமாறு அறிவிக்கிறார்: ''கீழ்ப் பிரதேசங்களிலும் உலகத்தின் இதரபாகங்களிலும் இந்நாட்டுக்கு எதிராக இத்தாலியப் பத்திரிகை விஷமப் பிரசாரம் செய்து வருகிறது என்பதற்குத் தெளிவான சாட்சியம் இருக்கிறதென்று நான் நினைக்கிறேன். முஸொலீனி பிரிட்டிஷ் செல்வாக்கை மட்டும் குறைக்க முற்படவில்லை. அவனது ஒத்தாசையின் பேரில் பாலஸ்தீனத்தில் அட்டூழியம் நடத்தும் பயங்கர இயக்கங்கள் இருக்கின்றன

என்பதும் நிச்சயம். பிரெஞ்சு சர்க்காரைச் சேர்ந்த வட ஆப்பிரிக்காவில் உள்நாட்டுக் கலகம் ஏற்பட்டதற்குக் காரணம் இத்தாலிய-ஜெர்மன் சூழ்ச்சியே.'' 1937-ம் வருஷம் நவம்பர் 5-ம் தேதி அல்ஜியர்ஸ், டியூனிஸ், மொராக்கோ முதலிய இடங்களில் ஏற்பட்ட கலவரங்களுக்குக் காரணம் இவைகளே என்று கூறப்படுகிறது. 'லா பாப்புலோ' என்ற பிரெஞ்சுப் பத்திரிகை பின்வருமாறு அறிவிக்கிறது, ''இத்தாலியர் தங்கள் காரியாதிகளுக்கு டியூனிஸ் நகரை முக்கிய இடமாகக் கொண்டிருக்கின்றனர். ஹிட்லரின் கையாட்கள் ஸ்பானிய மொராக்கோவிலிருந்து கொண்டு பிரெஞ்சு மொராக்கோவில் ரகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். 'லூவார்' என்ற பத்திரிகை 1938-ம் வருடம் ஏப்ரல் 22-ம் தேதி இதழில் ஒரு ரஸமான விஷயத்தை அறிவிக்கிறது. 'தஸ்தூர்' இயக்கத் தலைவர் ஆலி செரீப் என்பவருடைய காரியாலயத்தில் பிரெஞ்சு ஒற்று இலாகாவைப் பற்றிய தஸ்தாவேஜுகள், அந்த இயக்கத்தைப் பலப்படுத்த இத்தாலி மாதம் 10 லட்சம் பிராங்குகள் கொடுக்கிறது என்பதைக் காட்டின. இதல்லாமல் சிலபெரிய பிரெஞ்சு உத்தியோகஸ்தர்களைக் கொல்லுவதற்கும் சதி செய்யப்பட்டிருந்ததாகவும் கண்டு பிடிக்கப்பட்டது. இன்னும் எகிப்திலும் பிரிட்டிஷ் சர்க்காருக்கு எதிராக நடக்கும் கிளர்ச்சிகளை முஸொலீனி ஆதரித்து வளர்த்திருக்கிறான். இம்மாதிரி பிரிட்டனை எதிர்த்துப் பிரசாரம் செய்யும் சர்வாதிகாரிதான் கத்தோலிக் இஸ்லாம் தருமங்களைக் காக்க வந்தவன் என்று பாவனை செய்து கொள்ளுகிறான்.

இந்தச் சமயத்தில்தான் ஹிட்லர் தன் மத்திய ஐரோப்பிய ஆசைகளுக்கு ரத்தப் பூசையிட்டு வளர்த்துக் கொண்டிருந்தான். தனக்குப் போட்டியாக இத்தாலியை ஆக்கிக்கொள்ளுவதைவிட அதன் நண்பன் போல் பாவனை செய்தால் ஜனநாயகம் கதிகலங்கிப் போய்விடும் என்பதுடன்

இத்தாலியின் அந்த ஆசைகளையும் கட்டிப் போட்டு வைத்து விடலாம் என்று எண்ணினான். இதுதான் ரோம்பெர்லின் தந்திர அச்சு. இரு கள்ளர்கள் ஒருவரை ஒருவர் தின்று விடாதபடி பார்த்துக்கொள்ள இருவரும் ஒத்துப்போவது போன்ற ஒரு பாவனை இது.

இத்தாலியின் ஞாபகமெல்லாம் மத்தியதரைக் கடலில் தன்னைப் பலப்படுத்திக் கொண்டு பிரிட்டனின் பலத்தைப் போக்குவதே. இதற்காகப் பிரிட்டனிலும் பிரான்ஸிலும் முஸோலீனி செய்த விஷமங்களுக்குக் கணக்கில்லை. அயர்லாந்துவரை கூட அவனது சில்-விஷமம் எட்டி யிருந்தது.

★

## 26. உள்ளூர அரிக்கும் வியாதி

சர்வதேச அரங்கில் படாடோபத்தையும் மிரட்டலையும் ராஜதந்திரங்களாகக் கையாண்டுவந்த இத்தாலிய சர்வாதிகாரத்திற்குப் பகை வெளியில் கிடையாது. இத்தாலியில் தான் பேஸிஸத்தை எதிர்க்கும் வித்துக்கள் தீவிரமாக முளைத்து வளருகின்றன. பேஸிஸ்ட் ஆட்சியை எதிர்க்கும் பகை வித்துக்கள் வளருவதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று, முஸோலீனியின் யுத்தக் கொள்கையால், அபிசீனியாவிலும் ஸ்பெயினிலும் இத்தாலிய வாலிபர்கள் லட்சக்கணக்காக மடிந்தும் பிரதி பிரயோஜனம் ஏற்படாதது. இரண்டாவது இத்தாலியரின் பொருளாதார முடைகள்; ஜீவனவசதி, வருமான அளவு ஆகியவை தொடர்ச்சியாகவும் படிப்படியாகவும் குறைந்து கொண்டே வருவது. அதிருப்தி தானே எதிர்ப்பின் பகை வித்துக்கள்! அன்று முஸோலீனி அதை வளர்த்தான். இன்று அது அவனுக்கு எதிராக வளருகிறது.

அபிசீனியப் போர், ஸ்பெயினில் தலையீடு—எல்லாம் இயற்கையிலேயே ஏழை நாடான இத்தாலியின் முதுகில் வறுமைச் சுமையை இன்னும் பெருக்கிவிட்டன. 1914-ம் வருஷத்து மகாயுத்தத்தின் சாயையில் பிறந்த கஷ்டம் இத்தாலியை இன்னும் விட்டு அகலவில்லை என்று சொல்ல வேண்டும். 'பாங்கர்' என்ற ஆங்கிலப் பொருளாதாரப் பத்திரிகை கூறுவது போல், இத்தாலியின் நிதிவசதிகளுக்கும் அதன் தேவைகளுக்கும் இடையே எப்பொழுதும் தகராறு தான். முக்கியமாக அதன் நாணய மாற்று விஷயங்கள் யாவும் அந்தஸ்து வாய்ந்தவையே அல்ல.

முஸோலீனியின் ஆசையால் பிறந்த பொருளாதாரக் கஷ்டங்களையெல்லாம் சுமக்கிறவர்கள் இத்தாலியர்களே. ஜீவன வசதிக்கு ஏற்ற வருமானம் இத்தாலியில்தான் தலைகுப்புறக் கவிழ்ந்துவிட்டது. வாரச் சம்பளங்கள் 20% உயர்ந்தாலும், ஜீவனச் செலவு 50% உயர்ந்து விட்டது. கொலம்பியா சர்வகலாசாலையைச் சேர்ந்த டாக்டர் கார்ல் ஷிமிட், இத்தாலியின் பொருளாதார நிலைமையை நேரடியாக ஆராய்ந்து, "தொழிலாளர் களிடையே வறுமை அதிகரிக்கிறது; கிராமவாசிகள் அடிமைகள் போல வாழுகின்றனர்," என்று கூறுகிறார். ஒரு நாட்டின் செழிப்பைத் தெரிந்துகொள்ள வேண்டு மென்றால் அந்த நாட்டுவாசிகள் சாதாரணமாகப் பெறும் உணவை வைத்து ஓரளவு சொல்லலாம். டாக்டர் ஷிமிட் சொல்லுவதாவது: "இத்தாலியத் தொழிலாளர்கள் சாப்பிடும் மிகவும் சத்தான உணவே ரொம்ப மோசம். அதிலும் 1930-ம் வருஷத்திற்கப்புறம் ஒரு நபருக்குச் சராசரி கிடைக்கும் உணவும் அதன் அளவும்மிகவும்குறைந்து விட்டன. அவர்கள் முன்னால் சாதாரணமாகச் சாப்பிடும் உணவு வகைகளான கோதுமை, மாமிசம், சர்க்கரை முதலியவை கிடைப்பதே இல்லை." இத்தாலிய பேஸிஸ்டு

களும் அவர்களுடைய தலைவனும், வருங்கால நலத்தை முன்னிட்டுத் தேசமக்கள் கஷ்டத்தை ஏற்றுச் சகிக்கவேண்டும் என்று சொல்லுவதுடன், வேலையின்மையையே நாட்டிலிருந்து போக்கடித்துவிட்டதாகப் பிரமாதம் பண்ணிக் கொள்ளுகின்றனர். முஸொலீனியின் போலீஸ் படையான 'ஓவ்ரா' என்பதற்கு ஆட்சிக்கு எதிராகப் புறப்படும்இயக்கங்கள் எல்லாவற்றையும் தாட்சண்யம் சிறிதுமில்லாமல் நசுக்கிவிடவேணும் என்பது கண்டிப்பான தாக்கீது. அதனால் இவ்வளவு துன்பச் சுமைகளும் இத்தாலியச் சிறைக் கிடங்குகளிலும் மண்ணடியிலும் புதைந்து கிடக்கின்றன. ஆட்சி எவ்வளவுதான் கார்வாராக இருந்தாலும் கள்ளன் பெரிதா? காப்பான் பெரிதா? இத்தாலியிலும் சட்ட விரோதமான இயக்கங்கள் இருக்கத்தான் செய்கின்றன.

முஸொலீனியின் ஏகாதிபத்திய நடவடிக்கைகளையும், அவன் ஸ்பெயின் விஷயத்தில் தலையிட்டதையும் எதிர்த்துப் பிறந்த கிளர்ச்சிகள் 'அமைதியான' ஜந்துக்களிடை கசப்பு ஓங்கி வளரச் செய்தன. ஸ்பானிய குடியாட்சி சர்க்காருக்கு ஆதரவாக இத்தாலியிலேயே பணம் வசூலிக்கப்பட்டது என்பதைவிட வேறு என்ன அத்தாட்சி வேண்டும்? 1937-ம் வருஷம் அக்டோபர் மாதம் ரீஜியோ எமிலியா ஆயுதத் தொழிற்சாலையைச் சேர்ந்த நாற்பது தொழிலாளர்கள், நாசம் ஏற்படுத்தும் நோக்கத்துடன் விஷமம் செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுக் கைது செய்யப்பட்டனர். அந்த ஆயுதத் தொழிற்சாலை விமானங்களையும் தயார் செய்து வந்தது. இவர்கள் விமான என்ஜினில் அது பழுதுபடும்படி ஏதோ ஒரு பொடியைப் போட்டு, அது கீழே விழும்படி செய்தனராம். இந்தத் தொழிலாளர்களில் இருபது பேர் பேஸிஸ்ட் கட்சி அங்கத்தினர்கள்.

இன்னும் 1936-ம் வருஷம் ஆகஸ்டில் டெர்னி என்ஜினியரிங் தொழிற்சாலையில் உள்ள தொழிலாளர் ஸ்பெயினில் பிராங்கோ கட்சிக்கு ஆயுதங்கள் தயார் செய்யப்படுவதை ஆட்சேபித்துக் கிளர்ச்சி செய்தனர். இவர்களில் இருபத்தைந்து பேர் கைது செய்யப்பட்டனர். ஐந்து பேருக்கு மரண தண்டனை.

இச்சம்பவம் நடந்து நான்கு மாதங்கள் கழிந்து 'நியூஸ் கிரானிக்கிள்' என்ற பிரிட்டிஷ் பத்திரிகை பின்வரும் சம்பவத்தை அறிவித்தது: மாட்ரிட் நகரில் ஒரு வெடிகுண்டு விழுந்ததாம். அது வெடிக்கவில்லை. ஆனால் அதனுள் ஒரு துண்டுக் கடுதாசி இருந்தது. அதில், ''உங்களது இத்தாலிய சகாக்கள் உங்களைக் கொல்ல விரும்பவில்லை!'' என்று எழுதியிருந்தது.

பட்டப்பகல் கொள்ளையான இந்த ஸ்பானிய விவகாரத்திற்கு இத்தாலியில் ஆதரவே கிடையாது என்பதற்கு இன்னும் ஓர் உதாரணம். ஸ்பெயினுக்கு என்று சொல்லிப் படை திரட்டவே இயலாதாம். அதனால், அபிசீனியக் காவலுக்கு என்று பொய் சொல்லி ஆட்களைத் திரட்டிக் கப்பலில் ஏற்றி ஸ்பானிய சர்க்காருக்கு ஏற்றுமதி செய்து விடுமாம் முஸொலீனி-சர்க்கார்.

1937-ம் வருடம் ஜூன் மாதம் கீடா என்ற துறைமுகத்திற்கு இத்தாலியக் கப்பல் ஒன்று 800 ராணுவக் கைதிகளை ஏற்றி வந்தது. இவ்வளவு பேரும் ஸ்பெயினில் சண்டைபோட மறுத்ததாகக் குற்றச்சாட்டு. பாரி என்ற இடத்தில் அதே மாதம் சில ராணுவ உத்தியோகஸ்தர்கள், ஸ்பெயினுக்குச் செல்ல மறுத்ததால் கைது செய்யப்பட்டனர்.

1937 மே மாதம் மாஸா கராரா என்ற இடத்தில் இத்தாலிய ஸ்திரீகளும் பேஸிஸ்ட் சர்க்காருக்கு எதிராகக் கிளர்ச்சி செய்திருக்கின்றனர். அவர்களில் 90 பேர் நகர

மண்டபத்தின் முன் கூடி நின்று, ''எங்கள் புருஷர்களைத் திரும்பக் கொடுங்கள்! அபீசீனியா என்று பொய் சொல்லி அவர்களை ஸ்பெயினுக்கு அனுப்பி விட்டீர்களே!'' என்று கோஷித்தார்கள்.

இது மட்டுமா? 1937-ம் வருஷம் ஏப்ரல் மாதம் பீய்ட் மான்ட் பாசறைகளில் பல ஸோல்ஜர்கள் ஸ்பெயினுக்குச் செல்ல மறுத்துக் கைதியாயினர். பாண்டெ பெலிஸினோ என்ற இடத்தில் குடியாட்சி-ஸ்பெயினை ஆதரித்து ''ஸ்பெயின் குடியாட்சி வாழ்க! பேஸிஸம் ஒழிக!'' என்று சுவரொட்டி விளம்பரங்கள் ஒட்டப்பட்டிருந்தன. போலீசார் விரைந்து வந்து அவற்றைக் கிழித்தெறிந்தனர். ஆனால் மறுநாளும் அதே இடத்தில் புதிய விளம்பரங்கள்!

சர்க்காருக்கு எதிராக நடைபெறும் கிளர்ச்சிகளின் பலா பலத்தை அறிவதற்கு அங்கு நடக்கும் அரசியல் கைதிகள் வழக்குகளைப் பார்த்தால் தெரியவரும்.

மிலான் நகரந்தான் முஸொலீனிக்குப் பெயரையும், புகழையும், கடைசியாகச் சர்வாதிகாரத்தையும் சம்பாதித்துக் கொடுத்தது. அந்நகரத்தில்தான் பேஸிஸ்ட் எதிர்ப்பு பலத்துடன் இருக்கிறது.

1937-ம் வருடம் அக்டோபர் 12-ந் தேதி விசேஷ விசாரணைக் கோர்ட் முன்பு பதினாறு பேர் கொண்டு வந்து நிறுத்தப்பட்டனர். அவர்கள் மீது பேஸிஸத்தை எதிர்ப்ப தாகக் குற்றச் சாட்டு. அவர்களில் நாலைந்து பேர் பிரபல ஸ்தர்கள்; லூஷியோ லூஜாட்டோ என்ற ஒரு கெட்டிக்கார வக்கீல், டாக்டர் ருடால்போ மொரான்டி என்ற பொருளா தார நிபுணர், அலிஜிஸாஸு என்ற சித்திரக்காரர், அன்டொலினி என்ற இலக்கிய விமர்சகர், டாக்டர் மாலா கூகினி என்ற அறிஞர் முதலியோர். இந்த வழக்கில் எதிரி களாகக் கொண்டு வரப்பட்டவர்களில் பலர் பேஸிஸ்ட் கட்சி

அங்கத்தினர்கள். இவர்கள் பேஸிஸ்ட் சர்க்காரை எதிர்த்து அபேதவாதிகள், பொவுடைமைவாதிகள், குடியாட்சிக் கட்சியினர், லிபரல்கள், முதலியோரைக் கொண்ட ஒரு ஐக்கிய முன்னணி வகுக்க முயன்றதாகக் குற்றம் சாட்டப்பட்டனர். கியூஸ்டிஜியா லிபரேட்டா என்பது கட்சியின் பெயர். விசாரணை இரகசிய மாக நடைபெற்றது. ஐந்து பேருக்கு 10 வருடக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

1937-ம் வருடம் அக்டோபர் 14-ந் தேதி பொலோனாவைச் சேர்ந்த பதினான்கு தொழிலாளர்களின் மீது விசாரணை ஆரம்பமாயிற்று. பதினேழுபேர் கைது செய்யப்பட்டனர். அவர்களில் மூவர் தப்பியோடிவிட்டனர். பொதுவுடைமைச் சபைகள் ஆரம்பித்ததாக இவர்களுக்குக் கடுமையான தண்டனை விதிக்கப்பட்டது.

இது கழித்து மூன்று நாட்களுக்கு அப்புறம் டஸ்கனியில் விவசாயிகள் மீது பேஸிஸ்ட் எதிர்ப்பு இயக்கம் ஆரம்பித்ததாக ஒரு பெரிய வழக்கு. இதே மாதிரி அக்டோபர் 22-ந் தேதி ஸார்டீனியாவில் இதே குற்றச்சாட்டின் பேரில் தொழிலாளர்கள் பலர் தண்டிக்கப்பட்டனர்.

1937 ஏப்ரலில் பெருகியா என்ற இடத்தில் மாணவர்களுக்கும் சர்க்காருக்கும் நிகழ்ந்த போராட்டத்தில் பலர் கைது செய்யப்பட்டனர்; ஏராளமானவர்கள் களத்தில் பலியாயினர். காரணம் பேஸிஸத்தின் எதிரியான ஆஞ்சலோனி, பிராங்கோவுக்கு எதிராகப் போரிட்டு, ஸ்பெயின் களத்தில் மடிந்த செய்தி கேட்டு இம்மாணவர்கள் அனுதாபம் காட்டி ஆர்ப்பாட்டம் நடத்தியதே.

'கியூஸ்டிஜியா லிபரேட்டா இயக்கம், நாடெங்கும் பேஸிஸ்ட் வெறுப்பு விதைகளைத் துண்டுப்பிரசுரங்கள் மூலம் பயிரிடுகின்றது. அது பத்திரிகை ஒன்றையும் இரகசியமாக இன்னும் நடத்திக் கொண்டிருக்கிறது. இது மட்டுமா!

ஜெர்மனியில் சுதந்திர ரேடியோ என்று ஒரு ரகசியஸ்தாபனம் இருப்பது போல இங்கும் ஒன்று இருக்கிறது. அதன் வயர்லஸ் கம்பிகளாக இருக்குமோ என்று ஊரிலுள்ள துணி காயப்போடும் கம்பிக் கொடிகள் எல்லாம் பரிசீலனை செய்யப்பட்டன.

முஸொலீனியின் பலம் இருக்கும் வரை எதிர்ப்பு இயக்கங்கள் நடுங்கிக் கிடக்கும். அப்புறம்? கேட்கவா வேண்டும்!

★

## 27. தூஸே - பூஹ்ரர் உறவு

ரோம்-பெர்லின் சம்பந்தம் தவளையும் எலியும் சேர்ந்து செய்துகொண்ட ஒப்பந்தமாகும். இந்தக் கூட்டுறவு-நாகத்துக்கும் பொதுவான எதிரி, தர்ம நியாயம் என்ற கருடன்தான். தம் நலன்களைப் பாதுகாத்துக்கொள்ள முயற்சிக்கும் ஜனநாயகங்கள் இந்தப் பகைவனுக்குத் துணை நிற்கின்றன.

முஸொலீனி-ஹிட்லர் கூட்டுறவு பரஸ்பர அவநம்பிக்கையில் பிறந்த இருப்புக் கவசம்போல் தோன்றும் ஜிகினாக் கடுதாசி. இருவருடைய உறுமல்களும் மற்றவர்களைப் பயமுறுத்தவே உபயோகப்படுத்தப் படுகின்றன. இருவரும் ஒருவரை யொருவர் தட்டு மறித்தே வேலை செய்கின்றனர்.

ரோம்-பெர்லின் அச்சு சந்தர்ப்ப அவசியத்தால் பிறந்தது மட்டும் அன்று. முஸொலீனியின் ஏகாதிபத்திய ஆசைகளின் விளைவே அது. ஆனால் கூட்டுறவு தவளையும் எலியும் காலை மட்டும் கட்டிக்கொண்டது போல்தான். ஆனால் இம்மாதிரிப் பிணிப்பினால் லாபம் யாருக்கு என்று பார்க்கப் போனால் ஜெர்மனிக்குத்தான். முஸொலீனி எதற்குப் பயந்தானோ அதற்கு இடம் விட்டுக்கொடுக்க வேண்டியதாயிற்று. டால்பஸ் கொலையில் ஆரம்பித்த நாஜி வெள்ளம், ஷூஸ்நிக்கை வால்வெள்ளி போல் சர்வாதிகாரப் பதவியில்

நிறுத்தி, அரசியல் விரோதிகளுக்கென்று நாஜிகள் விசேஷ கவனத்துடனும் சிரத்தையுடனும் அமைத்திருக்கும் 'கான்ஸென்ட்ரேஷன்' முகாமில் கொண்டு போய்த் தள்ளியதுடன், ஆஸ்திரியாவையே கபளீகரித்து விட்டது. நாஜி அலைகள் பிரன்னர் கணவாய்வரை வந்து மோத ஆரம்பித்ததுடன், முஸொலீனியின் அரசியல் கட்டுக் கோப்பிலும் அவை மோத ஆரம்பித்தன. 1936-ம் வருடத்தி லிருந்து ரோம்-பெர்லின் அச்சு, பிரிட்டன் பிரான்ஸ் என்ற இரண்டு சாம்ராஜ்யங்களையும் தாக்கிப் பலவீனப்படுத்தக் கெடுபிடியாக வேலை செய்து வந்தது. ஆனால் இதில் முஸொலீனியின் சேவை அப்படி அப்படித்தான், ஏனெனில், முஸொலீனியின் புது சாம்ராஜ்யம் பிரிட்டன் பிரான்ஸ் இரண்டு கிட்டிகளுக்கிடையில் நல்ல வசமாக மாட்டிக் கொண்டிருந்ததால், அதில் அவ்வளவாக ஊக்கத்துடன் வேலை செய்ய முடியவில்லை. அதனால் பிரிட்டிஷாரிடம் குலாமாயிருந்தான். ஆஸ்திரியா விஷயத்தில் ஹிட்லர் தனக்கு ஏதோ பெரியபங்கு கொடுப்பான் என்று முஸொலீனி நம்பியிருந்தான். அதுவும் மண்ணாயிற்று. ஸ்பெயினில் அவன் ஹிட்லருடன் சேர்ந்து செய்த வேலை வெகு கஷ்டத் தின்பேரில் பிராங்கோவைப் பதவிக்குக் கொண்டு வந்ததே தவிர நல்ல லாபகரமான அம்சங்களை நாஜிகள் வசம் சேர்ப்பித்தது. இவ்விரண்டு ஏமாற்றமும் இந்தச் சகபாடிகள் நிலைமையைத் தெரிவித்து விட்டது என்றாலும் யுத்தந்தான் சாயத்தைப் பூரணமாக வெளுக்க வைத்தது.

தேவைகளை — அன்றாடத் தேவைப் பொருள்களை— இலட்சியமாக்கிய பெருமை இந்தமிஷின் யுகத்தின் கைங் கரியம். அந்த இலட்சியத்தின் தர்க்க முடிவு எல்லோருக்கும் சாப்பாடு கிடைக்கும்படி செய்வதே. அது இவ்வுலகத்தில் மோட்ச சாம்ராஜ்யத்தை ஸ்தாபிப்பது என்ற பொது வுடைமை சித்தாந்தத்தில் வந்து முடிவடைந்தது. இந்த உபாக்கியானத்தின் கிளைக் கதைகள் நாஸ்திகம்,

பொருளாதார அடிப்படையுடன் சரித்திரத்தை வியாக்கியானம் செய்தல் முதலியவை. இவற்றை ஆதாரமாகக் கொண்ட ஒரு கட்டுக்கோப்பு ருஷியாவில் எழுந்தது. அங்கு அது எழுவதற்கு முன்னும் பின்னும் அதன் சீடர்கள் உலகில் பல நாடுகளுக்கும் சென்று சமுதாயத்தின் ஜீவப் பிண்டத்தைப் பாதித்து வந்தனர், இதற்குத்தான் முதலாளித்துவ சர்க்கார்கள், 'பொதுவுடைமை அபாயம்' 'போல்ஷிவிக் ஆபத்து', 'சிவப்புப் பயங்கரம்' என்ற பெயர்களைக் கொடுத்தார்கள். வெர்ஸேல்ஸ் உடன்படிக்கை ஐரோப்பிய மன நிலையைப் பெரிய கலக்குக் கலக்கியது போல, அது சமுதாய அமைப்பிலும் பெரிய மாறுதல்களை உண்டு பண்ணிற்று. சோனியாக மெலிந்து வந்த முதலாளித்துவம், தன்னைப் பாதுகாத்துக் கொள்ள, மிகுந்த பயத்துடன் பெற்ற குழந்தைதான் இந்த பேஸிஸமும் நாஜிஸமும். ஐரோப்பாவிலோ மற்ற இடங்களிலோ சிறிய நாடுகள் சுதந்திரத்தைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமெனில் ராட்சசத் தன்மையைப் படைத்தால்தான் முடியும் என்பதை இந்த அரசியல் உற்பாதங்கள் நிரூபித்தன. இவை தம்மைப் பலப்படுத்திக் கொள்ள அயல்நாடுகளில் புல்லுருவி போல் பாய்ந்து, அவற்றை நாசமாக்கப் பொதுவுடைமைவாதிகளின் வழிகளையே பின்பற்றின. இப்படியாகப் பொதுவுடைமை அபாயத்துடன் பேஸிஸ்ட்-நாசி அபாயங்களும் சம்பவிக்கலாயின. மிஷின் யுகத்தின் இரண்டு சாயைகள் தான் பொதுவுடைமை, பேஸிஸ்ட் தத்துவங்கள்.

பேஸிஸ்டுகள், மனித சமூகத்திற்கு இன்று ஏற்பட்டுள்ள ஆபத்துக்கள் எல்லாவற்றிலும் முதன்மையான கோர ஆபத்து பொதுவுடைமையே என்று கூறி அதைச் சபிக்கிறார்கள். இந்நூலின் ஆரம்ப அத்தியாயங்களில் கூறியுள்ளபடி,

எல்லா ஜனங்களுக்கும் ஆளச் சக்தி கிடையாது என்றும், சிலரே ஆளப் பிறந்தவர் என்றும், சாமர்த்தியமுள்ள ஒரு சிலர் கைக்குள்ளேயே சர்க்கார் இயந்திரம், சமூகம்—எல்லாம் சிக்கியிருந்தால்தான் தேசத்திற்கு க்ஷேமம் என்றும் அவர்கள் விவாதிக்கிறார்கள். ஆனால் பொதுவுடைமை வாதிகளோ, பேஸிஸம் ஒன்றும் புதிதில்லையென்றும், சாகக்கிடக்கும் முதலாளித்துவமே கடைசியாக அந்தரூபத்தில் தோன்றியிருக்கிறதென்றும், பேஸிஸ்ட்-நாஜி உறுமல்களெல்லாம் முதலாளித்துவத்தின் கடைசி விக்கல் என்றும் சொல்லுகிறார்கள்.

நிற்க, 1937-ம் வருடத்திலிருந்து முஸோலீனிராஜ்யத்தின் விவகாரப் போக்கை வெகு சுருக்கமாகக் கவனிப்போம். இத்தாலியின் வெற்றிஇதர பேஸிஸ்ட்நாடுகளுக்குத்தெம்பையூட்டிவிட்டன. ஜப்பான் சீனாவில் வெறும் 'சம்பவங்கள்' என்ற நாமதேயத்தில் நடைபெறும் கபளீகர வித்தையை ஆரம்பித்தது. பாலஸ்தீனத்தில் இத்தாலியப் பிரசாரத்தால் கலகம் கொழுந்துவிட்டு எரிந்தது. பிரேஜில் முதலிய அரைகுறை பேஸிஸ்ட் நாடுகள் தாம் ஜனநாயக சர்க்கார்களிடமிருந்து வாங்கிய கடன்களைத் திருப்பிக் கொடுக்க மறுத்தன. பிரான்ஸில் இத்தாலிய ஜெர்மன் பயங்கர இயக்கத்தினரின் நடமாட்டம் கண்டுபிடிக்கப்பட்டது. பிரிட்டனும், அமெரிக்காவும் ஆசியாக் கண்டத்தைக் கப்பல் படைகள் கொண்டு தாக்கிக் கைப்பற்றுவதாகச் சுவரொட்டி விளம்பரங்கள் மூலம் பேஸிஸ்ட் பிரசாரம் செய்யப்பட்டது.

திடுதிப்பென்று 1938 மார்ச் 11-ம் தேதி ஆஸ்திரிய ஷுஸ்நிக் விவகாரம் முடிவுகட்டப்பட்டது; அதற்கடுத்த மைல் கல்லான செக்நாட்டை நோக்கிப் புறப்பட்டது ஹிட்லரின் ஆசைவெறி. இச் சமயத்தில்தான் ஹிட்லர்-முஸொ

லீனி உறவு மிகவும் நெருக்கமாயிற்று. முஸோலீனி தன் சகாவின் முயற்சிக்கு அங்கீகாரமளித்தான். அதிலிருந்து இருவரும் ஒன்றாகப் பிளான்போட ஆரம்பித்தனர். அந்தப் பிளான் மூனிக் ஒப்பந்தம்வரை வெற்றிகரமாக மேலேறிச் சென்றது. அவ்வருஷம் செப்டம்பர் 18ந்தேதி முஸோலீனி 'போபோலோ டி' இத்தாலியா' பத்திரிகையில், அச்சமயம் செக்கோவில் இருந்த லார்ட் ரன்ஸிமானுக்கு ஒரு பகிரங்கக் கடிதம் விடுத்தான். அதில் அவன் பின்வருமாறு கூறி யிருந்தான் :

''30 லட்சம் செக் மக்களைத் தன் ஆதிக்கத்திற்குள் கொண்டுவர ஹிட்லர் முயன்றால், ஐரோப்பாவில் யுத்தம் ஏற்பட்டுவிடும் என்று சொல்லலாம். ஆனால் 30 லட்சம் செக் மக்களை யார் கொடுத்தாலும் தற்போது ஹிட்லர் ஏற்கத் தயாராக இல்லை என்பதை இக்கட்டுரை எழுதியவர் நிச்சயமாகக் கூறமுடியும்.''

இதற்கப்புறந்தான் சர்வாதிகாரிகளைத் திருப்தி செய் விக்கும் கொள்கையைக் காரியாம்சத்தில் நடத்திய பிரிட்டிஷ் பிரதம மந்திரி ஹிட்லரை முதல் முதலாகச் சந்திக்க உத் தேசித்தார். இதற்கப்புறந்தான் முஸோலீனியின் ஒத் தாசையால் நான்கு வல்லரசுகளின் கட்சி பிறந்தது. ஜெர்மன் பத்திரிகைகள் கிறிஸ்மஸ் பண்டிகைக்குள் ஹிட்லர் பிரேக் நகரத்தில் இருப்பான் என்று பெருமையடித்துக் கொண்டன. பால்கன் வல்லரசுகள் மீது யார் ஆதிக்கம் செலுத்துவது என்பது வெகுவாக வற்புறுத்தப்பட்டது. இரண்டு தலைவர்களின் ஒப்பந்தத்தின்படி டான்யூப் நதிக்குத் தெற்கே உள்ள பகுதிகள் யாவும் இத்தாலியின் ஆதிக்கத்திற்குள் வந்துவிட வேண்டுமாம்.

இச்சமயத்தில் செக் நாட்டின் நிலைமையைச் சிறிது கவனிப்போம். செக் நாடு யுத்தத்தில் முளைத்த

காளான். இதன் பாதுகாப்பில் பிரான்ஸிற்கு ஒரு தனிச் சிரத்தை உண்டு. அந்நாட்டுக்கு இருந்து வரும் நிரந்தர மான ஜெர்மன் கிலியைத் தேக்கும் அரண் செக் நாடு. பிரான்ஸ் தன் எல்லையில் அமைத்த மாகினோ அரண் தொடர்ந்து செக் நாட்டையும் வளைந்து காவல் புரியும்படி யாக அமைந்திருக்கிறது. செக் நாடு விழுந்தால் ஜெர்மன் வெற்றி மாகினோ அரணில் வந்து மோதும். இதற்காக பிரான்ஸ் அந்நாட்டுடனும் ருஷியாவுடனும் ஒரு பாதுகாப்பு ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறது. ஜெர்மன் படை யெடுப்பு ருஷிய சிரத்தையை அதிகப்படுத்துவதால் தன் பொறுப்புக் குறையும் என்பதே அதன் நோக்கம். தப்ப வேண்டும் எனில், ருஷிய ஒப்பந்த வாசகம் தெளிவானதாக இல்லை என்று சொல்லித் தப்பித்துக் கொள்ளவும் செய்ய லாம்.

இதே சமயத்தில்தான் ஸ்பெயின் போர் பேஸிஸ்ட் அபேதவாத மோதல்களின் அரங்காகிவிட்டது. ஜெர்மனி யும் இத்தாலியும் இரகசியமாகப் படைத்துணை அனுப்பியது பயத்தால் தம்மைப் பாதுகாத்துக்கொள்ள முயலும் ஜன நாயக வல்லரசுகளின் பீதியை எழுப்பிற்று. ஸ்பானிய யுத்தத்தை அந்த நாட்டின் உட்சண்டையாக்கி, அந்த வியாதியை வெளியில் பரவ வொட்டாமல் தடுத்துவிட விரும்பிய பிரிட்டன், இத்தாலி ஜெர்மனி இவற்றுடன் பேச்சு வார்த்தை நடத்தியது. ஸ்பானிய அரங்கத்தில் தலை யிடாது விலகியிருப்பது சம்பந்தமாக முஸொலீனி ஒரு நடு நிலைமைத் திட்டம் வகுத்தான். அதை நடத்த வேண்டியது ஒரு கமிட்டி என்றான். செப்டம்பர் மாதம் முதல் கூட்டம் நடைபெற்றது. இருபத்தாறு வல்லரசுகள் அந்தக் கூட்டத் திற்கு வந்தன. கூட்டம் முடிந்து இரண்டு வாரத்திற்குள் மாட்ரிட் நகர் வெடிகுண்டு வீச்சில் இத்தாலிய ஜெர்மன் விமானங்கள் பங்கெடுத்துக் கொண்டன. இப்படியாகப்

பட்டவர்த்தனமாக நடத்தப்பட்ட சதி ஸ்பெயினை ஜெனரல் பிராங்கோ கையில் சிக்க வைத்தது.

இப்படியிருக்கையில், முஸொலீனியின் ஜெர்மன் சகா ஸுடேட்டன் ஜெர்மன் பிரச்னையைக் கிளப்பிவிட்டான். செக் எல்லைக்குள் ஜெர்மானியர் 'சிக்குண்டு எல்லையற்ற கஷ்டங்களைச் சகித்து வாடுவது' ஜெர்மன் பத்திரிகைகளின் தந்தி ஓவியமாகத் திகழ்ந்தது. ஹிட்லர் ஸ்கோடா ஆயுதச்சாலை உள்ள பிரதேசத்தைக் கபளீகரிக்க 'நியாயமான' காரணங்கள் கண்டுபிடித்தான்.

ஜனநாயக வல்லரசுகள் திருப்தி செய்விக்கும் கொள்கையில் முனைந்தன. பிரிட்டிஷ் பிரதம மந்திரி ஸ்ரீ. நெவில் சேம்பர்லேன் யுத்தத்தை ஒத்திப் போடுவதற்குத் தூது சென்றார், பேசினார், திரும்பினார்; மறுபடியும் தூது சென்றார். தலை வாசல்வரை வந்த வெள்ளத்தைத் தடுக்கும் முயற்சியில் ஈடுபட்டார். பிரெஞ்சுப் பிரதம மந்திரி டலாடியர் ஸ்ரீ. சேம்பர்லேனுக்கு ஒத்துப் பாடினார். திருப்தி செய்துவிட்டால் ஹிட்லர் பேசாம லிருந்துவிடுவான் என்ற நம்பிக்கை இருந்தது. முஸொலீனி, ஜெர்மன் சகாவின் ஆசையைப் பூர்த்தி செய்து வைக்கும் தரகனாகப் பரிணமித்தான். ஜனநாயகங்களை மிரட்டுவதும் உள்ளுக்குள் புழுங்கிக் கொள்ளுவதுமே அவன் செய்த வேலைகள். ஜெர்மனியின் வாக்குறுதி எவ்வளவு தூரம் நிலை நிறுத்தப்படும் என்பது அவனுக்குத் தெரியும்.

ஜனநாயக வல்லரசுகள் ஜெர்மனியைச் சுற்றி வளைக்கும் கொள்கையில் முனைவதாகப் புகார் செய்யப்பட்டது. அச்சு பொதுவுடைமை எதிர்ப்புக் கூட்டுறவாக மாறியதாகச் சொல்லிக் கொள்ளப்பட்டது. இவ்வாறு நயத்திலும் பயத்திலுமாக ஜனநாயக சர்க்கார்களுக்குக் கொடுக்கப்பட்ட 'சர்வாதிகாரப் பேதி மாத்திரை'யின் விளைவே மூனிக் ஒப்பந்தம்.

திருப்தியளிக்கும் கொள்கை பூரனமாகப் பரிணமித்தது அந்த மூனிக் நகரில்தான். நாஜிச் சரித்திரத்தில் மூனிக் முக்கிய ஸ்தானம் பெற்றிருக்கிறது. ஹிட்லரின் கொள்கை, முளை விட்டுத் தழைக்கச் செங்குருதி நீர் தேக்கி, செம்மை யான உடல்-உரம் இட்டு வரம்புகோலப்பட்ட பண்ணை அதுவேயாகும். நாஜி வெள்ளத்தைத் தேக்கும் நாடகம் அங்கு படாடோபமாக நடத்தப்பட்டது. ரத்தத்தில் சரித்திரம் எழுதப்பட்ட அந்நகரில், மறுபடியும் கறுப்பு மையில் சமாதான ஒப்பந்தம் எழுதப்பட்டது. முதலில் நகருக்கு வந்தவன் முஸொலினி. அடுத்தபடியாக, பிரெஞ்சுப் பிரதம மந்திரி ஸ்ரீ. டலாலியர் விமானத்தில் வந்திறங்கினார். அடுத்தபடியாக ஸ்ரீ. சேம்பர்லேனும் அவருடைய ஆலோசனை நிபுணர்களும் வந்திறங் கினார்கள்.

ஜெர்மன் தேசீய கீதங்கள் முழங்க யாவரும் ஜெர்மன் சார்வாதிகாரியின் மாளிகைக்கு அழைத்துச் செல்லப்பட்ட னர். மகாநாடு பகல் ஒரு மணிக்கு ஆரம்பமாயிற்று, முதல் கூட்டம் இரண்டு மணி நேரம் நடந்தது. ஜெர்மன். இத்தாலிய அந்நிய நாட்டு மந்திரிகள் கூட்டத்திற்கு வந்தி ருந்தனர். அடுத்த கூட்டம் பிரிட்டிஷ், பிரெஞ்சு மந்திரி களுக்குள்; புதிதாக எல்லை கோலப்படும் செக் நாட்டின் பொருளாதார அரசியல் நலங்களின் பாதுகாப்பு சம்பந்த மாக பரஸ்பரம் வகுத்திருந்த திட்டங்களைப் பரிசீலனை செய்தார்கள்.

சமரசப் பேச்சுக்களில் முஸொலீனி சமாதானத் தரகனாக இருந்து பேச்சுக்கள் முறிந்து போகாமல் முட்டுக் கொடுத்து முடித்து வைத்தான். 1938-ம்வருஷம் செப்டம்பர் 29-ம் தேதி பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி ஆகிய நான்கு நாடுகளும் செக் நாட்டைக் 'காப்பாற்றும்' சமரச ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.

இது தவிர, ஐரோப்பிய சமாதானத்திற்கு பிரிட்டிஷ் ஜெர்மன் உறவு அவசியம் என்பது ஒப்புக்கொள்ளப்பட்டு, ஒரு கடுதாசியில் கையெழுத்தும் இடப்பட்டது. 'ஆங்கிலோ ஜெர்மன் கடற்படை ஒப்பந்தம் இவ்விரு வல்லரசுகளும் பரஸ்பரம் போர்தொடுக்க விரும்பாதிருப்பதின் அறிகுறி' என்று கூறும் இவ்வொப்பந்தத்தில் ஹிட்லரும் சேம்பர் லேனும் 1938 செப்டம்பர் 30-ம் தேதி கையெழுத்திட்டனர்! அடுத்த வருஷம் அதே மாதம் முதல் தேதி என்ன நடக்கப் போகிறது என்பது இரு தலைவர்களுக்கும் தெரியும்.

1939 மார்ச் 15-ம் தேதி மூனிக் ஒப்பந்தம் வெற்றுக் கடுதாசியாகிவிட்டது. செக் நாடு ஜெர்மன் ரீஷ் ராஜாங் கத்தின் ஒரு பகுதியாயிற்று. அதன் தலைவர் டாக்டர் எட்வர்ட் பினேஷ் நாட்டை விட்டு நடையைக்கட்டவேண்டிய தாயிற்று.

O

## 28. அல்பேனியா

முன்னால், ஒரு கறுப்புக் கிறிஸ்தவ மன்னர், சர்வ தேச சங்கத்தையும் அரசியல் அரங்கின் நியாய தர்மப் பகட்டு வார்த்தைகளையும் நம்பியதால் நாடு நகரங்களை இழந்து ஓட வேண்டியதாயிற்று.

அதே போல், ஒரு வெள்ளை முஸ்லீம் மன்னர், எவ் வளவுதான் மானத்தையும் அதிகாரத்தையும் விட்டுக் கொடுத்துவிட்டு இருந்தும், கடைசியில் அவரும் வெளியே புறப்பட வேண்டியதாயிற்று. இவை இரண்டும் இத்தாலிய சர்வாதிகாரியின் கைங்கரியத்தால் நிகழ்ந்தவை.

1936-ம் வருஷம் ஹெல்லி ஸெலாஸி அபிஸீனியாவை விட்டு வெளியேறினார். 1939-ம் வருஷம் ஏப்ரல் மாசம் 8-ம் தேதி அல்பேனியா இத்தாலிய நாடாயிற்று.

'இது ரோம்-பெர்லின் அச்சின் பலத்தைக் காட்ட வில்லை; பலவீனத்தையே காட்டுகிறது' என்று (லண்டன்) டௌனிங் தெரு ஆலோசனை நிபுணர்கள் ஸ்ரீ. நெவில் சேம்பர்லேனுக்குத் தெளிவாக்கினார்கள்.

விஷயந் தெரிந்தவர்கள், பெர்லின் தூண்டியதாலேயே ரோம் அல்பேனியாவை விழுங்கியது என்றனர். முதலில், ஐரோப்பாவின் தென்கிழக்குப் பகுதியில் நாஜிகள் ஆதிக்கம் அதிகமாகிவிடாமல் தடுக்கவே தூஸே இம்மாதிரிப் போர் முரசறைந்தான் என்று நினைத்தார்கள். பின்னர்தான் இது பெர்லின் வைத்த வேட்டு என்பது தெளிவாயிற்று.

ரோம்-பெர்லின் அச்சு என்ற கம்பெனி அதன் ஒரு பங்காளியான ஹிட்லருக்கே 'டிவிடன்ட்' கொடுத்து வருகிற தைக் கண்டு, மற்றொரு பங்காளியான முஸொலீனி குறைப் பட்டுக் கொண்டான். பொஹீமியா, மொரேவியா, மெமல் முதலிய நாடுகள் ஜெர்மனியின் வசமாவது கண்டு, முஸொலீனி, ''இந்த வியாபாரம் வேண்டாம்!'' என்றா னாம்.

ஜெர்மனியிலுள்ள இத்தாலிய ஸ்தானீகர் ஆட்டோ லிக்கோ மூலம் அல்பேனிய ஆக்கிரமிப்பை ஆதரிப்பதாக ஹிட்லர் சொல்லியனுப்பினான்.

ஜெர்மன் அயல்நாட்டு மந்திரி வான் ரிப்பன்டிராப் இதனால் உலகச் சண்டை எழுந்துவிடாது என்று உறுதி கூறினான். அதற்கு அவன் கூறிய காரணங்களில் ஒன்று பிரிட்டன் யுத்தத்திற்குத் தயாரில்லை என்பது; இரண்டா வது, அல்பேனியா வெகுகாலமாகவே இத்தாலியின் கைக் குள் சிக்கிக் கிடப்பதால், அது ஆங்கிலோ-இத்தாலிய ஒப்பந்தத்தை மீறியதாகக் கருதப்படமாட்டாது என்பது.

முஸொலீனிக்கு இன்னும் ஒரு பயமும் இருந்தது. சகாவின் கருத்திற்கு மாறாக நடந்தால் அவன் ருமேனியா

மூலம் கருங்கடலை எட்டிக் கிழக்கே இத்தாலியக் கடற்படை பலத்தை ஒன்றுமில்லாது ஆக்கிவிடலாம்.

முதலில் மருமகன் ஸியானோ மூலம் கலகம் செய்யும் படி அல்பேனியத் தலைவர்களுக்குப் 'பணமுடிப்பு' அனுப்பப்பட்டது. பணம் போனதுதான் மிச்சம். யாரோ அதைத் தட்டிக்கொண்டு சென்று அமுக்கிவிட்டார்கள். பின்பு ஜெனரல் கூஜானி மூலம் படை சென்றது......

இப்படி இத்தாலிய நாடான அல்பேனியாவின் கதை மகாயுத்த காலத்திலிருந்தே ஆரம்பிக்கிறது. இத்தாலியர் வலோனா துறைமுகத்தைக் கைப்பற்றியதிலிருந்து அல்பேனியாவைத் தம் காலடிக் கீழ்க் கொண்டு வந்தனர். முதலாவது ஜோகு என்ற பெயரில் முடியிழந்த மன்னன் அந்தக் காலத்தில் அஹமத்பே ஜோகு என்ற வெறும் கிளர்ச்சிக்கார வாலிபனாக அலைந்தான். பிஷப் வான் நோலியின் ஆட்சியைக் கவிழ்த்துச் சர்வாதிகாரியானான். முஸோலீனியின் அதிகாரம் அவனை அவ்வாறு ஆக்கியது. 1925-ம் வருடம் அல்பேனிய 'நாலினல் பாங்கி' இத்தாலிய மூலதனத்தைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. பாங்கியின் தலைமைக் காரியாலயம் அல்பேனியாவின் தலைநகரான டிரானாவில்இருந்தாலும் அது ரோமாபுரியின் சொற்படிக்கே ஆடியது. அல்பேனியப் பொருளாதார அபிவிருத்திக் கென்று ஒரு சங்கம் அமைக்கப்பட்டது. அதன் வேலை இத்தாலியத் துருப்புக்களை யூகோஸ்லேவிய எல்லைகளுக்கு இலகுவில் கொண்டு செல்லுவதற்கு வசதியான ரஸ்தாக்கள் துறைமுகங்கள் முதலியன அமைப்பதே. பேரேட்டில் அல்பேனியா பற்று என்று எழுதி, இத்தாலி தனக்குச் சௌகரியமான வசதிகளையெல்லாம் செய்து கொண்டது. அல்பேனியத் தலைநகரிலிருந்த இத்தாலிய மந்திரி பேரன் அலாய்ஸி, பிரமாதராணுவ பலம் தருவதாகச் சொல்லி ஆசைகாட்டி, அஹ்மத் ஓர் ஒப்பந்தத்தில்

கையெழுத்திட வைத்தான். 1926 நவம்பர் 27-ம் தேதி வற்புறுத்தலின் பேரில் வாங்கப்பட்ட இந்தக் கடுதாசியின்படி அல்பேனியாவில் உள்நாட்டுக் கலகம் ஏற்பட்டால் தலையிடும் அதிகாரத்தை இத்தாலி பெற்றது. இப்படி முறிச்சீட்டு எழுதிக் கொடுத்த சர்வாதிகாரிக்கு 'மன்னன்' என்ற கௌரவம் அளிக்க இத்தாலி இசைந்தது. 1928-ம் வருஷம் அஹ்மத் ஜோகு, ராஜாளி வம்சத்து முதலாவது ஜோகு என்ற பெயருடன் சிம்மாசனம் ஏறினான். கடனும் அதிகமாக ஏறிற்று. முஸோலீனியின் திட்டங்களுக்கு வசதியாக இருக்க தூராஜோ துறைமுகம், இத்தாலியக் கடற்படை முழுவதுமே அடங்கத் தக்கபடி விஸ்தரித்துக் கட்டப்பட்டது. புதிதாக மன்னனான ஜோகுவுக்கு மண்டைக் கிறுக்கு ஏற்படாதபடி நாட்டில் கலகத்தை நயமாக வளர்த்து வந்தது இத்தாலியப் பிரசாரம். சுருங்கக் கூறுமிடத்து அல்பேனியா பால்கன் எல்லைகளில் இத்தாலிய ஏகாதிபத்தியத்தின் முதல் பாசறையாயிற்று. அங்குள்ள இத்தாலிய ஸ்தானீகர் அந்நாட்டின் கவர்னர்தான்; அது உண்மையில் இத்தாலியக் காலனிதான். 1931-ம் வருஷம் அதன்மீது சுமத்தப்பட்ட மற்றொரு உடன்படிக்கைப்படி அந்நாட்டின் பொருளாதார நலன்களும் சுரண்டப்பட்டன.

அல்பேனியாவில் 'மன்னர்' ஆட்சிக்கும், அவன் முஸோலீனிக்கு அடிமைப்பட்டுக் கிடப்பதற்கும் பலமான எதிர்ப்பு இருந்து வந்தது. 1937-ம் வருஷம் ஈடம் டோடோ ஒரு புரட்சி நடத்தினான். அது அடக்கப்பட்டது; அவன் கொல்லப்பட்டான். பிறகு அவன் ஸ்தானத்திற்கு டியூடர் கியான்லேகா என்பவன் வந்து தீரமாகப் போராடினான். அதன் விளைவு நாட்டின் விவசாயிகளுக்குச் சுமை ஏறியதே.

முஸோலீனி, திருமணம் மூலம் அல்பேனியாவை இத்தாலியுடன் பிணித்துவிட விரும்பினான். விக்டர் இமானுவலின் கடைசி மகளான இளவரசி மேரியாவை ஜோகுவுக்குக்

கலியாணம் செய்ய முனைந்தான். ஆனால், 1938ம் வருஷம் ஏப்ரலில் ஹங்கேரிய கவுண்டஸான ஜெரால்டைன் அப்போனியி என்ற அழகியைக் கலியாணம் செய்துகொண்டான் அஹ்மத். இந்த ஏமாற்றம் கலியாணத்திற்குக்கூடப் போகவொட்டாது செய்துவிட்டது முஸொலீனியை.

பின், மனைவி கருவுற்றதை இரகசியமாகக் காப்பாற்றி வந்தான் ஜோகு. ஆறு மாதங்கள் வரை, ''அப்படியல்ல; எனக்குத் தெரியாது!'' என்றெல்லாம் சொல்லிவந்தான். எத்தனை நாள்தான் மறைக்க முடியும்!

1939ம் வருடம் ஏப்ரலில் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அதற்குச் சிக்கந்தர் என்று பெயரிட்டு முஸ்லிம் சம்பிரதாயப்படி வளர்க்கப்போவதாக முரசறைந்து பிரஜைகளைத் திருப்தி செய்தான் ஜோகு. சிக்கந்தர் ஜாதக விசேஷம். பிறந்த இரண்டாம் நாள் அப்பாவையே முடிதுறந்து நாட்டைவிட்டு ஓடும்படி செய்துவிட்டது.

திடீரென்று இத்தாலியின் நிபந்தனைகள் வந்தன. அவை வருமாறு:—

1. இஷ்டமான சமயத்தில் அல்பேனியாவுக்குள் துருப்புக்களை அனுப்ப உரிமை.

2. கோட்டை கொத்தளங்கள், ரஸ்தாக்கள், பாலங்கள் துறைமுகங்கள் இவைகளைக் கண்காணிக்க உரிமை.

3. அல்பேனியாவில் உள்ள இத்தாலியர் யாவருக்கும் சர்க்கார் நிர்வாகத்தில் பங்கெடுத்துக்கொள்ள உரிமை.

4. அல்பேனிய மந்திரிகளாக இத்தாலியத் தலைமைக் காரியதரிசிகளை நியமிக்க உரிமை.

நிபந்தனைகளைக் கோபாவேசத்துடன் நிராகரித்துவிட்டு, 'உடல் பொருள் ஆவி' மூன்றையும் கொடுத்துப் போராடப் பேவதாகப் பிரஜைகளுக்கு ரேடியோச் செய்தி

அனுப்பினான் ஜோகு. வெகு நேரம் காத்திருக்கும் தொந்தரவு அவனுக்கு ஏற்படாது போயிற்று.

திபுதிபுவென்று இத்தாலியப் படைகள் வந்திறங்கின. விமானங்கள் வட்டமிட்டன. துராஜோ துறைமுகத்தில் இத்தாலியச் சண்டைக் கப்பல் துருப்புக்களை இறக்க வசதி செய்யும்படி விளக்குகள் மூலம் சமிக்ஞை செய்தது. அதை மறுப்பது போல அல்பேனிய ராஜாளிக் கொடி சுங்கக் கட்டடத்தின் மீது உயரப் பறந்தது. சில நிமிஷங்களில் வெடி குண்டுகள் சரமாரியாக விழ ஆரம்பித்தன.

ஜோகுவின் இள மனைவி, இருட்டோடு இருட்டாக, இரண்டு நாள் சிசுவுடன், பல்லக்கில் வைத்து ஆம்புலன்ஸ் வசதியுடன் இரகசியமாகக் கிரேக்கச் சிற்றூரான பிளாரினாவுக்கு எடுத்துச் செல்லப்பட்டாள். அவளும் மன்னனுடைய ஆறு சகோதரிகளும் அங்கிருந்தனர்.

சான் கியவானி, துராஜோ, வலோனா, சாண்டி குவாரன்டா—யாவும் ஜெனரல் கூஜானி கைவசமாயின.

ஜோகுவின் சர்க்கார் எல்பானியன் என்ற சிற்றூருக்கு ஓடியது.

மறுநாள் காலை, அல்பேனியத் தங்கத்துடன், ஜோகு பிளாரினாவுக்கு வந்து சேர்ந்தான்......

டிரானாவில் ஸியானோ விமானம் வந்திறங்கியது. போராட்டம் நின்றது. ஜோகு நாடுகடத்தப்பட்டதாகப் பிரகடனம் செய்யப்பட்டது. அல்பேனியா, பெயரளவில் தனிநாடாக இருந்தது போய், பெயரிலும் இத்தாலிய நாடு என்று பிரகடனம் செய்யப்பட்டது.

## —29—

## 1939, செப்டம்பர் முதல் தேதி

1939-ம் வருஷம் செப்டம்பர் மாதம் முதல் தேதி யுத்தம் ஆரம்பமாயிற்று.

ஹிட்லர், தன் நோக்கங்களைச் சமரசப் பேச்சுக்களின் மூலம் தீர்த்துக்கொள்ள முடியாது என்று சொல்லி, போலந்தின்மீது போர் தொடுக்கும்படி ரீஷ்வர் படைகளுக்கு உத்தரவு போட்டான். அச்சின் பங்காளியான ஒருவன் போர் தொடங்கிவிட்டான். அடுத்தவன் போக்கு என்ன?

ஒருவன் மத்திய ஐரோப்பாவில் வேட்டு வைத்து ஐரோப்பிய சுதந்திரத்தையும் சமாதானத்தையும் காற்றில் பறக்க விடும்பொழுது, மற்றவன் மத்தியதரைக் கடலைக் கலக்கி, எடுத்துக்கொண்ட காரியத்தைப் பரிபூரணமாக முடித்து வைப்பான் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் அப்படி நிகழவில்லை.

1914-ம் வருஷத்து மகா யுத்தம் முஸொலீனியை ஐரோப்பிய அரசியலில் கொண்டுவந்து விட்டது.

1938-ம் வருஷத்து யுத்தத்தில் அவன் வெகுவாக எதிர்பார்க்கப்பட்டான். அவன் வரவில்லை. அச்சு-வல்லரசுகள் பரஸ்பரம் குழைந்துகொண்டதையும் பரிமாறிக்கொண்டதையும் கண்டவர்களுக்கு அது அதிசயமாகத் தோன்றும். 1939, மே 23-ந் தேதி, ஜெர்மனியும் இத்தாலியும் செய்துகொண்ட ராணுவ ஒப்பந்தம் என்னவாயிற்று என்பது சிந்திக்கத்தக்கது. இத்தாலிய-ஜெர்மன் ராணுவ ஒப்பந்தம் பீதியடிக்க வைத்தது எனினும், முஸொலீனியின் பேச்சு யுத்தத்தில் இறங்க அவன் தயாராக இருப்பதைக் காட்ட

வில்லை. ஒப்பந்தம் ஏற்படுவதற்கு இரண்டொரு தினங்களுக்கு முன் அவன் டூரின் நகரில் செய்த பிரசங்கம், ஊன்றிப் படிப்பவர்களுக்கு அச்சின் உறவு தளர்ந்துவிட்டதையே காட்டும்.

டான்ஸீக் பிரச்னை மூலம் குழப்படி ஏற்படுத்த முயன்ற ஹிட்லர், ஜனநாயக வல்லரசுகளைவிட, பொதுவுடைமை சர்க்காருடன் உறவு கொள்வதற்குத் தயங்கவில்லை என்பது இதற்கு ஒரு காரணமாக இருக்கலாம். உலகத்தில் பொதுவுடைமைப் பூண்டை அறவே களைவதற்குக் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கும் பேஸிஸம் அதற்குத் தயாராக இல்லை;— ஏனென்றால், இந்தக் கூட்டுறவால் லாபம் இல்லை என்பதே காரணம்.

யுத்தம் ஆரம்பித்ததும், அச்சின் பலவீனத்தை வெளிக்காட்டிக்கொள்ள விரும்பாத ஹிட்லர், தான் தனது சகாவின் உதவியை நாடப் போவதில்லை என்று அறிவித்தான். அதற்கு மெட்டாகப் பதிலளித்துவிட்டு விலகியிருந்து அடையக்கூடிய நலத்தைப் பெற முயற்சித்தான் முஸொலீனி.

யுத்தம் முன்பு மாதிரி, குருக்ஷேத்திர பந்தாவில், சர்வ வல்லரசுகளும் கட்சி பிரிந்து பலாபலத்தைச் சோதித்துக் கொள்ளும் மோதலாக மாறவில்லை. யுத்தத்தை எதிர் நோக்கிய ரஸ்ஸல், ஹக்ஸ்லி முதலிய அறிஞர்கள் கூறியபடி, இந்த மகாயுத்தம் அவரவரிடம் அகப்பட்ட எல்லைகளை வளைக்கும் தனிச் சண்டைகளாகப் பிசுபிசுத்தேவருகின்றது. பொதுவாக, அதிகமான பொறுப்புக்களை வகிக்கும் வல்லரசுகள் ஏகோபித்து இதில் முனைவதால் ஏற்படும் அபாயங்களை அறிந்து அஞ்சுகின்றன என்பது இதற்கு முக்கிய காரணம். முதலில் போலந்துக் களத்தில் எல்லைச் சண்டையாகப் பிறந்தது, இப்போது பின்லாந்துக்கு அருகில்ருஷியா

நடத்தும் போராட்டமாக மாறியிருக்கிறது. போலத்தில் நாஜிகள் நடத்தியதை இப்போது போல்ஷிவிக்கர் பின்லாந்தில் நடத்துகின்றனர்.

யுத்தமே தேசத்தின் ஜீவநாடி என்று வற்புறுத்திக் கொண்டிருந்த முஸோலீனி ஏன் இன்று விலகி நிற்கிறான் என்றால், அதில்தான் அவனுக்கு லாபம். இன்று யுத்த விமானங்கள் தயாரிக்கும் நாடுகளில் இத்தாலி அமெரிக்காவுக்கு அடுத்தபடியான ஸ்தானம் வகிக்கிறது. அதனால், விலகி நிற்பதன் மூலந்தானே வியாபாரம் நடத்த முடியும்!

இன்று இத்தாலி ஓர் ஏகாதிபத்திய நாடாகக் காட்சியளிக்கிறது. வரவும் செலவும் கட்டிப் போகாததால் ஏற்பட்ட கஷ்டங்கள் இதுவரை தீர்ந்தபாடில்லை. அதைத் தீர்த்து வைப்பதற்கு இப்போது இத்தாலி வசமுள்ள காலனிகள் போதா. ஆனால், யுத்தத்தில் சேருவதால், ஒருவேளை வெற்றி கிடைக்கிறது என்றே வைத்துக்கொள்ளுவோம்; அப்பொழுது அதை அநுபவிக்க இத்தாலி இருக்கவேண்டாமா? அதனால்தான் இன்று முஸோலீனி விலகி நின்று விமான வியாபாரம் செய்கிறான். யுத்தத்தால் என்ன லாபம்? 18-வது நூற்றாண்டு நபர் ஒருவன், யுத்தத்தின் பலன்கள் விதவைகள், வரிகள், நொண்டிக் கால்கள், கடன்! என்றானாம். இத்தாலி இவைகளைப் பெற விரும்பவில்லை

★

## 30. வில்லும் விசையும்

ஒருவனை அளந்து நிறுப்பதற்கு அவனை வேறு யாருடனும் ஒப்பிட்டுப் பார்ப்பது தவறு. அவனுடைய வேலைகள், ஆசைகள், சாதனைகள் யாவுமே அளவுகோல்கள்,— அவற்றின் பலன்கள், விளைவுகள் அல்ல.

ஏனெனில், இப்படித் தர்க்க ரீதியாகச் சித்தாந்தப் பந்தாவில் வைத்து ஆராய்ந்தால்தான் முஸோலீனியின்

பெருமை தெளிவுபடும். அவனுடைய பேச்சு, வேலைகள், சாதனைகள்—எல்லாம் சரித்திரப் படுதாவில் அவனுக்கு எதிராகச் சாட்சிய மளிக்கின்றன.

அவனுடைய பேச்சு, பிரசங்கத்தில் அவனுக்கு இருக்கும் திறமையைக் காட்டுமே ஒழிய, ஆழ்ந்த சிந்தனையில் பிறந்த சித்தாந்தக் கட்டுக்கோப்பை வெளியிடாது. பேஸிஸம் புதிதாகப் பிறந்த தத்துவமல்ல; புராதன எதேச் சாதிகாரத் துடன், தற்போதைய மிஷின் யுகத்தின் அவசியத்திற்கேற்ப, மனிதச் சிந்தனையையும் சுதந்திரத்தையும் நசுக்குவதற் காகக் கட்டிக் கோக்கப்பட்ட கடுதாசிக் குப்பையே அது.

தேசத்தின் ஜீவநாடி போர் என்றவன் பெனிட்டோ; இன்று போருக்கு ஒதுங்கி இருப்பவனும் அவனே!

அவனுடைய சாதனைகள் இத்தாலியை ஓர் ஏகாதிபத் தியமாக்கி விட்டிருக்கிறது என்றாலும், அது அவன் தேச நலத்தை விரும்பி நடத்திய காரியமன்று. அபிசீனியப் போரின் பொறுப்புக்களால் நசுங்கும் இத்தாலியரே இதற்குச் சாட்சி.

அன்று அவன் பொதுவுடைமைக் கட்சிக் காரியதரிசியாக போர்லியில் 'ஸ்டிரைக்' நடத்தியது முதல், இன்று இத்தாலிய சர்வாதிகாரியாக, மனித நாகரிகத்தைப் பயமுறுத்திக் காரியங்கள் செய்து வரும்வரை, எல்லாவற்றை யும் சேர்த்துப் பார்த்தால், அவையாவும் அவனது பௌரு ஷத்தின் போக்கு வீடே ஒழியச் சமூகத்திற்குத் தனி மனிதன் செய்யக்கூடிய சேவையின் உயர்ந்த பட்ச அளவன்று.

அவன் செயல்கள், குறிப்பிட்ட இலட்சியத்தை நாடி வெட்டித் திருத்தப்படும் ரஸ்தாக்கள் அல்ல. நிலைமையும் சந்தர்ப்பமுமே அவன் கொள்கையையும் இலட்சியத்தையும் வகுக்கின்றன. இன்று இத்தாலியில் பேஸிஸ்ட் சர்க்கார்

நன்றாக எண்ணெய் போடப்பட்ட புது யந்திரம் போல ஓடுவதற்குக் காரணம் அவனே. அவனது குரலாக ஸினோர் காய்டா 'கியோர்னேல்டி, இத்தாலியா' பத்திரிகையை நடத்துகிறான். அவனுடைய மருமகன் கவுண்ட் ஸியானோ அவனுடைய வலக்கையாக இருந்து அந்நிய விவகாரங்களை நடத்தி வைக்கிறான். அரசியலமைப்புப் பண்டிதர்கள் கூறும் சட்டவரம்புக்குட்பட்ட மன்னர்களுக்கு உதாரணமாகக் கருதப்பட வேண்டிய விக்டர் இமானுவல், தொந்தரவு கொடுக்காத மனச்சாட்சிபோல், ஒதுங்கி நின்று முஸொலீனியின் நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்காமல் இருந்து வருகிறான். வேறு என்ன வேண்டும்?

பேஸிஸமும், பொதுவுடைமைச் சித்தாந்தத்தைப் போல் தேவைகளை இலட்சியமாக மாற்றி, அவற்றை அடிப்படையாகக் கொண்ட ஓர் அரசியலமைப்பையே ஏற்படுத்தியிருப்பதால்; அது நிரந்தரமானதன்று. பொதுவுடைமை எல்லோருடைய தேவையையும் திருப்தி செய்வதற்கென்று தர்க்க ரீதியாக வகுக்கப்பட்ட ஓர் அரசியல் சித்தாந்தம். தேவைகள் பூர்த்தி செய்யப்படாமல் இருப்பதால், அதனால் ஏற்படக்கூடிய கலவரங்களை எழவொட்டாதபடி தடுப்பதற்காக வகுக்கப்பட்ட அரசியலமைப்புக்கு மேல்பூச்சாக அமைந்ததே பேஸிஸ்ட் சித்தாந்தம். இது நிரந்தரமான தத்துவமாக இருக்க முடியாது என்பதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை.

ஐந்திணைப்

பதிப்பகம்